முடியரசர் இவரென்றால் மக்களெங்கே?
முன்னோடும் பரி எங்கே? படைக ளெங்கே?
முடிஎங்கே? அரசெங்கே? முரசமெங்கே?
முத்தமிழில் ஒரு தமிழ்தான் முடியோ! மற்ற
இடைத்தமிழ்தான் அரசோ! மூன் றாவதான
எழிற்றமிழ்தான் முரசோ! ஓ! சரிதான் இந்த
முடியரசர் பாவரசர் பாடுகின்றார் நாம்
முழங்காலை நிலந்தாழ்த்தி வணங்கிக் கேட்போம்!
மும்முடியை ஓர் தலையில் முடித்த முடியரசர்
எம்முடியும் தலை வணங்கும் இயற்கையிலே கவிஞர்
தம்மரிய கவிதையினால் கவியரசர் ஆனார்
தாய்த் தமிழே! அவர் முடியை உனக்குத்தான் சாய்ப்பார்.

- கவிஞர் கண்ணதாசன்.


தமிழ்மண் பதிப்பகம்
2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24339030

முடியரசன் படைப்புகள் - 12

## கவியரசர்

# முடியரசன் படைப்புகள் – 12

எப்படி வளரும் தமிழ்?
எக்கோவின் காதல்



தமிழ்மண்

கவியரசர்

# முடியரசன் படைப்புகள்

12

எப்படி வளரும் தமிழ்?
எக்கோவின் காதல்


*ஆசிரியர்*

கவியரசர் **முடியரசன்**



**தமிழ்மண் பதிப்பகம்**

*சென்னை - 600 017*

*நூற் குறிப்பு*

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **கவியரசர் முடியரசன் படைப்புகள் – 12** |
| ஆசிரியர் | : | முடியரசன் |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 2008 |
| தாள் | : | 16 கி வெள்ளைத் தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 16+ 216 = 232 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **215/-** |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | வ. மலர் |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |
| வெளியீடு | : | **தமிழ்மண் பதிப்பகம்**<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர்நகர், சென்னை - 600 017.<br>தொ.பே. 2433 9030<br>மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in<br>இணையதளம் : www.tamilmann.in |

# தொகுப்புரை

“கவியரசர் **முடியரசன்** கவிதை நூல்கள் ஒவ்வொன்றும் தமிழுக்கு ஆக்கம் செய்யும் செம்மொழிச் செல்வமாகும்” என்பார் **பேராசிரியர் அன்பழகன்**. அச்செல்வங்களை நாட்டுடைமை ஆக்கினார் தலைவர் **கலைஞர்**. அவற்றில் மூன்றில் ஒரு பங்கே எம் தந்தையார் காலத்தில் நூல்வடிவம் பெற்றன. எஞ்சிய பெரும் பகுதி பெட்டகத்துள் கட்டுண்டு கிடந்தன. அவற்றின் சிறப்புகள் அப்போது எமக்குத் தெரியவில்லை. எந்தையும் ஏதும் கூறவில்லை. அவரின் இறுதிக் காலத்தில் தான் அதை உணர்ந்த நான், அச்செல்வங்களைத் தொகுத்து வெளியிட முயற்சி மேற்கொண்டேன். எனினும் அவரின் மறைவுக்கப் பின்னரே அவற்றிற்கு நூல்வடிவம் தர எம்மால் இயன்றது. அச்செல்வங் களைத் தமிழுலகிற்கு வழங்கியதன் மூலம், மகன் தந்தைக்காற்றும் கடமையை, கவின் கலைச்செல்வியாம் தமிழ் அன்னைக்கு ஆற்றும் தொண்டினை நிறைவேற்றிய மனநிறைவும் கொண்டேன். தொடர்ந்து அப்பணியை எம் வாழ்வின் இலக்காகக் கொண்டு, ஒல்லும் வகை யெல்லாம் செயலாற்றி வருகின்றேன்.

இவ்வகையில், தந்தையின் அனைத்துப் படைப்பு களையும் ஒரே நேரத்தில் முழுத் தொகுப்பாகப் பதிப்பிக்க எண்ணியிருந்தேன். இந்நிலையில், 1999-இல் முனைவர் இளவரசு வழி, மொழிக்காவலர் கோ.இளவழகன்

நட்பினைப் பெற்றேன். **தமிழ்மண்** பதிப்பகத்தின் முதல் வெளியீடு முடியரசன் நூல்களே. முழுத் தொகைப்பையும் தமிழ்மண் வெளியிடும் என அப்போது அவர் கூறினார். இப்போது அது கனிந்தது. முடியரசனார் படைப்பு களை முழுமையாகத் தொகுத்துத் தருமாறு அவர் கூறியதற்கிணங்க தொகுத்துத் தந்துள்ளேன்.

முந்தையரின் அரிய தமிழ்ச்சீர்களைத் தமிழர்க் களித்து வரும் அன்னார்க்கு என் பாராட்டு; அவ்வழி எந்தையாரின் செம்மொழிச் செல்வங்களையும் வழங்கும் அவர்க்கு என் நன்றி; தமிழ் மண்ணுக்கு என் வணக்கம்.

**முடியரசன்**

**‘ காணாது ஈத்த இப்பரிசிலுக்கு யான்ஓர்**
**வாணிகப் பரிசிலன் அல்லேன்........**
**.................**
**முற்றிய திருவின் மூவரே ஆயினும்**
**பெட்பின்றி ஈதல் யாம் வேண்டலமே’**

என்னும் சங்கப் புலவர்களின் வைர வரிகளுக்குச் சான்றாகப் பெருமித வாழ்வு வாழந்தவர். சலுகை போனால் போகட்டும்; என்றன் தமிழ் வெல்லட்டும், ஆண்ட தமிழர் உயரட்டும் எனப் போராடியவர் வளையா முடியரசர்; வணங்கா முடியரசர்; தெய்வத் தமிழை வணங்கியவர். எந்தச் சபலத்துக்கும் முடிசாய்க் காத ஆண்மையாளர். இலக்கிய உலகில் சிங்கமென உலவியவர். இருபதாம் நூற்றாண்டின் கவிதையுலகில் புதுமை பூத்த மரபுக் கவிஞர்

அழகும், இனிமையும், புதுமையும் கொஞ்சிக் குலவும் கவிதைகள் படைத்துத் தமிழுக்குப் புதிய அணிகலன்களைச் சூட்டியவர். தமது கவிதைகள் மூலம் சமூக அநீதிகளை - மனிதரிடையே பேதங்களைக் கற்பிக்கும் ஏற்பாடுகளை - குருட்டுப் பழக்க

வழக்கங்களைச் சாடியவர். மனிதநேயத்துக்கும் சமத்துவத்துக்கும் எதிரான கருத்துகளை எதிர்த்து அறிவுப்போர் நடத்தியவர். ஒப்புரவும் மனிதநேயமுமே தமிழரின் பண்பாடு என முரசறைந்தவர்.

தமிழை இகழ்வார் தன்னுயிர்ப் பகையாய், அல்மொழி திணிப்பார் வல்வரவெதிர்த்துத் தொடு மொழிப் போரில் தும்பை சூடிய, குடியரசோச்சும் கொள்கை கொண்ட மொழியரசோச்சிய முதல் முடியரசன். தமிழ்த் தேசீயக்கவி; தமிழுலகின் அபூர்வப் படைப்பாளி; செந்தமிழ் ஊற்று; பைந்தமிழ்ப் பொழில்; திராவிட நாட்டின் வானம்பாடி; தமிழ்நாட்டின் பாடுங்குயில்; **அப்பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம்** முழுதும் தமிழே உயிர்; கவிதையே மூச்சு.

ஆதித்தமிழரில் சாதிகள் இல்லை; பாதியில் புகுத்திய சாதியை ஒழிக்க ஓதினார் கவிதைகள்; ஓதியவாறே ஒழித்தார் வாழ்க்கையில். வள்ளுவ நெறியை வாழ்வில் நாட்டி, பெரியார் வழியை ஒளியாய்க் காட்டி, புத்தன் புகட்டிய பகுத்தறிவூட்டி, சாதி, சமய, சாத்திரம் அறுத்து, வாக்கின்படியே வாழ்ந்து காட்டி வரலாறானவர்.

**முடியரசன் நூல்கள்:–**

**முடியரசன் கவிதைகள்** - ஆட்சிக்கும் அஞ்சாமல், யாவரேனும் ஆள்க எனத் துஞ்சாமல், தாய்மொழியின் ஆட்சிக்கும் தமிழகத்தின் மீட்சிக்கும் பாடிய போர்ப் பரணிகள். மேலோங்கு கொடுமைகளைக் காணும்போது, காட்சிக்குப் புலியாகிக் கொடுமை மாளப் பாய்ச்சிய கூர்வேல்கள். கயமைகள் வீழ வீசிச் சுழற்றிய கைவாள்கள். காசுக்கும் கைம்மாறு பெறுதற்கும் மாசற்ற கொள்கைக்கு மாறாய் நெஞ்சை மறைத்துவிட்டும் கெஞ்சாத தன்மான

வரிகள். தமிழ் மானம் மீட்டெடுக்கப் பாடிய படைக் கலன்கள். வீழ்ந்த தமிழர் வாழ்ந்த வரலாறு மீள விழித்தெழப் பாடிய வீரக்கனல்கள்.

திராவிட எழுச்சிக் காலத்தில் **கவியரங்கில் முடியரசன்** முழங்கிய கவிமுழக்கம், முத்தமிழ்த் தோழர்க்கு முரசொலி முழக்கம்; அயலார்க்கோ இடிமுழக்கம். **தாய்மொழி காப்போம்** எனுமவர் **தமிழ்முழக்கம்**. வீரத் தமிழரை வீறு கொண்டெழைத்த வேங்கை முழக்கம். திராவிடத் திருவிடத்திற்கு ஒளிதந்த **ஞாயிறும் திங்களும்**. அரங்கு களில் ஆர்ப்பரித்த அயன்மொழிப் பாடல்களை அடக்கவந்த **காவியப்பாவை**. தமிழிலே இசையில்லை என்ற கூகைகளின் கூக்குரரை நெறிக்கக் கூவிய **பாடுங்குயில்**. சிந்தை உருக்கும் தெய்வத் தமிழ்ப் பாசுரங்கள். குறள்நெறி கூறிய, தமிழ் மறை போற்றிய **வள்ளுவர் கோட்டம், மனிதரைக் கண்டுகொண்டேன்** என நற்சான்றோர் போற்றிய சொற்பூ மாலை. புரட்சி வெடிக்க, புதுமை பூக்க, பொதுமை மலர, சாதி ஒழிய, சமயம் அழிய, சாத்திரம் மறைய, சமத்துவம் தழைய, உழைப்போர் உயர, ஒடுக்கப்பட்டோர் விடுதலை பெற **புதியதொரு விதி செய்வோம்** எனப் புகன்ற சிவப்புப் பிழம்புகள், குமுகாயத்தில் பண்பாடு புண்பட்டு, ஒப்புரவு கரவு பட்டு, கொடுமைகள் மலிந்து, குறைகள் நிறைந்ததை கண்டு, உள்ளம் கொதித்து **நெஞ்சு பொறுக்க வில்லையே** எனக் குமுறியும், மாந்தரிடையே கயமை, இழிமை, நேர்மையின்மை, ஒழுங்குமீறல் பரவியதையறிந்து, மனம் நொந்து, **மனிதனைத் தேடுகிறேன்** எனத் தேடி, பண்பாடு காக்க, கொடுமைகள் மாய, குறைகள் களைய, தீயவை தீய வெடித்துக் கிளம்பிய எரிமலைக் கவிதைகள்.

உலக மொழிகளில் தேசீயக் காப்பியங்கள் எனக் கூறத்தக்க மூன்றனுள் ஒன்று **பூங்கொடி** - மொழிக் கொரு காப்பியம், கண்ணனைய மொழிகாக்கக் கடி மணத்தைத் துறந்த ஒரு பெண்ணணங்கின் போராட்டம், மொழிப்புரட்சி வரலாறு.

காதல், வீரம், கையாற்றவலம், முப்பெருஞ்சுவை களும் முகிழ்த்தெழும்; காதலும், வீரமும் கரையென நிற்க, வீரப்பேராறு வீறிட்டுப் பாயும் **வீரகாவியம்.**

பண்டைத் தமிழே, தமிழர்க்கு **ஊன்றுகோல்** எனப் பண்டிதம் பாடிய பைந்தமிழ்க் காப்பியம்.

'உண்டாலம்ம இவ்வுலகம்' எனப் பாடிய, பழந் தமிழ்ப் பாண்டியன்,போர்வாள் எறிந்த **இளம்பெருவழுதி** கடலுள் மாய்ந்த நாடகக் காப்பியம்.

**எப்படி வளரும் தமிழ்?** எனச் சிந்திக்க வைக்கும் கட்டுரைகள். மாணாக்கர்களை நல்வழிப்படுத்த **அன்புள்ள பாண்டியனுக்கும், இளவரசனுக்கும்** எழுதிய கடித இலக்கியங்கள்.

**எக்கோவின் காதல்** கொண்டு, இச் **சீர்த்திருத்தச் செம்மல்**, பார் திருத்தப் படைத்த சீர்த்திருத்தச் சிறுகதைகள்.

முடியரசன் படைப்புகள், படிப்போர் தம் தசைநார்களைப் புடைக்க வைக்கும்; தோள்களை நிமிர வைக்கும்; வீறு கொண்டு எழ வைக்கும்; உள்ளம் உருகி அழ வைக்கும்; பண்பாடு காக்க வைக்கும்; தமிழுணர்ச்சி ஊட்டவைக்கும்; சங்க நூல்களைச் சுவைத்தது போன்று சிந்தை இனிக்கும்.

தாம் எழுதுகின்ற கருத்தை உணர்ச்சியோடு உரைத்துப் பிறர் உள்ளத்திற் குடிகொள்கின்ற பெற்றியாளரே கவிஞர்

என்ற இலக்கணத்திற்கேற்ப, தம் **நெஞ்சிற்பூத்தவை** எனும் கவித்துவம் திகழும் செம்மொழிச் செல்வங்களைத் துய்ப்போர் உண்மையில் பெறும்பேறு பெற்றவரே.

**தமிழ் வெல்லட்டும்! தமிழர் உயரட்டும்!**

**தமிழ்மண் சிறக்கட்டும்!**

**முடியரசர் கவிபரப்பி முத்தமிழுலகுக்கு முடிசூட்டுவோம்!**

**- பாரி முடியரசன்.**

முடியரசன் குடில்
569, சூடாமணி நகர்,
காரைக்குடி - 630 003.

# பதிப்புரை

*கவியரசர் முடியரசன் 1920இல் பிறந்தவர். 1998இல் மறைந்தவர். வாழ்ந்த ஆண்டுகள் 78. எழுதிய நூல்கள் 25. இந்நூல்கள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்து பொருள் வழிப் பிரித்து 13 தொகுதிகளாக* ***கவியரசர் முடியரசன் படைப்புகள்*** *எனும் தலைப்பில் ஒரே வீச்சில் வெளியிடுகிறோம். கவியரசர் முடியரசன் பாவேந்தர் பாரதிதாசன் வழிநிலை அறிஞர். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற பெருமக்களின் கொள்கையை தம் நெஞ்சில் தாங்கியவர்.*

*தன்னலம் கருதாது தமிழ்நலம் கருதியவர். தன்னை முன்னிறுத்தாது தமிழையும் தமிழரையும் முன்னிறுத்தியவர். இவர் எழுதிய நூல்கள் அனைத்தும் தமிழுக்கு வளமும் வலிவும் பொலிவும் சேர்ப்பன. தமிழர்களுக்குப் படைக்கருவிகளாக அரண் சேர்ப்பன.*

*நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும் உயர்ந்த அறிவுச் செருக்கும் கொண்ட பாரதியின் பாடலுக்கு சான்றாக வாழ்ந்து காட்டியவர்.*

**புதுநூற்கள் புதுக்கருத்தால்,**
**பொதுவகையால் தரவேண்டும்**
**புலவ ரெல்லாம்**

*எனும் பாவேந்தர் பாரதிதாசன் வரிகளுக்கு இலக்கியமாகவும் இலக்கணமாகவும் வாழ்ந்து மறைந்தவர். இருபதாம் நூற்றாண்டில்* ***'பா'*** *உலகில் புதுமைப் பூத்த மரபுக் கவிஞர். இவர்தம் நூல்களை ஒருசேர வெளியிடுவதில் பெருமை அடைகிறோம்.*

*நன்றி*

**கோ. இளவழகன்**

# நூலாக்கத்திற்குத் துணை நின்றோர்

*நூல் கொடுத்து உதவியோர்*

மு.பாரி

*நூல் உருவாக்கம்*

*நூல் வடிவமைப்பு*
செல்வி ச. அனுராதா

*மேலட்டை வடிவமைப்பு*
செல்வி வ.மலர்

*கணினிக்கோப்பு*
மு.ந.இராமசுப்ரமணிய ராசா,
சு. நித்தியானந், செல்வி சு. ரேகா

*மெய்ப்பு*
மு. பாரி, சுப. இராமநாதன், புலவர். இராசவேலு,
கி.குணத்தொகையன், அரு.அபிராமி,

---

*உதவி*
அரங்க. குமரேசன், வே. தனசேகரன்,
இல.தர்மராசு, ரெ. விஜயகுமார்,

---

*எதிர்மம்* *(Negative)*
பிராசசு இந்தியா (Process India)

*அச்சு மற்றும் கட்டமைப்பு*
ஸ்ரீ வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்

---

**இவர்களுக்கு எம் நன்றியும் பாராட்டும் . . .**

# வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | துரைராசு |
| பெற்றோர் | : | சுப்புராயலு - சீதாலெட்சுமி |
| பிறந்த ஊர் | : | பெரியகுளம். |
| வாழ்ந்த ஊர் | : | காரைக்குடி |
| தோற்றம் | : | 7.10.1920 - இயற்கையடைவு : 3.12.1998 |
| கல்வி | : | பிரவேசபண்டிதம்,<br>மதுரைத் தமிழ்ச் சங்கம் (1934 - 39)<br>வித்துவான், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி,<br>மேலைச்சிவபுரி (1939-43) |
| பணி | : | தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை<br>உயர்நிலைப்பள்ளி, சென்னை, (1947 - 49).<br>மீ.சு.உயர்நிலைப்பள்ளி,<br>காரைக்குடி (1949 - 78) |
| திருமணம் | : | 2.2.1949<br>(கொள்கை வழிக் கலப்புத் திருமணம்) |
| துணைவியார் | : | கலைச்செல்வி |

| **மக்கள்:** | | **மருமக்கள்:** | | **பேரப்பிள்ளைகள்:** |
|---|---|---|---|---|
| குமுதம் | + | பாண்டியன் | = | அருள்செல்வம்,<br>திருப்பாவை |
| பாரி | + | பூங்கோதை | = | ஓவியம் |
| அன்னம் | + | சற்குணம் | = | செழியன், இனியன் |
| குமணன் | + | தேன்மொழி | = | அமுதன், யாழிசை |
| செல்வம் | + | சுசீலா | = | கலைக்கோ |
| அல்லி | + | பாண்டியன் | = | முகிலன் |

# இயற்றிய நூல்கள்

**கவிதைத் தொகுதி**

| | | |
|---|---|---|
| 1. | முடியரசன் கவிதைகள் | 1954 |
| 2. | காவியப் பாவை | 1955 |
| 3. | கவியரங்கில் முடியரசன் | 1960 |
| 4. | பாடுங்குயில் | 1983 |
| 5. | நெஞ்சு பொறுக்கவில்லையே | 1985 |
| 6. | மனிதனைத் தேடுகின்றேன் | 1986 |
| 7. | தமிழ் முழக்கம் | 1999 |
| 8. | நெஞ்சிற் பூத்தவை | 1999 |
| 9. | ஞாயிறும் திங்களும் | 1999 |
| 10. | வள்ளுவர் கோட்டம் | 1999 |
| 11. | புதியதொரு விதி செய்வோம் | 1999 |
| 12. | தாய்மொழி காப்போம் | 2000 |
| 13. | மனிதரைக் கண்டு கொண்டேன் | 2005 |

**காப்பியம்**

| | | |
|---|---|---|
| 14. | பூங்கொடி | 1964 |
| 15. | வீரகாவியம் | 1970 |
| 16. | ஊன்றுகோல் | 1983 |
| 17. | இளம்பெருவழுதி (நாடகம்) | 2008 |

**சிறுகதைத் தொகுப்பு**

| | | |
|---|---|---|
| 18. | எக்கோவின் காதல் | 1999 |

**கடித இலக்கியம்**

| | | |
|---|---|---|
| 19. | அன்புள்ள பாண்டியனுக்கு | 1999 |
| 20. | அன்புள்ள இளவரசனுக்கு | 1999 |

## கட்டுரைத் தொகுப்பு

*21.* தமிழ் இலக்கணம் *1967*

*22* பாடுங் குயில்கள் *1975*

*23.* சீர்த்திருத்தச் செம்மல் வை.சு.சண்முகனார் *1990*

*24.* எப்படி வளரும் தமிழ்? *2001*

*25.* பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம் (தன்வரலாறு) *2008*

# பொருளடக்கம்


தொகுப்புரை ........................................................ iii

பதிப்புரை ............................................................ ix

வாழ்க்கைக்குறிப்பு ................................................ xi

இயற்றிய நூல்கள் .................................................. xii


## எப்படி வளரும் தமிழ்


*1* எப்படி வளரும் தமிழ்? ............................................ *3*

*2* மகார் நோன்பு ...................................................... *11*

*3* ஒருமையா? ஒற்றுமையா? ...................................... *20*

*4* கவிதை பிறந்த கதை ............................................... *25*

*5* இருபதாம் நூற்றாண்டில் கவிதை ............................. *33*

*6* கூட்டுக் களியினிலே கவிதை .................................... *42*

*7* மறுமலர்ச்சிக் கவிஞர் பாரதிதாசன் ............................ *50*

*8* கவிதை இன்பம் - சொல்லழகு .................................. *58*

*9* பாவேந்தர் வாழ்வும் இலக்கியப் பணியும் .................. *66*

*10* வேர்ப் பலா ........................................................ *78*

*11* தமிழின்பம் தனி இன்பம் ....................................... *85*

*12* பார் போற்றும் தமிழர் நாகரிகம் ............................. *90*

*13* புலவர் உள்ளம் .................................................... *96*

*14* மங்கல வாழ்த்து ................................................. *103*

## எக்கோவின் காதல்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | 111 |
| 1 | எக்கோவின் காதல் | 112 |
| 2 | அத்தை வீட்டில் பேய்! | 130 |
| 3 | கண்மூடி வழக்கம் | 140 |
| 4 | சந்தேக முடிவு | 148 |
| 5 | கடைமுழுக்கு | 158 |
| 6 | காக்கையின் கடிதங்கள் | 167 |
| 7 | கிருஷ்ணார்ச்சுன யுத்தம் | 176 |
| 8 | அணைந்த விளக்கு | 186 |
| 9 | அவமானச் சின்னம் | 191 |
| 10 | அழிந்து விடுமோ? | 199 |
| 11 | இரண்டு தந்தி | 205 |

# எப்படி வளரும் தமிழ்?

# 1

# எப்படி வளரும் தமிழ்?

உலக நாடுகள் பலவும் தத்தம் தாய்மொழி வாயிலாக அறிவியல் முன்னேற்றங் கண்டு தலை நிமிர்ந்து நிற்பதை நாம் காணுகின்றோம். தமிழ் மொழியிலும் அறிவியல் வளர்ச்சி காணத் துடிதுடிக்கும் நல்லுள்ளங் கொண்டோர் சிலரும் ஈங்குளர் என்பதும் அதன் பொருட்டுப் பெருமுயற்சி மேற்கொண்டு உழைத்து வருகின்றனர் என்பதும் நமக்குக் களிப்பூட்டுவன வேயாகும். அப் பெருமக்கள் உரத்த குரல் கொடுக்கும் பொழு தெல்லாம் நம் உள்ளம் பூரிக்கத்தான் செய்கிறது. ஆனால், முரண் பட்ட கொள்கைகள் பரவிய தமிழ்நாட்டில் அக் குரல், காற்றுடன் காற்றாகக் கலந்து விடுகிறதே தவிர, நோக்கம் முழுமைபெற உதவுகிறதா என எண்ணிப் பார்க்கும்பொழுது வேதனைதான் மிஞ்சுகிறது. அடிப்படையின்றி மாளிகை எழுப்ப இயலாது. அதுபோல அடிப்படையான மொழியுணர்ச்சியே இல்லாத பொழுது, அறிவியல் முன்னேற்றங் காண இயலாது.

### இயற்கையும் செயற்கையும்

'ஆங்கிலேயர் ஆங்கிலப் பற்றூட்டத் தங்கள் நாட்டிலே கழகங்கள், மன்றங்கள், சங்கங்கள் தோற்றுவிக்கவில்லை; சப்பானியர் தமது மொழியுணர்வூட்டவும் அதனைப் பரப்பவும் அவர்தம் நாட்டில் மன்றங்கள் அமைக்கவில்லை; செருமானியர் தம் மக்களுக்கு மொழியுணர்வூட்டக் கழகங்கள் காணவில்லை. மற்ற எந்த நாட்டினரும் ஏற்படுத்த முயலாதபோது, தமிழ்நாட்டில் மட்டும் தமிழ் மன்றங்கள் ஏன்?' என வினவுவாரும் ஈண்டுள்ளனர். அஃது உள் நோக்கங் கொண்ட வினா; தமிழ் வளர்ச்சியில் அக்கறை காட்டாத நெஞ்சங்கள் வெளிப்படுத்தும் வினா. இன்னுஞ் சிலர், பிற நாட்டினர் செய்யாத ஒன்றை நாம் செய்துள்ளோமே என்று வியந்துகொள்வதும் உண்டு. இஃது அறியாமையில் முகிழ்த்த வியப்பு. பிற நாட்டினர்க்கு மொழிப் பற்று, மொழியுணர்ச்சி யென்பது இயல்பாக வாய்த்த ஒரு பண்பு.

தமிழ்நாட்டில் மட்டும் தமிழ்ச் சான்றோர் தட்டித் தட்டி யெழுப்பி யும், அரசியல் தலைவர்கள் போர்ப்பறை சாற்றியும் மொழிப்பற்றை உண்டாக்க வேண்டிய ஓர் அவலநிலை இருந்து வருகிறது. அவ்வுணர்வு இயல்பாக அமைந்த நாடுகளுக்கு மன்றங்கள் வேண்டற் பாலனவல்ல. செயற்கையாக ஊட்ட வேண்டிய தமிழ்நாட்டில் மன்றங்கள் இன்றியமையாது வேண்டப்படுவன வேயாம்.

**தமிழ்நாட்டின் நிலை**

தமிழகத்தில் தமிழ்மொழிக்கு ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பு களும் இடையூறுகளும் எண்ணிலடங்கா. அறியாமை, தன்னலம், நயவஞ்சகம், வருவோர்க்கெல்லாம் தலை வணங்கல், எளிதில் நம்புதல் முதலியன மண்டிக் கிடக்குந் தமிழ்நாட்டில், தமிழன்னை எத்தனை யெத்தனை இடையூறுகளுக்கு ஆட்பட்டுக் கண்ணீர் சிந்துகிறாள் என்பதை மாசகற்றிய மனமுடையோர் நன்கு அறிவர். தமிழ்ப் பற்று என்று சொன்னாற் போதும்; "குறுகிய மனப்பான்மை" என்று பழி சுமத்தப்படுகிறது. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்றவுடனே 'மொழிவெறி' என்று இகழப்படுகிறது. பிறமொழிச் சொற்களைக் கலந்து தமிழில் எழுதுதல் கூடாது எனினோ 'மொழி வெறுப்பு' எனத் தூற்றப்படுகிறது. எப்படியோ இரு வேறுள்ளங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன என்பதை ஒப்புக் கொண்டேயாதல் வேண்டும். அதனாற்றான் தங்குதடை யின்றித் தமிழ் வளர இயலவில்லை என்பதுதான் உண்மை. துறைதோறுந் துறைதோறும் தமிழ் புறக் கணிக்கப்படுகிறது என்பதை எவரால் மறுக்க முடியும்?

'குறுகிய நோக்கம், மொழிவெறி, மொழிவெறுப்பு' என்றெல்லாம் வான்பிளக்கக் கூவும் கூக்குரல் கேட்கிறதே அதில் உண்மையுளதா என நோக்குதல் வேண்டும். அக் கூக்குரல் தமிழ் வளர்ச்சி கண்டு, பொறுக்கா தெழுந்த குரல்; வெறுப்பாற் பிறந்த குரல்; வேறொன் றில்லை. அஃது உண்மை சிறிதுங் கலவாத பொய்ம்மைக் குரல் என்பதை உணர்தல் வேண்டும். தமிழ் மக்களிடம் வெறியுணர்வு மட்டும் இருந்திருப்பின் பிறமொழி இங்கே வாலாட்டுமா? தமிழன் றோ கோலோச்சும். அறிவுடையோர், நடுவுநிலைமை பிறழாதோர், உண்மையுணர்ந் தோர், உள் நோக்கம் இல்லாதோர், வெறி யென்றும் வெறுப் பென்றுங் கூறார். அவ்வாறு கூறின் **காந்தியடிகள், தாகூர், இலெனின்** போன்ற மேன்மக்களையும் அக் குற்றத்துக் குரியோராகக் கருத வேண்டிவரும்.

**‘தாய் மொழியையும் அதில் உள்ள இலக்கியங் களையும் மதிக்காமல், வேறு மொழிகளுக்குத் தங்களை அடிமை யாக்கிக் கொண்டவர்கள் தமிழ்நாட்டில் இருக்கும் அளவு வேறு நாட்டில் இல்லை’** என்று கூறியவர் யாரெனக் கருது கிறீர்கள்? ‘நோபல் பரிசு’ பெற்று, உலகப் புகழுக்குரியவராகத் திகழ்ந்த இரவீந்திர நாத் தாகூர்தான். இவர் பிறமொழி வெறுப் பாளரா?

***‘நாம் உருசிய மொழியைக் கெடுத்துக் கொண்டிருக் கிறோம். தேவையின்றி அயன்மொழிச் சொற்களை நம்முடைய மொழியில் நாம் பயன்படுத்தி வருகிறோம். அயன்மொழிச் சொற்களை அவ்வாறு ஆளும்போதும் தவறாகவே ஆண்டு வருகிறோம். உருசிய மொழியில் Nedochoty, Nedostatki, Probely என்னும் சொற்கள் இருக்கையில் அயன்மொழிச் சொல்லை நாம் நம்முடைய மொழியில் ஏன் எடுத்தாளுதல் வேண்டும்? அண்மையில் எழுதப் படிக்கத் தெரிந்துகொண்ட ஒருவர், அயன்மொழிச் சொற்களை ஆளத் தொடங்குவா ராயின் அவரை மன்னித்துவிடலாம். ஆனால், அவ்வாறே செய்கிற ஓர் எழுத்தாளரை மன்னிக்கவே முடியாது. தேவை யின்றி அயன் மொழிச் சொற்களைப் பயன்படுத்துவதன் மீது ஒரு போரையே தொடுக்க வேண்டிய நேரம் இதுவன்றோ?”*** (பெங்களூர் குணா) இவ்வாறு கூறியவர் யார்? உலகமே ஒன்றாக வேண்டும் என்று கைதூக்கிய, விரிந்த, பரந்த, அகன்ற மனப் பான்மை படைத்த, புத்துலகச் சிற்பி **வி.ஐ.இலெனின்** தான். இவரைக் குறுகிய மனப்பான்மையுடையவர் என்று எந்த அறிவாளி யாவது கூற முற்படுவாரா? நம்மைக் குறைகூறும் விரிந்த மனப் பான்மை படைத்த நிறைமதியாளர் இதற்கு என்ன மறுமொழி கூறுவர்?

உலகமே இவ்வாறுதான் இயங்குகிறது; தாய்மொழியை மதித்துப் போற்றி வளர்த்து வீறுநடை போடுகிறது. ஆனால், தமிழ்நாட்டிற்றான் இயற்கைக்கு மாறான நிலை! அரசியல் காழ்ப் புணர்ச்சிதான் அவர்களை அவ்வாறு பேசச் செய்கிறது. தமக்கும் தாய்மொழி தமிழ்தான் என்றவுணர்வு அவர்தங் குருதியில் வற்றி விட்டது. என் செய்வது? அவர்தம் உடலில் ஓடுங் குருதி, தூய்மை யடைந்து, தாய்மொழியுணர்வுடன் பரவும் நாள் எந்நாளோ?

**கல்வித் துறையில்**

*இயல்பாகவும் எளிமையாகவும் அறிவு வளர்ச்சி பெறத் தாய்மொழி வாயிலாகவே கற்பிப்பதுதான் சிறந்த நெறி என்பதை உணர்ந்த ஒவ்வொரு நாடும் கல்விக் கூடங்களில் அதனதன் தாய்மொழியையே பயன்படுத்தி, அறிவுத் துறையில் முன்னேறி வருவதைக் காண்கிறோம். ஆனால், விடுதலை பெற்ற பின்னரும் தமிழ்நாடுதான் இயல்புக்கு மாறாகச் சென்று, அறிவுத் துறையில் முழுமை பெறாது திண்டாடிக்கொண்டிருக்கிறது. பாலகர் பள்ளி முதல் பல்கலைக்கழகம்வரை பயிற்று மொழி வேறாக இருக்கிறது. ஆங்கிலம், இந்தி என்ற மொழிகள்தாம் ஆட்சி செய்கின்றன. இந் நிலையில் தாய்மொழியுணர்வு தலை தூக்குமா? பிஞ்சு நெஞ்சங் களிலேயே மொழியுணர்வு வேரோடு கல்லியெறியப் படுகிறதே! அப்பேசும் பொற்சித்திரங்கள், தம் பெற்றோரை அம்மா, அப்பா என்றழைக்கும் இன்னொலி, நம் செவியில் தேனாக வந்து பாய வில்லையே! அயன்மொழி வேரூன்றிய அவ்விளைய உள்ளங்களிலே 'என் மொழி தமிழ், நான் தமிழன்' என்ற உணர்வுகள் எப்படி யரும்பும்? நாட்டின் எதிர்காலச் செல்வங்களாகிய இவர்கள் வளர்ந்து உயர்நிலைப் பள்ளிகள், பல்கலைக் கழகங்கள்வரை அயன் மொழியிலேயே பயில்வா ராயின், தாய் மொழியில் அறிவியலை எவ்வாறு வளர்ப்பர்? இரண்டுங் கெட்ட நிலையிற்றானே தடுமாறுவர். அத்தி பூத்தாற் போல ஆங்கொருவர் ஈங்கொருவர், தமிழில் அறிவியல் வளங் காட்டுவார் உளரேயெனில், விதிவிலக்காக அவர் காணப்படுத லன்றி மற்றொன்றில்லை.*

*அரியணையில் அமர்ந்திருப்போர் தமிழ், தமிழ் என்று வாய்ப்பறை சாற்றினும் கல்வித் துறையிலிருந்து வெளிப்படும் ஆணைகள், அறிக்கைகள் எம்மொழியில் வருகின்றன? தமிழிலா வருகின்றன? அவ்வாணைகள், மாவட்டக் கல்வி அலுவலர்க்கே தெளிவாக விளங்காமல் தடுமாறச் செய்வதும் உண்டு. ஒரு மாவட்ட அலுவலர் ஒருவகையாகப் பொருள் கொள்ளுவார். அடுத்த மாவட்டத்தவர் வேறுவகையிற் பொருள்சொல்வார்; இறுதியில் தணிக்கைக்கு வருவோர், 'இரண்டுந் தவறு' என்று மற்றொரு புதுப் பொருள் தருவார். மொழி வளர்க்கும் பண்ணை யாகிய கல்வித் துறையே சீர்குலைந்திருக்கும்போது தமிழ் எவ்வாறு வளரும்?*

**அரசியல் துறையில்**

புதிய கல்விக் கொள்கையிலும் தமிழ் புறக்கணிக்கப்படு கிறது. உண்மை நிலையை ஆய்ந்து, நடுவு நிலைமையுடன் கல்விக் கொள்கை யை வகுத்து, அவ்வவர் தாய்மொழிக்கு ஆக்கந் தந்து, சிந்தனையில் ஒற்றுமையுணர்வு காண விழையாது, ஒரு மொழி யால் ஒருமைப் பாட்டை வளர்த்துவிடலாம் என எண்ணுகின்றனர். இவ்வெண்ணம் பன்மைப் பாட்டை வளர்க்குமே தவிர, ஒற்றுமை யுணர்வை வளர்க்காது. இக் கொள்கையில் அரசியல் நோக்கம் பொதிந்துளதே அன்றி அறிவு நோக்கம் காணப்படவில்லை. பல மொழிகள் வழங்கி வரும் ஒரு துணைக் கண்டத்தில் ஒரே மொழி கோலோச்ச விரும்பினால் சிறிதளவேனும் காணப்படும் ஒற்றுமையும் கருகி விடும் என்பதை உணராத அரசியலாலும் தமிழ் இரண்டாம் நிலை மூன்றாம் நிலைக்குத் தள்ளப்படுகிறது.

**மதத் துறையில்**

தமிழ்நாட்டு மக்கள், வந்து புகுந்த இந்து மதம், இசுலாம் மதம், கிறித்துவ மதம் என்று பல்வேறு மதங்களைத் தழுவி வருகின்றனர். தாம் தாம் விரும்பிய மதங்களை ஏற்றுக்கொண்டு, ஒழுகி வருவது அவ்வவர்க்கமைந்த உரிமை. தமக்குச் சிறந்ததாகத் தோன்றிய ஒன்றை வழிபாட்டுக்காக ஏற்றுக் கொண்டதுடன் அமையாது, அவ்வந் நாட்டுக்குரிய மொழிகளுக்கும் அடிமைப் பட்டு விட்டனர். தமிழர் என்ற உணர்வை அடியோடு மறந்து விட்டனர் - இழந்து விட்டனர்.

இந்து மதம் புகுந்தோர் ஸ்ரீநிவாஸன், ஜகந்நாதன், விருத்த கிரீஸ்வரன், பங்கஜாக்ஷி, பிரேமலதா, புஷ்பவல்லி என்ற பெயர் களைச் சூட்டிக்கொண்டு, வடமொழிக்கு வால்பிடித்தனர். இசுலாம் மதத்தைச் சார்ந்தோர் ஹாஜா ஹமீது, இஸ்மாயில், ரஹீம், ஜமீலா, ரசீதா என்று அரபுமொழிக்கு மண்டியிட்டனர். கிறித்துவத்தை நம்பியோர் டேனியல், விக்டர், ஜார்ஜ், அனவுன் சியா, டெய்சி என்று ஆங்கிலப் பெயர்களுக்கு அடிமையாகினர். எம் மதம் பற்றினும் தமிழராக நின்று, தமிழ்ப் பெயர் களைச் சூட்டிக் கொள்வதால் வரும் குறையென்ன?

ஈண்டு உண்மை நிகழ்ச்சியொன்றைச் சுட்டிக் காட்டுவது பயன்தரும். மதுரையில் வாழ்ந்துகொண்டிருக்கும் பொறியியல் வல்லுநர் ஒருவர், ஈரான் ஈராக்கு முதலிய நாடுகளுக்குச் சுற்றுப்

பயணம் மேற்கொண்டு, ஆங்குத் தங்கியிருந்தபொழுது, அந் நாட்டவர் இவரை நோக்கி, 'உங்கள் பெயரென்ன?' என்று வினவினர்.

'அப்துல்லா' இவர் தந்த மறுமொழி.

'ஏன் எங்கள் மொழியில் பெயர் வைத்துள்ளீர்?' அவர்கள் வினா.

'நான் முசுலிம்' இவருடைய விடை.

'அது தெரியும்; எங்கள் மொழியில் நாங்கள் பெயர் வைத்துக் கொள்கிறோம்; எங்களுக்கு அதன் பொருள் தெரியும்; உங்களுக்குப் பொருள் விளங்குமாறு உங்கள் மொழியில் அல்லவா பெயர் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்? நீங்கள் தமிழ்நாட்டுக்காரரா யிற்றே! தமிழிலல்லவா பெயர் வைத் திருத்தல் வேண்டும்?' என்று வினவ, மறுமொழி தர வாயில்லாமல் இவர் பேசாதிருந்துவிட்டார்.

இம்மட்டோ? பிறநாட்டுத் தலைவர்கள், புரட்சியாளர், சிந்தனையாளர் ஆகியோர்பாற் கொண்ட பற்றாலும் அவர்தம் கொள்கையிற் கொண்ட காதலாலும் இலிங்கன், இலெனின், ஸ்டாலின், காரல்மார்க்சு, சாக்ரடீசு என்றெல்லாம் பெயர் வைத்துக் கொள்கின்றனர். எவ்வெவ் வகையால் ஒதுக்க இயலுமோ அவ்வவ் வகையாலெல்லாம் தமிழை ஒதுக்கிவருகின்றனர். ஆனால், இன்று இளைஞரிடையே அவ்வுணர்வு அஃதாவது மொழியுணர்வு ஓரளவு அரும்பி வருவது ஆறுதல் தருகிறது.

இந்து மதத்தவர் முருகவேள், இளங்கோவன், பிறைநுதற் செல்வி, தென்றல் என்று பெயர் சூட்டி மகிழ்கின்றனர். இசுலாமியர், கதிரவன், மதியண்ணல், மலர், அன்பு என்னும் பெயர் களால் தம்மை மேம்படுத்திக் கொள்கின்றனர். கிறித்துவர் வளன் அரசு, கோயிற் பிள்ளை, இளம்பிறை, மின்னல் என்னும் பெயர்கொண்டு மகிழ் வதுடன், வழிபாடுகளிலும் பிற நிகழ்ச்சி களிலும் தமிழே பயன் படுத்துதல் வேண்டும் என முனைந்தும் வருகின்றனர். இவ்வனைத்தும் வரவேற்புக்கும் பாராட்டுக்கும் உரியனவே. எனினும், அளவு போதாது; பெருகுதல் வேண்டும். நூற்றுக்கு நூறு இல்லா விடினும் எண்பது விழுக்காடாவது வளர்தல் வேண்டும். பெரியார், அறிஞர், சான்றோர், அரசியற்றலைவர் பட்டபாட்டுக்குப் பயன் அந்த அளவாவது வேண்டாவோ?

**வானொலியில்**

தமிழ்நாட்டு வானொலியில், **'தமிழிசை'**க்காகப் பதினைந்து மணித்துளிகள் ஒதுக்கித் தந்து, பெரும்புகழைத் தட்டிக் கொண்டனர்! அதுவும் வாரத்துக்கு இரண்டு நாள் ஒதுக்கித் தந்துள்ளனர் என்றால் அவர்தம் பெருமனத்தைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை! இவ்வாறு தமிழ்நாட்டிலே தமிழிசையை ஒதுக்கிவைத்துப் பெருமை தேடிக்கொண்டுள்ளனர். ஆங்கில நாட்டிலே தமிழிசைக்காக இப்படி நேரம் ஒதுக்கலாம்; பிரெஞ்சு நாட்டிலே ஒதுக்கலாம்; ஏனைய நாடுகளில் தமிழிசைக்காகச் சிறிது நேரம் ஒதுக்கலாம். தமிழ்நாட்டிலே தமிழிசைக்குக் கால் மணி நேரம் என்றால் இதை விட இழிவு வேறு வேண்டுமா? தமிழிசைக்குக் கால்மணி நேரந்தான் என்றால் எஞ்சிய நேர மெல்லாம் எந்த இசைக்கு? வேறு எந்த நாட்டிலேனும் அந்த நாட்டுத் தாய் மொழியிசைக்கு ஒரு சிறு நேரம் ஒதுக்குவார் களா? ஒதுக்கியிருப்பின் அஃது அறிவுடைய நாடா? உரிமை யுள்ள நாடா? அடிமை நாடாகத்தான் இருக்க முடியும்.

**தாளிகைகளில்**

நாளிதழ், கிழமையிதழ், மாத இதழ் என்று பல்வேறு இதழ்கள் தமிழில் வெளிவருகின்றன. அவற்றில் அறியாமல் நிகழும் பிழைகள், அறிந்து செய்யும் பிழைகள் அளவு கடந்தன. சந்திப் பிழைகள் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்ட நாளிதழ் களும் உண்டு. வேண்டுமென்றே அயன்மொழிச் சொற்களைப் பயன்படுத்தி, மக்களுணர்ச்சியை அழிக்கும் இதழ்களும் உண்டு. தட்டிக் கேட்க வோ தடுத்துரைக்கவோ எவரும் இலர் என்ற தருக்கால், ஆங்கிலத் தொடர்களையே பயன்படுத்தித் தமிழ்க் கட்டுரைகள் கதைகள் எழுதும் எழுத்தாளரும் உண்டு. எழுத் தோவியங்களுக்குத் தலைப்புங் கூட ஆங்கிலமாக வருவதும் உண்டு. பாவாணர் தமிழிலா எழுதச் சொல்லுகிறோம். எளிய இனிய தமிழில் எழுதினாற் போதும். புனல் என்று எழுத வேண்டா; தண்ணீர் என்று எழுதினால் எவனுக்கு விளங்காது? இதை விடுத்து 'ஜலமும், வாட்டரும்' எதற்கு? இத்துறையில் தமிழ்க் கொலை வெளிப்படையாக நடைபெற்றுவருகிறது.

வழிபாட்டுக்குத் தமிழ் வேண்டுமென்றால் முறை மன்றமே தடை விதிக்கிறது. இசையரங்கில் தமிழ் வேண்டுமென்றால் ஒரு கூட்டமே கொந்தளித்தெழுகிறது. போராட்டங்கள் பல நடத்தியும், தலைவர்கள் தட்டித் தட்டி யெழுப்பியும், சான்றோர்கள் அறிவுரை

நல்கியும், வெளிநாட்டார் இகழ்ந்து பேசியும் அறிவோ மானமோ ஏன் தோன்றவில்லை? தமிழுணர்ச்சி மங்குதற்குக் காரணந்தான் என்ன?

தமிழகத்தில், மலையாள மொழிக்கு உரிமை பூண்டோர் வாழ்கின்றனர். கன்னட மொழியைத் தாய் மொழியாகக் கொண்டோர் வாழ்கின்றனர். தெலுங்கு பேசுவோர் வாழ்கின்றனர். அரபு மொழிக்கு உரிமை கொண்டாடுவோர் ஈங்குளர். ஆங்கிலத்துக்கு வழிவழி வந்தோர் என்பாரும் பரவியுள்ளனர். வடமொழியே தம் தாய்மொழியெனக் கொண்டு, அதன் வளர்ச்சிக்கே வாழ்பவரும் நீண்ட நெடுங்காலமாக இங்குள்ளனர். இன்னும் பல்வேறு மொழியாளர்க்கும் உறைவிடமாகவுள்ளது. எஞ்சியோரே தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். அவருட் பலர் கல்லாதார்; பலர் தமிழ் தமக்கு உரியதென எண்ணாதார்; கற்றறிந்த பல்கலைக் கழகப் பேராசிரியர் சிலர், தமிழிற் பிறமொழி கலந்துதான் பேசுதல் வேண்டும், எழுதுதல் வேண்டும் என வரிந்து கட்டிக்கொண்டு நிற்கும் நண்ணாதார். ஆதலாற்றான் தமிழுணர்ச்சி தலைதூக்கவும் வளரவும் வழியில் லாமற் போகிறது.

இங்கே பிறந்து, இங்கே வளர்ந்து, இங்கே வாழ்ந்து இம் மண்ணிலேயே சாகப் போகிறவர்கள், தம் உள்ளத்திற் பிறமொழி ஆளுகைக்கு இடந்தருவது வருந்தத்தக்கதே. வந்து போவோரைப் பற்றிக் கவலையில்லை; வாழ்ந்து சாவோரைப் பற்றித்தான் கவலை கொள்ள வேண்டியுளது. அனைவரும் இந் நாட்டுக்குரியர், இம் மொழிக்குரியர் என்று உண்மையில் நம்பி வாழ்தல் வேண்டும். சென்னையில் மறைமலையடிகளார் தலைமையில் தந்தை பெரியார் நடத்திய இந்தியெதிர்ப்பு மாநாட்டில், *சிலம்புச் செல்வர் ம.பொ.சி.* உரையாற்றும் பொழுது, *'தமிழ், காவிச்சட்டைக்கு மட்டும் சொந்தமன்று; கறுப்புச் சட்டைக்கு மட்டும் சொந்தமன்று; கதர்ச் சட்டைக்கு மட்டும் சொந்தமன்று; தமிழ்நாட்டில் உடற்சட்டை யெடுத்த ஒவ்வொருவனுக்கும் தமிழ் சொந்தம்'* என்று குறிப்பிட்ட மணிமொழியை நெஞ்சிற் பதிய வைத்துக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு ஒன்றுபட்ட உணர்வு ஏற்படுமேல் தமிழ் வளர இயலும். இன்றேல் தமிழ் எப்படி வளரும்?

*(இராசபாளையம் திருவள்ளுவர் மன்ற ஆண்டு விழா மலரில் வெளியிடப் பட்டது)*

✪✪✪

**2**

# மகார் நோன்பு

நம் பழம் பெரும் இலக்கியங்களாயினும், பிற்கால இலக்கியங் களாயினும் அவை விழாக்கள் பற்றிய குறிப்புகளைப் பெரிதும் வெளிப்படுத்திக் காட்டுகின்றன.

*'விழவு நின்ற வியன் மறுகு'* *(மதுரைக் காஞ்சி - 328)*

*'விழவு அறா வியல் ஆவணத்து' (பட்டினப்பாலை - 158)*

*'விழவு அறாதன விளங்கொளி மணி நெடு வீதி' (பெரியபுராணம்)*

*'விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்'* *(பெரும்பாணாற்றுப்படை-411)*

*'சாறுதலைக் கொண்டென'* *(புறம். 82)*

என்றெல்லாம் இலக்கியங்கள் இயம்புவதைக் காண்கிறோம். அக் கூற்றுகளால் நம் நாட்டில் ஊர்தோறும் தெருத்தோறும் விழாக்கள் நிகழ்ந்து வந்தன என்னும் உண்மையை நாம் உணர்கிறோம்.

இன்னும் *'நீயாங்குக் கொண்ட விழாவினும் பலவே' (புறம். 33)* என்றும் *'விழவு மேம்பட்ட நற்போர்' (புறம். 88)* என்றும் பேசுகின்றன. இத்தகு இலக்கியப் பேச்சுகளால் தெய்வ விழா, வதுவை விழா, சிறு சோற்று விழா, போர்விழா என்றின்னோரன்ன பல்வகை விழாக்கள் நிகழ்ந்தன என்பதையும் அறிந்து கொள்கிறோம்.

திங்கள் தவறாமல் இன்றும் நாடெங்கும் விழாக்கள் நடை பெற்று வருவதையும் நாம் உணர்வோம். பெருவிழாக்கள், சிறு விழாக்கள் தேர்விழாக்கள், மலர் விழாக்கள் போன்ற பல்வகை விழாக்கள், நிகழ்ந்து வருகின்றன. அவற்றுள் கடவுட் கோட் பாடுடையனவும் கல்விக் கோட்பாடுடையனவும் பாராட்டுதல் போன்ற நிகழ்ச்சிகளைக் கொண்டனவும் என எத்துனை எத்துனை யோ அடிப்படை நோக்கங்களை உடையன வாக விளங்குகின்றன.

பழங்காலத்தும் இன்றும் விழாக்கள் நடைபெற்று வந்தன - வருகின்றன. எனினும் முன்னைய விழாக்கள் அனைத்தும் இன்று நடைபெறுகின்றன என்றல் அமையாது. பல வழக் கொழிந்தன. இன்று நிகழ்வுறும் விழாக்கள் அனைத்தும் முன்பு நிகழ்ந்தனவோ எனின் அதுவும் பொருந்தாது. கால மாறு பாட்டாலும் புதியவர் கூட்டுறவாலும் பற்பல விழாக்கள் புதியன வாகப் புகுந்தன. ‘பழையன கழிதலும் புதியன புகுதலும்’ காலவகையால் இயல்பேயாதலின் இன்னோரன்ன மாற்றங்கள் - நிகழ்வனவாயின.

சிலம்பும் மேகலையும் சிறப்புறக் கூறும் இந்திர விழா எந்நிலையெய்திற்று? சங்க நூல்கள் கூறும் விழாக்கள் யாவை? இவை எத்தகையன? அவை எவ்வாறழிந்தன என்னும் வினாக் களை எழுப்பி விடைகளை நாட முற்படின் நாம் வருந்தும் நிலையைத் தவிர வேறொன்றுங் காண்டல் இயலாது.

இன்று நம்மாற் கொண்டாடப் பெறும் விழாக்கள் அனைத்துக்கும் ஏதேனும் இலக்கியங்களிற் சான்றுகள் உளவோ? என்று நோக்கின் ஒன்றிரண்டு தவிரப் பலவற்றுக்குச் சான்றுகள் கிடையா.

நாம் கொண்டாடும் விழாக்கள் பண்டிகையென்றும், திருநாள் என்றும், நோன்பு என்றும் பல்வகைப் பெயர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. இவை இன்றைய நிலையில் நமக்குத் தேவையா? இன்றியமையாதனவா? நாம் இவற்றைக் கொண்டாட வேண்டுமா? என்னும் வினாக்கள் ஒருபுறம் இருக்க அவ்விழாக்கள் தமிழர்க்கே உரியனவா? தமிழ் நாகரிகம் உடையனவா? வேறு நாகரிகங்களை அடிப்படையாகக் கொண்டனவா? பிறர்க்கே உரியனவாகி அவர்தங் கூட்டுறவால் நம்மிடைப் புகுந்தனவா? என்றெல்லாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும். அவ்வெண்ணம் நம்மிற் பெரும் பான்மையினர்க்கு எழுவது இல்லை. ஏதோ எல்லாரும் கொண்டாடு கின்றனர் நாமும் கொண்டாடுகின்றோம் என்ற பெரும் போக்கிலே தான் இயங்குகின்றோமே தவிர, எவை நமக்கே உரியன; எவை பிறர்க்கே உரியன? எவையெவை கலந்துள்ளன? என்று நாம் பிரித்துணர்வதேயில்லை. அவ்வாறு வேறு பிரித்துணர்வதால் தீதொன்றும் நேர்ந்துவிடப் போவதில்லை.

அரிசி தமிழர் உணவு என்று சொல்கிறோம். கோதுமை வடவர் உணவு என்கிறோம். இதனால் தீங்கா நேர்ந்துவிட்டது.

விரும்பியோர் மாறி மாறி உண்கின்றோம். எனினும் இஃது இன்ன நாட்டுணவு என்னும் உணர்வு நம்மிடையே இல்லாமலா போய் விடுகிறது? அவ்வாறே நாம் கையாளும் ஒவ்வொரு துறையிலும் நம் பண்புகளை - நாகரிக இயல்புகளை ஆராய்ந்து தெரிந்து கொள்ளுதல் வேண்டும். அதனோடமையாது அவ்வத் துறைகளில் கலந்துள்ள வேறு நாகரிகங்களையும் தெளிவாகத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

நம் மொழியில் வேற்று மொழிச் சொற்கள் கலந்திருப்பது போல நம் விழாக்களிலும் அயல் நாகரிகங்கள் அறிந்தோ அறியாம லோ கலந்திருப்பது உண்மை. வெள்ளணி நாள் (பிறந்த நாள்) இன்றுங் கொண்டாடி வருகிறோம். முந்தைய முறை வேறு. இன்றைய முறை வேறு. இன்று எரியும் மெழுகு வர்த்தியை வாயால் ஊதி அணைப்பதும் ‘கேக்’ வெட்டுதலும் பழக்கமாகி விட்டது. விளக்கேற்றுதல் நம் மரபு. விளக்கை அணைப்பது வேறு மரபு. அதாவது ஆங்கில மரபு. இவ்வாறு பிற நாகரிகக் கலப்பை அறிந்துகொள்வது நலம் பயக்கும்.

நாம் கொண்டாடிவரும் விழாக்களில் குறிப்பிடத் தக்கனவும் பரவலாகவுள்ளனவும் யாவை? ஐப்பசித் திங்களில் வரும் தீபாவளியும், தை முதல் நாளில் வரும் பொங்கலும், ஏசு பிறந்த நாளும், முப்பது நோன்பென்னும் ஈத்துப் பண்டிகையும் ஆகும். இவற்றுள் எது தமிழ் நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டது? எது தமிழர்க்கே உரியது? எது பிறர்க்கே உரியது? என்றெல்லாம் ஓரளவு நுணுகிப் பார்க்கும் பண்பைத் தமிழர் நலத்தில் அக்கறை கொண்ட பெரு மக்கள் பரப்பி வருகின்றனர்.

இவை தவிரப் புரட்டாசித் திங்களில் ஒரு விழா நாடெங்கிலும் கொண்டாடிவருகின்றோம். அவ் விழாவுக்கு ‘நவராத்திரி’ யென்றும் ‘தசரா’ என்றும் பெயர் கூறுவர். இது தமிழர்க்கே உரிய திருநாளா? பிறர்தங் கூட்டுறவாற் புகுந்த திருநாளா? எனச் சிறிது ஆய்ந்து உண்மை காண்பதே கட்டுரையின் நோக்கமாகும்.

இது பிறர்க்கே உரிய திருநாள்; இங்குக் குடியேறியோர் புகுத்திய திருநாள்; நாம் அவர்களைப் பின்பற்றிக் கொண்டாடுந் திருநாள் என்றே நம்மிற் பெரும்பாலோர் நம்பி வருகின்றனர். அந் நம்பிக்கைக்குக் காரணம் அவ் விழா நிகழ்ச்சி பற்றித் திரித்து விடப்பட்ட கட்டுக் கதைகளும் புராணக் கோட்பாடு களுமே

யாகும். மேலும் அவ்விழாவின் பெயர் *'நவராத்திரி', 'தசரா'* என்று பிறமொழிப் பெயராக இருப்பதாலும் இது நம்மவர்க்கு உரியதன்று என மேற்போக்காகக் கருதிவிட்டோம். நுணுகிப் பார்த்திருப்பின் உண்மை புலனாகியிருக்கும். தமிழ்ப் பண்பை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சிகளையும் பிறவற்றையும் தமிழ்ச் சொற்களாற் குறியாமல் பிறமொழிச் சொற்களாற் குறிப்பதால் விளையுந் தீமைகளுள் இதுவும் ஒன்று எனலாம். உண்மையில் இஃது எவர்க் குரியது? என்பதைக் காய்தல், உவத்தல் அகற்றி ஆய்ந்து முடிவு காண்போம்.

'நவராத்திரி' என்பதற்கு ஒன்பது இரவுகள் என்பது பொருள். 'தசரா' என்றால் பத்து இரவுகள் என்று பொருள். விழா கொண் டாடும் இரவுகள் ஒன்பதா? பத்தா? என்பது பெயர் வைத்தவர் களுக்கே குழப்பமாக இருந்திருக்க வேண்டும். ஆதலின், அப்பெயரி லேயே குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் முதலில் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

பெயரை விடுத்து, இவ் விழாவில் நிகழும் நிகழ்ச்சிகளைச் சிறிது காண்போம். இத் திருநாள் கொண்டாடப் பெறும் நாளில் முதலிடம்பெறுவது கொலு நிகழ்ச்சியேயாகும். இல்லங்களில் அழகிய பொம்மைகளைப் பல வகையாக நிரல்பட வைத்து அழகுறச் செய்வதே கொலுவாகும். அவ்வவர் செல்வ நிலைக் கேற்பவும் கற்பனைத் திறனுக்கேற்பவும் வீடுகளிற் பொம்மை களின் எண்ணிக்கையும் காட்சிப் பொலிவும் அமையும். மக்கள் நாகரிக முதிர்ச்சிக்கேற்பவும் பழக்க வழக்கங்களுக்கேற்பவும் பலவகைக் கோலங்கள் பெற்றுத் திகழும் இக் கொலு நிகழ்ச்சி கண்டு களிக்க வருவோர்க்குத் தின்பண்டங்கள் வழங்கலும் நிகழும். பொம்மைகளை அழகுற அமைத்துக் கொலு வைத்துக்கொண்டு கண்டு மகிழ்வதும் பிறரை மகிழச் செய்வதும் தின்பண் டங்கள் பரிமாறிக் கொள்வதும் குழந்தைகள் பொருட்டுச் செய்யும் செயலா? பெரியவர் பொருட்டுச் செய்யும் செயலா? அவை சிறுவர்க்காகச் செய்யுஞ் செயலே என்பதில் ஐயமே இல்லை. பெரியவர் பொம்மை வைத்து விளை யாடுவது பேதைமையன்றோ? மேலும், பெரியவர் ஆடும் விளை யாட்டை எவர்தாம் கண்டு களிப்பர்?

அடுத்து இத் திருநாளில் பள்ளிச் சிறுவர்கள், கோலாட்டம் அடித்து ஆடுவதும் உண்டு. காண்பார்க்குக் களிப்பூட்டித் தாமும்

இன்புறுவர். இக்கோலாட்ட நிகழ்ச்சியும் சிறார்க்கே உரியது. பெரியோர் கோலாட்டம் ஆடிற் கண்டு களிப்போர் யாவர்? காட்சிக்கு இன்பந்தான் நல்குமா? சிறு மகார் ஆடின் இன்பக் காட்சியாக விளங்கும். ஆகவேதான், பள்ளிச் சிறார் ஆடி இன்ப மூட்டுகின்றனர். எதிர் எதிராக நேர்வரிசையில் நின்று கோலாட்டம் அடித்து ஆடுவர். வட்டமாக நின்றுகொண்டும் ஆடுவதுண்டு. சிறு சிறு கயிறுகளில் கோலாட்டக் குச்சிகளைக் கட்டிக் கொண்டு பின்னல் கோலாட்டம் என்னும் பெயராலும் ஆட்டம் நிகழும். இவ்வண்ணம் திறமைகளுக்கேற்ற வகையில் இக்கோலாட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும். செட்டிநாட்டில் செவ்வனே நிகழ்ந்து கொண்டிருந்த இந்நிகழ்ச்சி வரவர அருகிக்கொண்டே வருகிறது. இதற்கு மாறாக கொலு நிகழ்ச்சி எங்கும் பெருகிக்கொண்டே போவதுடன் அமையாது கோவில் களுக்குள்ளும் நுழைந்திருக் கிறது.

மற்றொரு நிகழ்ச்சியும் இவ்விழாவில் நிகழ்வதுண்டு. நம் நாட்டுச் சிறுவர்க்குக் கல்விப் பயிற்சி, பெரும்பாலும் புரட்டாசித் திங்களில் இத்திரு நாளிலேதான் தொடங்கும் பழக்கம் இருந்து வந்தது. இந்நிகழ்ச்சியும் காலப் போக்கால் குறைந்துகொண்டே வருகிறது. கல்வி தொடங்கும் இந் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றதுண்டு. குழந்தைகட்குப் புத்தாடை முதலியவற்றால் நன்கு ஒப்பனை செய்து மேளதாளங்களுடன் உற்றார் உறவினர் புடைசூழப் பள்ளிக்கு அழைத்துச் சென்று நல்லாசிரியரைக் கொண்டு எழுத்துப் பயிற்சியைத் தொடங்கி வைப்பர். கல்வி தொடங்குதல் பிள்ளைப் பருவத்திலே நிகழ வேண்டிய செயலே யாகும். ஆதலின் இந் நிகழ்ச்சியும் சிறுவர் களைப் பொறுத்ததே யாகும்.

இந் நாளில் சிறுவர்க்குக் கல்வி தொடங்கும் பழக்கம் இன்றும் கேரளத்தில் இருந்துவருகிறது. *'துஞ்சத்து எழுத்தச்சன்'* என்னும் நல்லாசான் வாழ்ந்த இடம், *துஞ்சன் பறம்பு* என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. இது கள்ளிக்கோட்டை ஒலவக் கோடு இருப்புப் பாதையில் உள்ள திரூர் என்னும் தொடர்வண்டி நிலையத்துக்கருகில் அமைந்துள்ளது. முதன் முதலாகக் குழந்தை களுக்குக் கல்வி தொடங்கும் சடங்குக்கு *'எழுத்தினிருத்து'* என்று பெயர். அவ் விழாவை இந்தப் பறம்பில் வைத்து நடத்தினால் பலமடங்கு பயன்

உண்டு என்று மக்கள் நம்புகிறார்கள். ஆகவே, இங்கே சடங்குக்கு உரிய நாளிலே பெரும்பாலோர் வந்து சடங்கை நடத்துகிறார்கள். நவராத்திரியை ஒட்டி வரும் விசயதசமியன்று இங்கே பெருங் கூட்டம் கூடுகிறது. குழந்தை களுடன் அவ்விடத்துக்கு வர இயலாத வர்கள் துஞ்சன் பறம்பி லிருந்து மண்ணை எடுத்துக் கொண்டு வந்து தங்கள் வீட்டில் வைத்துச் சடங்குக்குப் பயன்படுத்துவதும் உண்டு. (தினமணி-சுடர் அனுபந்தம் **30.11.1969**-வி.எஸ்.நம்பூதிரிபாடு) சோழ நாட்டிற் பலவிடங் களில் 'மாநோம்பு', 'மாநோம்புச் சாவடி' என்னும் சொல் வழக்கும் இடங்களும் இன்றும் உண்டு. சேர, சோழ, பாண்டிய நாடுகளாக விளங்கிய தமிழகமெங்கும் இந் நாள் கொண்டாடப்பட்டு வந்தது என்பது புலனாகிறது.

இத் திருவிழாவின் இறுதி நாளில் *அம்பு போடுதல்* என்ற ஒரு நிகழ்ச்சியும் நடைபெறும். அரசர் இருந்த நகரங்களில் அவ்வரசரே அரச வீதிகளின் வழியாக உலாப்போந்து குறித்த இடத்துக்கு வந்து அம்பு போடும் பழக்கம் உண்டு. ஏனைய ஊர்களில் ஆங்காங் கேவுள்ள கோவில்களிலிருந்து கடவுள் திருவுருவங்களுக்கு வில்லம்பு தாங்கிய திருக்கோலம் செய்வித்து, எழுந்தருளப் பண்ணி திருவுலாக் கொணர்வர். இறுதியில் குறிப்பிட்ட இடத்தையடைந்து அம்பு போடத் தொடங்குவர். கடவுளர் கையிலுள்ள வில்லும் அம்பும் அவ்வண்ணமே யிருக்கும். கடவுளர் அருகில் அமர்ந்திருக்கும் குருக்கள்மார் அத் தொழிலைச் செய்வர். மணியடிக்குங் கையில் வில்லையும் சூடத் தட்டேந்துங் கையில் அம்பையும் ஏந்தினால் எப்படி யிருக்கும்? பாவம்! அவர்கள் எந்தக் காலத்தில் வில்லம்பு ஏந்தினர்? அதனால் அம்பெய்தவுடன் அவர்தம் காலடியிலேயே வீழும். அம்புகள் கூர்மையின்றியிருப்பதால் கால்களிற் காய மின்றித் தப்புவர்.

இதற்கு முன் கூறிய அனைத்தும் பிள்ளைப் பருவத்துக் குரியனவாக இருக்க அம்பு போடுதல் மட்டும் அரசர் செயலாகவும் கடவுளர் 'பிரதிநிதி'ச் செயலாகவும் உளதே என்னும் எண்ணம் எழலாம். அரசர் தொடர்பும் ஆண்டவன் தொடர்பும் நாமாகப் பின்னர்ப் புகுத்திக் கொண்டவையே. அம்பு போடுதல் என்ற நிகழ்ச்சியும் சிறாரைப் பொறுத்ததே. பள்ளிச் சிறுவரும் ஏனைய சிறுவரும் அழகுத் திருவுருவங்களாகக் காட்சியளிப்பர். அந் நாளில் அச்சிறுவர்தங் கைகளிலே அம்புகள் இலங்கும். செல்வக் குடிச்சிறார்

களாயின், பல்வகை வேலைப்பாடுகள் அமைந்த வெள்ளியம்புகள் வைத்திருப்பர். ஏழையராயின் அவர் கைகளில் கோலாட்டக் குச்சிகளே அம்புகளாகத் தோற்றமளிக்கும். ஊரின் நடுவே வாழை மரமொன்று நன்கு கட்டி வைக்கப் பட்டிருக்கும். அம்பேந்திய இச் சிறுவீரர், அம்மரத்தின் மீது தம் ஆற்றலைக் காட்டுவர். சிறிது நேரத்தில் அப்பகைவாழை நார் நாராகி, உருச்சிதைந்து வீழும். சிறு பருவத்தில் கோலாட்டக் குச்சியேந்தி வாழையின் மார்பைப் பிளந்து கீழே வீழ்த்தி வெற்றிக் களிப்புடன் வீடு திரும்பிய அக் காட்சி இன்னும் என் மனத்தே பசுமையோடிருக்கிறது.

மேற்கூறிய அம்பு போடும் நிகழ்ச்சியும் சிறுவரோடு தொடர் புடையதே என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடிகிறது. தமிழர் மரபு வீர மரபு ஆதலின், அம்மரபுக்கேற்ப இளஞ் சிறார்க்குக் கல்வி தொடங்கும்போதே போர்ப் பயிற்சியையும் வீரத்தையும் விளை யாட்டாகவே தொடங்கி வைத்துள்ளனர். நம் முன்னோர், கல்வியும் வீரமும் குழந்தைகளுக்கு விளையாட் டாகவே ஊட்டியுள்ளனர் என்னும் உண்மையையும் இதன் வாயிலாக நாம் உணர முடிகிறது.

சிறாரும் விற்பயிற்சி, வேற்பயிற்சியுடையர் என்பதனைப் புறப்பொருள் வெண்பாமாலைப் பாடலொன்று நமக்குப் புலப் படுத்தும். "அவ் வீரனுடைய பதி, வில்லின் முன் அம்பைத் தேர்ந்தெடுத்துத் தொடுக்கும் வேட்டையாடும் சிறு பிள்ளைகளின் முன் முயல்கள் பாயும் முன்றிலையுடையது" என்பது அப் பாடற் கருத்தாகும். அப் பாடல்,

*"வில்முன் கணைதெரியும் வேட்டைச் சிறுசிறார்*
*முன்முன் முயல்உகளும் முன்றிற்றே"* என்பதாகும்.

*'கணைதெரியும் சிறுசிறார்'* என்ற தொடரை உற்று நோக்குக.

இதுகாறும் கூறிய கொலு வைத்தல், கோலாட்டம் ஆடுதல், கல்வி தொடங்குதல், அம்பு போடுதல் போன்ற நிகழ்ச்சி களால் இவற்றை அடிப்படையாகக் கொண்ட இத்திருநாள் குழந்தைகளுக் காக நம் முன்னோரால் ஏற்படுத்தப்பட்ட பெருநாள் என்பது உறுதி யாகிறது. குழந்தைகட்கு விளையாட்டாகவே எதையும் கற்றுக் கொடுத்தல் வேண்டும் என்பது உளநூல் உணர்த்தும் உண்மை. இவ்வுண்மையை நன்குணர்ந்த தமிழர், இத்தகு ஒரு திருநாளை, குழந்தைகள் விழாவை ஏற்படுத்தியிருக்கின்றனர். இப்போது சில

ஆண்டுகளாக உலகக் குழந்தைகள் விழா என்று கொண்டாடி வருகிறோமல்லவா? இந்த விழா முன்பே நம்நாட்டில் உயரிய முறையில் கொண்டாடப் பெற்று வந்திருக்கிறது. நாம் மறந்து விட்டோம். 'தசரா' என்றும் 'நவராத்திரி' என்றும் 'சரசுவதி பூஜை' என்றும் 'ஆயுத பூஜை' என்றும் எப்படியெல்லாமோ பெயரை மாற்றி வைத்து, மயங்கிப் பெரியவர்களாகிய நாம் விளையாடிக் கொண் டிருக்கிறோம்.

இவ் விழா குழந்தைகள் விழா தமிழர்க்கே உரிய விழா என்பதில் ஐயமே இல்லை. இதன் பெயர் மறையும்படியாக மேலே பூசப்பட்ட வண்ணங்களைக் கொண்டும், கட்டுக் கதை களைக் கொண்டும், பெயர்களைக் கொண்டும் அயலவர் விழா வென்று மயங்கிவிட்டோம். விழாவின் நிகழ்ச்சிகளை நோக்கும் அளவி லேயே உண்மை புலனாகும். எனினும் இதன் உண்மைப் பெயரையும் அறிந்துகொள்வது சாலப் பயன்தரும். இதனை யறிந்துகொள்ளச் செட்டிநாட்டுப் பகுதிகளுக்குச் செல்லுதல் வேண்டும். இப் பகுதி மக்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை மிகச்சிறப்பாகக் கொண்டாடி வந்தனர். எப்படியோ இப்பொழுது அருகிவிட்டது. இவ்விழாவினை 'மாநோம்பு' என்றும் 'மகர் நோம்பு' என்றும் அப்பகுதியில் இன்றும் கூறுவதைக் கேட்கலாம். அச்சொல்லின் உண்மையுருவம் வேறு. அவ்வுருவம் பேச்சு வழக்கிற் சிதைந்து திரிந்து உருமாறியிருக்கிறது. *மகார் நோன்பு* என்பதே அதன் முழு உருவம். மகார் என்னுஞ் சொல் சிறுவர் எனப் பொருள்படும். நோன்பு எனுஞ்சொல் விழா, திருநாள் எனும் பொருளில் வரும். மகார் நோன்பு என்னும் பெயர். சிறுவர் விழா - குழந்தைகள் விழா என்னும் பொருளைச் சுட்டி நிற்கிறது.

இவ்வாறு குழந்தைகளுக்குக் கொலுவும் கோலாட்டமும் காட்டி விளையாட்டுணர்வூட்டி அவ்வழியே கல்வியைத் தொடங்கிப் படைப் பயிற்சியும் அளித்து வளர்த்துவந்தனர். நம் மக்கள்தாம் கற்பனை வளம் மிக்கவர் அல்லவா? கல்விக்குக் கலைமகள் என்றும் வீரத்துக்குக் கொற்றவையென்றும் கற்பனை யுருவம் கொடுத்தனர். காலப் போக்கில் அவை சமயச் சார் புடையனவாகி, சரசுவதிபூசை, ஆயுதபூசை எனப் பெயர் பெற்றன. கல்வியையும் படைக் கலத் தையும் என்று பூசனைப் பொருளாக் கினரோ அன்றே கல்வியிலும் வீரத்திலும் பின் தங்கிவிட்டனர் தமிழர். தெய்வங்களின் பெயரால் கள்ளக் கணக்குச் சுவடி களையும் வஞ்சனைத் துலாக் கோலையும்

வழிபடத் தொடங்கிப் பொய்யராக - போலியராக மாறிவிட்டனர். மகார் நோன்பு என்னும் பெயரை மறந்ததால் - மாற்றியதால் நேர்ந்த விளைவு களை எண்ணிப் பாருங்கள்.

புரட்டாசித் திருநாள் தமிழர்க்கே உரிய திருநாள் என்ற உண்மையையும் குழந்தைகளுக்காக ஏற்படுத்தப் பெற்ற திருநாள் என்ற உண்மையையும் உலகுக்குணர்த்த மகார் நோன்பு என்ற இப் பெயர் ஒன்றே சாலும்.

இப்பெயரும் நிகழ்ச்சியும் மற்றப் பகுதிகளில் வழக் கொழிந் தமை போலச் செட்டிநாட்டுப் பகுதியிலும் வழக் கொழிந் திருப்பின், இவ் விழாவையும் இதன் உண்மைகளையும் இழந்திருப் போம். ஆதலின், இன்னோரன்ன பழந்தமிழ்ச் சொற் களை வழக்கொழிய விடாது காத்தலும் அவற்றுட் பொதிந்துள்ள உண்மை களை ஆய்தலும் தமிழ் மக்களுக்குத் தலையாய கடமையாகும். இக் கடமை காத்து ஒழுகுவோமாகின் நாம் இழந்த பல உரிமைகளை - செல்வங்களை-நாகரிகங்களை மீண்டும் பெற்றுத் திகழலாம் என்பது ஒருதலை.

*('தினமணிக் கதிர்' இதழில் வெளிவந்தது)*

✪✪✪

# 3

# ஒருமையா? ஒற்றுமையா?

இந்திய அரசியலில் *'ஒருமைப்பாடு'* என்ற சொல் அடிக்கடி ஒலித்துக் கொண்டிருப்பதைக் கேட்கிறோம். இடையிடையே *'ஒற்றுமை'* என்ற சொல்லும் அடிபடுவதுண்டு. இவ்விரு சொற் களும் ஒரே பொருளைத் தருவன போலத் தோன்றும். ஆனால், அவ்விரண்டு சொற்களுக்கும் பொருள் வேறுபாடு இருத்தலை நுணுகி ஆராய்வோர் எளிதில் அறிந்து கொள்வர். ஆதலின், அச்சொற்கள் பற்றி ஆராய்ந்தறிவது நலம் பயக்கும் என்ற கருத்துடன் இக் கட்டுரை எழுதப்படுகிறது. சொல் பற்றிய ஆராய்ச்சி ஒன்றுதான் நோக்கமே தவிர அரசியல் ஆராய்ச்சி அன்று. நாட்டில் பிளவுபட்ட நிலை இருத்தல் தகாது; ஒன்றுபட்ட நிலை உருவாதல் வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிற்றான் 'ஒருமைப்பாடு' என்ற சொல்லும் 'ஒற்றுமை' என்ற சொல்லும் பயன்படுத்தப் பட்டு வருகின்றன.

### ஒருமை என்றால் என்ன

முதலில் 'ஒருமைப்பாடு' என்றால் என்ன? என்பதைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். இதற்கு *இராமலிங்க அடிகளார்* அருமை யான விளக்கம் தருகிறார். இறைவனே! உன்னை உள்ளன்புடன் நினைக்கின்ற அடியவருடைய தொடர்பு எனக்கு வேண்டும் என்ற கருத்தை *'ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்'* என்ற பாடல் வரியாற் குறிப்பிடு கின்றார். இதில் 'ஒருமை' என்ற சொல்லைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். இறைவனை எவ்வாறு நினைப்பது? கண்ணொன்று காணச் செவி யொன்று கேட்க, நாவொன்று சுவைக்க, மூக்கொன்று முகர மனம் இறைவனை நினைப்பதாற் பயனில்லை. ஏனைய பொறிகள் தத்தம் புலன்களிற் செல்லாது அடங்கி, ஒடுங்கி ஐம்புலனும் ஒரு புலனேயாக மனம் இறைவனை நினைத்தல் வேண்டும். அதுதான் ஒருமை; அதுதான் உண்மையான அன்பு; அவ்வாறு நினைப்பவரே 'உத்தமர்' ஆவர் என்பது அடிகளார்தம் உள்ளக் கிடக்கை. அவ்வாறாயின்

பிறவெல்லாம் தம்தம் தனிநெறியிற் செல்லாது அடங்கி, ஒடுங்கி ஒன்று மட்டுமே தலை நிமிர்ந்து செயற்படுவது 'ஒருமை' என்றாகிறது. இஃது ஒற்றுமையாகாது.

**ஒற்றுமை என்றால் என்ன**

இனி ஒற்றுமை என்ற சொல்லை - அதன் விளக்கத்தைக் காண்போம். ஒரு பள்ளியில் ஆசிரியர் பலர் இருக்கின்றனர். குறித்த நேரத்தில் உள்ளே நுழைகின்றனர். ஒருவர் கணக்குப் பாடம் கற்பிக்கின்றார். ஒருவர் தமிழ் கற்பிக்கின்றார். ஒருவர் ஆங்கிலம்; ஒருவர் அறிவியல் என்று தனித்தனியே பாடங்கள் கற்பிக்கின்றனர். பின்னர் உரிய நேரத்தில் வெளிப்போந்து தனித் தனியே அவரவர் தம் இல்லத்து வேலைகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு பள்ளியின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஒரு நேரத்தில் ஓரிடத்திற் கூடி ஒன்றுபட்டு நின்று பணி செய்து பின்னர்ப் பிரிந்து தத்தமது கடமையாற்றுகின்ற நிலைமை ஒற்றுமையாகும். அஃதாவது கூட வேண்டிய நேரத்திற் கூடி அவரவர் பாடங்களைக் கற்பித்துப் பிரிய வேண்டிய நேரத்தில் பிரிந்து வாழ்வது ஒற்றுமை. இதனை 'ஒருமை' என்று கூறுதல் பொருந்தாது. ஒருமை எனக் கூறினால் அவரவர் பாடங்களைக் கற்பிக்காது ஒரே பாடத்தைக் கற்பித்தல் வேண்டும். கூடுதலும் பிரிதலும் இன்றிப் பள்ளிக்குள்ளேயே உறைதல் வேண்டும். இதுதான் ஒருமை.

**இலக்கண விளக்கம்**

மற்றொரு வகையால் இச்சொற்களுக்கு விளக்கம் காண் போம். இலக்கணத்தில் 'இரட்டைக் கிளவி', 'அடுக்குத் தொடர்' என இரு சொற்கள் உண்டு. நீர் சலசல என ஒடுகிறது என்னும் தொடரில் சலசல என்பது இரட்டைக் கிளவி ஆகும். கிளவி என்றால் சொல் என்று பொருள். சொல் இரட்டையாகவரின் அஃது இரட்டைக் கிளவி எனப்படும். 'சலசல' எனச் சேர்ந் திருக்கும் பொழுது அஃது ஒலிக்குறிப்புப் பொருளை உணர்த்தும். 'சல' எனப் பிரித்தால் தனக்குரிய பொருள் தாராது. தனித்து நின்று பொருள் தாராது. ஒரு சொற்போலச் சேர்ந்து நின்றால் மட்டுமே பொருள் தருவது 'இரட்டைக் கிளவி' எனப்படும். இதுபோன்றதுதான் ஒருமைப்பாடும். அஃதாவது தனித்து நில்லாது, தனக்குரிய தன்மை யிழந்து மற்றொன்றுடன் இரண்டறக் கலந்து ஒன்று போல நின்று செயற்படுவது ஒருமை.

அடுக்குத் தொடர் என்பது இரட்டைக் கிளவி போலவே இரு சொற்கள் கூடி நிற்கும். ஆனால், பிரிந்து நிற்பினும் தனக்குரிய பொருளைத் தரும். பலபல ஊரார் பாராட்டினர் என்ற தொடரில் 'பலபல' என்பது அடுக்குத்தொடர். இது 'பல' எனப் பிரித்து நிற்பினும் தனக்குரிய பொருளைத் தரும். இதனை 'இரட்டைக் கிளவி' எனல் பொருந்தாது. இவ்வாறு ஒன்றுடன் ஒன்று கூடி நின்றும் தனித்து நின்றும் தனக்குரிய தன்மையுடன் இயங்குவது ஒற்றுமையாகும்.

**பாலும் சர்க்கரையும்**

பாலுடன் சர்க்கரை கலக்கப்படுகிறது. சர்க்கரை கரைந்து விடுகிறது. தன் உருவத்தையும் இழந்துவிடுகிறது; பால் மட்டும் கண்ணுக்குப் புலனாகிறது; அதற்குச் சுவையும் கூடுகிறது. இவ்வாறு ஒன்று மற்றொன்றுடன் கலந்து, தன் தனித்தன்மையை இழந்து அந்த மற்றொன்றுக்கு வலிமை கூட்டுவது ஒருமை.

**மலரும் மாலையும்**

பல்வேறு வகையான மலர்களைக் கொண்டு ஒரு மாலை தொடுக்கிறோம். பல்வேறு நிறமும் பல்வேறு மணமும் கொண்ட மலர்கள் அனைத்தும் ஒன்றுகூடி மாலையாகி அழகு தருகிறது. ஆயினும், ஒவ்வொரு வகை மலரும் அதனுடன் நிறத்துடனும் மணத்துடனும் பொலிந்து நிற்கும். தனித்தன்மையை இழந்து விடுவதும் இல்லை. மாலையிலிருந்து பிரிக்கப்படினும் அவ்வம் மலர்கள் தத்தமக்குரிய நிறத்துடனும் மணத்துடனும் மிளிரும். இவ்வாறு பல பொருள்கள் தத்தம் தனித்தன்மையை இழந்து விடாது, கூடி நின்று, பின்னர்ப் பிரியினும் பண்டைய நிலையில் இருப்பது ஒற்றுமை எனப்படும். சுருங்கக் கூறின் ஒன்றுக்குள் ஒன்று கலந்து மறைவது ஒருமை. ஒன்றுடன் ஒன்று சேர்ந்து வாழ்வது ஒற்றுமை.

**பாரதி விளக்கம்**

ஒருமைக்கும் ஒற்றுமைக்கும் உள்ள வேறுபாட்டை நன்குணர்ந்த பாரதியார் நமக்குத் தெளிவு பிறக்கும் வகையில் பாடி யுள்ளார்.

> *“செப்புமொழி பதினெட்டுடையாள் - எனில்*
> *சிந்தனை ஒன்றுடையாள்”*

என்னும் பாரதியார் பாடல் ஒற்றுமை என்னும் சொல்லுக்கு விளக்கம் தருவதை விடப் பிறிதொரு விளக்கம் வேண்டுவதோ? அவர்

காட்டும் நெறியில் கருத்தைச் செலுத்தினால் செப்புமொழி பதினெட் டாகவும் சிந்தனை ஒன்றாகவும் இருப்பதுதான் ஒற்றுமை என்பது நன்கு புலனாகும். இவ்வாறின்றிச் செப்புமொழி ஒன்றாகவும் சிந்தனை பதினெட்டாகவும் இருப்பின் ஒருமை யாகும். இதனால் நாட்டுக்கு வலிமையோ, வளர்ச்சியோ, பொலிவோ, பெருமையோ ஏற்படும் என்பது ஐயப்பாட்டுக் குரியது.

உண்மையான நாட்டுப் பற்றும் விடுதலை வேட்கையும் கொண்ட பாரதியார் இவ்விரு சொற்களுக்கும் உள்ள வேறு பாட்டை நன்குணர்ந்தவராதலால் நாடு வாழ்தல் வேண்டும் என்ற மனநிலையிற் பாடுகின்றார். இந்திய ஒற்றுமையைப் பல்வகை யிலும் வலியுறுத்திப் பாடும் இயல்புடைய அவர்,

*“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - நம்மில்*
*ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு”*

என்று பாடுகின்றார். இப்பாடலில் மிகுந்த உன்னிப்புடன் ஒற்றுமை என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார்; ஒருமை எனுஞ் சொல்லைப் பயன்படுத்தவில்லை. இந்தியா நல்வாழ்வு பெற ஒற்றுமை வேண்டற் பாலது. அவ் வொற்றுமையைச் சிந்தனை ஒன்றாக இருந்தால் மட்டுமே உண்டாக்க இயலும். அதை விடுத்து மொழி ஒன்றாக இருப்பதாலோ ஆட்சி ஒன்றாக இருப்பதாலோ உண்டாக்கிவிட இயலாது என்பது அவர்தம் கருத்து.

ஆதலின், இவ்விரு சொற்களுக்கும் உள்ள வேறுபாட்டை நன்குணர்ந்து கொண்டு இந்தியா வலிமையுள்ள நாடாக விளங்க ஒருமை வேண்டுமா? ஒற்றுமை வேண்டுமா? என்பதை அரசியல் சீர்வாய்ந்த நல்லோர் ஆய்தல் நன்று.

இந்தியா பல்வேறு மொழிகள், பல்வேறு இனங்கள் பல்வேறு பண்பாடுகள், நாகரிகங்கள் கொண்ட பல்வேறு மாநிலங்களடங்கிய நாடு. அம் மாநிலங்களில் உள்ள இனம், மொழி, பண்பாடுகள் தத்தம் தனித்தன்மையை இழந்து ஒரே இனம், ஒரே மொழி, ஒரே பண்பாடு என இரண்டறக் கலந்து விடுவதுதான் நோக்கமெனில் ஒருமைப்பாடு என்ற சொல்லே பொருத்தம் உடையது. அவ்வாறன்றி, அந்தந்த மாநிலத்து இனம், மொழி, பண்பாடு கெடாமல், தனித்தன்மையை இழந்து விடாமல் காத்துக்கொண்டு இந்திய ஒன்றியத்திற் கூடி வாழ்வது நோக்க மெனில் ஒற்றுமை என்ற சொல்லே சாலப் பொருத்தமுடைத்து.

ஆதலின், நாட்டின் நலங் கருதும் நல்லோர், உண்மையான நாட்டுப் பற்றுடையோர், உலக அரங்கில் இந்தியா உயர்ந்த புகழைப் பெறுதல் வேண்டும் என்று விழைவோர், ஒன்றுபட்டுக் கூடி வாழும் நல்லெண்ணங் கொண்டோர் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த வேண்டிய சொல் ஒருமையா? ஒற்றுமையா?

✪✪✪

**4**

# கவிதை பிறந்த கதை

குழந்தை எளிதாகப் பிறப்பதும் உண்டு, பெரும் வேதனை களுக்கிடையே பிறப்பதும் உண்டு. அவ்வவர் உடல்நிலைக் கேற்ப அது நிகழும். கவிதை பிறப்பதும் அப்படித்தான். எளிதாகவும் பிறக்கும், இடர்ப்பாடுகள் தந்தும் பிறக்கும். அவ்வப்பொழுது ஏற்படும் மனநிலைக்கேற்ப அது பிறக்கும். கவிதை பிறக்கும் பொழுது என் பட்டறிவு நிகழ்ச்சிகளை ஈண்டுக் குறிப்பிட விழை கின்றேன்.

*1949*இல் பணி தேடும் படலத்தில் நான் ஈடுபட்டிருந்த நேரம், மணப்பாறையில் என் நண்பர் இல்லத்தில் தங்கியிருந்தேன். அப்பொழுது *'பொன்னி'* ஆசிரியரிடமிருந்து ஒரு மடல் வந்தது. கோவையில் *முத்தமிழ் மாநாடு* நடைபெறப் போவ தாகவும் *'அழகின் சிரிப்பு'* என்னுந் தலைப்பில் கவிதைப் போட்டி வைத்திருப்ப தாகவும் திசம்பர் மாதம் 22ஆம் தேதிக்குள் கவிதை அனுப்புதல் வேண்டு மென்றும் குறிப் பிட்டிருந்தார். மணப்பாறை நண்பர் என்னையும் போட்டியிற் கலந்துகொள்ள வற்புறுத்தினார். அப்பொழுது என் மனநிலை சரியில்லை. அதனால் எழுதவு மில்லை.

தேதி 20 ஆயிற்று, பெரியகுளத்துக்குப் புறப்படுகிறேன். நான் கவிதை எழுதவில்லையே என்று நண்பர் வருத்தப்பட்டார். தொடர் வண்டியிற் செல்லும் பொழுது எழுதிவிடுகிறேன். தாளொன்று கொடு என்று சொன்னேன். 'இவ்வளவு நாள் எழுத வில்லை; இனி மேலா எழுதப் போகிறாய்' என்று மனச் சலிப்புடன் ஒரு தாளை என்னிடம் தந்தார். நான் வாங்கி வைத்துக்கொண்டு அதைப்பற்றிய சிந்தனையே இன்றித் திண்டுக்கல் வந்து சேர்ந்தேன். இரவு 11 மணி பெரியகுளத்துக்குச் செல்ல வேண்டிய கடைசி வண்டி போய் விட்டது. காலை 4 மணிக்குத்தான் வண்டி. பேருந்து நிலையத்தி லேயே விழித்துக் கொண்டிருந்தேன்.

எவ்வளவு நேரம் விழித்துக்கொண்டு வெறுமனே இருக்க முடியும்? சரி கவிதை எழுதுவோம் என்றெண்ணி எழுதி முடித்தேன்.

பின்னர் அங்குமிங்கும் உலவினேன். மணி நான்காயிற்று. முதல் வண்டியில் ஏறிப் பெரியகுளம் வந்தடைந்ததும் கவிதையைப் படியெடுத்துக்கொண்டு அஞ்சல் நிலையம் சென்றேன். அன்று அஞ்சலிற் சேர்த்தால்தான் கடைசி நாளாகிய 22ஆம் தேதி அவர்களுக்குக் கிடைக்கும். ஆனால், காலை 11 மணிக்குக் கட்டெடுக்கப் பட்டுவிட்டதென்று கேள்விப்பட்டு வருத்தத்துடன் திரும்பினேன்.

வழியிற் கண்ட நண்பர் ஒருவர் விவரத்தைக் கேட்டு, அதனை வாங்கி, வெற்றிலைக் குன்று (வத்தலக்குண்டு) என்ற ஊரில் அஞ்சலிற் சேர்க்கச் செய்தார். உரிய நாளில் உரியவர்க்குச் சென்றடைந்தது. சில நாளில் 1950இல் *'திராவிட நாடு'* இதழில் முடிவு வெளியிடப் பட்டது. *நாவலர் சோமசுந்தர பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், பன்மொழிப்புலவர் கா.அப்பா துரையார்* மூவரும் நடுவராக இருந்த அப் போட்டியில் என் கவிதை முதன்மை பெற்றதாக அச் செய்தி கூறியது. பேருந்து நிலையத்திற் பிறந்த 'அழகின் சிரிப்பு' ஒரு சிறு வெள்ளிக் கிண்ணத்தை முதல் பரிசி லாகப் பெற்றுத் தந்தது. எனக்கு மகிழ்வைத் தந்த அதே கிண்ணம் எங்கள் வீட்டுக்குட் புகுந்த திருடனுக்கு ஒருநாள் உணவாக மாறியது. *'முடியரசன் கவிதைகள்'* என்னும் நூலில் 'அழகின் சிரிப்பு' வெளிவந்துள்ளது.

பேருந்து நிலையத்திற் பிறந்த கவிதை 'அழகின் சிரிப்பு' இனி, பேருந்திலேயே பிறந்த கவிதையும் உண்டு. தென்னாட்டு இராசா ராம் மோகன்ராய் என்று சிறப்பித்துக் கூறப்பட்ட தமிழறிஞர் சொ.முருகப்பனார் இராமாயணத்தில் அளவு கடந்த ஈடுபாடு கொண்டவர். இராமகாதை என்ற பெயரில் திருத்த மான பதிப் பொன்று கொணர விரும்பிப் பெரிதும் முயன்று வந்தார். அதன் பொருட்டுப் பல்வேறு பதிப்புகளையும் ஏடுகளையும் துருவித் துருவி ஆய்ந்து வந்தார். தஞ்சை அரண்மனையில் சரசுவதி நூல் நிலையத்தில் மன்னரால் தொகுத்து வைக்கப் பட்டிருந்த ஏடுகளை அடிக்கடி சென்று ஆராய்ந்து வருவார். உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதும் நண்பருடன் உரை யாடும் பொழுதும் இதே சிந்தனை, இதே பேச்சு, சுருங்கக் கூறின் அல்லும் பகலும் அதே நினைவுதான்.

அவர் இப் பணியில் ஈடுபட்டிருந்த பொழுது நானும் புலவர் சிலரும் உடனிருப்பது வழக்கம். அக் காதையில் அவர்க் குள்ள ஈடுபாடும், திருத்தமான பதிப்பு வெளிவருவதற்காக அவர் பட்ட பாடும் என் உள்ளத்தில் நன்கு பதிவாகிவிட்டன. ஒரு கால் நானும்

என் நண்பர் தமிழண்ணலும் காரைக்குடியில் இருந்து திண்டுக் கல்லுக்குச் செல்ல நேர்ந்தது. பேருந்திற் செல்லும் பொழுது முருகப்பனாரைப் பற்றிப் பேசத் தொடங்கினோம். உந்து விரைவாக ஓடியது. உரையாடல் சுவையாக நடந்தது. பின்னர் உரையாடல் நின்றது. கவிதை பிறந்தது. திண்டுக்கல்லில் முத்து நல்லப்பன் என்ற நண்பர் இல்லத்துக்குச் சென்றதும் அவரிடத்தில் அக் கவிதையைச் சொன்னேன். அந் நண்பர் மகிழ்ந்து அவர் பெயர் பொறித்த மஞ்சள் நிற அஞ்சலட்டை ஒன்றைத் தந்து அப்பாடலை எழுதுவித்து முருகப்பனார்க்குச் செலவிடுத்தனர். அப்பாடலைக் கண்ட முருகப் பனார் பெருங்களிப் புற்று 'நான் கம்பராமாயணத்தைத் தொட்டுப் படும்பாடு பெரிது தான். ஐந்தாண்டுகளாக இது நடந்துகொண்டிருக் கிறது. ஆனால் சில நிமிடங்களில் உதித்த தங்கள் பாடல்கள் என்னுடைய ஐந்தாண்டுத் திகைப்புக்கு மாற்றாகி, மருந்தாகிவிட்டன' என நெஞ்சு நெகிழ்ந்து எழுதியிருந்தார். அவரை மனமுருகச் செய்த பாடல்கள் 'முடியரசன் கவிதைகள்' என்னும் நூலில் வெளிவந்துள்ளன. அவை இவைதாம்.

*'கம்பன் புகன்றதெனக் கட்டுரைத்த பாக்கடலுள்*
*நம்பிக் குளித்து நலங்கண்டான் - அம்புவிக்கு*
*முத்தெடுத்துக் கோத்து முழுநூலில் தந்திட்டான்*
*நத்துதமிழ்ப் பாவை நயந்து.*

முத்தெடுக்க மூழ்கி முருகப்பா பட்டதுயர்
தித்திக்கும் செந்தமிழே தேர்ந்துணரும் - வைத்திருந்த
தஞ்சை மன்னன் ஏடுரைக்கும் தக்கபுல வோர்குழுவின்
நெஞ்சுரைக்கும் இவ்வுலகில் நின்று.'

குழந்தைகளைப் பற்றிய என் பாடல்கள், பெரும்பாலும் என் குழந்தைகளை மயைப் பொருளாகக் கொண்டவையே யாகும். ஒரு முறை என் மகன் **பாரி** யென்பவன் தொட்டிலில் துயின்று கொண்டிருந்தான். துயிலும் அழகைப் பார்த்துக் கொண்டே நின்றேன். குழந்தைகளிடம் மிகுந்த ஈடுபாடு கொள்ளும் இயல்பு டையவன் நான். அதனால் நீண்ட நேரம் அக்காட்சியில் ஈடுபட்டிருந் தேன். அவ்வீடுபாடு என் கவிதை யுணர்வைத் தூண்டிவிட்டது. கவிதையும் பிறந்துவிட்டது.

*''மோனத் துயில்கொள்ளும் போதினிலே - இமை*
*மூடிக் கிடக்கும்கண் மீதினிலே*

*ஞானச் சுடரொளி வீசுதடா - தெய்வம்*
*நண்ணிவந் தென்னெஞ்சிற் பேசுதடா"*

என்பது அப் பாடலாகும். பின்னர், முன்னும் பின்னும் சில கண்ணிகளைச் சேர்த்துப் பாடிப் *'பேசுந் தெய்வம்'* என்ற தலைப் பிட்டு வெளியிட்டேன். இப்பாடல் *'சாகித்திய அகாதமியால்'* இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. *'காவியப் பாவை'* என்னும் நூலில் வெளிவந்துள்ளது இப் பாடல்.

பின்னர் அவன் பிள்ளைப் பருவங் கடந்து பள்ளிப் பருவம் எய்தினன். ஒருநாள் அவனை அடித்துவிட்டேன். அவன் அழுது கொண்டே உறங்கி விட்டான். அவன் அழுதது கண்டு துடித்துப் போனேன். "உன் கண்ணில் நீர் வடிந்தால், என்னெஞ்சில், உதிரங் கொட்டுதடி" என்று பாரதி பாடியது உண்மையென உணர்ந்தேன். உணர்ச்சி வயப்பட்ட நான் உறங்கும் அவனைப் பார்த்தேன். உள்ளுணர்ச்சி வெளிப்பட்டது கவிதையாக. பாடல் இதோ.

*'அடஞ்செய்தாய் நீ என்றடித்தேன் - பின்னர்*
*அழுகின்ற கண் கண்டு நெஞ்சந் துடித்தேன்*
*குடங்கையில் கன்னத்தைச் சேர்த்துத் துயில்வாய்*
*குறுநெற்றி எழில்காட்டும் மேலாக வேர்த்து.'*

ஏழு கண்ணிகள் கொண்ட இப்பாடல் *"செற்றந் தவிர்ந்தேன்"* என்னுந் தலைப்பில், *'காவியப் பாவை'* என்னும் தொகுப்பில் வெளியிடப்பட்டது.

*குமணன்* என்ற என் மகன் ஒரு பாடல் தோன்றக் காரணமாக இருந்தான். இவன் பிள்ளைப் பருவத்தில் கொழுகொழு வென்றிருப் பான். ஒருநாள் விடியலில் என் துணைவியார் கோலப் பொடியைச் சிறிய திண்ணையில் வைத்துவிட்டு வாயிலில் நீர் தெளித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது தவழ்ந்து கொண்டே வெளியில் வந்த அச் சிறுவன் திண்ணையருகே வந்து, அந்தக் கோலப் பொடியை இழுத்துத் தலையில் கொட்டிக் கொண்டான். அஃது உடல் முழுதும் சிந்திவிட்டது.

என் துணைவியார் என்னை அழைத்துக் காட்டினார். நான் ஓடி வந்து பார்த்தேன். வெள்ளைப் பிள்ளையார் போல அமர்ந்திருந் தான். எனக்கு ஒரே சிரிப்பு. என் மனைவிக்கோ ஒரே எரிச்சல்.

உடனே ஒரு தாய் தன் பிள்ளையைப் பற்றிக் கூறுவதாக அமைந்த பாடலொன்றை எழுதினேன்.

**எடுப்பு**

*சொன்னாலும் புரியாத பருவம் - என்றன்*
*துயரத்தைச் சற்றேனும் உணராத சிறுவன்*

*- சொன்னாலும்*

*வாயிலில் மாக்கோலம் போட்டுப் - பின்னர்*
*வந்தங்கு நோக்குவேன் அவன் கூச்சல் கேட்டுக்*
*கோயிலில் பிள்ளையார் போலே - அந்தக்*
*கோலப் பொடிக்குள்ளே மூழ்கித் தவிப்பான்*

*- சொன்னாலும்*

.........................................................................

*பஞ்சணையில் துயில்கொள்ளும் போது - சின்ன*
*பாலகனின் பால்வழியும் கண்ணிமையின் மீது*
*கொஞ்சிவிளை யாடுமெழில் காண்பேன் - செய்த*
*குறும்பெல்லாங் காணாத தாயுள்ளம் பூண்பேன்*

*- சொன்னாலும்*

*'பிள்ளைக் குறும்பு'* என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இவ்விசைப் பாடலும் *'காவியப் பாவை'*யைச் சேர்ந்தது.

ஒருநாள் என் இல்லத்தில் தேர்வுத்தாள் திருத்திக் கொண்டிருந்தேன். அப்பொழுது அத்தர் விற்கும் வணிகர் ஒருவர் வந்து, வாங்கிக் கொள்ளுமாறு வற்புறுத்தினார். இப்பொழுது வேண்டாம்; பிறகு வாங்கிக் கொள்ளுகிறேன் என்று எவ்வளவோ சொல்லியும் விடவில்லை. "இது உயர்ந்த சரக்கு; இது பாரிசு; இது இங்கிலாந்து; இது பம்பாய்" என்று சொல்லிக்கொண்டே என் சட்டையில் அத்தரைத் தடவிவிட்டு, ஒரு போத்தலைத் தாளில் சுருட்டிக் கொடுத்து என் தலையிற் கட்டிவிட்டுப் போனார். தேர்வுத் தாள் திருத்தும் பொழுது, இஃது எனக்கு ஓர் இடையூறாகவும் எரிச்ச லாகவும் இருந்தது. திருத்தும் பணி ஓடவில்லை. எரிச்சல் பாடலாக ஓடி வந்தது. உடனே பாடலை எழுதி விட்டுத் திருத்தும் பணியில் ஈடுபட்டேன்.

**எடுப்பு**

*அத்தர் விற்று வருவோனின் தொல்லை - அப்பப்பா*
*அவன் கையில் அகப்படுவார் தப்பிடுவதில்லை.*

**முடிப்பு**

*பூசுவது நம்முடலில் ஒன்று - சின்ன*
*போத்தலில் அடைத்துக் கொடுப்பது மற்றொன்று*
*காசுவரும் படிஒன்றே நோக்கம் - குழைந்து*
*கனியமிகப் பேசிடுவான் கண்டபலன் ஏக்கம்.*

இந்த அத்தர்ப்பாட்டும் *'காவியப் பாவை'*க்குரியதே.

கனவிலே பிறந்த கவிதைகளும் உண்டு. அவற்றுள் ஒன்று காண்போம். 'அனிச்ச அடி' ஓர் அருமையான நாடகக் காப்பியம். இதன் ஆசிரியர் பாவலர்மணி பழநி, காப்பியத்தை எழுதி முடித்த பின் என்னை உள்ளிட்ட நண்பர் சிலர் முன்னிலையில் மாலை தோறும் படித்துக் காட்டுவார். நாங்கள் ஐய வினாக்கள் தொடுப் போம். அவர் தெளிவுபடுத்தி ஐயம் அகற்றுவார். சில வேளை மறுப்புகள் உரைப்போம். மறுப்புக்கேற்ற மறுமொழி உரைத்து அமைதி தருவார். மாற்ற வேண்டிய நிலைமை ஏற்படின் மாற்றமும் செய்து கொள்வார். பண்டை நாள் அரங்கேற்றம் போல் அந்நிகழ்ச்சி இருந்தது. இற்றைநாள் கவிதை என்ற பெயரால் வெளிவரும் சிறுவரி களைக் கண்டு மனம் நொந்து போயிருந்த எனக்கு இக்காப்பியப் படிப்பு, பேருவகை தந்தது. இவ்வுவகைப் பெருக்கில் ஊறித் திளைத்துக்கொண்டிருந்த நான் ஒருநாள் இரவு வழக்கம்போல் தாளும் தூவலும் தலைமாட்டில் வைத்துக் கொண்டு உறங்கினேன். பாவலர்மணி காப்பியத்தைப் படிக்கிறார். அதனைக் கேட்டுப் பெருங்களிப்புற்ற நான் அவரைப் பாராட்டிப் புகழ்ந்து பாடுகிறேன். அப் பாடல் கனவாகவே முடிந்து விடக் கூடாதே எனக் கருதி எப்படியோ முயன்று விழித்துக்கொண்டு அப்பாடலை எழுதி வைத்தேன். அக்கனவுப் பாடல்களை உங்கள் நினைவுக்குத் தருகிறேன்.

*பாட்டென்ற பேரால் பழுதுபட்ட சொற்றொடரைக்*
*கேட்டென்றன் நெஞ்சங் கிறுகிறுத்தேன் - வேட்டெழுந்து*

*நாடகமாம் நன்மருந்தை நண்பன் பழநியெனும்*
*பாடவலான் தந்தான் படைத்து.*

*தேன்கலந்து தந்தனனோ தெள்ளமுதந் தந்தனனோ*
*நான்கலந்தே இன்புற்றேன் நாடோறும் - வான்பறந்தேன்*
*வாட்டுந் துயர்துறந்தேன் வையந் தனைமறந்தேன்*
*பாட்டை அவன்படிக்கக் கேட்டு.*

*கூற்றமிலா வாழ்வு கொடுத்த தமிழ்த்தாயே*
*ஏற்றவரம் இம்மகற்கும் ஈந்தருள்வாய் - சாற்றுக்*
*கனிச்சுவையை விஞ்சுங் கவிமாலை நின்றன்*
*அனிச்சவடிக் கீந்தான் அவன்.*

விருந்திற் பிறந்த கவிதையொன்று. ஒரு நாள் இரவு திருநெல்வேலி பொருநையாற்றங்கரையில் உள்ள குறுக்குத் துறையில் அமர்ந்து நண்பர் சிலருடன் உரையாடி மகிழ்ந்து கொண்டிருந்தேன். அன்று முழு நிலா. சலசல என்றோடும் புனற்பரப்பும் விரிந்த மணற்பரப்பும் நிலாவொளியில் பள பளக்கும் காட்சி கண்ணுக்கு விருந்தா யமைந்தது. சற்று நேரத்தில் நிலாச் சோற்று விருந்தும் படைக்கப் பட்டது. சி.சு.மணி என்ற நண்பர் இவ்விருந்துக்கு ஏற்பாடு செய் திருந்தார். அவ்விருந்தில் பாகற்காய் வறுவலும் இடம் பெற்றிருந்தது. எனக்குப் பிடிக்காத பொருள் அது. எனினும் சுவையாக இருந்தமை யால் அதனை விரும்பி உண்டு பாராட்டினேன். உடனிருந்த நண்பர் அந் நிகழ்ச்சி பற்றிப் பாடித் தருக என்றார். உடனே பாடல் பிறந்தது. பாகல் எனக்குச் சுவை தந்தது. என் பாடல் அவர்க்குச் சுவை தந்தது. அப் பாடலுள் ஒன்றை நீங்கள் சுவைத்து மகிழத் தருகின்றேன்.

*கைக்குங்காய் தித்திப்புக் காட்டும் படிசமைத்த*
*கைக்குந்தான் வாழ்த்துங் கடமுடையேன் - மொய்த்துவரும்*
*நண்பர் உடையான் நயத்தக்க நாகரிகன்*
*பண்பன் அவன்பெற்ற பாங்கு.*

முனைவர் தமிழண்ணல் என்னைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது ‘முடியரசன் விரைவாகவும் எளிதாகவும் பாடுகிறார். காரில் செல்லுகையில் கால் நடந்து உலாவுகையிலும் ‘டென்னிஸ்’ பந்தாடும் போதும் பலருடன் அரட்டை அடித்திருக்கும் போதும் கூட அவரால் பாட முடிகிறது. அவர் பாடுங்கால் வேதனைப்பட்ட

தாகவே அறிந்ததில்லை' என எழுதியுள்ளார். எனினும் இசைப் பாடலொன்று பாடும் பொழுது நான் பட்ட வேதனை எனக் கல்லவா தெரியும்.

*ஆடவாராய் என்னோ டாடவாராய்*
*ஆடுமெழில் மாதரசே! - ஆடவாராய்*

என்ற எடுப்பு வரியை எழுதிவிட்டுத் தொடுப்பு வரியைத் தொடங் கினேன்.

*பாடும்முறை நானறிந்து பாடிடுவேன் பெண்மயிலே!*
*பைந்தமிழே! என்னுயிரே........*

என்ற அளவில் தொடுப்பு நின்றுவிட்டது. 'என்னுயிரே' என்பதற்குப் பின் இரண்டு சீர்கள் அமையாமல் பல நாள் காத்திருந்தேன். தவமிருந்தேன் என்று கூடச் சொல்லலாம். அடிக்கடி அவ் வரியைப் பாடிப் பார்ப்பேன். எத்தனை முறை பாடினாலும் அந்த இரண்டு சீர்கள் வாராமலே மறுத்துவிட்டன. நானும் அம் முயற்சியைக் கைவிட்டுவிட்டேன். திடீரென்று ஒருநாள் அந்த வரியைப் பாடினேன். என்னையுமறியாமல் அவ்விரு சீர்களும் தாமே குதித்து வந்தன. சீர்கள் வருவதற்கு முன் வாடினேன். வந்த பின் ஆடினேன். இப்பொழுது படித்துப் பாருங்கள் அந்த வரியை.

*பாடும் முறை நானறிந்து பாடிடுவேன் பெண்மயிலே!*
*பைந்தமிழே! என்னுயிரே! பாடியபின் தாமதமேன் - ஆடவாராய்*

இவ்வாறு வேதனைப்பட வைத்துப் பிறந்த கவிதைக் குழந்தைகள் மிகச் சிலவே. எளிதிற் பிறந்த குழந்தைகள் பலவாம். எனினும் 'இடுப்பு வலி' இல்லாமலா போகும்?

✪✪✪

5

# இருபதாம் நூற்றாண்டில் கவிதை

## எழுச்சிக் காலம்

இருபதாம் நூற்றாண்டைத் தமிழ்க் கவிதைக்கு ஒரு நற்காலம் என்றே கூறலாம். கவிதைக்கு நல்ல மதிப்பும் நயத்தக்க வரவேற்பும் இந்நூற்றாண்டில் இருப்பதைக் காண்கின்றோம். நாளிதழ், கிழமை யிதழ், திங்களிதழ், ஆண்டு மலர் முதலிய அனைத்திலும் கவிதைக்கு முதன்மை தரப்படுவதால் அக் கூற்று மெய்ப்பிக்கப் படுகிறது. மேலும் தமிழகத்தின் ஊர்தோறும் நிகழும் இலக்கிய விழாக் களிலும் வானொலியில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சி களிலும் கவியரங்கம் தனியிடம் பெறுகிறது.

கவிதையில் ஒரு தனியார்வம் பிறந்திருப்பதால் தக்காரும் எழுதுகின்றனர், மற்றோரும் முயல்கின்றனர். அதனால் இந்நூற்றாண்டில் கவிதை எழுதுவோர் தொகை பெருகுவதைக் காண்கின்றோம். அவருட் சிலர் கவிஞர்களாகவும் பலர் கவிதை எழுதுவோராகவும் புலனாகின்றனர். எவ்வாறாயினும் இந்த நூற்றாண்டைக் கவிதைக்கு எழுச்சிக் காலம் என்று துணிந்து கூறலாம்.

## விடுதலைக் கவிதைகள்

இந்த நூற்றாண்டில் கவிதைகளைப் பொதுப்பட நோக்கின், அனைத்தும் விடுதலை வேட்கை அமைந்து கிடப்பதைக் காணலாம். அயலவர் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்த நாடு விடுதலை பெற பிறமொழிச் சூழ்நிலையில் சிக்கித் தவித்த தாய்மொழி தன்னுரிமை பெற, ஆண்களுக்குப் பெண்கள் அடிமைகள் என்ற மனப்பான்மை ஒழிந்து, அவர்களும் சரிநிகர் சமமாய் வாழ, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் சமப்படுத்தப்பட்டு மேல்கீழ் என்ற பேதைமை துடைக்கப்பட்டு ஒன்றே குலம் என்ற ஒருமைப் பண்பு வளர்ந்து சமுதாயம் விடுதலை பெற்றொளிர, வழிவகை கூறுவனவாக, உணர்ச்சியும் எழுச்சியும் கலந்த ஆர்வத்தால் உந்தப்பட்டு வெளி வந்தனவாக, இக்கவிதைகள் காட்சியளிக் கின்றன. பாரதியார்

கவிதைகள் முதல் இன்று தோன்றியுள்ள கவிதைகள் வரை நாட்டு விடுதலை, மொழி விடுதலை, சமுதாய விடுதலை என்ற விடுதலை வேட்கைப் பாடல்களாகவே அவை அமைந்து கிடக்கின்ற உண்மையை வெள்ளிய அறிவினரும் தெள்ளிதின் உணர்வர்.

**மூவகைக் கவிதைகள்**

மேற்கூறிய விடுதலைப் பாடல்களேயன்றி, வேறு பிற பொருள் பற்றிய பாடல்களும் இந் நூற்றாண்டில் வெளி வந்துள்ளன. ஆயினும் விடுதலைப் பாடல்களே, மக்கள் மன்றத்தில் மிகுதியும் இடம் பெற்றுவிட்டன. காலமும் சூழ்நிலையுமே அந்நிலையை உருவாக்கின எனலாம். அனைத்தையும் ஒன்று கூட்டிக் கருத்து முறையாற் கவிதைகளை மூன்று வகைப்படுத்தலாம். அவையாவன: பழமையைப் பின்பற்றுவன, புதுமையை எதிர்நோக்கிச் செல்வன, பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைவன என்பனவாம். எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டு காணலாம்.

நாவலர் ச.சோமசுந்தர பாரதியார் எழுதிய ‘மாரிவாயில்’ முனைவர் வ.சுப.மாணிக்கம் எழுதிய ‘கொடைவிளக்கு’ முதலிய நூல்கள் பழைமையைப் பின்பற்றுவன. இவ்வணியில் செகவீர பாண்டியனார், கா.நமச்சிவாய முதலியார், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை போன்றவர்தம் கவிதைகள் சேரும். பாரதியார், பாரதிதாசன் முதலியவர்களுடைய கவிதைகள் புதுமையை நோக்கிச் செல்வன. திரு.வி.கலியாண சுந்தரனார், சுத்தானந்த பாரதியார், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, இராய. சொக்கலிங்கனார், வி.துரைசாமி முதலானோர் கவிதைகள், இருமைக்கும் பாலமாக அமைவன.

இனி மொழிநடை, யாப்பு முறை இவற்றால் நோக்கினும் அக் கவிதைகள் முத்திறத்தனவாகவே பாகுபடும். அருஞ்சொற்கள் ஆர்ந்து யாப்பமைவு நேர்ந்து மரபு வழியில் நிற்பன; ஒரு திறத்தன. எளிய சொற்களை ஏற்று யாப்பமைவு சிறிது மாறி மரபுஞ் சிறிது பிறழ்ந்து வருவன மறு திறத்தன. கொச்சை மொழி குலவி, யாப்பமைவு காணாது, மரபை மறந்து செல்வன மூன்றாந் திறத்தன.

**கவிதை நூல் வகைகள்**

இனி, இந் நூற்றாண்டில் தோன்றியுள்ள கவிதைகளை நூல் வகையால் நோக்கின் தனிநிலைச் செய்யுள், தொடர்நிலைச்

செய்யுள், நாடகக் காப்பியம், குழந்தை இலக்கியம், இசைப் பாடல்கள் என ஐந்து பிரிவினவாகக் கொள்ளலாம். தனி நிலைச் செய்யுள் என்பது தனித்தனிப் பாடல்களின் தொகுப்பாகும். இத் தொகுப்பு நூல்களே இக் காலத்துப் பல்கி வரக் காண்கின் றோம். தொடர் நிலைச் செய்யுளாகிய காப்பிய நூல்கள், தொகுப்பு நூல்கள் தோன்றும் அளவுக்குத் தோன்றவில்லை. அத்துறை தக்கார்க்கே கைவரப் பெறும் என்பதாற்போலும்.

காப்பியங்கள் விரல்விட்டு எண்ணும் அளவுக்கே, தோன்றி யுள்ளன. பாஞ்சாலி சபதம் (பாரதியார்), பாண்டியன் பரிசு, குறிஞ்சித் திட்டு (பாரதிதாசன்), இராவண காவியம் (புலவர் குழந்தை), சான்றாண்மை (அடிகளாசிரியர்), அவனும் அவளும் (வெ.இராம லிங்கம்பிள்ளை), பூங்கொடி, வீரகாவியம் (முடியரசன்) மேகநாதம் (எஸ்.கே.இராம ராசன்), என்றின் னோரன்ன காப்பியங்களே வெளி வந்துள்ளன. இவற்றுள்ளும் கால வெள்ளத்தால் எவை எவை இழுத்துச் செல்லப்படுமோ எவை காலத்தைத் தாண்டி நிற்குமோ? அறியோம்.

நாடகக் காப்பியங்களைப் பொறுத்தவரையில் இந் நூற்றாண்டில் நாம் ஒன்றுங் கூறவியலா நிலையிற்றான் உள்ளோம். இத்துறையைப் பற்றிக் கவிவாணர்கள் சிந்திப்பதாகத் தோன்ற வில்லை. தனிச் செய்யுளில் ஏற்பட்ட ஆர்வமும், காலம் நீளுமே என்ற அச்சத்தால் தோன்றிய பொறுமையின்மையும் அதற்குக் காரணங்களாக இருக்கக் கூடும்.

குழந்தைகளுக்காகப் பாடப்படுகின்ற பாடல்கள் நூல் வடிவிற் சில வந்துள்ளன. பேராசிரியர் மயிலை சிவமுத்து, பாவலர் பால சுந்தரம், அழ.வள்ளியப்பா, நாக.முத்தையா, நாரா.நாச்சியப்பன், இரா.இராசகோபாலன், இரா.பொன்னரசன் முதலிய கவிவாணர்கள் குழந்தை இலக்கியங்கள் புனைந்து பெருந்தொண்டாற்றி வருகின்றனர். இத் துறையில் பாரதியார் வெற்றி வீரராகக் காட்சி தருகின்றார். கவிமணி அவரையும் விஞ்சி நிற்கின்றார். இவர்களைப் போன்ற பழுத்த நல்லறிவாளர் இத் துறையில் ஈடுபடுவராயின் நல்லுலகில் நாம் வாழ முடியும்.

குழந்தையுள்ளம் வளரும் உள்ளம். அவ்வுள்ளம் சீரிய முறையில் மேன்மேலும் வளர்ச்சி பெறக் கவிதைகள் உறுதுணை யாக இருத்தல் வேண்டும். அக்கவிதைகள் நல்ல கருத்துகள், எளிய -இனிய- சிதையாத தமிழ்ச் சொற்கள், அவர்களைப் பண்படுத்தும் நிகழ்ச்சிகள்

உள்ளடங்கியிருத்தல் வேண்டும். வருங்கால மக்களை உருவாக்கும் ஓர் அரிய கருவியே குழந்தை இலக்கியம். குழந்தை இலக்கியம் இன்னுஞ் சிறந்த முறையில் பயன்தரும் வகையில் வளருதல் வேண்டும் என்னும் ஆசையால் இக்கருத்து வெளியிடப்படுகிறது.

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, பாபநாசம் சிவன், சுத்தானந்த பாரதியார், பாரதிதாசன், முடியரசன் போன்றோர் இசைப்பாடல்கள் பல புனைந்துள்ளனர்.

இவை இசைப் பாடலுக்கேற்ற மரபு, வடிவம் உடையன வாக அமைந்துள்ளன. திரைப்படத்துறையில் வரும் இசைப் பாடல்கள் பெரும்பாலும் கவிதைத் தன்மையிழந்து வடிவின்றி மரபின்றி மின்மினிகள் போலப் பளிச்சிட்டு உலா வருகின்றன.

**பரம்பரை உணர்வு**

இலக்கியப் பரம்பரையுணர்வு, கவிஞர்களிடத்து மிளிர வேண்டிய இன்றியமையாத ஒரு பண்பாகும். தொன்றுதொட்டு வளர்ந்து வரும் கவிஞர் பரம்பரையில் நானும் ஒருவன் என்ற எண்ணம் இருந்தாற்றான் கவிஞன் சிறப்பெய்த முடியும். முந்தை யரை மதிக்காத கவிஞனும் தந்தையைப் பேணாத தனயனும் ஒரு நிலையினரே. வாழையடி வாழை என வந்த திருக்கூட்டம் என்னும் நினைவு கவிஞனுக்கு வேண்டும். அப் பரம்பரையுணர்வைப் பாரதியாரிடம் பரக்கக் காணலாம். பாரதிதாசனிடம் சிறக்கக் காணலாம். பாரதிதாசன் பரம்பரை யினரிடம் நிரம்பக் காணலாம்.

*"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்*
*வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்*
*பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை*
*உண்மை வெறும் புகழ்ச்சி யில்லை"*

என்ற பாடல் வரிகளால் பாரதியார் முன்னைப் புலவர்களிடத்தில் வைத்திருந்த நன்மதிப்பும் பரம்பரையுணர்வும் தெளிவாக்கப்படு கின்றன.

பாரதிதாசன், பாரதிக்குத் தாசன் எனப் பெயர் வைத்துக் கொண்டமை ஒன்றே, அவரிடத்து மிளிரும் பரம்பரையுணர்வை எடுத்துக்காட்டும். மேலும்

*"திங்களைக் கண்ணிலான் சிறப்புறுத் தல்போல்*
*பாரதிப் புலவனைப் பற்றிச் சிற்சில*
*கூறுவேன்........."*

என்று பாரதிதாசன் பாடுகின்றார். பெருமிதத்தின் திருவுருவமாக விளங்கிய பாரதிதாசன் பாடும் இவ் வரிகளால் அவர்தம் அடக்க வுணர்வும் பரம்பரையுணர்வும் புலனாகின்றன.

*"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா - அவன்*
*பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானடா - அதைக்*
*கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா"*

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடும் முறையால் பாரதிபால் அவர் கொண்டுள்ள ஈடுபாட்டை நம்மால் உணர முடிகிறது.

இவ்வாறே பரம்பரையுணர்வு நம் கவிஞர்களிடத்தே சிறந்து விளங்குவதைக் காணல் கூடும். எனினும் பாரதிதாசனுக்குப் பின் தோன்றி வளர்ந்து வரும் கவிஞர் சிலரிடையே அந் நல்லுணர்வு மங்கியிருப்பது வருந்தத்தக்கதே யாகும். "ஒரு மாபெருங் கவிஞன் தனக்கு ஒளி காட்டிய கவிஞனுக்கு அஞ்சலி செலுத்து வதை உலக இலக்கியங்கள் அனைத்திலும் காண்கிறோம்" என்று கற்றவர் கூறுவர்.

**கவிதையும் இலக்கணமும்**

பாரதியார், பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் பாடல்களில் இலக்கணம் மதித்துப் போற்றப்பட்டாலும் வளர்ந்து வரும் கவிஞர்கள், வளர்ந்து விட்டதாக எண்ணிக் கொண்டிருக்கும் கவிஞர்கள் எழுதிய பாடல்களில் இலக்கணம் எள்ளி நகையாடப் படுகிறது. இலக்கணம் வேண்டுவதில்லை என்றே வாதிடவும் படுகிறது. கல்லார் பலராகிக் கவிதையுலகில் உலா வருவதால் நேர்ந்த விளைவே இது. கல்லாக் கவிஞர், இலக்கணம் வேண்டா வெனும் பொல்லாக் கொள்கை யுடையராகவே இருத்தல் இயல்பு. கல்லார் சொல்லை நல்லோர் ஏலார். என்றுமே வாழ விழையுங் கவிஞர் இலக்கணத்தைப் புறக்கணியார்.

எழுத்து வழு, சொல் வழு, பொருள் வழு, யாப்பு வழு முதலிய அனைத்து வழுக்களும் பொருந்திய பாக்களைப் புனைவ தால் தமிழ்மொழிக்கு யாது பயன்? ஓரிலக்கணமும் அறியாதார் பாட்டுகள் எழுதுவதும் இலக்கணமே வேண்டாவெனக் காட்டுக் கூச்சலிடுவதும் முறையன்று; நெறியும் அன்று.

கவிஞன் இலக்கணத்துக்குக் கட்டுப்பட்டவன் அல்லன் என்று கதைப்பர் சிலர். இலக்கணத்துக்கு அவன் அடிமையாகாமல் அதனைத் தனக்கு அடிமையாக்கிக் கொள்பவனே இயற்கைக் கவிஞன். உண்மைக் கவிஞன். மற்றையோன் செயற்கைக் கவிஞன்-போலிக் கவிஞன். அவ்வியற்கைக் கவிஞன், உணர்ச்சியால் உந்தப்பட்டுப் பாடும்பொழுது பாடல்களில் இலக்கணம் கட்டியங் கூறி நிற்கும்.

## கவிதையிற் சொல்லழகு

இந்நூற்றாண்டில் தோன்றியுள்ள கவிதைகள், பெரும் பாலும் அனைவரும் எளிதிற் பொருளுணரத் தக்க சொற்களால் அமைந்தன வேயாகும். இதற்குப் பாரதிதான் முன்னோடியாக விளங்குகின்றார். சங்க இலக்கிய நடையிலிருந்து சிறிது சிறிதாக இறங்கி எளிமையின் இறுதிக் கட்டத்துக்கே வந்துவிட்டது இன்றுள்ள கவிதை நடை.

மக்கள் அடிமையில் மூழ்கித் தாய்மொழியை மறந்து, செய லற்றுக் கிடந்த காலம் பாரதியார் காலம். ஆதலின், அவர்களுக்கு ஆவேச வெறியூட்ட, உள்ளத்தில் விடுதலைக் கனலை மூட்டக் கவிதைகளைக் கருவியாக்கிக் கொண்டார் அவர். அதனால் கற்றாரும் மற்றாரும் புரிந்துகொள்ளக்கூடிய, அவர்கள் வாய் தானே பாடக் கூடிய எளிய நடையமைத்து இசையமையப் பாடினார். பாரதிதாசனும் பிறரும் அவரை அடியொற்றிப் பாடு வதையே குறிக்கோளாகக் கொண்டொழுகினர்.

பாரதியார் எளிய நடையையே வேண்டுபவராயினும் கவிதைக்குத் தனிநடை கொண்டவராகவே விளங்கினார். அவர்தம் உரைநடையிற் காணப் பெறும் எளிமையின் மிகுதியையும் பிறமொழிக் கலப்பையும் செய்யுள் நடையிற் காணவியலாது. பாரதியார் நடைக்கும் பாரதி தாசன் நடைக்கும் வேறுபாடுண்டு. எளிமையே வேண்டு மென் போர் இதனை நன்கு புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

கவிதை நடை எளிமையின் எல்லைக்கே வந்து விட்டது. இதற்கு மேல் இனிச் செல்லவியலாது. இறங்கிய நடை, இனி நாளுக்கு நாள் படிப்படியாக ஏறியாதல் வேண்டும். பாரதி மூட்டி விட்ட மொழியார்வத்தீ எங்கும் பற்றிப் பரந்து ஒளிவிட்டிலங்குங் காலம் இக்காலம். ஆதலின், அடிமைக் காலத்து வேண்டப்பட்ட எளிமை, உரிமைக் காலத்தும் வேண்டுமெனப் பேசுவது வளர்ச்சி யைக் குறிக்காது. எளிமை எளிமை எனப் பெருமுழக்கம் ஒருபாற் கேட்பினும் மற்றொரு பால் அருமையும் வளர்ந்து கொண்டுதான் வருகிறது.

பாமர மக்களுக்காக எளிய நடை வேண்டும் என்போர், எப்பொழுதுமே மக்கள், பாமரராக இருத்தல் வேண்டுமென்று விழைகின்றனரா? ஊர்தோறும் பள்ளிகள் வேண்டுமென்று பாரதி கண்ட கனவு, நனவாகிவரும் இக் காலத்திற் கற்றவர் தொகை பெருகும்; மற்றவர் தொகை அருகும். இக் காலத்தும் எளிமை வேண்டப் படுவதோ? கற்றவர் தொகை வளர்வது உண்மை யாயின் கவிதை நடையும் வளர்வதுதானே முறை? வளர்ச்சி பெறவேண்டிய கவிதை நடையைத் தளர்ச்சிக்கு ஆளாக்குவது நன்றோ? எளிமை வேட் பாளர் இதனை எண்ணித் துணிக.

நினைக்க நினைக்க - என்றும் இனிக்கும் கவிதைக்கு நன்மொழி புணர்த்தலே அழகாகும். ஆதலின் தூய, இனிய, பொருள் செறிந்த முழுமை பெற்ற தமிழ்ச் சொற்களாலான கவிதைகள் பெருகுதல் வேண்டும். வருங்காலத்திற் பெருகிவரும் என்னும் நம்பிக்கை இந்நூற்றாண்டிலேயே ஒளிவீசத் தொடங்கி விட்டது.

**ஒளிநல்கும் கவிஞர் கூட்டம்**

இந்நூற்றாண்டில் கவிதைக்கு எழுச்சியூட்டித் தமிழ் மொழிக்கு ஒளி நல்கிய பாரதியார், கவியுலகின் விடிவெள்ளி, கவிவெறி கொண்டு தமிழையே தம் உயிர்மூச்சாகக் கொண்டு விளங்கிய பாரதிதாசன், அவ்வுலகின் இருளோட்ட வந்த இளஞாயிறு, அவர்தம் பரம்பரையினராக வந்து தமிழ்மொழிக்கு மெருகூட்டும் எண்ணற்ற கவிஞர்குழு அவ்விளஞாயிற்றின் செங்கதிர்கள்.

பாரதி ஒரு பேரருவி, பாரதிதாசன், பேரருவியால் தோன்றிய உயிராறு, பரம்பரையினர் அவ்வாற்றிலிருந்து பிரிந்து வளமூட்டும் கிளையாறுகள். பாரதி ஒரு வித்து. பாரதிதாசன் அவ் வித்தில் முளைத்த ஆலமரம். பரம்பரையினர் அவ்வாலமரத்தின் விழுதுகள்.

பாரி காதை எழுதிய இரா.இராகவையங்கார், அகலிகை வெண்பா, கோம்பி விருத்தம், சுவர்க்க நீக்கம் போன்ற நூல்களை எழுதிய வெ.ப.சுப்பிர மணிய முதலியார், மண்ணியல் சிறுதேர் (உரையும் பாட்டும் கலந்தது) இயற்றிய பண்டிதமணி மு.கதிரேசஞ் செட்டியார், இனிய கவிதைகள் எழுதிய புலவரேறு வரத நஞ்சையப் பிள்ளை, இசைப்பாடல்கள் புனைந்து வரும் அருட்கவி சேதுராமன், சங்கப் பாடல்களை நிகர்த்த பாக்களைத் தந்து வரும் துரை. மாணிக்கம், ம.இலெ.தங்கப்பா இவரனையார் பலரும் இந்நூற்றாண்டினரே.

'நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல்' என்னுங் குறிக்கோள் கொண்ட பாரதிதான் புதுமைக் கவிதையுலகுக்கு முதல் வழிகாட்டி. அவர் காட்டிய வழியிற்றான் பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் வெ.இராம லிங்கம் பிள்ளை, சுத்தானந்த பாரதியார், ச.து.சு.யோகி போன்ற கவிஞர்கள் தொடர்ந்து சென்றனர். இவர்கள் நடந்த நெறியில் நூற்றுக்கணக் கான கவிஞர்கள் தடம் பார்த்து அடியொற்றிச் சென்றனர்; செல்கின்றனர்.

கவிதை வடிவில் தன் வரலாறு புனைவது பாரதி காட்டிய ஒரு புதுநெறியாகும். அந்நெறியில் சுயசரிதை என்ற பெயரில் கப்ப லோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரம் பிள்ளை கவிதை நூல் ஒன்று யாத்தளித்துள்ளார். பல மொழிபெயர்ப்புக் கவிதைகளும் ஆக்கி யுள்ளார்.

இவ்வாறு எண்ணற்ற கவிஞர்கள் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிப் பாமாலை புனைந்துள்ளனர். ஈண்டு எழுதப்பட்டோர் சிலர். பெருகும் என்றஞ்சி எழுதாது விடப்பட்டோர் பலர். இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதைகளின் நிலையைப் பொதுப் பட விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இது தனி நூல்களின் திறனாய்வு அன்று. அவ்வாறு தனித்தனி யாகத் திறனாய்வு செய்து எழுதப்புகின் அஃது ஒரு பெருநூல் வடிவம் பெறும்.

**எதிர்காலம் பொற்காலம்**

பயன்மரங்களும், மலர்ச் செடிகளும் நிறைந்த தோட்டத் துக்கு நீர் பாய்ச்சுகின்றோம். அத் தோட்டத்துள் அவை மட்டுமா வளர்ந்து பயன் தருகின்றன? நீர் செல்லும் நெறியிடை வேண்டப் படாத சில செடிகளும் தோன்றிவிடுகின்றன. அதைப் போலவே கவிதைத் தோட்டத்துள் கனி மரங் களோடு வேறு சில செடிகளும் தோன்றத்தான் செய்யும். கொள்ளுவன கொண்டு தள்ளுவன தள்ளல் கால தேவன் செயலாகும். இருபதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் மரபு மாறாமல், இலக்கணத்தை இகழாமல், உயரிய- இனிய-அழகிய ஒண்டமிழ்ச் சொற்கள் பெய்து நாட்டுக்கு வேண்டும் நற்கருத்துகளை அடிப்படை யாகக் கொண்டு நிலைத்து நிற்கும் கவிதைகளைக் காவியங் களைப் படைக்கவல்ல கவிஞர்கள் தோன்றி வருகின்றனர்.

இந்நூற்றாண்டு கவிதைக்கு ஒரு நற்காலமே. அந் நற்காலம் பொற்காலமாக மாறுங் காலம் விரைந்து வந்துகொண்டிருக் கிறது. "மிக விரைவிலே தமிழின் ஒளி உலக முழுதும் பரவா விட்டால் என் பேரை மாற்றி அழையுங்கள்" - என்று பாரதியார் கூறினார். அக்கூற்று வாய்மையாகிவிட்டது. தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவிவரும் காலம் இது. அவ்வோசையைக் கவிதைகளாற்றான் நன்கு ஒலித்துக் காட்ட முடியும். பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாகிய நெட்டைக்கனவு நனவாவது உறுதி; உறுதி. தமிழ்ப் பாட்டுத் திறத்தால் வையத்தைப் பாலிக்கும் நாள் நம் எதிரே காட்சியளிக்கிறது.

*(1968 உலகத்தமிழ் மாநாட்டு மலரில் வெளிவந்தது)*

✪✪✪

**6**

# கூட்டுக் களியினிலே கவிதை

## ஒருமைப்பாடு

சொல், சீர் முதலியன நிரல்படநின்று, இனிய ஓசை பொருந்தி செறிந்த பொருளுடையதாய், அணி அமைப்புங் கொண்டு, பயில்வார் தம் உள்ளுணர்ச்சிகளைத் தட்டி எழுப்ப வல்லதாய், அவர்தம் உள்ளங்களை எல்லாம் தன்பாற் கவியச் செய்யும் ஆற்றல் உடையதாய் அமைவதே கவிதை எனப்படும். உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு எழுப்பப்படும் கவிதைக்கே உள்ளங் களைத் தன்பால் ஈர்க்கும் ஆற்றல் உளதாகும். கவிஞன் ஒரு பொருளைக் காணுங்கால், தான் வேறு அப் பொருள் வேறு என்ற வேறுபாட்டு ணர்வு மறைந்து, அப் பொருளும் தானும் ஒன்று என்ற நிலை ஏற்படும்பொழுதுதான் - அஃதாவது அதனோடு கூடும் பொழுதுதான் உண்மைக் கவிதை பிறக்கிறது. அக் கூட்டுணர் விலேதான் உணர்ச்சி ததும்பும் சொல்லோவியங்கள் பிறக்க முடியும். அவ்வாறு பிறக்கும் பாட்டுத் திறத்தால் மட்டுமே இவ் வையத்தைப் பாலிக்க முடியும்; வையத்து மக்களை ஈர்த்துத் தன் வயப்படுத்த முடியும். இவ்வண்ணம் வயப்படுத்த வல்லதே சிறந்த கவிதை என உலகத்தால் மதிக்கப் பெறுகிறது.

கவிஞன் ஒரு பொருளைக் கண்டு அதனோடு ஒன்றிக் கூடுங் கால் அவன் உள்ளங் கனிகிறது. அக் கனிவிலிருந்துதான் கவிதை தோன்றுகிறது. ஏனைய நேரங்களில் வெளிவருவன கவிதை என்ற பெயர் பெறும் தகுதியை இழந்துவிடுகின்றன. இவ்வுண்மை யை நாவுக்கரசர் நன்கு வலியுறுத்துகின்றார். "உளங்கனிந்த போ தெல்லாம் உவந்து உவந்து பாடுதுமே" - என்னும் வாய் மொழியைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். கவி வல்லார் என்ற காரணத்தா லேதான் நாம் அவரை நாவுக்கரசர் என்கிறோம். அப் பெருமகனாரே உளங்கனிந்த போதுதான் கவிதை வரும் என்னும் குறிப்பை உணர்த்திச் சென்றார் எனின் பிறிதொரு சான்றும் வேண்டுவதோ?

**கூட்டுக்களி**

கவியரசர் பாரதியாருக்கு ஆசை ஒன்றுண்டு. அஃது இவ் வையத்தைப் பாலிக்க வேண்டும் என்பதாகும். எத்திறத்தால் பாலிப்பது? படைத்திறத்தாலா? அன்றிப் பிறிதொரு சூழ்ச்சித் திறத்தாலா? அன்று. பாட்டுத் திறத்தாலே பாலிக்க வேண்டும் என்கிறார். அப் பாட்டுத் திறம் எவ்வழியாற் பெறுதல் கூடும் என வினவின் "கூட்டுக் களியினிலே" எனக் கூறக் கேட்கிறோம். பொருளோடு கூடும் கூட்டுக் களியினிலேதான் கவிதைகள் தாமாகப் பிறக்கின்றன என்னும் உண்மையை நல்ல ஒரு சூழ்நிலையை உருவாக்கிப் படப்பிடிப்பாக்கிக் காட்டுகிறார், "கூட்டுக் களியினிலே - கவிதை கொண்டு தரவேணும்" என்று. கொண்டு தர வேண்டும் என்றால் பொருள் என்ன? கவிதைகள் தாமாகப் பீறிட்டுக்கொண்டு வெளி வருதல் வேண்டும் என்பது தானே பொருள். பத்தினிப் பெண்ணும் தாமும் கூடும் கூட்டுக்களி எனக் காதற்பொருள் பற்றிப் பாரதியார் கூறியிருப்பினும் நாம், கவிஞனும் பொருளும் வேறு பாடின்றி இணைந்து நிற்பதாற் பெறும் களி என்றே பொதுப்படக் கொள்வோம். இங்கே 'களி' என்ற சொல்லை உன்னிப் பார்த்தல் வேண்டும். களி என்ற சொல் மகிழ்ச்சி, இன்பம் என்ற பொருள் தருவதாக மட்டும் அமையவில்லை. அப் பொதுப் பொருளைத் தருவது உண்மை யாயினும் அச்சொல் எடுத்தாளப் பெறும் இடம், சூழ்நிலை முதலியவற்றால் வேறொரு சிறப்புப் பொருளையும் தன்னுள் அடக்கிக்கொண்டு நிற்பதை நாம் உணர்தல் வேண்டும். இங்கேதான் அந்தச் சொல்லின் முழு அழகையும் நாம் சுவைக்க முடிகிறது.

**நனவழிந்த கனவு**

களி என்பது தன்னை மறந்த ஒரு நிலையைக் குறிக்கிறது. கள்ளுண்டோன் எவ்வாறு தன்னை மறந்த நிலையை, ஓரின்பத்தை அடைகின்றானோ அந்த நிலைக்கும் இன்பத்துக்குந்தான் களி என்று பொருள். ஆகவே, கவிஞன் அந்தக் களிநிலையிலே தன்னை மறந்து பொருளோடு கூடிவிடுகிறான். அப்பொழுது பொதுவான மனிதர் நிலையினின்றும் உயர்ந்து விடுகிறான்; வானத்திலே மிதக்கின்றான்; பறக்கின்றான்; அங்கிருந்து உலகையும் உலகப் பொருள்களையும் காண்கின்றான்; சொக்கி விடுகின்றான்; அம்மயக்கத்தில் கண்களை மூடிக்கொள்கிறான். இன்பக் கனவுகளை அடுக்கடுக்காகக் காண்

கிறான். கண்ட காட்சியால் விளைந்த பேரின்பப் பெருக்கைத் தனக்குள் அடக்கி வைத்துக்கொள்ள முடியவில்லை கவிஞனுக்கு; தன்னலம் உடையவனாக அவனால் வாழ முடியவில்லை; வள்ளலா கிறான்; யான் பெற்ற இன்பத்தை இவ் வையகமும் பெறட்டுமே என்று வாய்விட்டுக் கூறுகிறான்; நம்மிடம் பேசுகிறான்; அந்தப் பேச்சுதான் கவிதை! கவிதை!! என்று திசையெங்கும் ஒலிக்கிறது.

*"முன்னிக் கவிதை வெறிமூண்டே நனவழியப்*
*பட்டப் பகலிலே பாவலர்க்கு தோன்றுவதாம்*
*நெட்டைக் கனவின் நிகழ்ச்சியிலே"*

என்ற பாரதியாரின் கவிக்கனவை இங்கே நினைவுகூர்தல் வேண்டும். நனவையிழந்த கனவுதான் பாவலன் காணும் கனவு. விழிப்பு நிலையாயினும் நனவு அழிந்துவிடுகிறது. அஃதாவது தன்னை மறந்துவிடும் நிலை ஏற்பட்டு விடுகிறது என்பது கருத்து. அப்பொழுது தான் கவிதை வெறி மூண்டெழும்.

**ஊடுருவும் கண்கள்**

இவ்வாறு தன்னை மறந்த நிலை - பொருளோடு ஒன்றும் நிலை எப்பொழுது, எப்பொருளைக் காணும்பொழுது ஏற்படு கிறது? எந்தப் பொழுதிலும் எப்பொருளைக் காணினும் கவிஞன் மட்டும் அந்நிலையைப் பெற்று விடுகின்றான். நிலவைக் காணினும் இருளைக் காணினும், மயிலைக் காணினும், காகத்தைக் காணினும், குழவி, கிழவர், மருதம், பாலை எப்பொருளைக் காணினும் கவிஞனுக்கு அந் நிலை தானாகவே உண்டாகி விடுகிறது. கவிஞன் கண்களுக்கும் மற்றையோர் கண்களுக்கும் உள்ள வேறுபாடு அதுதான். அந்தக் கண்களுக்கு ஒரு தனி ஆற்றல் இருக்கத்தான் செய்கின்றது. எப்பொருளையும் ஊடுருவிச் சென்று அதனுள் அமைந்து கிடக்கும் அழகியவையெல்லாம் கண்டு கண்டு கழிபேரு வகை கொள்ளும் ஆற்றல் பெற்றவை அக்கண்கள். கட்புலனாகாப் பண்புகளிலும் அப்படியேதான். அக்கட்புலனா காப் பண்புகளுள் காதல், அன்பு என்ற இன்னோரன்ன பொருள் களிலேதான் உலகினர் உள்ளம் படியும் - சுவைக்கும். ஆனால், கவிஞன் உள்ளமோ அவ்வாறன்று. அன்பு, கொடுமை, காதல், அவலம், வெகுளி, உவகை-எப்பொருளாயினும் சரி அதனுள் படியும்; அதனைச் சுவைக்கும்; மற்றவரையும் சுவைக்கச் செய்யும். இத்தகு ஆற்றல்

பெற்றது கவி உள்ளம். ஆகவே, காணும்பொருள் அழகியதாயினும் அழகற்றதாயினும், இன்பமாயினும், துன்ப மாயினும் அதனுடன் ஒன்றி, ஈடுபட்டுத் தன்னை மறந்து பாடு கின்றான் கவிஞன். இவ்வுயர்நிலையை - கவிப் பண்பை, நன வழியத் தோன்றும் கனவு நிலையை நம் சங்க இலக்கியங்களில் தொட்ட இடமெல்லாம் காணலாம். அவ்விலக்கியங்களில் ஓரிரு காட்சிகளைக் காண்போம்.

**ஒல்லையூர் முல்லை**

ஒல்லையூர் என்னும் சிற்றூரில் வாழ்ந்த சாத்தன் ஒரு பெருவீரன்; ஈத்துவக்கும் பண்பும் உடையவன். அவனுடைய உயர்குணங் களைக் கேட்டறிந்த குணவாயிற் கீரத்தனார் என்ற புலவர் அவனை நாடி அவ்வூருக்கு வருகிறார். வந்தவிடத்து அவன் இறந்துபட்டான் என்ற செய்தி எட்டுகிறது அவருக்கு, உள்ளம் துணுக்குற்றார். பரிசில் பெற்றிலேமே என்ற வருத்தம் அவருக் கில்லை; வீரனும் வள்ளலும் ஆகிய ஒரு பெருமகன் இறந்தானே! இனி, பாணர் பாடினியர்க்குப் புகல் யார்? என்ற பெருநோக்கு அவர் நெஞ்சில் அவலத்தைத் தேக்கியது. செயலற்ற நிலையோடு திரும்புகின்றார்.

ஒல்லையூர்ப் பகுதியிலே முல்லைக்கொடிகள் பூத்துக் கிடக் கின்றன. புலவர் பார்வையில் அம் மலர்க் கொடிகள் தென் படுகின்றன. அக்கொடிகளோடு பேசத் தொடங்கிவிடுகிறார். அவலம் அவரைப் பேசச் செய்கிறது. “முல்லையே! ஒல்லை யூரிலே நீ பூக்கின்றாயா? சாத்தன் மாய்ந்த பிறகும் பூக்கின்றாயா? ஏன் பூக்கின்றாய்? நீ பூக்கும் மலரை யார் சூடிக் கொள்ளப் போகிறார்கள்? இளைய வீரர் சூடாரே! வளையணிந்த மகளிரும் பறிக்க மாட்டாரே! பாணனும் தன் யாழின் கோட்டால் வளைத்துப் பறித்துச் சூடானே! பாடினியாவது அணிந்து கொள்வாளா? அங்கு அவளும் அணி யாளே! அனைவருமே அவன் பிரிவால் கலங்கிப் போயிருக்கின்றார் களே! ஒருவருக்கும் பயன்படவில்லை என்றால் வீணாக நீ ஏன் பூக்கின்றாய்? அவனையிழந்து நான்தான் கொடியேனாய் வாழ் கின்றேன்; நீயும் கொடியைதானோ? அவன் பிரிவு உனக்குத் துயர் தரவில்லையா? தந்திருப்பின் உனக்கேன் மலர்ச்சி? வீரன் மாய்ந்தான் - வள்ளல் மாய்ந்தான்; நீ பூக்கலாமா?” என்று தம்மை மறந்து பேசுகின்றார் புலவர்.

முல்லை தன்னியல்பால் பூக்கிறது. இவர் அவலத்தால் செயலற்ற நிலை அடைகிறார். அவலத்தோடு இணைந்துவிடு கிறார். அதனால்

தம்மை மறந்து விடுகின்றார். முல்லை நம்முடன் பேசுமா? நாம் சொல்வதைக் கேட்குமா? சாத்தன் மறைவை உணருமா? என்றெல் லாம் பகுத்துப் பார்க்கும் அறிவு அங்கே ஒடுங்குகிறது. ஒடுங்கவே சாத்தன் மறைவை உணர முடியாத, சொல்லும் சொற்களைக் கேட்க முடியாத முல்லையிடம் சென்று இவ்வாறெல்லாம் புலம்புகின்றார். அப் புலம்பலைக் கேளுங்கள்:

*“இளையோர் சூடார் வளையோர் கொய்யார்*
*நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்*
*பாணன் சூடான் பாடினி அணியாள்*
*ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த*
*வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை*
*முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே”* *(புறம். 242)*

இப் பாடலைப் படிக்கும்போதே அவலம் அரும்பும்; வாய்விட்டுப் படித்தால் உள்ளம் உருகும்; இன்னும் இசை யுடன் பாடத் தெரிந்து பாடிவிட்டால் நம்மையும் அறியாமல் உடல் நடுங்கும்; உள்ளம் துளங்கும்; கண்கள் கலங்கும். கையறு நிலை பாடிய புலவர் நம்மையும் கையறு நிலைக்குக் கொண்டு வந்து விடுகிறார்.

**மயக்குறு மக்கள்**

பாண்டியன் அறிவுடைநம்பி, அரசன் மட்டுமல்லன், ஒரு பெரும் புலவனாகவும் விளங்கினான். குழந்தைகளைப் பற்றி அவன் பாடிய பாடலொன்று புறநானூற்றில் வருகிறது. அங்கே அவன் குழந்தையாகவே மாறிவிடுகிறான். அப் பாடலைப் படிக்கும்போது பாண்டியன் அறிவுடை நம்பி என்ற பெருமகன் நம் கண்முன்வரவே மாட்டான்; சிறு சிறு பச்சிளங் குழந்தை களே வரக் காண்போம். அந்தப் பிள்ளைக் கனியமுதங்களிடையே இருந்து உணவு உண்ணும் காட்சியும் நமக்குத் தோன்றும். பாடலைப் பார்ப்போம்.

*“.................................................*
*குறுகுறு நடந்து சிறுகை நீட்டி*
*இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்*
*நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்*
*மயக்குறு மக்களை...........”* *( புறம். 188)*

குழந்தைகளைப் பெற்றெடுத்து, அச்செல்வங்களின் திருவிளை யாடல்களிலே திளைத்து இன்பங் காணுவோர் இப் பாட்டின் அருமைப்பாட்டை நன்கு உணர்வர். இதனைப் பாடி யவன், பாடும்போது தன்னைப் பாண்டியனாகவும் அறிவுடை நம்பி யாகவும் எண்ணியிருப்பின் இந்த அரிய பாடலை அவன் படைத் திருக்க இயலாது. நாமும் பெற்று இன்புற்றிருக்க இயலாது. அவன் குழந்தைகளோடு குழந்தையாகவே ஆகிவிடுகிறான். அங்கே குழந்தை புலவன் என்ற இரண்டு பொருள்களில்லை. ஒன்று என்ற தன்மையைத்தான் காண முடிகிறது. மேலைநாட்டுக் கவிஞன் ஒருவன் கூறுகின்றான் "நான் சாளரத்தின் வழியாகப் பறவைகளைப் பார்க்கும்போது நானும் பறவையாகி விடுகிறேன்" என்று. கவிஞன் பறவையாகவே மாறும்போது குழந்தையாக மாறுவதில் வியப் பென்ன? கவிகட்குக் "கூடுவிட்டுக் கூடு பாயும்" வித்தை தெரியும் போலும்.

**சீறிய நங்கை**

இனி இளங்கோவைக் காண்போம். பாண்டியனிடம் வழக் காட விடுவதற்காகக் கண்ணகியை அழைத்துச் செல்கிறார் இளங்கோ. கண்ணகி வழக்காடுவது, இளங்கோவுக்காக அன்று. வழக்கு பாண்டியனுக்கும் கண்ணகிக்குந்தான். இளங்கோதான் கண்ணகிக் காக (காவியத்தில்) வாதாட வேண்டும்; ஆனால் அவர் கண்ணகி யைத்தான் பேசச் சொல்கிறார். கண்ணகியின் கணவன் கள்வன் எனப் பழி சுமத்தப்பட்டான்; பழியுடனமையாது கொலையும் செய்யப்பட்டு விட்டான். அவளுக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வருகிறது; சீற்றம் பெருக்கெடுத்து வருகிறது. அந்த நிலையில் வாய் மலர் கிறாள்:

*"வாயிலோயே வாயிலோயே*
*அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து*
*இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே"*

என்ற சொற்கள் கனலைக் கக்கிக்கொண்டு வெளி வருகின்றன. இந்தச் சொற்கள் வெளிவந்தனவோ இல்லையோ, வாதாட வந்த இளங்கோ வஞ்சிக்கே ஓடியிருப்பாரா என்று எண்ணத் தோன்று கிறது. அப்படிப் பேசுகிறாள் கண்ணகி. இளங்கோ பாடியதாயினும், படிக்கும்போது இளங்கோ பாடுவதாக நமக்குத் தோன்றவில்லை;

கண்ணகிதான் பேசுகிறாள் என்ற உணர்வே உண்டாகி விடுகிறது. இவ்வாறு கவிஞன் அவ்வுணர்வோடும் பொருள்க ளோடும் ஒன்றி நின்று பேசும் பலப்பல காட்சிகளே நம்முன்னைய இலக்கியங்களிற் பரக்கக் காணலாம்.

**கம்பன் தன்மை**

இவ்வாறு ஒன்றி நின்று பேசும் கவிதைப் பண்பு கம்பனி டத்தில் எவ்வாறு அமைந்து கிடந்தது என்பதையும் சிறிது காண் போம். இராமனுக்கு ஏற்றந்தர எழுந்த நூலே இராமகாதை. ஆகவே கம்பன் 'இராமபக்த'னாகத்தான் இருக்க முடியும். ஆயினும், இராமனுடைய குலப்பகைவனாகிய இராவணனும் வருகிறான்; பேசுகிறான். அவன் பேசும்பொழுது இராமனுக்கு ஏற்றங் குறைந்து விடுமே என்று கம்பன் நினைந்தானல்லன். நினைந் திருப்பின், தான் என்ற எண்ணம் அங்கே தலைதூக்கிவிடும். அப்பொழுது இராவணன் பேசுவதை நாம் கேட்க இயலாது; கம்பன் பேச்சுதான் கேட்கும். ஆனால் 'கவிச்சக்கரவர்த்தி' எனப் புகழ்பெற்ற கம்பன் தவறுவானா? அவனும் இராவணனாகி விடுகிறான். இராவணனோடு கலந்து விடுகிறான். ஆகவேதான் உண்மையான இராவணன் பேச்சை நம்மால் கேட்க முடிகிறது.

இலங்கையில் தன் உடன்பிறந்தானைத் தவிக்கவிட்டு, இராமனைக் குலப்பகைவன் என்றும் கருதாமல் அவனிடம் ஓடி உடன்பிறப்புக்கு ஊறு செய்யும் வீடணனாகவும் ஆகிவிடுகிறான். அதே நேரத்தில் இராவணனுக்கு அருகிலும் கடமை உணர்ந்த வனாகக் கும்பகருணன் உருவத்தில் கம்பன் நிற்கிறான். மிதிலையில் காதலின் திரு உருவமாகச் சானகியாக நிற்கிறான்; பின்னர் அவலத்தின் மறு உருவமாக அசோகவனத்துச் சீதையாகவும் நிற்கிறான்; அனுமனாகிறான்; அரக்கனாகிறான்; வாலியாகிறான்; வானவனாகிறான்; எளிய தோழி நீலமாலையும் ஆகிவிடுகிறான் கம்பன். இன்று திரைப்படங்களில் இரட்டை வேடம் அணிந்து நடித்துப் புகழ் பெறும் நடிகர்களைப் போல வேறுபட்ட பல வேடங்களும் பூண்டு, அவற்றுக்கேற்ப நடித்துப் பெரும் புகழுக் குரியவனாகி விடுகிறான் கம்பன்.

**புளிஞர் வேந்தன்**

காப்பிய உறுப்பினர்களுடன் கம்பன் ஒன்றுபடும் தன்மைக்கு எடுத்துக் காட்டாக ஒன்று காண்போம். படை தொடர வரும் பரதனைக் கண்ட குகன் அவன் போருக்குத்தான் வருகிறான் என

மாறாகக் கருதித் தன் தோழர்களை அழைத்துப் போருக்கு அணிய மாக இருக்குமாறு வீரவுரை ஆற்றுகிறான். அப்பொழுது,

*“ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ?*
*வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?”*

என்று பேசுகிறான். மீண்டும் இப் பாடலை வாய்விட்டுச் சொல்லிப் பாருங்கள். சொல்லும்பொழுது நம் கண்முன் கம்பனா நிற்கிறான்? வெங்கரி அனைய - விற்பிடித்த குகன்தான் நிற்கிறான்.

இவ்வண்ணம் பொருள்களுடன் ஒன்றும் பொழுதுதான் உண்மைக் கவிதைகள் பிறக்கின்றன என்னும் உண்மையை இதன் வாயிலாக நாம் உணர்கிறோம். பாரதியார் இவ்வுண்மையை நன்குணர்ந் தமையாலேதான், கவிதையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது ‘கவிதையாம் மணிப்பெயர்க் காதலி’ என்றும் ‘மனைவி யாம் கவிதைத் தலைவி’ என்றும் உணர்த்திச் சென்றுள்ளார்.

(மேலைச் சிவபுரி - சன்மார்க்க சபைப்
பொன்விழா மலரில் வெளிவந்தது - **1.12.1958**)

✪✪✪

# 7

# மறுமலர்ச்சிக் கவிஞர் பாரதிதாசன்

ஒன்றாகக் குவிந்திருக்கும் இதழ்கள் கட்டவிழ்ந்து, விரிந்து, மணம் பரப்பி நிற்கும் நிலையினைத்தான் மலர்ச்சி என்கிறோம். பூவின் முதல்நிலை அரும்பு எனப்படும். அடுத்த நிலை மொட்டு அல்லது மொக்குள் எனப்படும். அது வளர்ந்து, கட்டவிழும் நிலையில் இருப்பின், போது எனப்படும். வாய் அவிழ்ந்து மலர்ந்த பின் மலர் எனப்படும். இறுதியில் வெதும்பித் தரையில் வீழ்ந்தால் செம்மல் அல்லது வீ எனப்படும். ஒருமுறை மலர்ச்சிக்கு உரியதாகிய பூ, வீயாகி வீழ்ந்துவிடின் மீண்டும் மலர்ச்சி அடைவ தில்லை. அஃதாவது அப் பூவினுக்கு ஒரு மலர்ச்சியே தவிர மறு மலர்ச்சி இல்லை என்பதாம்.

முதலில் விரிந்து பரவி நின்ற ஒன்று, கால வெள்ளத்தில் சிக்குண்டு இடையில் குவிந்து சுருங்கி, வளங்குன்றி, அது மீண்டும் விரிவடைந்து வளம் பெறுமானால் அந் நிலை, மறு மலர்ச்சி என்னும் பெயருக்கு உரியதாகிறது. குமுகாயத்தின் ஒவ்வொரு துறையிலும் காலப்போக்கில் ஏற்றமும், இறக்கமும், பெருக்கமும், சுருக்கமும், ஆக்கமும், தேக்கமும் மாறிமாறி வருவதை நாம் அறிவோம். ஆகவே, மன்பதையின் கூறுபாடுகளில் அரசியல், பண்பாடு, கலை, இலக்கியம் முதலிய துறைகள் முதலில் மலர்ந்திருந்து பின்னர், காலப்போக்கில் சுருங்கி மீண்டும் தலைநிமிர்ந்து மலர்ச்சி பெறுவதை மறுமலர்ச்சி என்று வழங்கி வருகின்றோம். எனினும் முதன்முதலாகத் தோன்றிய புதுமையையும் இன்று மறுமலர்ச்சி என்று குறிப்பிடுவது வழக்கமாகி விட்டது.

பண்டைய இயற்கை வளங்களை எல்லாம் படைத்துக் காட்டும் பத்துப்பாட்டு, தொட்டதொட்ட இடமெல்லாம் கவிச் சுவை சொட்டச் சொட்டப் பாடிவைத்த எட்டுத்தொகை, தேனிலே ஊறிய தீஞ்சுவைக் காப்பியங்கள் என இவ்வாறு விரிந்து, மலர்ந்து, மணம் பரப்பி வந்த இலக்கிய உலகு, காலம் செல்லச் செல்ல இதிகாசம் என்றும் புராணம் என்றும் குறுநில மன்னர் களை

மகிழ்விப்பதற்கென்றே பாடப்பட்ட பிரபந்தங்கள் எனப் படும் சிறுநூல்கள் என்றும், தோன்றத் தோன்றச் சுருங்கிக் குவிந்து வரும் நிலையை அடைந்தது. ஆனால், அப்படியே அது சுருங்கிக் குவிந்து விடவில்லை. குவியும் நிலையிலிருந்து மீண்டும் விரியத் தொடங்கியது; மறுமலர்ச்சி அடைய முற்பட்டது.

இலக்கிய உலகின் மறுமலர்ச்சிக்கு இராமலிங்கர், தாயு மானவர், சிவப்பிரகாசர் போன்றவர்களை வழிகாட்டிகளாகக் கொள்ளலாம். இவர்கள் சமய நோக்குடையராயினும் சிற்சில துறைகளில் கருத்துப் புரட்சியைக் காட்டியவர்கள். சொல்ல வேண்டிய கருத்தைச் செய்யுளில் அமைத்துக் காட்டும் வகையில் புதிய பாங்கைப் புகுத்தியவர்கள். யாப்பு வகைகளிலே எளிய இனிய அமைப்பு முறைகளைச் சிறந்த முறையில் கையாண்டு மறுமலர்ச்சி யைத் தொட்டுக் காட்டியவர்கள். ஆதலின், அவர்களை வழி காட்டிகள் எனத் துணிந்து கூறலாம். இவர்கள் காட்டிய வழியிலே நடந்துவந்து இன்னும் சில படிகளில் முன்னேறி நாடு, மொழி, குமுகாயம் என்றின்னோரன்ன பொருள் களைக் கருவாகக் கொண்டு இனிய ஓசை நயமிக்க பாடல்களைப் பாடித்தந்து, விடுதலை வேட் கையை உண்டாக்கினார் பாரதியார். இவரை மறுமலர்ச்சி இலக்கிய உலகின் விடிவெள்ளி என்றே கொள்ளுதல் பொருந்தும்.

பாரதியை வித்து என்று சொன்னால் அவ் வித்தினின்றும் முளைத் தெழுந்து, அணிதேர்ப் புரவியொடு ஆட்பெரும் படைக்கும் நிழல் நல்கும் ஆலமரம் என்று பாரதிதாசனைச் சொல்லலாம். சுருங்கக் கூறின் பாரதிதாசனை மறுமலர்ச்சி இலக்கிய உலகிலே பேருருக்கொண்டு விளங்கி நிற்கும் ஒளிப்பிழம்பு என்றே கூறுதல் வேண்டும்.

கவிஞன் என்றாலே அவனுக்குத் துணிவு மனப்பான்மை வேண்டும். உண்மையைச் சொல்வதும் நன்மையைச் சொல்வதும் அவன் கடமை. அக்கடமை உணர்ச்சியில் அச்சம் தலைகாட்டவே கூடாது. அதிலும் மறுமலர்ச்சிக் கவிஞன் என்றால் எதற்கும் எவர்க்கும் அஞ்சாத நெஞ்சுரம் வேண்டும். ‘அச்சமில்லை அச்ச மில்லை அச்சமென்பதில்லையே’ என்பது பாரதியாரின் மனத் துணிவு. பாவேந்தர்க்கு அந்த நெஞ்சுரம் - அந்த மனத்துணிவு இயல்பாகவே வாய்த்திருந்தது. அவருடைய செம்மாந்த தோற்றமே அதற்குச் சான்று. எத்தகைய கருத்தையும் எடுத்துரைப் பதற்கு எந்தச் சூழ்நிலை

யிலும் எவரிடத்திலும் தயங்கினாரல்லர். எவர் தூற்றினும் போற்றினும் அவர் அதைப் பொருட்படுத்துவ தில்லை. ஆனால், அந்த அஞ்சாமை யில் தன்னலம் இராது; பொது நலமே மிளிரும். தீமை இராது; நன்மையே பொலியும். 'நான் செய்ய வேண்டியது என்ன? என்பதுதான் என்னுடைய சிந்தனையே தவிர, பிறர் என்ன எண்ணுவார்கள் என்பதன்று என்பது பாவேந் தருடைய உட்கிடக்கையாகும். குமுகாயத்தைப் பாழ்படுத்தும் மூடப்பழக்கவழக்கங்களைச் சாடு கின்ற பொழுதும் அரசியலில் பிற துறைகளில் மாறுபட்ட பிற்போக்குக் கொள்கைகளை மறுத்துரைக்கும் பொழுதும் மொழிப் பகையைப் பழித்துரைக்கும் பொழுதும் போர்க்களத்தில் இமையாது நிற்கும் போர் மறவனு டைய உள்ளத்துடன் விளங்குவார். அவர் தம் பாடல் ஒவ்வொன்றும் பாடலில் வரும் சொல் ஒவ்வொன்றும் வில்லி லிருந்து வெளிக் கிளம்பும் கூரிய அம்பாகவே காணப்படும். கடும் வேகத்தோடு சொற்கள் வெளிவரினும் நகைச்சுவையைக் கலந்து குழைத்து வேகத்தின் கடுமை தோன்றாவண்ணம் செய்துவிடுவது இவருக் குள்ள தனிச்சிறப்பாகும்.

மக்களிடையே நெளியும் சாதிப் புழுக்களை அறவே ஒழித்துப் பெண்ணடிமை தொலைத்து, ஆண் பெண் அனைவருமே கல்வி அறிவுடையவராய் விளங்கி, ஒன்றுபட்ட முன்னேற்றமுற்ற குமுகாயம் மலர்தல்வேண்டும். பொருளியலிலே செல்வன், ஏழை என்ற ஏற்றத்தாழ்வு தகர்ந்து, உழைப்பவனுக்கும் இவ்வுலகம் பொதுவுடைமை என்ற எண்ணம் வளர்தல் வேண்டும். அரசியலில் தூய்மையும் நேர்மையும் மலர்தல் வேண்டும்; தமிழ்மொழி தனக்குரிய சிறப்பை மீண்டும் பெற்று உலக மொழிகளில் ஒன்றாக அது மலர்தல் வேண்டும்; கைம்மைக் கொடுமையைக் களைந் தெறிந்து, கட்டாயத் திருமண முறையை முறியடித்து, காதல் மணத்தைக் கடைப்பிடித்துப் பெண்ணுலகு மலர்தல் வேண்டும் என்ற இத்தகைய மறுமலர்ச்சிக் கருத்துகளை மய்யமாக வைத்துப் பாடப்பட்டனவே பாரதிதாசன் பாடல்கள்.

இவர்தம் பாடல்களிலே சொற்சிக்கனத்தைக் காணலாம்; உணர்ச்சி பெருக்கெடுத்தோடுவதைக் காணலாம்; பாநடையில் ஒரு தனி மிடுக்கைக் காணலாம். பாடல்களை நாம் படிக்கும் போது அவை நம் குருதியுடன் குருதியாகக் கலந்துவிடுகின்றன. நரம்புகளில் உணர்ச்சிப் பெருக்கெடுக்கிறது; சுவைக்கச் சுவைக்க சுவை உணர்வு

மேலோங்குகிறது; அவற்றைப் படிக்கும் போது நாம் பாரதி தாசனாகவே ஆகிவிடுவதும் உண்டு; படிக்குந் தோறும் நாமும் பாடலாமா என்ற நினைப்புத் தோன்றும்; நினைப்பு மட்டுமென்ன? பாடியும் விடுகிறோம்; அதன் விளை வாகத்தான் இன்று நூற்றுக் கணக்கான பாரதிதாசனைத் தமிழகத்தில் காண்கின்றோம்; ஒரு நீண்ட தலைமுறையை (பரம்பரையை)த் தோற்றுவித்த பெருமை பாரதி தாசன் பாடல்களுக்கே உண்டு.

"விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்" என ஒரு தனிப்பாடல் கூறும். அந்த விருத்தப்பாவுக்கு ஒரு தனிச் சிறப்பையும் புதுப்பொலிவையும் குறிப்பாக எண்சீர் விருத்தத்துக்கு ஒரு தனி மதிப்பையும் உருவாக்கிய பெருமை இவரைத்தான் சாரும்.

இயற்கை அழகுகளையெல்லாம் பண்டைய நூல்களிற் சுவைத்து மகிழ்ந்தோம். இடையில் அக் காட்சிகளை முழுமை பெறக் காண இயலாது தவித்தோம். பாரதிதாசன் மீண்டும் அவ்வெழிலோவியங்களையெல்லாம் நமக்குப் படைத்துக் காட்டி யுள்ளார். அவ்வோவியங்கள் புதிய மெருகுடன் ஒளி விட்டுக் காட்சியளிக்கின்றன, 'அழகின் சிரிப்பு' என்னும் நூலிலே! இந்நூல் மொழி பெயர்க்கப்படுமானால் 'நோபெல் பரிசில்' பெறத்தகுதி வாய்ந்ததாகும் என அறிஞர் கூறுவர்.

கல்வியறிவில்லாத வீடு இருண்ட வீடாகத்தான் இருக்கும். ஆதலின், அறிவென்னும் ஒளி விளக்கினை ஏற்றிவைத்தல் வேண்டுவது தமிழர் கடன் என அறிவுறுத்த வந்த கவிஞர் ஒரு குடும்பத்தைப் படைத்து அக்குடும்ப உறுப்பினர் நடந்துகொள்ளும் முறை களையும் நடத்திக்காட்டி, இல்வாழ்வுக்கே ஓர் இலக்கணம் வகுத்துத் தந்திருக்கிறார், 'குடும்ப விளக்கு' என்னும் நூலின் வாயிலாக.

இசைப்பாடல்கள் இயற்றுவதிலும் நம் கவிஞர் வல்லவர் என்பதை "இசையமுது" என்னும் பெயர் தாங்கிய நூல்கள் வெளிப் படுத்துகின்றன. இந்நூல்களின் வாயிலாக ஒரு புரட்சியை-மறு மலர்ச்சியை உருவாக்கியுள்ளார். மேட்டுக் குடியினர்தாம் பாடல் களில் உலா வருதல் உண்டு. எளிய வாழ்வினராகிய வண்டிக்காரன், மாடு மேய்ப்பவன், உழத்தி, ஆலைத் தொழிலாளி, கூடை முறம் கட்டுவோர் என்று இவரனை வரையும் இசையமுதிலே நடமாட விட்டவர் நம் கவிஞர்.

இனி அவர்தம் பாடல்களிலே ஓரிரு கருத்துகளை நோக்கு வோம். பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கண்டிக்கும்போது அவர்தம் பாடல்கள் ஊழிக்காலப் பெரு நெருப்பைக் கக்கிக் கொண்டு வருவதைக் காணலாம். நம் பாவேந்தர், புரட்சிக் கவிஞர் என்ற பெயருக்கே உரியவர் என்பதற்கும் மறுமலர்ச்சிக் கவிஞர் என மாநிலமே மதிக்கத்தக்கவர் என்பதற்கும் அவர் தம் பாடல் ஒவ் வொன்றும் சான்று பகரும்.

*"ஒரு மனிதன் தேவைக்கே இந்தத் தேசம்*
*உண்டென்றால் அத்தேசம் ஒழிதல் நன்றாம்"*

எனவும்,

*"ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்*
*உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்*
*ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி*
*ஒப்பப்பர் ஆய்விடுவர் உணரப் பாரீ"*

எனவும்,

*"வலியோர் சிலர் எளியோர்தமை*
*வதையே புரிகுவதா?*
*கொலைவாளினை எடடாமிகு*
*கொடியோர் செயல் அறவே"*

எனவும் பாடியுள்ள பாடற்பகுதிகளால் உணர்ச்சி வேகத்தையும் புதிய உலகைக் காணத் துடிதுடிக்கும் மறுமலர்ச்சிப் பேரார்வத் தையும் நம்மால் காண முடிகிறது. இவ்வாறு உணர்ச்சியூட்டியுங் கூடத் தன்னம்பிக்கையிழந்து தன்னாற்றலை அறியாது, சோம்பிக் கிடக்கும் மாந்தர்தனை நோக்கிப்

*"பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு*
*திறக்கப்பட்டது சிறுத்தையே வெளியில் வா"*

என்று வீரவுணர்ச்சியூட்டி வெளிக் கொணர்ந்து,

*"மானிடம் என்றொரு வாளும் - அதை*
*வசத்தில் அடைந்திட்ட உன்னிரு தோளும்*

*வானும் வசப்பட வைக்கும் - இதில்*
*வைத்திடும் நம்பிக்கை வாழ்வைப் பெருக்கும்."*

என்று மானிடத்தின் பேராற்றலை எடுத்தியம்பி மாயாவாதத்தைத் தூக்கி எறிந்து, அவனை நிமிர்ந்து வாழச் செய்கின்றார்.

பிற நாட்டினர், தாம் உயர்ந்தோர் என்ற செருக்கினால் தமிழினத்தை அடிமையாக்கும் வெறுக்கத்தக்க குற்றத்தைச் செய் கின்றனர். பொறுத்துக் கொண்டே போவதா? எவ்வளவு நாள் பொறுப்பது? பொறுத்தது போதும்; பொங்கி யெழு என்று போர் முரசு கொட்டுகின்றார். ஆர்ப்பாட்டப் போர்ப் பாட்டாகப் பாடிய அப் பாடலைக் காண்போம்:

*"தருக்கினால் பிறதேசத்தார்*
*தமிழன்பால், என்னாட் டன்பால்*
*வெறுப்புறும் குற்றஞ் செய்தார்*
*ஆதலால் விரைந்தன் னாரை*
*நொறுக்கினார் முதுகெலும்பைத்*
*தமிழர்கள் என்ற சேதி*
*குறித்த சொல் கேட்டின் பத்திற்*
*குதிக்கும் நாள் எந்த நாளோ?"*

என்ற முரசொலி கேட்டால் விசையொடிந்த தேகத்திலும் வீரம் சேரும்; கோழையும் வீரனாவான்.

பிள்ளைப் பேற்றைப் பெரிதாகப் போற்றி வந்த நம்மிடையே காலச் சூழ்நிலையால் குடும்பக் கட்டுப்பாடு வேண்டும் என்ற மறுமலர்ச்சி எண்ணம் இன்று தோன்றிப் பெருகி வருகிறது. நம் பாவேந்தர் இதற்கு முன்பே இம் மறுமலர்ச்சிக் கருத்துக்கு விதை தூவிவிட்டார்.

*"உள்ளம் எதிர்பார்த்த ஓவியமே என்மடியில்*
*பிள்ளையாய் வந்து பிறந்த பெரும்பேறே"*

என்றும்,

*"அன்னத்தின் தூவி அனிச்ச மலரெடுத்துச்*
*சின்ன உடலாகச் சித்திரித்த மெல்லியலே*

*மின்னல் ஒளியே விலைமதியா ரத்தினமே*
*கன்னல் பிழிந்து கலந்த கனிச்சாறே"*

என்றும் பிள்ளைக் கனியமுதைப் பற்றிப் பாடிய கவிஞர் குடும்பக் கட்டுப்பாடு வேண்டும் என்ற கருத்தை மிக அருமையாகக் கூறுகிறார்.

*"காதலுக்கு வழி வைத்துக் கருப்பாதை சாத்தக்*
*கதவொன்று கண்டறிவோம்; இதிலென்ன குற்றம்?*
*காதலுக்கோ பிள்ளை? தவிப்பதற்கோ பிள்ளை?*

என்று துணிந்து வினவுகின்றார்.

துறைதோறும் துறைதோறும் மறுமலர்ச்சிக் கருத்துகளைப் பாடும் இயல்பினராகிய பாவேந்தர் மொழியைப் பற்றிப் பாடும் பாடல்களிலே ஓர் "ஆவேச" வெறியையும் அத் துறையில் மறுமலர்ச்சி காணத்துடிக்கும் ஆசைப் பெருக்கையும் காணலாம். அப்பாடல்களில் அவருடைய தாய்மொழிப் பற்றையும் அளவிலா ஈடுபாட்டையும் புதிய பாங்கையும் நாம் கண்டு மகிழலாம்.

*"தாயெழிற் றமிழை, என்றன்*
*தமிழரின் கவிதை தன்னை*
*ஆயிரம் மொழியிற் காண*
*இப்புவி அவாவிற் றென்ற*
*தோயுறும் மதுவின் ஆறு*
*தொடர்ந்தென்றன் செவியில் வந்து*
*பாயுநாள் எந்த நாளோ*
*ஆரிதைப் பகர்வார் இங்கே?"*

என்ற பாடல் கவிஞருடைய ஏக்கத்தை நமக்குப் புலப்படுத்தி நம்மை எழுச்சி கொள்ளச் செய்கின்றது. "ஆயிரம் மொழியிற் காண இப்புவி அவாவிற்றென்ற" செய்தியை நாம் பகர மாட்டோமா? என்ற அவாவையும் உண்டாக்குகிறது.

*"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கு"*

எனத் தமிழ் உணர்ச்சியை ஊட்டுவதற்கு சங்கு முழக்கம் செய்த அளவோடு நில்லாது அதனை வளர்ப்பதற்கு வேண்டிய வழி வகைகளையும் வகுத்துத் தந்துள்ளார். "தமிழியக்கம்" என்னும் நூலில் அந்நெறிமுறைகளை அழகாகவும், ஆணித்தரமாகவும் எடுத்தியம்புகின்றார். அந் நூல் தமிழின் மறுமலர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகவும் வழிகாட்டியாகவும் விளங்குகிறது.

தலைசிறந்த மறுமலர்ச்சிக் கவிஞராகிய பாவேந்தர் பாரதி தாசன் சூதுவாது அறியாதவர்; கள்ளங் கவடமற்ற பிள்ளை உள்ளத்தினர்; உள்ளத்திற் சரியென்று பட்டதை அஞ்சாதுரைக்கும் செந்நாவினர்; தமிழ் தமிழ் என்றே நினைந்து நினைந்து உருகும் சீரிய நெஞ்சினர்; பெருமிதங் குன்றாதவர்; ஏறுபோற் பீடுநடை யினர்; உண்மையான பிறவிக் கவிஞர்.

"பாரதிதாசன் மேல்நாட்டுக் கவிஞர்களைப் போலக் கலையைக் காலத்தின் கண்ணாடியாக்குகின்றார்; காலத்தையே படைக்கின்றார்; காலத்தையே மாற்றவும் செய்கின்றார்; மாறிய காலத்துக்கு நம்மை யும் அழைத்துச் செல்கின்றார்" என்று பேரறிஞர் அண்ணா கூறியது முக்காலும் உண்மை.

பாரதிதாசன் பாடல்களில் தென்றலும் வீசும்; புயலும் அடிக்கும். குயிலும் கூவும்; அரியும் முழங்கும்; வெண்ணிலவும் வீசும்; செங்கதிரும் காயும். இனிப்பும் இருக்கும், கசப்பும் இருக்கும். தண்மையும் உண்டு; வெம்மையும் உண்டு.

நம் கவிஞர் மறுமலர்ச்சிக் கருத்துகளைக் கனல் தெறிக்கப் பாடியுள்ள முறைகளினால் இவரைப் பற்றிக் கருத்து வேறுபாடு கொண்டவர்களும் இருப்பது இயல்பே. எனினும் கருத்து வேறு பாடு ஒன்றே கருதி நம் வாழ்நாளிலே தோன்றிய ஒரு மாபெரும் கவிஞனை, உலகப் புகழுக்குரிய நம் தமிழ்க் கவிஞனை, பிறவிக் கவிஞனை நாம் மறந்துவிடுதல் தகாது; மறைத்து வைப்பதும் அடாது.

*"காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ*
*கறைச் சேற்றால் தாமரையும் வாசம் போமோ?"*

என்னும் வரிகளை நினைவிற் கொள்வோமாக. காரிருள் விலகட்டும்; சூரியன் புத்தொளி வீசித் திகழட்டும்; தாமரை மறுமலர்ச்சி பெற்று மிளிரட்டும்; மணம் பரவட்டும்.

வாழ்க பாவேந்தர்! வளர்க பாரதிதாசன் புகழ்!

(1966 ஏப்பிரல் திருச்சி வானொலியில் ஒலிபரப்பானது)

✪✪✪

# 8

# கவிதை இன்பம் - சொல்லழகு

**எது கவிதை?**

*கவிஞன் அவ்வப் பொருள்களோடு ஒன்றி நின்று, உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பாடும் கவிதைகள், பயிலுந்தோறும் நமக்குப் பேரின்பத்தை ஊட்டிக்கொண்டேயிருக்கின்றன. கவிதைப் பண்பு முதிர்ந்துள்ள கவிதைகளே உள்ளத்தைத் தொட்டு, உள்நரம்பு களை நீவி இன்பத்தை எழுப்ப வல்லன; அவ்வாறு இன்பத்தை எழுப்ப வல்லதே கவிதை. எடுத்துக்காட்டாக ஒன்று காண்போம்.*

***இனிய சொல்லை இயம்பும் வாயினள்***

*இவ்வரியில் நான்கு சீர்கள் இருக்கின்றன; அகவல் ஓசை இருக்கிறது; மோனையும் இருக்கிறது. எனினும் இவ் வரி, கவிதை யாகி உள்ளத்தைக் கவர்வதாக இல்லை. அதனால் இன்பந் தருவதாக இல்லை. இதே கருத்தைக் கவிஞன் கவிதை யாக்கி இனிமையாக்கித் தருவதைக் கேளுங்கள்:*

*“கன்னலிலே சாறெடுத்து தமிழ்குழைத்துக்*
*கனிஇதழால் பரிமாறும் இனிய சொல்லாள்”*

*கன்னலின் சாறு இனியது; அதிலே குழைக்கப்பட்டுள்ள தமிழும் இனியது; பரிமாறும் இதழோ கனியிதழ்; இனிமைக்குக் கேட்கவா வேண்டும்! இந்த இதழ் பரிமாறும் சொற்களில் இனிமை குறைவாகவா இருக்கும்? அவ்வளவு இனிய சொற்களைப் பேசுபவள் என்பது கருத்து. இவ் வரியிலே கவிதை இருக்கிறது; இனிமை இருக்கிறது; ஆதலால் இன்பமும் இருக்கிறது. மீண்டும் அவ்வின் பத்தை நுகருங்கள்! “கன்னலிலே சாறெடுத்து தமிழ் குழைத்துக் கனிஇதழால் பரிமாறும் இனிய சொல்லாள்” - இந்த வரி “பாண்டியன் பரிசு” என்ற நூல் தந்த பரிசிலாகும். (இயல் 76)*

*இவ்வரியிலே மிகுதியும் இனிய - அழகிய சொல் ‘பரிமாறும்’ என்ற சொல்லாகும். இச்சொல்லின் அழகுதான் யாது? அத்தலைவி*

பேசும் இனிய சொல்லை உணவாக உருவகம் செய்கின்றார் கவிஞர். உணவு கருப்பஞ் சாற்றிலே சமைக்கப் பெற்றது; தமிழுடன் ஒன்றாகக் குழைத்து ஆக்கப் பெற்றது. அவளுடைய வாய்ச் சொற்களை உணவு என உருவகம் செய்ததற்கேற்பப் 'பரிமாறும்' என்ற சொல்லை இங்கே பெய்து வைத்த கவி உள்ளத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும். பரிமாறுவ தாயின் உண்பவன் பசி தீர - வயிறார - மனம் நிறைவு கொள்ளும் வகையிலல்லவா பரிமாற வேண்டும்? அம் முறையிலே இத் தலைவியும் தலைவனுடைய காதற் பசிதீர - செவியார - உள்ளம் நிறைவெய்த இன்சொல்லை வழங்கினாள் என்ற உணர்வுகளையெல்லாம், 'பரிமாறும்' என்ற அச் சொல் நமக்குப் பரிமாறுகிறது. மேலும், உணவு பரிமாறுவதற்கும் சொல் பரிமாறுவதற்கும் உள்ள வேறுபாடும் தோன்றக் காண்கி றோம். உணவை ஒரு கையால் பரிமாறுவர்; இன்சொல்லைப் பரிமாறும் தலைவியோ வாயிதழ்கள் என்ற இரண்டு கைகளாலும் பரிமாறு கிறாள். சொல் வெளிவர இரண்டு உதடுகளின் முயற்சியும் தேவை யல்லவா? தலைவன் உள்ள நிறைவுக்கு ஒரு கையால் மட்டும் பரிமாறினால் போதாது; இரு கையாலும் பரிமாற வேண்டும் என்னும் கருத்துடன் பரிமாறுகிறாள் என்ற குறிப்பும் தோன்றக் காண்கிறோம்; இன்பமும் பெறுகின்றோம். இவ்வகையில் அமைவதே கவிதையாகும்.

**பயிலும் முறை**

இவ்வாறு இன்பந் தோன்றச் செய்யும் கவிதைகளை மேற் போக்காகப் படித்துவிட்டால் மட்டும் இன்பம் வந்துவிடாது. துருவித் துருவி ஆராய்தல் வேண்டும். ஒவ்வொரு சொல்லுக் குள்ளும் நாம் புகுந்து புகுந்து வெளிவருதல் வேண்டும். அப்பொழுது தான் அதனுள் ஆழ்ந்து மறைந்து கிடக்கும் முத்துகளைக் கண்டெ டுக்க முடியும். கவிதையைச் சொல்லிச் சொல்லிப் பார்த்தல் வேண்டும். அப்பொழுதுதான் இன்பம் அரும்புவதைக் காண முடியும். வாயை மூடிக்கொண்டு, கண்களை மட்டும் ஓடவிட்டு, இன்பத்தைக் காணவில்லையே என்று தேடுவதிலே பயனில்லை. இதனாலன்றோ "ஆயுந்தொறும் இன்பந் தருந் தமிழ்" என்று கச்சியப்ப முனிவரும் "நவில்தொறும் நூல்நயம் போலும்" என்று வள்ளுவப் பெருந்தகையும் உணர்த்திப் போந்தனர்!

## சொல்லின் சிறப்பு

கவிதையானது பிணி, மூப்பு, தளர்ச்சி இவற்றைப் போக்க வல்லது; உலகத் துன்பங்களையெல்லாம் நீக்கவல்லது; தனி உலகிற் செலுத்திப் பேரின்பத்தை ஆக்கவல்லது. இத்தகு பேராற்றல் படைத்த கவிதைக்கு அணி, ஓசை, யாப்பமைவு முதலிய பிறவுறுப்பு களும், கருவிகளேயாயினும், சொற்களே அவற்றுட் சிறந்த கருவிகள் என்பது யாவரும் ஒப்புக்கொண்ட முடிபாகும். சொற்கள்தாம் கவிஞன் கருதிய கருத்தை - உணர்ச்சியை நன்கு புலப்படுத்தும் ஆற்றல் பெற்றன; பயில்வார் தம் உள்ளுணர்ச்சிகளையும் கிளறி விடுவன. சொல் தனியாக நிற்கும்பொழுது அது பொதுவாகப் பொருளுணர்த்துங் கருவியாகவே இருக்கும். ஆனால், அது கவிதையில் இடம்பெறும்பொழுது பிறிதொரு ஆற்றலையும் அழகையும் பெற்றுவிடுகிறது. அதனால் கவிதையில் வரும் சொல் மிகப்பெரியதொரு மதிப்பைப் பெற்றுவிடுகிறது. இம் மதிப்பைக் குறைத்து விடுதல் கூடாது என்பதற்காகவே நூலின் இயல்பைக் கூறவந்த பழம்புலவர் ஒருவர் "வழூஉச் சொற்புணர்த்தல்" பெருங் குற்றமென்றும், "நன்மொழி புணர்த்தல்" நூலுக்கு அழகு என்றும் உணர்த்திச் சென்றார். இந்நன்மையை உணராதார் எளிமை என்ற - பெயரால் கண்ட கண்ட சொற்களை எல்லாம் தொடுத்துப் பாக்களைப் புனைந்துவிடுகின்றனர். இப் புனைவு, சொல்லின் மதிப்பைக் குறைப்பதுடன் அமையாது கவிதைப் பண்பையும் பாழாக்குகிறது. பயில்வோர்க்கு இன்பத்துக்கு மாறாகத் துன்பத் தையே கொடுக் கிறது. இதனால் இயற்சொல்லாயினும் திரிசொல் லாயினும் கவிதை யில், அழகிய - இனிய - நல்ல சொற்களே இடம் பெறுதல் வேண்டும் என்று உறுதியாகின்றது. பாரதியார் பாடலை வியந்து கூறும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் "சொல்லுக்குச் சொல் அழகு ஏறுமேயடா" என்று இசைத்த பகுதி இக் கருத்துக்கு அரண் செய்வதாகின்றது.

## சொல்லழகின் வகை

கவிதையில் வரும் சொல்லழகை அது தரும் அழகு நோக்கி மூன்று வகையாகப் பகுக்கலாம். ஏற்ற இடத்தில் ஏற்ற சொல்லை அமைப்பது ஒருவகை. இதனைச் சொல்லாட்சி என்பர். சொல்லுஞ் சொல்லால் பிற குறிப்புகளும் பெறுமாறு அமைப்பது மற்றொரு வகை. இதனைச் சொல்நயம் என்பர். ஒருசொல் பல பொருளை

உணர்த்தி நிற்பது மூன்றாம் வகை. இதனை இரட்டுற மொழிதல் என்பர். இம் மூன்று வகையானும் சொற்கள் கவிதைக்கு அழகு தந்து நமக்கும் இன்பந் தருவனவாம். ஆயினும், முதல் இரண்டு வகை யாகிய சொல்லாட்சியும் சொல்நயமுமே கவிதைக்கு மிகச் சிறந்தன என்பர் கவிதை இன்பத்தில் திளைக்கும் பெரியோர். முற்காலப் பனுவல்களில் முதல் இரண்டு வகையுமே பெரிதும் பயின்று வரக் காண்கிறோம். அன்று சொல்லிலே உணர்ச்சியை ஏற்றிக் காட்டினர். பின்னரோ சொல்லிலே "ஜாலவித்தை" காட்டுவாராயினர்.

இனி முற்கூறிய மூன்று வகையான சொல்லழகையும் கவிதை களிலே காண்போம்.

**சொல்லாட்சி**

ஏற்ற இடத்தில் ஏற்ற சொல்லைக் கையாளும் சொல்லாட்சிச் சிறப்புக்குத் திருக்குறள் நல்ல சான்று பகரும். இரவச்சம் என்ற அதிகாரத்தில் "இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின் கரப்பார் இரவன்மின் என்று" (1067) என ஒரு குறட்பா வருகிறது. இங்கே அழகு தரும் சொல் "இரப்பன்" என்பதேயாகும். திரு வள்ளுவர் தங்கூற்றாகக் கூறுவது இச்சொல். வேறு சில இடங்களிலும் ஆசிரியர் தம்மை உளப்படுத்திக் கூறும் பகுதிகளும் உள. அவ்விடங்களில் 'பெறுமவற்றுள் யாமறிவதில்லை' (61) என்றும், 'யாம்மெய்யாக் கண்டவற்றுள்' (300) என்றும், 'ஒப்பாரி யாம் கண்டதில்' (1071) என்றும் தனித்தன்மைப் பன்மை வாய் பாடாகிய ஆசிரியப் பன்மைச் சொல்லாலே யாம், யாம் என்றே கூறிச் செல்கின்றார். இவ்வாறு குறித்து வந்த வள்ளுவர் இரவச்சம் என்ற அதிகாரத்துக்கு வந்தவுடன் 'இரப்பன்' என ஒருமை வாய் பாட்டால் கூறுகின்றார். வழக்கம்போல இரப்போம் எனப் பன்மைச் சொல்லாற் குறியாது ஒருமைச் சொல்லாற் குறித்த முறையில்தான் கவிதைப் பண்பு மிளிரக் காண்கிறோம். அங் கெல்லாம் ஆசிரியராக இருந்த வள்ளுவர் இங்கே இரவலராகி விடுகிறார். இரவலன் கெஞ்சிக் கேட்கவேண்டுவதுதானே இயல்பு. பெருமிதத்தோடு நின்று கேட்பது தகாது. வள்ளுவரே பிறிதோரிடத்துக் கூறுகிறார் "உடை யார் முன் இல்லார்போல் ஏக்கற்றும்" (395) என்று. ஆதலினால், வள்ளுவரும் இரவலனுக்கு உரிய முறையில் இரங்கிய சொல்லால்-தாழ்ந்த சொல்லால் 'இரப்பன்' என ஒருமையால் கூறுகின்றார். இங்கே ஆசிரியர் இரவலனாகவே அந்தப் பொருளோடு ஒன்றுபட்டு

விடுகின்றார். இவ்வாறு பொருளோடு ஒன்றுபடுதலாகிய கவிஞனுக் குரியஇயல்பை இச் சொல் அழகுற எடுத்துக்காட்டுகிறது. இடத்துக் கேற்ற சொல்லாகவும் அமைகிறது.

**சிலம்பில் ஒரு சொல்**

இனிச் சிலம்பொலி கேட்போம். பேரியாற்றங்கரையில் செங்குட்டுவன் தன் துணைவியொடு அமர்ந்திருக்கின்றான். பாண்டியன் தன் தவறுணர்ந்து இறந்தமை கண்டு மனம் பொறாது கோப்பெருந்தேவி உயிர் நீத்ததையும், கோவலன் குற்றமற்றவன் என வழக்காடி வெற்றிகொண்டு, வஞ்சி சென்று கண்ணகி வானகம் பெற்றதையும் தண்டமிழாசான் சாத்தன் எடுத்துரைக்கக் கேட்ட செங்குட்டுவன், "நன்னுதல் வியக்கும் நலத்தோர் யார்?" எனத் தன் மனைவியை நோக்கிக் கேட்கிறான். மறுமொழி பகரும் இளங்கோ வேண்மாள் "பத்தினிப் பெண்டிர் பெறும் பேற்றைப் பாண்டிமா தேவி அடைவாளாக; நம் அகல்நாடு அடைந்த இப்பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்" என்கிறாள். இருவருள் யார் சிறந்தோர் என்று விடையிறுக்கவில்லை. கண்ணகியைப் பரசல் வேண்டும் என்று சுருங்கச் சொல்லி விடுகின்றாள். ஏன் அவளை மட்டும் பரசல் வேண்டும் என்ற வினா எழுமல்லவா? வினா எழுமுன்பே கரணியமும் கூறி விடுகின்றாள். நம்முடைய நாட்டுக்குள் வந்தமையால் பரசல் வேண்டும் என்ற குறிப்பை "நம் அகல்நாடு அடைந்த இப்பத்தினி" என்னும் அடைமொழிகளால் உணர்த்திவிடுகிறாள்.

மேலும் இவள் தந்த மறுமொழியில் கடவுள் என்ற சொல்லின் அழகை நினைந்து நினைந்து மகிழ்தல் வேண்டும். அவ்வழகைக் காண்போம். பத்தினியைப் பரசல் வேண்டும். எப்படிப் பரசல் வேண்டும்? கடவுளாக்கிப் பரசல் வேண்டும். கடவுளாக்குதல் என்றால் சிலை எழுப்புதல் வேண்டும். அக் கடவுட் சிலையை எங்கே நிறுவுவது? கோவிலில்தான் நிறுவுதல் வேண்டும்; ஆகவே, கோவில் ஒன்று எழுப்புதல் வேண்டும். கண்ணகிக்கு நினைவுச் சிலை அமைத்து, அதனை நிறுவக் கோவிலொன்று எழுப்பி வழிபடுதல் வேண்டும் என்ற கருத்துகளை எல்லாம் வினாக்கள் பல்கா வகையில் சொல்லிவிடுகின்றாள். வெளிப்படக் கூறினாளா? இல்லை. அவள் உரைத்த 'கடவுள்' என்ற ஒரு சொல் இவ்வளவு எண்ணங்களையும் உண்டாக்கிவிடுகிறது. பத்தினிக் கடவுளை என்பதற்குப் பதிலாகப் பத்தினிப் பெண்ணை என்று கூறியிருப்பின் இந்த

அழகையெல்லாம் நாம் காண முடியுமா? ஆகவே, இக் கருத்துகளை எல்லாம் தெரிவிக்க, இடத்துக்கேற்ற சொல் கடவுள் என்ற சொல்லே யாகும். இன்னோரன்ன சொல்லாட்சிச் சிறப்புடைய இடங்கள் பலப்பல மிளிர்வதைக் காணலாம் இளங்கோ தந்த சிலம்பிலே.

**சொல் நயம்**

அடுத்தபடி, சொல்லானது வேறு பிற குறிப்புகளையும் உள்ளடக்கி நிற்கும் அழகைச் சிறிது காண்போம். குறிஞ்சிக் கலியில் ஒரு கட்டம். ஒரு தலைவிக்கு மணமுடிக்க முயல்கின்றனர் பெற்றோர். இதையறிந்த தோழி அறத்தொடு நிற்கிறாள். அறத் தொடு நிற்றலா வது, தலைவி மற்றொருவனை விரும்பியுள்ளாள் என்பதை நாகரிக மாக - அறமுறை பிறழாது - பெற்றோர் ஏற்கும் வண்ணம் உரைப்பது. உரைக்கின்றாள்: "ஒரு நாள் புதுப் புனலாடினோம்; வெள்ளம் தலைவியை அடித்துக்கொண்டு சென்றுவிட்டது. அப்பொழுது தற்செயலாக அங்கு வந்த காளை ஒருவன் தன் அருள் மிகுதியால், நீருட் பாய்ந்து அவளை மார்போடு அணைத்து வந்து கரை சேர்த்தான். அன்றுமுதல் அவனுக்கே உரியவளாகிவிட்டாள்" என்று புனைந் துரைக்கின்றாள். அத் தோழியின் கூற்றைக் கவிதையிலே காண் போம்.

*"காமர் கடும்புனல் கலந்தெம்மோடு ஆடுவாள்*
*தாமரைக்கண் புதைத்தஞ்சித்*
*தளர்ந்ததனோ டொழுகலான்"* - *கலி. 39*

இதுதான் அவள் கூற்று. "புனலாடுவாள்" என்று மட்டும் கூறியிருக்கலாம்; காமர், கடும்புனல், கலந்து, எம்மோடு, ஆடுவாள் - இத்தனை சொற்கள் ஏன்? என்று நமக்குத் தோன்றுகிறது. ஆனால், கவிஞனுக்கு அத்தனையும் விலை மதிக்கமுடியாத மாணிக்கங்கள். அச்சொற்களில் குறிப்புப் பொருள்கள் இலைமறை காய்போல் இருத்தலைக் கூர்ந்து நோக்குவார் உணரலாகும்.

சொற்களுக்குள் நாமும் சிறிது நுழைவோம்; அடிகளாசிரியர் என்ற பேராசிரியர் நோக்கின்படி நயங்களைக் கண்டு இன்புறு வோம். புனலாடுவாள் ஆற்றொடு போனாள் என்று மட்டும் கூறியிருப்பின் தாய் சினங்கொள்வாள்; புதுப்புனல் ஆட ஏன் சென்றீர்? என்று சீறுவாள்; வெள்ளம் இழுத்துச் செல்லும் படியாக ஏன் விட்டுவிட்டீர்கள்? என்பாள்; நீங்களே அவளைக் கரை

சேர்த்திருக்க லாமே? என்று ஒருபடி மேலேறுவாள்; அவளைத் தனியாகவா புனலாட விட்டீர்கள்? என ஏங்குவாள். இத்தனைக்கும் விடை பகர்ந்தாக வேண்டும்; வினாக்கள் எழு முன்பே அனைத்தும் விளங்கக் கூறித் தாயின் வாயை அடைத்துவிடுதல் வேண்டும்.

அந்தப் புனல் பொதுவான புனலன்று; கண்டாரால் விரும்பப் படும் புனல். அதனால் நாங்களும் விரும்பினோம். புனலாடினோம் என்ற குறிப்பைக் 'காமர் புனல்' என்று சுட்டுகிறாள். அப் புனல் விரைவாகச் செல்கிறது, அதனால் அவளை இழுத்துவிட்டது. விரைந்து ஓடும் அப் புனலில் பெண்களாகிய எங்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை - என்ற கருத்தைக் 'கடும்புனல்' என்று குறிக்கின்றாள். அவளைத் தனியே நாங்கள் விடுவோமா? நாங்களும் உடன் சென்றோம் என்பதைக் 'கலந்தெம்மோடு ஆடுவாள்' என்று சொல்லாமற் சொல்லி விடுகின்றாள். இவ்வளவும் கேட்ட தாய் வாயைத் திறப்பாளோ? தோழி சொன்னபடியே தாய் ஆடினாள். இப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கின்றன "காமர் கடும் புனல் கலந்தெம்மோடாடுவாள்" என்ற வரியில் அமைந்த சொற்கள். 'ஆடுவாள்' என்ற சொல், நீரில் ஆட்டம் போட்டாள். அதனால் வெள்ளம் இழுத்துச் சென்றது என்ற குறிப்பையும் உணர்த்தி நிற்கிறது.

**இரட்டுற மொழிதல்**

இனி இரட்டுற மொழியும் அழகையும் சிறிது காண்போம்:

*"வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன?*
*இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை? - மங்காத*
*சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்*
*ஏரகத்துச் செட்டியா ரே"*

இது தனிப்பாடல். புலவர் நம்மைப் பலசரக்குக் கடைக்கே இழுத்துச் சென்றுவிடுகின்றார். வெங்காயம், சுக்கு, வெந்தயம், சீரகம், பெருங்காயம் - இத்தனை சரக்குகளையும் இந்தப் பாடலிலே - புலவர் படைத்த கடையிலே காண்கிறோம். இந்தக் கடைச் சரக்குச் சொற்களெல்லாம் மேலெழுந்த வாரியாக இன்பந் தந்து, தம்முள் பதுக்கி வைத்திருக்கும் வேறு பொருள்களையும் வெளிப்படுத்தி நின்று அழகு செய்கின்றன. திருவேரகத்தில் எழுந்தருளியிருக்கும் செட்டியாரே! விரும்பத்தக்க இந்தக் காயம் (உடம்பு) சுக்குப்

போலக் காய்ந்துவிட்டால் (இரத்தம் சுண்டிவிட்டால்) வெந்த அயத்தால் (அயபஸ்பம் என்ற மருந்தால்) ஆவதென்ன? அதனால் இந்தச் சரக்கை யார் சுமப்பார்கள்? நீர் எனக்குச் சிறந்த அகத்தை (இன்ப வீட்டை)த் தந்தால் இந்தப் பெரிய காயத்தை (உடம்பை)த் தேட மாட்டேன் என்று இவ் வகையில் பொருளுணர்த்தி இன்பந் தருகின்றன இந்தப் பலசரக்குச் சொற்கள்.

இவ்வாறு முன் கூறிய முறைப்படி, பலவகையான சொல் லழகுகள் அமைந்து, இன்பந் தருகின்ற கவிதைகள் நம் தமிழி லக்கியங்களிலே மிக்குக் கிடந்து, மலர்ந்து, மணம் வீசுவதை அவ்விலக்கியப் பூங்காவுள் புகப்பெற்றார் உணரலாகும்.

*(**15-11-1957**-இல் திருச்சி வானொலியில் 'கவிதை இன்பம்' என்ற பேச்சுத் தொடரில் பேசப்பட்டது)*

✪✪✪

# 9

# பாவேந்தர் வாழ்வும் இலக்கியப் பணியும்

**போர்க்களம்**

பாவேந்தர் வரலாற்றைக் காணும்பொழுது, அவர்தம் வாழ்க்கை ஒரு போராட்டக் களமாகவே இருந்து வந்ததை நாம் உணர்கிறோம். துணிச்சல் என்னும் கணிச்சி கொண்டு, ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி, எதிர்ப்புகள் என்னுங் களிறெறிந்து பெயருங் காளையாகவே வாழ்ந்திருக்கிறார். அவர்தம் இலக்கியப் பணியும் ஒப்பற்ற சமர்க்கள மாகவே இயங்கியதை நாம் அறிகிறோம். தமிழி னத்தின் விடுதலைக் காக மேற்கொள்ளப்பட்ட பணியாதலின் இலக்கியப் பணியையும் அமர்க்களமாகவே ஆக்கிக்கொண்டு, 'தருக்கினால் பிறதேசத்தார் தமிழன்பால் என் நாட்டான்பால் வெறுப்புறுங் குற்றஞ் செய்தார் ஆதலால் விரைந்து அன்னாரை நொறுக்கினார் முதுகெலும்பை' என்றும், 'கொலை வாளினை எடடாமிகு கொடியோர் செயல் அறவே' என்றும் எக்காளம் இடுகிறார். இப்போர்க்கள வரலாறு தான் பாவேந்தரின் வாழ்க்கையாகும்.

இளவேனிற் பருவத்தே பூஞ்சோலையிற் கூவும் மாங்குயில் இனிய குரலிற் கூவும். அது நமக்குக் 'கீத'மாகக் கேட்கும். ஆனால் குயில், பாலையிலே துரத்தப்படும்போது - பறந்து திரியும் உரிமை தடுக்கப்படும்போது - நசுக்கப்படும்போது இனிய குரலிலா கூவும்? உரத்த குரலில்தானே கத்தும். நமது புதுவைக் குயிலும் தனக்குரிய சோலையிலிருந்து பாலைக்குத் துரத்தப்பட்டபோது உரிமை பறிக்கப்பட்டபோது - அழுத்தப்பட்டபோது உரத்தும் கடுத்தும் குரல் எழுப்பியது. அக் குரலில் சூடு மிகுந்து காணப் பட்டது. ஆதலின் அக் குரல் நெருப்புக் குரலாகவே தோன்றுகிறது.

**ஏன் நெருப்புக் குரலாயிற்று?**

பாவேந்தர் கறுத்தெழக் காரணமென்ன? அவர்தம் இலக்கியக் குரல் நெருப்புக் குரலாகியது ஏன்? அவரே காரணம் கூறுகிறார். 'தமிழருக்கும் புரட்சி மனப்பான்மை, தம் பகைவரால் நசுக்கப்

படுவதிலிருந்து உண்டாகும். ஆகையால் தமிழர், தம் பகையால் அடையும் எவ்விதத் தொல்லைகளையும் நான் வரவேற்கிறேன்' என்று தொல்லைகளுக்கு வரவேற்புக் கூறுகிறார். அதன் பின்னர், 'இப்போது தமிழன் அத்தனை மோசமில்லை காதைப் பிடித்துத் தூக்கினாலும் கீ என்று கத்துகிறான்' எனச் சற்று அமைதி கொள்கிறார். அதன் பின்னர், 'அநேகமாக இன்று தமிழரால் ஒரு புரட்சி ஏற்படலாம். நலிந்த ஒரு தனி மனிதன் செத்துப் போவான்; ஆனால், நலிந்த ஒரு சாதி சாகாது; எழுச்சியுறும். இது இயற்கைச் சட்டம்; எனது இன்பக் கனவு' - என்று இன்பக் கனவு காணுகிறார். (10.10.1937, குடியரசு இதழ்) நசுக்கப்பட்டுத் தொல்லைப் பட்டுப் பின்னர்ப் பொறுமை யிழந்து, கீ என்று கத்தி, அதன் பின் எழுச்சி பெற்று, கறுத்தெழுந்த குயிலின் குரல் எவ்வாறிருக்கும்? கனல் தெறிக்கத் தானே செய்யும்?

ஒரு நாள் புதுவையில் பாவேந்தர், வ.வே.சு.ஐயர், புதுவை முத்தியாலுப் பேட்டைக் கிருட்டிணசாமி முதலானோர் பாரதி யாரின் இல்லத்தில் மகிழ்ச்சியாக உரையாடிக் கொண்டிருந் தனர். அவ்வமயம் வ.வே.சு.ஐயர், கிருட்டிணசாமி வைத்திருந்த 'ஜஸ்டிஸ்' பத்திரிகையை வாங்கிப் பார்த்துவிட்டுப் "பொருளா தாரம், உத்தியோகம் முதலிய துறைகளில் பிராமணரல்லாதார் முன்னேறி, பிராமணருடன் சமநிலை அடைதல் வேண்டும் என்பது ஜஸ்டிஸ் பத்திரிகையின் நோக்கம். பிராமணரல்லாதார் சமநிலையடைய முடியாது என்பது என் கருத்து" என்று சிரித்துக்கொண்டே பாரதி யாரைப் பார்க்கிறார். பாரதியார் வாய் திறக்கவில்லை.

ஆனால், பாவேந்தரோ வெடுக்கென்று, "பிராமணரல்லா தார் மிகப் பெரும்பாலோர், அடிதடியில் கிளம்பிவிட்டாலோ?" என்று மறுத்துப் பேசிவிட்டார். சிறிது நேரம் அங்கு அமைதி. பின் வ.வே.சு. சென்றுவிட்டார். அப்பொழுது பாரதியார் பேசுகிறார்: "சுப்புரத்தினம் கேட்டது சரியான கேள்வி; ஆணித்தரமான பேச்சு. அப்படித்தான் பயப்படக் கூடாது.... கொடிய கட்டுத் திட்டமும் சட்டங்களும் தூளாகும்படி, அடிதடி சகிதம் உண்டாவதுதான் புரட்சி." (கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல் - பக். 439) இது பாரதி தந்த தீர்ப்பு.

பாரதி போற்றிய அப்புரட்சிக் குயிலின் குரல், சூடு தாராமல் இருக்குமா? ஆனால் அச் சுடு நெருப்பு எவரையும் - எந்தத் தனி மனிதரையும் சுட்டெரிக்க வில்லை. பழங் குச்சிகளை - காய்ந்து

போன சருகுகளை - நடப்பவர் கால்களைப் புண்படுத்திய முட்களைத்தான் சாம்பராக்குகிறது. புதிய குமுகாயத்தை உருவாக்கப் பயன்படுகிறது. கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்க்கவும் புதியதோர் உலகம் ஆக்கவும் பயன்படுகிறது.

**பகைப்பாட்டு**

குயில் பாட்டுப் பாடிய பாரதியார், அக் காப்பியக் குயிலின் உண்மை நிலையறியாது, அதன் நடத்தையை ஐயுற்று, 'நீசக் குயில்' என்று திட்டி விடுகிறார். திட்டினும் பாட்டின் இனிமையில் மயங்கி,

*"நீசக் குயிலும் நெருப்புச் சுவைக்குரலில்*
*ஆசை ததும்பி அமுதூறப் பாடியதே'*

என்று கூறி விடுகிறார். 'நீசக்குயில்' 'நெருப்புக்குரல்' எனவும் சினந்து கூறிய அவரே, அதே இடத்தில் 'சுவைக்குரல்' எனவும் 'அமுதூறப் பாடியதே' எனவும் வியந்து மகிழ்கிறார். அது போலவே நம் பாட்டுக் குயிலை - புரட்சிக் குயிலைத் தமிழகமும் 'நாத்திகக் குயில்' என்றது; 'நடுக்குறுத்துங் குரல்' என்றது. எனினும் அதே தமிழகம் அதே சமயம் 'நாம் வளரப் பாடியதே' என்றும் பூரித்தது.

பேராசிரியர் சாமிநாதன் என்பார், 1938இல் 'அனுமான்' இதழில் பாவேந்தர் பாடலைத் திறனாய்வு செய்கிறார். பாவேந்தரின் கவிதைகளிலும் நாடகங்களிலும் குற்றங் குறைகள் கணக்கில்லை என்கிறார். பாட்டுக்குப் பாட்டு கொள்கை முரண்பாடு காணப்படுகிறது என்கிறார். கவிதையென்னும் தீயைப் பக்தி என்னும் எண்ணெய் விட்டு வளர்க்காது, பகுத்தறிவு என்னும் தண்ணீர் வார்த்து வளர்க்கப் பார்க்கிறார் எனச் சாடுகிறார். இன்னும் சில இடங்களில் கிண்டலாக எழுதுகிறார்.

இப்படித் தமது வெறுப்பை - உள்ளக் குமுறலைக் கொட்டி விட்ட பேராசிரியரே, அதே பகுதியில், 'ஆனால் இவையெல்லாம் திவ்வியமான தேன் கூட்டில் பதுங்கிக் கிடக்கும் தேனீக் கொட்டடல்' என்றும், 'தமிழ்நாட்டில் இன்று உயிருடன் இருக்கும் கவிகளுள் உண்மைக் கவி யார்? உயிர்க் கவி யார்? சிரஞ்சீவிக் கவி யார்? என்று கேள்விகள் கிளம்பினால், சற்றும் சந்தேகமின்றிப் பாரதிதாசன் என்று ஒரு விடைதான் நம்மால் கொடுக்க முடியும்' என அறுதியிட்டுங் கூறிவிடுகிறார். (க.கு.நெ.கு.பக்.53-54)

தேனை எடுத்தால் தேனீ கொட்டாமலா இருக்கும்? கொட்டப் பட்ட பேராசிரியர் தேனின் சுவையை மறந்துவிட வில்லை. வெகுவாகப் பாராட்டுகிறார். எரிச்சல் கொள்ளும் உள்ளங்களும் பாராட்டக் காரணம் என்ன? 1938இல் வ.ரா.என வழங்கப்படும் வ.ராமசாமி ஐயங்கார் எழுதிய எழுத்து, இதற்கு விடை தருவது போல அமைந்துள்ளது.

"ஆவேசத்தையும் உணர்ச்சியையும் வெள்ளமாகக் கொட்டும் உயிர்க் கவி பாரதிதாசன் என்பது எனது தாழ்மையான எண்ணம். அவர் கையாளும் சொற்களின் எழிலையும் பசையையும் விசித்திரத் தன்மையையும் கண்டு அனுபவிப்பவர்கள் நான் சொல்வதை ஆதரிப்பார்கள்" (க.கு.நெ.கு.பக்.265) என்று எழுதுகிறார். ஆம்; பாவேந்தரின் பாடல்களிலே உள்ள 'பசை' தான் எரியும் உள்ளங் களையும் அருகில் கொணர்ந்து ஒட்டிவிடச் செய்கிறது.

**போர் மறவன்**

தனி வாழ்வில் எதிர்ப்பு, பொது வாழ்வில் எதிர்ப்பு, இலக்கியத் துறையா? அங்கே எதிர்ப்பு, அரசியல் துறையா? அடாத எதிர்ப்பு, சமயம் சமுதாயம் அனைத்தும் எதிர்ப்பு, இவ்வாறு துறைதோறும் துறைதோறும் எழுந்து வந்த எதிர்ப்புகளே பாவேந்தரைப் போர் மறவனாக மாற்றின. தமிழ், துறைதோறும் அழுத்தப்படுவதும், அது தலைதூக்கினால் எதிர்க்கப்படுவதும், பழிக்கப்படுவதுங் கண்ட பாரதிதாசன் களத்தில் நிற்கும் காளையாக மாறினார்.

*"நாயினுங் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்*
*நலிவதை நான் கண்டே*
*ஓயுதல் இன்றி அவர்நலம் எண்ணி*
*உழைத்திட நான் தவறேன்'*

என்னும் பாடலை உன்னிப்பாக நோக்குதல் வேண்டும். தமிழ் நாட்டார் நலிவதைக் 'காணுங்கள்' என்று காட்டவில்லை. 'நான் கண்டேன்' என்று நவில்கிறார். 'உழைத்திட வாருங்கள்' என்று அழைப்பு விடுக்கவில்லை. உழைத்திட 'நான் தவறேன்' எனத் தாமே பொறுப்பேற்கிறார். இவ்வாறு பாரதிதாசன் வாழ்க்கை வேறு, இலக்கியப் பணி வேறு என்று பிரித்துக் காண இயலாத அளவு, இரண்டும் ஒன்றாக ஒன்றிப்போனவர்.

**தொண்டுக்கு இலக்கணம்**

தமிழ்க் குமுகாயத்தின் விடுதலைக்குப் பாடுபடும் எவரும் புரட்சித் தொண்டுதான் செய்தாதல் வேண்டும். அத் தொண்டு எத்தன்மையில் அமைதல் வேண்டும் என்று இலக்கணமே வகுத்துத் தருகிறார் பாவேந்தர்.

*"தமக்கொரு தீமை என்று நற்றமிழர்*
*எனை அழைத்திடில் தாவி*
*இமைப்பினில் ஓடித் தரக்கடவேன்நான்*
*இனிதாம் என் ஆவி"*

*"ஆன என் தமிழர் ஆட்சியை நிறுவ*
*அல்லல்கள் வரின் ஏற்பேன்*
*ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்*
*குவப்புடன் நான் சேர்ப்பேன்"*

உண்மைத் தொண்டு புரிவோர், இனிதாகிய ஆவியும் தரக் கடமைப்படுதல் வேண்டும், அல்லல்கள் வரின் ஏற்றல் வேண்டும், ஊனுடல் கேட்பினும் உவப்புடன் சேர்த்தல் வேண்டும் என்பது பாவேந்தரின் கொள்கை. தொண்டு புரிவதால் தொண்டர் வாழ்க் கையில் துயர் சூழ்கிறது; தாங்க முடியாத அளவு சோதனைகள் நிகழ்கின்றன. அவ்வமையம் மாற்றார் பணம், பதவி, பட்டம் முதலியன காட்டி ஆர்வ மொழிகள் கூறி, அழைப்பு விடுக்கின்றனர். உடனே ஓடிவிடுவது தொண்டுக் கழகா? என வினவின்,

*"எமை நத்துவாயென்று எதிரிகள் கோடி*
*இட்டழைத்தாலும் தொடேன்"*

என்று முகத்தில் அறைந்தாற் போற் கூறிவிடுகிறார். எத்துணைக் கோடியென்று இயம்பவில்லை. கோடி வெண்பொன்னா? செம் பொன்னா? அதுவும் கூற வில்லை. பொதுவாகக் 'கோடி' என்று மட்டுங் கூறுகிறது பாடல். எத்துணைக் கோடி எனினும் சரி, அது வெண்பொன்னாகினும் சரி, செம்பொன்னாகினும் சரி, "தொடேன்" என மறுத்துவிடுகிறார். கோடி தருவதாகச் சொல் லளவில் நில்லாது, 'இட்டு அழைத்தாலும்' என்று கூறுகிறார். அஃதாவது எதிரில் கொட்டி வைத்துக்கொண்டு அழைத்தாலும் தொடேன் என்ற

உறுதிப்பாட்டை நமக்கு விளக்குகிறார். ஆனால் இன்றுள்ள 'தொண்டு' விந்தையானது! "தலைவருடைய முகமூடியைக் கிழித்தெறிகிறேன் பார்" என்று வீரமொழி புகன்று, வெளியில் வந்து, புதுக்கட்சி தொடங்கிச் சில திங்களில் 'தலைவர் எனக்குப் பதவி தருவதாகச் சொல்கிறார். அதனால் கட்சியைக் கலைத்துவிட்டுத் தலைவரோடு கலந்துவிட்டேன்' என்று மூச்சு வாங்க ஓடுகின்றனர் தொண்டர். இதுவா தொண்டு?

**உரிமைத் தமிழன்**

'பாரதிதாசன் உண்மை, நியாயம், அறிவு முதலியவற்றைச் சிறிதும் விட்டுக் கொடுக்க இசையாத, இயற்கையான ஒரு பிடிவாதம் உடையவராதலால், அவர் புகழை எதிர்பாராமல், தம் கொள்கை களில் விடாப்பிடியாய் இருந்து வருகிறார்' என்று தந்தை பெரியார் எழுதியிருப்பது முற்றிலும் உண்மை. அவர் புகழை எதிர்பார்க்கவே இல்லை. உண்மை நிலைமை இவ்வா றிருக்கச் சிலர், 'பாரதிதாசன் இந்தியத் தமிழனாக வாழ எண்ணாமல், தமிழனாக வாழ எண்ணுவ தால் இவர் புகழ் குன்றுகிறது' என்று குறை கூறுகின்றனர்.

தமிழனுக்கு மட்டுந்தான் இந்த அறிவுரை கூறப்படுகிறதே தவிர மற்றைய மாநிலத்தானுக்கு எவனும் கூற முற்படுவதில்லை. மற்ற மாநிலத்தான் வங்காளி இந்தியனாக, மராட்டிய இந்தியனாக, பஞ்சாபி இந்தியனாக, கேரள இந்தியனாக, கன்னட இந்தியனாக வாழும்போது இவன் மட்டும் ஏன் தமிழ இந்தியனாக வாழக் கூடாது? இந்தியத் தமிழனுக்கும் தமிழ இந்தியனுக்கும் சிறு வேறுபாடு உண்டு. இந்தியாவுக்குள் அடைக்கப்பட்ட தமிழன் இந்தியத் தமிழன். தமிழனாகவே வாழ்ந்து இந்தியாவுடன் சேர்ந்து நிற்பவன் தமிழ இந்தியன்.

பாரதியார் பாடல்களை உற்று நோக்கின் பாரதிகூடத் தமிழ இந்தியனாகத்தான் வாழ்ந்திருக்கிறார் என்பது புலனாகும். அதுவுங் கூட அன்றுள்ள சூழல், அவரை அவ்வாறு எண்ண வைத்தது. அவர் விடுதலைக்குப் பின்னும் வாழ்ந்திருப்பின் தமிழனாக மட்டுமே வாழ்ந்திருப்பார் என்பது உறுதி. பாரதிதாசன் விடு தலைக்குப் பின்னும் வாழ்ந்தமையாலேதான் இந்தியனாக வாழ்ந்த அவர், தமிழனாகவாழமுற்பட்டார்எனத்தெளிதல்வேண்டும். காலமும் சூழலும் தமிழக நிலைமையை உணர்த்தின. உண்மைத் தமிழனாக உரிமைத் தமிழனாக உயர்ந்தார் அவர்.

**இருவேறு குரல்**

தமிழகத்தில் இரண்டு வேறுபட்ட குரல்கள் ஒலிப்பதை நாம் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். சாதிகள் இல்லையடி பாப்பா எனச் சாற்றுகிறது ஒரு குரல்; அது சாத்திரங்களுக்கு மாறானது என ஆத்திரங் கொள்கிறது மறுகுரல். பொதுமை காணப் புதுவிதி செய்யப் புகல்வது ஒரு குரல்; எழுதிய விதியை அழிவுறச் செய்ய எவரால் இயலும்? என்பது மறுகுரல். மூடப் பழக்கம் ஓடச் செய்க என்பது ஒரு குரல்; நாத்தழும்பேறிய நாத்திகம் பேசல் தீத்திறம் என்று செப்பிடும் மறுகுரல். அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண் மேல் சொற்றமிழ் பாடு என்று கெஞ்சுவது ஒரு குரல்; வேதம் தந்த வித்தகன் முன்னர் ஓதுவது தமிழா, ஒவ்வோம் ஒவ்வோம் என விஞ்சுவது மறு குரல். இசையோடு தமிழ் பாடு என்பது ஒரு குரல்; இசையிலை தமிழில் என்பது மறு குரல். இருளை அகற்றி ஒளியை நல்கும் குறளே நம்மறை எனக் கூறுவது ஒரு குரல்; வேதம் ஒன்றே மோட்சம் நல்கும் என ஓதுவது மறு குரல். மண்மிசை மாந்தர் வாழும் நெறியைக் கண்முன் காட்டி அழைக்கும் ஒரு குரல்; மண்ணுலகு அநித்தியம், மாயை அகற்றி விண்செல விழைக என்பது மறு குரல். இவ்வாறு வேறுபட்ட இரண்டு குரல்கள் ஒலிப்பது ஒழிந்து ஒரே குரல் ஒலித்தல் வேண்டும்.

அதுவும் தமிழ்க் குரலாக ஒலித்தல் வேண்டும். அக் குரல் கேட்கும்வரை நெருப்புக் குரல் ஒலித்துக் கொண்டுதான் இருக்கும். பனி நடுக்கம் ஒழியும்வரை, தணப்புக் கனன்று கொண்டுதானே இருக்கும்? இஃது இயற்கையின் ஆணை.

**இனிப்புக் குரல்**

நெருப்புக் குரல் கொடுத்த அதே கறுப்புக் குயில் எத்துணை யோ இனிப்புக் குரல்களும் கொடுத்துள்ளதை நாடறியும், ஒன்றே ஒன்று காண்போம்.

*“துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ*
*இன்பம் சேர்க்க மாட்டாயா”*

என்ற பாடலைத் தமிழகம் கேட்டு மகிழ்ந்ததுண்டு, மயங்கிய துண்டு. அஃது இனிப்புக் குரல் அல்லவா? அமுதக் குரல் அல்லவா? முத்தமிழானது துன்பம் நீக்க வல்லது, இன்பம் சேர்க்க வல்லது என்ற குறிப்பை மிக நயமாகக் குறிப்பிடுவது இப் பாடல். துன்பம் நீக்கவும்

இன்பம் சேர்க்கவும் யாழெடுத்துப் பாடு என்று இசைத் தமிழையும், 'அற்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால் ஆடிக்காட்ட மாட்டா யா' என்று கூத்துத் தமிழையும் 'இறை வனாரின் திருக்குறளிலே ஒரு சொல் இயம்பிக் காட்ட மாட்டாயா' என்று இயற்றமிழையும் குறிப்பிடுவது நயக்கத் தக்கது. 'யாழெ டுத்துப் பாடு' என்றவுடன் வேற்று மொழிப் பாடலைப் பாடி விடின் துன்பம் போகாது, இன்பம் ஆகாது என்பதனால் 'தமிழில் பாடி நீ அல்லல் நீக்க மாட்டாயா? எனத் தமிழிசை வேட்கை யையும் புலப்படுத்தி விடுகிறார் - கவிஞர். இப் பாடலைத் தண்டபாணி தேசிகர் உணர்ந்து பாடுவதைக் கேட்டோர் இதன் அருமை பெருமைகளை நன்கறிவர். விசை யொடிந்த தேகத்தில் விறுவிறுப்பை ஊட்டிய அதே நெருப்புக் குரல் ஊனை, உயிரை உருக்கும் இனிப்புக் குரலாகவும் கேட்பதுண்டு.

**கட்டுப்பாடற்ற கவிஞன்**

கவிஞன், கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவன். இலக்கண நெறிகளுக்குங் கூட அவன் கட்டுப்பட மாட்டான்; இலக்கணத் தையே தன் கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து, அதனை ஏவல் கொள்ளும் அதிகாரம் படைத்தவன். எவ்வகைச் சட்ட திட்டங் களும், கட்டுப்பாடுகளும் அவனை அடிமைப் படுத்திவிட முடியாது; அடக்கியாளவும் முடியாது. தன் விருப்பம் போல் இன்ப வானில் சிறகடித்துத் திரியும் வானம்பாடிதான் கவிஞன். நம் கவிஞர் உள்ளமும் அத்தகையதே என்பதைப் பாவேந்தர் பாடல் நமக்குத் தெளிவு படுத்துகிறது.

ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெறும் நாள் **8.11.1946**-ல் வருகிறது. அஃது அவருக்கு விடுதலை நாளாகத் தோன்றுகிறது. 'எட்டுப் பதினொன்று நாற்பத்தாறிட்ட எழிலுறு நாள்' என்னுங் கட்டளைக் கலித்துறைப் பாடலில், அந் நாளினை 'எழிலுறு நாள்' எனச் சுட்டுகிறார். அஃது அவருக்கு ஏன் எழிலுறு நாளா யிற்று? மேலதிகாரிகளின் அடக்குமுறை பள்ளியின் சட்ட திட்டங்கள் எதுவுமே இனி இவரைக் கட்டுப்படுத்த முடியாதல்லவா? சுதந்திரப் பறவை யாக ஆக்கும் நாள் அந்த நாளல்லவா? அதனால் அந்தப் பொன்னாள் அவருக்கு எழிலுறு நாளாகத் தோன்றுகிறது. 'மேலுமெனைக் கட்டுப்படுத்துவ தொன்றில்லை' என்று தமது உள்ளத்துணர்வை அவரே அப் பாடலில் வெளிப்படுத்திவிடுகிறார்.

**வருங்கால உணர்வு**

*இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் பாடுவதோடமை யாது எதிர்காலத்தையும் உணர்ந்து பாடுவதுதான் உண்மைக் கவிஞன் இயல்பாகும். நம் பாவேந்தரும் வருங்காலத் தேவைகளை உணர்ந்து பல மேலான கருத்துகளைப் பாடியுள்ளார். போரால் விளையுந் தீமைகளைக் கண்டறிந்து, மனித இனத்தைக் கவ்விக் கொண்டுள்ள அச்சவுணர்வை அகற்றி, அவர்களை அமைதியாக வாழவிடுதல் வேண்டும் என்ற நல்லுணர்வுடன் இந்தியா, உருசியா போன்ற நாடுகள் அரிதின் முயன்று வருகின்றன. இந் நன்முயற்சி உலகில் அரும்புவதன் முன்னரே நம் பாவேந்தர்,*

*"புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட*
*போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்"*

*என்று உறுதியுடன் முடிவு கட்டுகிறார்.*

*குடும்பக் கட்டுப்பாட்டியக்கம் இன்று இந்தியாவிலும் உலகிற் பிற பகுதிகளிலும் பரப்பப்பட்டு வருகிறது. இவ்வெண்ணம் கருக் கொள்ளு முன்பே நம் பாவேந்தர் 'காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்துதற்குக் கதவொன்று காண்போம்' என முன் கூட்டியே திட்டம் தந்துள்ளார்.*

**பட்டென்று பேசும் இயல்பு**

*பாவேந்தர்பால் அழுத்தமான பற்றும், தன்மான இயக்கத்தில் ஈடுபாடும் தமிழ் காக்கப் போராடுந் திறனுங் கொண்ட பேராசிரியர் ஒருவர், சிறுகவிதை நூலொன்று அச்சிட்டுக் கரந்தைக்கு வருகை தந்த பாவேந்தரிடம் மதிப்புரை பெற நண்பர் ஒருவரை உய்த்திருந் தார். பாவேந்தர் படித்தார், குற்றுகரப் புணர்ச்சி பிரிக்கப்பட்டு, அக்குற்றுகரமும் ஓர் அசையாக அலகிடப்பட்டு, அச்சேறி யிருந்தது. அது கவிஞரின் கண்ணையும் கருத்தையும் உறுத்தியது. அவ்வுறுத்தல் "எவன்டா இதை எழுதியது?" என்று அதட்டலாக வெளி வந்தது.*

*பேராசிரியர் பெயரை வந்தவர் சொன்னார், 'எவன் எழுதினால் என்ன இவன் எழுதிய அழகுக்கு மதிப்புரை வேறு வேண்டுமோ? என்ற சொற்கள், வந்தவர் செவியில் விழுமுன், அந் நூல் அவருடைய முகத்தில் விழுந்தது. பேராசிரியர், இவரிடம் அழுத்தமான பற்றுடை யவர், தன்மான இயக்கத்தவர், தமிழ்ப் போர் மறவர் என்பது*

கவிஞருக்குத் தெரியும். எனினும் 'பட்'டென்று இப்படிச் சொல்லி விட்டார். "பற்று பரிவு, ஒட்டு உறவு எதைப் பற்றியுங் கவலைப்பட மாட்டார். உள்ளத்திற் பட்டதைப் பட்டென்று சொல்வார்" என்பதற்குச் சரியான சான்றல்லவா?

## குழந்தையுள்ளம்

பார்வைக்கு முரடராகத் தோற்றந் தரும் கவிஞர், குழந்தை யிலும் சின்னஞ் சிறு குழந்தையாக மாறிவிடுவார். பல சமயங்களில், பல இடங்களில் அந்தக் குழந்தையுள்ளத்தைக் கண்டு நான் மகிழ்ந்து வியந்திருக்கிறேன். ஒரு சமயம் காரைக்குடி அழகப்பர் கல்லூரியில் நிகழ்ந்த கவியரங்குக்குத் தலைமை ஏற்கப் பாவேந்தர் வந்திருந்தார். மாலை நிகழ்ச்சிக்குக் காலையி லேயே வந்துவிட்ட கவிஞர், ஓர் அறையில் படுத்திருந்தார். தமது இடக்கையை மடக்கித் தலைக்கு அணையாக வைத்துக் கொண்டு படுத்திருந்தார். காணச் சென்ற நாங்கள், வணக்கம், வணக்கம் என்று சொல்லிக்கொண்டே ஒவ்வொருவராகப் புகுந்தோம். 'ம்ம், ம்ம்' என்று சொல்லிக் கொண்டே படுத்திருந்த அவர், பலரும் வருவதறிந்து எழுந்து அமர்ந்தார். என்னை நோக்கி, "பாருப்பா, கூப்பிட்டுக் கிட்டு வர்ராங்க, அப்படியே விட்டுட்டுப் போயிடுராங்க, தலைக்கு ஏதாச்சும் வேணுமான்னு கூடக் கேக்கலே, கை வலியெடுத்துப் போச்சு' என்று அவர்க்கே உரிய பாங்கில் சொன்னார். அவர்க் கருகில் மேசை மேல் ஒரு தோற்பெட்டியும், அதன் மேல் சமுக்காளம் சுற்றிய தலையணையும் இருப்பதைக் கண்டு, "ஐயா! இதை வைத்துக் கொள்ளலாமே" என்றேன். "அடே! ஆமாப்பா நான் எடுத்திட்டு வந்ததுதான்" என்று சிரித்துக்கொண்டார். தாமே கொணர்ந்த தலையணை யையும் மறந்துவிட்டுக் கையை மடக்கிப் படுத்துக் கொண்டு, கை வலிக்கிறதே என்று கூறும் உள்ளத்தை என்ன உள்ளம் என்று இயம்புவது? குழந்தையிலும் சின்னஞ்சிறு குழந்தையுள்ளம் என்றுதானே நினைக்கத் தோன்றுகிறது.

## கணக்கும் நினைப்பும்

மற்றொரு சமயம் திருச்சி வானொலி நிலையத்தார் கவியரங்க நிகழ்ச்சிக்குப் பாவேந்தரை அழைத்திருந்தனர். 'இருநூறு ரூபா தந்தால் வருவேன்' என மறுமொழி எழுதிவிட்டார் கவிஞர். கவியரங்க

நிகழ்ச்சிக்கு இருநூறு தருவது நிலைய விதிமுறைகளுக்கு ஒத்துவராது. கவிஞரின் இயல்பும் அவர்களுக்குத் தெரியும். கூடிப் பேசி ஒரு முடிவெடுத்துச் ‘சரி’ என்று எழுதிவிட்டுப் பதிவு செய்து கொள்வ தற்காகப் பாரதி யாரைப் பற்றிப் பேசவும் வேண்டிக்கொண்டனர். கவிஞர் இசைந்து வந்துவிட்டார். கவியரங்க நிகழ்ச்சி முடிந்து, பேச்சும் பதிவாயிற்று. கவிதைக்கும் பேச்சுக்கும் இருநூறு என்பது வானொலி யார் கணக்கு, கவிதைக்கு மட்டும்தான் இருநூறு பேச்சு இலவசம் என்பது கவிஞரின் நினைப்பு, இப்படி உலக நடைமுறையே அறிந்துகொள்ள இயலாத குழந்தையுள்ளம் கவிஞர் உள்ளம். கள்ளங் கவடறியாத குழந்தை யுள்ளத்தில், சூது வாதறியாத தூய உள்ளத்தில்தானே உண்மைக் கவிதை - உயிர்க் கவிதை தோன்ற முடியும்?

**காற்றாடியும் கவிதையும்**

கவிதையைப் பற்றி என்னிடம் உரையாடிக்கொண்டிருந்த கவிஞர் இப்பொழுது எவனெவனோ கவிதை எழுதுகிறான். ‘டீல்’ விட ஆசைப்படுகிறான். ஆனால் சின்ன நூல் கண்டை வைத்துக் கொண்டே ‘டீல்’ விட ஆசைப் படுகிறான். நூல் கண்டு பெரிதாக இருத்தல் வேண்டுமே என்று நினைக்க மாட்டேன் என்கிறான்’ என்று கூறினார். இளமையில் காற்றாடிக் கலையில் வல்லவ ராதலின், கவிதை புனைவார்க்கு அந்த உவமை வாயிலாக அறிவுரை கூறியதை எண்ணி வியப்புறுகிறேன். இலக்கியப் படைப்பில் ஈடுபட்டோர்க்கு இது நல்ல அறிவுரை யன்றோ?

பிறரிலும் மேம்பட்ட கவிஞனாகி, வெற்றி வாகை சூட வேண்டு மென்னும் போட்டி மனப்பான்மை உடையவன், நிறைந்த நூலறிவு பெறுதல் வேண்டும் என்று முயலாமல் திரிகிறானே என்று கவலைப்படுகிறார். காற்றாடிக்காரன் வெற்றிபெற நூலளவு மிகுதியாதல் வேண்டும், கவிஞன் வெற்றி பெற நூலறிவு மிகுதி யாதல் வெண்டும் என்று நயம்பட நவின்று ள்ளார். எதிர்ப்புக்கு அஞ்சாத் துணிவுள்ளம், பிறருக்காகப் போராடும் பேருள்ளம், நெஞ்சிற் பட்டதைப் பட்டென்று சொல்லும் நேர்மையுள்ளம், சூதறியாத குழந்தையுள்ளம், சிந்திக்க வைக்கும் சீரியவுள்ளம் முதலியன பாவேந்தரிடத்துக் காணப்படும் உயர் குணங்களாம்.

இவ்வாறு பாவேந்தரின் வாழ்வும் இலக்கியப் பணியும் ஒன்றோடொன்று இரண்டறக் கலந்து, புதிய தமிழகத்தை உருவாக்கப் போராடும் போர்க்களமாகி, வழிவழி மறவர் பலரை உருவாக்கிப் போர்ப் பயிற்சி தந்து வருவதை, அவர்தம் பாடல்களால் நாம் உணர்கிறோம்.

பாவேந்தர் வாழ்க்கை நமக்கு ஒரு வழிகாட்டி

அவர்தம் இலக்கியம் புதிய தமிழகத்தின் வரைபடம்.

*(புதுவைப் பல்கலைக்கழகத்தில் 30.4.1987 நிகழ்ந்த பாவேந்தர் விழாவில் ஆற்றிய தொடக்க உரை)*

✪✪✪

## 10

# வேர்ப் பலா

காலம் மாறும்பொழுது அம் மாற்றத்துக்கேற்பக் கருத்துகளும், கோட்பாடுகளும், பழக்க வழக்கங்களும் மாறி வருவது இயல்பு. அன்று முடியாட்சி கோலோச்சியது, காலம் மாறியது; இன்று, குடியாட்சிக் கொள்கை ஆட்சி செய்கிறது.

ஆடவர் குடுமி வைத்திருந்த காலம் அன்று; முடியைக் கோலங்கள் பல செய்து அழகு காணும் காலம் இன்று. தாழ்குழலார் எனத் தையலார் பாடப்பட்ட காலம் அன்று; கூந்தலைத் தறித்து விட்டுத் தடவித் தடவிப் பார்க்கும் காலம் இன்று.

மாணவர் மரத்தடியில் பாடங்கற்ற காலம் அன்று; கற்பதற்கு அவர்கள் மாளிகையில் புகுந்து வருங்காலம் இன்று.

வீரத்தின் அறிகுறியாகப் புலிப் பற்றாலி கட்டி மணந்தான் அன்று. கடைத்தாலி வாங்கிக் கட்டுகிறான் இன்று. அதுவுமின்றி மணங்கள் நடைபெறுவதும் உண்டு. உடை மாறியது; உணவு முறை மாறியது; உறையுள் அமைப்பு மாறியது; பழக்க வழக்கங்கள் மாறின.

இவ்வாறு, கால மாற்றத்துக்கேற்பத் தன் பழக்க வழக்கங்களை, கொள்கைகளை, எண்ணங்களை, கோலங்களை மாற்றிக் கொண்டவன்தான் மனிதன்.

ஆனால், மகளிர் முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வதில் மட்டும் தயங்குகின்றான். தயங்கினாலும் அவனுடைய விருப்பத்தையோ ஒப்புதலையோ எதிர் பார்த்துக் கொண்டிராமல், காலம் தன் பணியைச் செய்து கொண்டு தான் இருக்கிறது.

இடைக்காலத்தில், பெண்களை அடிமையாக, அழகுப் பாவையாக, இன்பப் பொருளாக, அறியாமையின் கொள்கல மாகக் கருதி இயங்கி வந்தது குமுகாயம், அதற்குச் சமயம், சாத்திரம், அறியாமை முதலியன நல்ல அரண்களாக அமைந்தன. எனினும்

அவ்வரண்களை உடைத்துக்கொண்டு அடிமைத் தளை களை அறுத்தெறிதல் வேண்டுமென்ற எண்ணம் அங்கங்கே அரிதினும் அரிதாக முகிழ்த்துக்கொண்டுதான் இருந்தது.

கவியுலகின் விடிவெள்ளியாகத் தோன்றிய பாரதியார்தாம், பெண்கள் விடுதலையுணர்வுக்கு ஒரு முழு வடிவம் கொடுத்துத் தடைகளை உடைத் தெறியும் போர் மறவனாக- முன்னோடியாக விளங்கினார் எனக் கூறின் மிகையாகாது.

பெண் விடுதலைக்குப் போர்க்குரல் எழுப்பிய பாரதியார், பெண்களின் மறுமணத்தைப் பற்றி - கைம்மைக் கொடுமையைப் பற்றிப் பாடற் பகுதியில் ஏன் ஒன்றுங் கூறாது விட்டனர் என்பது நமக்கு விந்தையாகவுள்ளது. கைம்மைக் கொடுமை, அவர் தோன்றிய இனத்திற்றான் மிகுந்து கிடந்தது, பாடலிற் பாடாது விடினும் கைம்மைக் கொடுமையை உரைநடைப் பகுதியில் அருமையாகச் சாடுகிறார்.

நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட காந்தியடிகளைப் பெரிதும் மதிப்பவர் பாரதியார். எனினும் கைம்மை பற்றிப் பேசுகையில் மதிப்புக்குரிய காந்தியடிகளைக் கடுமையாக மறுத்துவிடுகிறார்.

காந்தியடிகள் நடத்தி வந்த 'நவசீவன்' என்ற இதழில், இந்தியாவின் கைம்பெண்டிர் பற்றிய புள்ளி விவரங்களை ஒருவர் வெளியிட்டிருந்தார். அக் கட்டுரை பற்றிக் காந்தியடிகள் ஒரு குறிப்பும் எழுதியிருந்தார். "மேலே காட்டிய (கைம்பெண் களின்) தொகையைப் படிப்போர் அழுவார்கள் என்பது திண்ணம்" என்று குறிப்பிட்டுவிட்டு, இந் நிலையை நீக்கச் சிலவழிகளும் கூறுகிறார். இளமைப் பருவத் திருமணங்களை நிறுத்திவிடுதல் வேண்டுமென்றும் 15 வயதுக்குட்பட்ட கைம்பெண்களும் மற்ற இளைய கைம்பெண்களும் மறுமணம் செய்துகொள்ள இடங் கொடுத்தல் வேண்டுமென்றும் ஆனால் இவ் வழிகளை விருப்பமுடையோர் பின்பற்றலாமென்றும் இவற்றைப் பின்பற்றுவதில் தமக்கு விருப்பமில்லையென்றும் குறிப்பிடுகிறார்.

மேலும் கூறுகிறார்; முதல் மனைவியை இழந்தவன் பெரும்பாலும் வயது முதிர்ந்தவனாகவே இருப்பான். அவன் மறுபடி ஓரிளம் பெண்ணை மணந்தால், அவன் விரைவில் இறந்து போய் அப்பெண்ணைக் கைம்பெண்ணாக்கி விடுகிறான். ஆதலால், ஒரு முறை மனைவியை இழந்தோர் பிறகு மணஞ் செய்யாதிருப்பதே

கைம்பெண்களின் தொகையைக் குறைக்க வழியாகும் என்னுங் கருத்துப்படக் குறிப்பிடுகிறார்.

காந்தியடிகளின் இக் கருத்தைப் பாரதியார் வன்மையாக மறுக்கிறார், அவர் எழுதுவதாவது: "ஸ்திரீவிதவைகளின் தொகையைக் குறைக்க வழி கேட்டால், ஸ்ரீமான் காந்தி புருஷ விதவைகளின் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்கிறார்" எனக் கிண்டல் செய்துவிட்டு, 'எவ்வகையாலே நோக்குமிடத்தும் ஸ்ரீமான் காந்தி சொல்லும் உபாயம் நியாய விரோதமானது; சாத்தியப்படாதது; பயனற்றது" என மறுத்துவிடுகிறார் கவிஞர்.

மேலும் பாரதியார், "இந்தியாவில் சிற்சில ஜாதியாரைத் தவிர மற்றப்படியுள்ளோர், நாகரிகத் தேசத்தார் எல்லாரும் செய்கிறபடி, விதவைகள் எந்தப் பிராயத்திலும் தமது பிராயத்துக்குத் தகுந்த புருஷரைப் புனர் விவாகம் செய்துகொள்ளலாம்" என்று "இந்தியாவில் விதவைகளின் பரிதாபகரமான நிலைமை' என்ற கட்டுரையில் உறுதிபடக் கூறுகிறார். இவ்வாறு துணிந்து கூறிய பாரதியார் தமது பாடலில் இக் கொடுமையைச் சாடாது விட்டதுதான் வியப்பாக வுள்ளது!

எனினும் பாரதியின் வழித்தோன்றலாகிய பாரதிதாசன், பாரதியார் விட்ட குறையைத் தொட்டு நிறைவு செய்துவிடுகிறார். ஆனால், பாரதிதாசன் வழிவந்த கவிஞர் கூட்டம் அந்த நெறியில் தொடர்ந்து செல்வதைக் காண இயலவில்லை.

பாவேந்தர் பாரதிதாசன் கைம்மையைப் பற்றிப் பாடும் பொழுது அப் பெண்களின் நிலைக்கு இரங்குகின்றார், உணர்ச்சி வயப்படுகின்றார்; அதற்கு அரண்களாக நிற்பவற்றை, தடைகளாக இருப்பவற்றை வெகுண்டெழுந்து சாடுகின்றார்; கைம்மைப் பெண்களின் சார்பில் வழக்கறிஞராக நின்று வாதிடுகின்றார்; துணிந்தெழுந்து மறுமணமும் செய்துவைக்கின்றார்.

*"கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே - இங்கு*
*வேரிற் பழுத்த பலா - மிகக்*
*கொடியதென் றெண்ணிடப் பட்டதண்ணே - குளிர்*
*வடிகின்ற வட்ட நிலா"*

இஃது ஓர் ஆண் மகனை விளித்துக் கூறப்பட்டதாக இருப்பினும் குமுகாயத்தை நோக்கிக் கூறப்பட்டதாகவே கொள்ளுதல் வேண்டும் 'ஏ,

குமுகாயமே கைம்பெண்களின் நிலைமையைக் கண் விழித்துப் பார்! வேரிலே பழுத்துக் கிடக்கும் இனிய பலாக்கனி, வேண்டுவார் அற்று வீணே கிடப்பதைப் பார்! குளிர்ச்சி நிறைந்த முழுநிலவு, கொடியது என எண்ணப்படு வதைப் பார்! என்று உசுப்பிவிடுகிறார். துயரந் தோய்ந்த இளகிய நெஞ்சிலிருந்து பொங்கி வெளிப்படும் நெட்டுயிர்ப்பு நம் செவியில் விழுகிறது.

தென்றல் உலவும் பூஞ்சோலை சீரற்றுக் கிடக்கிறது. நறிய பூமாலை "சீ" என்றிகழப்படுகிறது. நல்ல கனி நாடத்தகாதது என்றொதுக்கப்படுகிறது. எழில் வீணையின் இசை நஞ்சென்று வெறுக்கப்படுகிறது. பொன்முடி, சூடப்படாமல் மண்ணிற் கிடக்கிறது. தேன் நிறைந்த பொற்குடம் தொடத் தகாததென்று கூறப்படுகிறது. இந்த நாட்டிலே இளங் கைம்பெண்களின் நிலை,

*"இவ்வித மாக இருக்குதண்ணே - இதில்*
*யாருக்கும் வெட்கமில்லை!"*

என்று உணர்ச்சியற்றுக் கிடக்கும் குமுகாயத்தைச் சாடுகின்றார், சாடிய கவிஞர், அக்குமுகாயத்துக்கு வேண்டுகோளும் விடுக்கின்றார்.

இன்பவுணர்வு சுரக்கின்ற இளைய நெஞ்சங்களைக் கைம்மை என்ற குப்பையை இட்டுத் தூர்க்காதீர். அவ்விளமை ஒரு கொழு கொம்பினை நாடும் பொழுது, சாத்திரங்களைச் சான்று காட்டித் தடைகள் செய்யாதீர் எனக் கெஞ்சுகின்றார்.

*'காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே கெட்ட*
*கைம்மையைத் தூர்க்காதீர் - ஒரு*
*கட்டழகன்திருத் தோளினைச் சேர்ந்திடச்*
*சாத்திரம் பார்க்காதீர்'-*

என்று கெஞ்சும் முறையில் பணிந்து நின்று கூறுகிறார். எவ்வளவு எடுத்தெடுத்துக் கூறினும் கேளாச் செவியினராகிக் கிடக்கின்ற மக்களையே காணுகின்றார்; மனம் வெதும்புகின்றார்; நிமிர்ந்து நின்று நாட்டையே திட்டுகின்றார்,

*"புண்படைத்த என்நாடே கைம்மைக் கூர்வேல்*
*பொழிகின்றாய் மங்கையர்மேல்; அழிகின்றாயே"*

என்று. கைம்மையைப் பெருகவிட்டால் நாடு அழிந்துவிடுமே என ஏங்குகின்றார்.

*“கைம்மை எனக் கூறி - அப்பெரும்*
*கையினிற் கூர்வேலால்*
*நம்மினப் பெண்குலத்தின் - இதய*
*நடுவிற் பாய்ச்சுகின்றோம்”*

என்று, பெண்கள் நெஞ்சிலே, கைம்மையென்ற வேலைப் பாய்ச்சிப் புண்படுத்துகின்றோமே நாம் என்று “கைம்மைக் கொடுமை’ என்ற தலைப்பிற் பாடி வேதனைப்படுகின்றார்.

ஏழு வயதுச் சிறுமி அவள், அப் பெண் மகளின் இளமையைப் பாவேந்தர்

*“கூவத் தெரியாக் குயிலின் குஞ்சு,*
*தாவாச் சிறுமான், மோவா அரும்பு”*

என அழகாகக் குறிப்பிடுகின்றார். ஆனால், அக் குஞ்சு அச் சிறுமான், அவ்வரும்பு திருமணமாகிப் பின் ‘தாலியறுத்துத் தந்தையின் வீட்டில்’ இருக்கிறாள். தந்தையோ தன் மனைவியை இழந்து, மறுமணஞ் செய்து கொண்டு, இன்ப விளையாட்டு விளையாடு கின்றான். இக்காட்சிகளைக் காணுகிறது, அக் கூவத் தெரியாத குயிலின் குஞ்சு. அக் குஞ்சு தந்தையின் எதிரிற் சென்றால், நீ போ என்று புருவம் நெறிக்கின்றான். இந் நிலையில் அக்குழந்தையின் மனக் குமுறலை - வடிக்கும் கண்ணீரைக் “ குழந்தை மணத்தின் கொடுமை” என்ற தலைப்பில் வடித்துக் காட்டுகிறார்.

கணவனையிழந்த தன் மகளைக் கண்டு தாயொருத்தி வருந்திக் கூறுவதாகக் ‘கைம்பெண் நிலை’ என்னும் பாடலில் நம் கவிஞர் தமது வருத்தத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறார். ‘கண்போற் காத்து வளர்த்த என் மகள் இந் நிலையடைந்தாளே! மணமகன் பிண மகனானான். அதனால் அவள் கைம்பெண் ஆனாள். இனி அவள், திலகமோ குழலில் மலர்களோ அணியின் உலகமே வசைகள் பலவும் புகலுமே! இவள் யார் வீட்டுக்குச் சென்றாலும் தீச் சகுன மென்று காணக் கூசுவரே! மேலும் ஏசுவரே! தரையிற் படுத்தல் வேண்டும்; உண்டி சுருங்கல் வேண்டுமே! மறுமணம் புரிவது சிறுமையென்று கூறுகிறார்களே! அவ்வாறு கூறுவது குறுமதி யென்றும் அறிஞர்கள் கூறுகிறார்கள்’ என்று புலம்பும் தாய்மனத்தில் மகளுக்கு மறுமணம் செய்தல் வேண்டு மென்ற துணிவை அரும்பச் செய்கிறார் கவிஞர்.

ஒருத்தியும் ஒருவனும் கருத்தொருமித்த காதலர்களாக இல்லறம் நடாத்திவரும் பொழுது, கணவன் நோய்வாய்ப்படு கின்றான். அப்பொழுது அவன் அவளை அழைத்து, "இன்பத்தின் எல்லை தேடி, நாம் நலம் நுகருங்கால், எனக்கு இக் கொடிய நோய்வந்துவிட்டதே! என் மனத்தில் ஓர் எண்ணந் தோன்று கின்றது. அதனை இப்பொழுதே உன்னிடம் சொல்லிவிடுகின்றேன், இனி, நான் பிழைப்பதரிது. பிணியால் நான் இறந்துவிடின் நீ கைம்பெண்ணாக இருந்து வருந்தாதே. வைதிகத்தைப் பொருட் படுத்தாதே. உன் விருப்புக் குரியான் ஒருவனை நாடி மணஞ் செய்துகொள். ஊர் தூற்றுமேயென்று கருதாதே. நின் பகுத்தறி வால் குணம், குற்றம் ஆய்ந்தறிந்து நட, அச்சம் தவிர், துயர் கடப் பாய், துணை பிடிப்பாய்" என்று கணவனே மறுமணத்துக்குக் கதவு திறந்து விடுவதாக 'இறந்தவன் மேற்பழி' என்ற பாடலாற் கவிஞர் கடைதிறப்புச் செய்கிறார்.

"கைம்மைத் துயர்' என்னும் பாடலில், அத் துயர் கண்டு, கலங்கி, வெதும்பி, ஆற்றாது இவ்வுலகினரைச் சாடுகிறார். "கைம் பெண்டிர் துயர் காண்பதற்குக் கண்ணிழந்தீரோ? அன்றிக் கருத்திழந்தீ ரோ? மணவாளன் இறந்துபடின் மங்கை நல்லாள் யாது செய்வாள்? அவளை ஆலைக் கரும்பாக்கி, உலக இன்பம் அணுவளவும் அடையாமல் சாகச் செய்கிறீர்களே! மனைவி யிழந்த குமரன் மீண்டும் மணம் செய்துகொள்கிறான். ஆனால், பெண்ணை மட்டும் கைம்பெண்ணாக்கி வதைக்கலாமோ? பெண்ணுக்கொரு நீதி கண்டீர்! பேதமெனும் மதுவையுண்டீர்! உலகோரே கண்ணில் ஒன்றைப் பழுது செய்தால் உலகம் உம்மைக் கான்று உமிழாதோ?" என்று சீறுகிறார்.

மறுமணம் என்றால் எத்தனை தடைகள் விதிக்கின்றீர்? அணை கடந்தால் உங்கள் தடை எந்த மூலை? என்று வினவிய பாவேந்தர், பெண்ணைப் பார்த்து மறுமணத்துக்குத் துணிந்து புறப்படு என அறைகூவல் விடுகின்றார். 'கைம்மை நீக்கம்' என்ற பாடலிலே. இப் பாடல் கைம்பெண் ஒருத்தியைக் காதலித்த ஒருவன் கூறுவதாக அமைந்தது. இதோ அப்பகுதி.

*"பைந்தமிழைச் சீராக்கக்*
*கைம்மையெனுஞ் சொல் நீக்கப்*
*பறந்து வாடி அழகிய மயிலே"*

என்றும்.

*"கைம்மை கூறும் அதிசய மனிதர்கள்*
*செம்மை யாகும்படி செய மனது வை"*

என்றும் கூறி, அப்பெண்டிர்க்கு எழுச்சியூட்டுகிறார். எழுச்சி கொண்ட மாதர் துணிச்சல் கொண்டு கைம்மைத் துயர் துடைக்க வழி காண்பாராகுக.

✪✪✪

# 11
# தமிழின்பம் தனி இன்பம்

வள்ளுவப் பெருந்தகை, தமிழ் இன்பம் எத்தகையது என்பதை ஓர் உவமை வாயிலாக விளக்கிக் காட்டுகிறார். பழகப் பழகப் பண்புடையாளர் தொடர்பு எப்படிப்பட்ட இன்பம் தரும்? படிக்கப் படிக்கச் சிறந்த நூல்கள் தரும் உள்ளார்ந்த இன்பம் போலப் பழகப் பழகப் பண்புடையாளர் தொடர்பு இன்பம் தரும் என்று கூறுகிறார். முதல்முறை படிக்குங்கால் ஒருவகையின்பம்; மறுமுறை படிக்குங் கால் வேறுவகையான இன்பம்; அடுத்தமுறை படிக்குங்கால் அதனினும் சிறந்த இன்பம். இவ்வாறு பயிலப் பயிலப் புதுப்புது இன்பம் வளர்ந்து கொண்டே இருக்கும்.

*"நவில்தொறும் நூல்நயம் போலும், பயில்தொறும்*
*பண்புடையாளர் தொடர்பு"* *(குறள் - 783)*

'தமிழ்விடுதூது' எனப் பெயர்தாங்கிய இனிய நூலொன் றுளது. அதன் ஆசிரியர் அந் நூலுள் ஓரிடத்தில்,

*"இருந்தமிழே உன்னால் இருந்தேன் - இமையோர்*
*விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"*

என்று கூறுகிறார். இமையோர் விருந்தமிழ்தம் எல்லார்க்கும் கிடைப்ப தன்று; எளிதாகவும் கிடைப்பதன்று; சாவா மருந்தெனப் புகழப் படுவதும் ஆகும். 'அந்த அமிழ்து கிடைப்பினும் அதனை நான் விரும்பேன்' என்று கூறுகிறார். ஏன்? அதனினும் சிறந்த தமிழ் இருக்கிறது; அதனாலேயே நான் உயிரோடிருக்கிறேன் என்று கூறுவ தால் தமிழ்தரும் இன்பத்தின் மேன்மையைத் தெள்ளிதின் உணரலாம்.

தமிழ், தமிழ் என்று பலமுறை அடுக்கியடுக்கிச் சொல்லிப் பார்த்தால் அமிழ்து அமிழ்து என்று ஒலிக்கும். ஆகவே தமிழ் இனிமையானது; இன்பந் தரவல்லது என்பது புலனாகும். இதன் இனிமையையும் இன்பத்தையும் உணர்ந்தமையாலேதான் நம் பாரதியார்.

*"தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்*
*ஈங்கமரர் சிறப்புக் கண்டார்"*

என்று பாடுகின்றார். தமிழை அமுதென்றும் அதன் சுவையறிந் தோர் அமரர் போல வாழ்வர் என்றும் கூறுகின்றார். "தமிழுக்கும் அமுதென்று பேர்" எனப் பாவேந்தர் பாரதிதாசனும் கூறுகிறார்.

*"ஆயுந் தொறுந்தொறும் இன்பந்தருந்தமிழ்"*

என்று பிறிதொரு சான்றோர் மொழியும் உண்டு. தமிழ் இன்பம் தரவல்லதுதான். எனினும் ஆயுந்தொறும் ஆயுந்தொறும் புதுவகை யான இன்பம் தரும் என்கிறார்.

ஏட்டுச் சுவடிகளை அலைந்தலைந்து, தேடித் தேடித் துருவி ஆராய்ந்து பழம்பெரும் நூல்களைப் பதிப்பித்து, அச் செல்வங்களை நமக்களித்து மகிழ்ந்து, தமிழ்த்தாத்தாவெனப் போற்றப்பட்ட உ.வே. சாமிநாதையர் அவர்கள், தாம் பதிப்பித்த பதிற்றுப்பத்து என்னும் நூலின் முகவுரையில் தமிழ்நூல்களால் தாம் பெற்ற இன்பத்தைக் குறிப்பிடுகின்றார். "இத்தகைய நூல்களோடு பழகு கையில் எனக்கு ஊக்கமும், உலகத்தை மறந்து விடும் நிலையும் உண்டாகின்றன. நூலை விட்டு என் கண்களை எடுத்து நோக்கினால் உலகமும் என் தளர்ச்சியும் புலனா கின்றன" எனக் குறிப்பிடுகின்றார். உலகை மறந்துவிடும் நிலை எப்பொழுது ஏற்படும்? இன்பக் களிப்பில் திளைக்கும் பொழு தன்றோ? தளர்ச்சி எப்பொழுது நீங்கும்? மகிழ்ச்சிப் பெருக் காலன்றோ? தமிழ் இன்பந்தரும் இயல்பினது; துன்பந் துடைக்க வல்லது என்பதை மெய்ப்பிக்க இதனினும் சிறந்த சான்று வேறுளதோ?

நாலடியாரும் இவ்வின்பத்துக்கு நல்லதொரு சான்று நவில் கின்றது. மேலுலக இன்பம் சிறந்ததா? தமிழின்பம் சிறந்ததா? என்றால் தமிழின்பம்தான் சிறந்தது என்று அறுதியிட்டுக் கூறுகின்றது. உலக மக்களெல்லாம் மேலுலக இன்பந்தான் சிறந்தது என்பரே என்றால், தமிழின்பத்தினும் அது இனியது என்றால் மேலுலக இன்பத்தைப் பின்னர்ப் பார்க்கலாம் என்று விடை தருகிறது நாலடி.

குற்றமற்ற நூற்கேள்வி உடையவரும் தம்முடை பகை யில்லாத வரும் கூர்த்த மதியினரும் ஆகிய தமிழ்ச் சான்றோருடன் கூடி உரையாடி மகிழ்வதனாற் பெறும் இன்பத்தைவிட மேலுலக இன்பம் இனியது என்றால் பிறகு அதனைப் பற்றிக் கவனிக் கலாம் என்று கூறுகின்றது.

*"தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்*
*இகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ*
*நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்(து)*
*உம்ப ருறைவார் பதி"*

என்னும் நாலடியார்ப் பாட்டு இக் கருத்தைக் கூறுகிறது.

பட்டினப்பாலை என்பது பத்துப்பாட்டுள் ஒரு பாட்டு. இது கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்ற புலவர், கரிகாற் பெரு வளத்தானைப் பாடிய பாட்டு. இதன் பொருட்டு மன்னன், புலவருக்குப் பதினாறு கோடிப் பொன் பரிசிலாகத் தந்தனன், இச் செய்தி

*"பாடியதோர் வஞ்சிநெடும் பாட்டால் பதினாறு*
*கோடிபொன் கொண்டது நின் கொற்றமே"*

என்னும் தமிழ்விடுதூது என்னும் நூலால் அறியப்படுகிறது.

*"பாடிய பாக்கொண்டு பண்டு பதினாறு*
*கோடி பசும்பொன் கொடுத்தோனும்"*

என்று சங்கரசோழன் உலா என்னும் நூலும்,

*"தத்துநீர் வரால்குருமி வென்றதும்*
*தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்*
*பத்தொடு ஆறு நூறாயிரம் பெறப்*
*பண்டு பட்டினப் பாலை கொண்டதுமே"*

எனக் கலிங்கத்துப்பரணியென்ற நூலும் இச் செய்தியை எடுத்துப் போற்றுகின்றன.

ஒரு நூலுக்குப் பதினாறு கோடி பொன் பரிசாகத் தந்தனன் அம் மன்னன் என்றால், அத் தமிழ் அவனுக்கு எத்தகைய இன்பந் தந்திருக்கக் கூடும். அந்த இன்பப் பெருக்கன்றோ அவனைப் பெருங் கொடைஞன் ஆக்கியுள்ளது.

பட்டினப் பாலை என்னும் அச் சீரிய நூல், சோழநாட்டின் கண்ணமைந்த ஊரொன்றில் எழுப்பப்பட்ட பதினாறு கால் மண்ட பத்தில் அரங்கேற்றப்பட்ட பெருமையுடையது.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் முன்பகை காரணமாகச் சோழ நாட்டின்மீது படையெடுத்துச் சென்றான். பொருது வெற்றியுங் கொண்டான். அவ் வெற்றிச் செருக்கால் ஊரைப் பாழ் படுத்த ஆணையிடுகிறான். படைவீரர் பாழ்ச்செயலில் ஈடுபடு கின்றனர். பெரும் பெரும் மாளிகைகள் தரைமட்டம் ஆக்கப்படு கின்றன. அதனைக் கண்டு, மாறன் வெற்றி வெறிகொண்டு நகைக் கின்றான். ஆனால், ஓரிடத்துக்கு வந்ததும் அவனது வெறி விலகு கிறது. ஆணவச் சிரிப்பு அடங்குகிறது. "அதோ அந்த மண்டபத்தை ஒன்றுஞ் செய்யாதீர், அப்படியே விட்டுவிடுங்கள்" என்று ஆணையிடு கின்றான்.

அவ்வாணையைக் கேட்ட வீரர்கள் திகைத்து நிற்கின்றனர், வேந்தன் ஏன் இப்படித் திடீரென மாறினன் என வியப்புடன் அவனை நோக்கினர். "வீரர்களே, அது பட்டினப்பாலை என்னும் நூல் அரங்கேற்றப்பட்ட பதினாறுகால் மண்டபம்; அதனை பழுதுபடுத்திவிடாதீர்" என விழியில் ஒளி வீசப் பேசினான்.

பாண்டியன் பகை மறந்தான்; வெறி விடுத்தான்; தமிழை நினைந்தான்; அத்தமிழ் அரங்கேறிய இடம் அவன் கண்ணெதிரில் தோன்றியது. அது தூய்மை வாய்ந்த இடம், வழிபடற்குரிய இடம் என்று எண்ணினான். அதனை மாசுபடுத்துதல் தகாது எனக்கருதினான். ஆதலால், அம் மண்டபத்தைப் பேணுக என்றனன். தமிழ், சோழனுக்கு மட்டும் உரியதன்று, நமக்கும் உரியது; அதனால் அது எங்கிருந்தாலும் வாழ்தல் வேண்டும்; மதிக்கப்படுதல் வேண்டும் என்று எண்ணினான். இதனால் மாறன் தமிழின்பாற் கொண்ட பற்றும் தமிழின்பாற் கண்ட இன்பமும் நமக்குத் தெரி கின்றன. அதுமட்டுமன்று; நமக்குப் பாடமாகவும் அமைகிறது, அவன் செயல். பகைமை காரணமாக நமக்குப் பொதுவான ஒன்றை இழந்துவிடுதல் கூடாது என்னும் பாடந்தான் அது.

இம் மாறனுடைய செயலைத் திருவெள்ளறைக் கல்வெட்டி லுள்ள 'வெறியார் தளவத் தொடைமாறன்' எனத் தொடங்கும் பாடல் நமக்கு உணர்த்துகிறது. அப்பாடலில்,

> *"பறியாத தூணில்லை, கண்ணன்செய் பட்டினப்*
> *பாலைக்கு, அன்று*
> *நெறியால் விடுந்தூண் பதினாறு மேசுங்கு*
> *நின்றவே"*

என்ற பகுதி மண்டபம் காக்கப்பட்ட செய்தியைத் தெரிவிக் கின்றது.

*"பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப்*
*பசுங் கொண்டலே"*

எனக் குமரகுருபரரும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழிற் கூறுகிறார். திருமழிசை யாழ்வாருடைய பாடலைக் கேட்டதும் திருமால் தமது பைந்நாகப் பாயைச் சுருட்டிக்கொண்டு ஆழ் வாருக்குப் பின்னே ஓடுகிறார். அவருக்குப் பின்னே அவர் துணைவியார் திருமகளும் தொடர்கிறார். தமிழுக்குப்பின் திருமால் ஓடக் காரணமென்ன? அத் தமிழ் தந்த இன்பமன்றோ? தமிழின்பம் ஆண்டவனை ஆட்டிப் படைக்கவல்லது; அரசரை ஆட்கொண்டு தன்வயப்படுத்த வல்லது. அடியவரை அகங் களிக்கச் செய்யவல்லது; மக்களுக்குக் களிப் பூட்டிச் சோர்வகற்றித் தென் பூட்டவல்லது.

✪✪✪

# 12

# பார் போற்றும் தமிழர் நாகரிகம்

தமிழர் நாகரிகம் உலகிலே உயர்ந்தது; தொன்மைச் சிறப்பு டையது; பாராட்டத்தக்க பாங்குடையது என்றெல்லாம் வரலாற் றாளர் குறிப்பிடுவர். அரசு, மன்பதை, குடும்பம் என வகுத்துக் கொண்டு, அவற்றின் நாகரிகக் கோட்பாடுகளாகப் பண்டை இலக்கியங்கள் கூறுவனவற்றைக் காண்போம்.

முதலில் நாகரிகம், பண்பாடு இவற்றின் வேறுபாட்டைத் தெரிந்து கொள்வது சாலச் சிறந்தது. நகரமைப்பு, இல்ல அமைப்பு, தெருவமைப்பு, உடை, உணவு முதலியன சிறப்புற அமைந் திருப்பது நாகரிகம் எனப்படும். உள்ளம், எண்ணம், ஒழுகலாறு முதலியன சிறப்புற அமைவது பண்பாடு எனப்படும். நாகரிகம் புறத்தைப் பொறுத்தது; பண்பாடு அகத்தைப் பொறுத்தது. எனினும் நாகரிகம் என்னும் சொல், அகத்தின் செயலையும் புறத்தின் செயலையும் சுட்டும் பொதுச் சொல்லாக வருதலும் உண்டு. இக் கட்டுரையில் அச் சொல் பொதுச் சொல்லாகவே குறிப்பிடப் படுகிறது.

பண்டைக் காலத்தே அரசு எத்தகைய நாகரிகக் கோட்பாடு களைக் கொண்டிருந்தது எனக் காண்போம்.

> *“நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே*
> *மன்னர் உயிர்த்தே மலர்தலை உலகம்”* (புறம்-186)

என மோசிகீரனார் என்னும் புலவர், உலகத்துக்கு அரசன் உயிரா வான் என்று நுவல்கின்றார். உயிரானது தான் உறையும் உடலுக்குத் தீங்கு செய்யக் கருதாது. அதுபோல அரசன் உலகுக்குத் தீங்கு செய்யக் கருதாது காத்தல் வேண்டும் என்பது கருத்து. உடலியக் கத்துக்கு உயிர் இன்றியமையாது வேண்டப் படுவது போல உலக இயக்கத்துக்கு மன்னன் இன்றியமை யாதவன் என்னும் உயரிய கோட்பாடு அக் காலத்தே நிலவி வந்துள்ளது.

கம்பன் பாடலில் ஈடுபாடு கொண்டோர் சிலர். புறநானூற்றுக் கருத்தை இக் காலத்தே எள்ளி நகையாடுவதுண்டு. கம்பன் அரசனைக் குறிப்பிடுகையில் ‘உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்’ எனக் குறிப்பிடுவான். அரசனை உடம் பாகவும் மக்களை உயிராகவும் குறிப்பிடுகின்றான். கம்பன் பற்றாளர், இதனை எடுத்துக்காட்டி, “புறநானூற்றுக் கருத்தைப் புறங் கண்டனன் கம்பன், புரட்சி செய்துவிட்டான் கம்பன்” என்று பெருங்குரலெடுத்துப் பேசுவர். இதிலென்ன புரட்சி கண்டனரோ? தெரியவில்லை! புறநானூறு, மன்னனை உயிர் என்றது. கம்பனோ உடம்பு என்றனன். உடம்புக்குத் தீங்கு செய்யாது உயிர். உடம்பும் உயிருக்குத் தீங்கு செய்யாது. அவ்வாறே மன்னனும் மக்களும் ஒருவர்க் கொருவர் தீங்கு செய்யக் கருதக் கூடாது என்பது கருத்து. உயிருக்கும் உடம்புக்கும் ஏற்றத்தாழ்வில்லை. அதுபோல அரசனுக்கும் மக்களுக்கும் ஏற்றத் தாழ்வில்லை. உயிரும் உடம்பும் இணைந்தால் மாந்தன். அரசனும் மக்களும் இணைந்தால் நாடு. ஒன்றின்றி மற்றொன்றில்லை. மோசிகீரனாரும் கம்பரும் ஒத்த கருத்தினரே. மன்னன் மக்களுக்கும், மக்கள் மன்னனுக்கும் இன்றியமையாதவர் என்பது கருத்து.

கம்பனடியார்கள் கூற்றின்படி கம்பன் கருத்தைப் புரட்சியென்று ஒத்துக் கொண்டாலும் கம்பனுக்கு முன்பே சாத்தனார் தமது மணிமேகலைக் காப்பியத்தில் இக் கருத்தை வெளிப் படுத்திவிட்டார். ஆதலால், அப் பெருமை சாத்தனார்க் குரியதே யன்றிக் கம்பனுக்குரியதன்று.

மணிமேகலையின்பாற் காமங்கொண்ட உதயகுமரன், அவளைப் பற்றிய எண்ணம் மீதூர அமளியின் மிசைப் பொருந்தா திருந்தான். அவன் முன்தோன்றிய மணிமேகலா தெய்வம் அவனுக்கு அறிவுரை புகல்கிறது. “மன்னனே, தவத்திறம் பூண்ட மணிமேகலையின் மேல் வைத்த உன் எண்ணத்தை ஒழித்துவிடு. ஒழித்திலையேல்,

*“மன்னுயி ரெல்லாம் மண்ணாள் வேந்தன்*
*தன்னுயிர் என்னும் தகுதி யின்றாகும்”* *(து.எ.காதை)*

என்று அத்தெய்வம் மொழிகிறது. இவ் வரிகளில் மன்னனை உடம்பாகவும் மக்களை உயிராகவும் கூறுகிறார் சாத்தனார். ஆதலின், அப்புரட்சிக் கருத்துக்குரியர் யாவரென எளிதின் அறியலாம்.

பண்டைய முடியாட்சியை இன்றைய முற்போக்காளர் சிலர், கொடிய ஆட்சியெனக் குறைகூறுதலும் உண்டு. குடி யாட்சியில் மக்களைப் பற்றிய கவலையில்லாது கோலோச்சு வோர் பலராயினர் என்பதை நடுவுநிலையாளர் நன்குணர்வர். பண்டைய மன்னன் நன்னன் என்பான் ஒருவன் மட்டுமே பழிக்கப்படுகின்றானே தவிர, மற்றையோர் மக்கள் நலத்திற் கண்ணுங் கருத்துமாக இருந்தனர் என்பதை நம் பண்டைய இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன. ஒன்றிரண்டு கூறுகின்றேன்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன், இளம் பருவத்திலே அரசுக் கட்டிலேறினான். அப்பொழுது பகையரசர் இவன் மேல் படையெடுத்தனர். அதனை யறிந்த பாண்டியன் சீறியெழுந்து, வஞ்சினம்(சபதம்) கூறுகிறான். "என்னை இளையன் எனக் கருதிப் படையெடுத்த பகைவரைத் தோற்றோடச் செய்யே னாகின்,

*"என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது,*
*கொடியன் எம்இறை யெனக் கண்ணீர் பரப்பிக்*
*குடிபழி தூற்றுங் கோலேன் ஆகுக"* (புறம் - 72)

என்று குறித்துள்ளான் என்றால் குடிமக்கள் நலங்காக்கும் கொள் கையில் பண்டை மன்னர் கொண்டிருந்த அக்கறை நினைந்து நினைந்து பாராட்டத் தக்கதன்றோ?

கோவலன் கள்வனென்று கருதிக் கொலைத் தண்டனை விதித்தது தவறென வுணர்ந்த பாண்டியன் உடனே உயிர் நீத்த செய்தியைச் சாத்தனார் உரைக்கக் கேட்க செங்குட்டுவன் வருந்தி,

*"மழைவளம் கரப்பின் வான்பே ரச்சம்*
*பிழைஉயிர் எய்தின் பெரும்பே ரச்சம்*
*குடிபுர வுண்டும் கொடுங்கோ லஞ்சி*
*மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்*
*துன்ப மல்லது தொழுதக வில்"*

எனக் கூறுகிறான். மன்னர் குடிப்பிறத்தல் தொழத்தக்கதன்று; துன்பம் நிறைந்தது; அஞ்சி யஞ்சி வாழுந் தன்மையது என்று அரச வாழ்வை வெறுத்துப் பேசுகின்றான். மன்பதை காக்கும் பொறுப் புணர்ச்சியில் அன்றைய முடியாட்சி அக்கறை காட்டியது என்பதை

மேற்கூறியவற்றால் நாம் நன்கு உணர்கிறோம். குடியாட்சியில் கோலோச்சுவோர் மக்கள் நலனில் எவ்வளவு அக்கறை காட்டு கிறார்கள் என்பதையும் நாம் உணர்கிறோம். முடியாட்சியாயினும் குடியாட்சியாயினும் கோலேந்திகளின் மனப் பக்குவத்தைப் பொறுத்துதான் ஆட்சி மதிக்கப்படுகிறது. மக்கள் நலனில் அக்கறை கொண்டோர் சிலரே. தம் நலனில் அக்கறை கொண்டோர் பலர்.

இனி, மன்பதை அஃதாவது சமுதாயம் எவ்வாறிருந்தது என்பதைக் காண்போம். கோப்பெருஞ் சோழன் வடக்கிருக்கும் செய்தியறிந்து, அவனைக் காணப் பிசிராந்தையார் என்ற புலவர் பெருந்தகை செல்கின்றார். அவரைக் கண்ட சான்றோர் அவரை நோக்கி, யாண்டு பலவாகியும் உமக்கு நரையில்லையே! உமக்கு இஃது எவ்வாறு வாய்த்தது? என வினவினர். அவர் அந்நிலை பெற்றமைக்குப் பல காரணங்கள் கூறுகிறார்.

*"ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்*
*சான்றோர் பலர்யான் வாழும் ஊரே"* (புறம்-191)

என்று இறுதியாகக் கூறுகிறார். சான்றோர் பலர் வாழும் ஊர் என்னுடைய ஊர். அதனால் அவருடன் பழகி மகிழ்ச்சியாக இருக்கிறேன். அம்மகிழ்ச்சிப் பெருக்கால் நரையின்றி இளமை யுடன் இருக்கிறேன் என்கிறார். இதனால், பண்டை நாளில், எல்லாரும் இன்புற்றிருக்க நினைவதுவே அல்லாமல் வேறொன்ற றியாச் சான்றாண்மை மிக்க சமுதாயமாக விளங்கியதை அறிந்து கொள்கிறோம்.

பிசிராந்தையார் கூறுங் காரணங்களுள் மற்றொன்றும் குறிப் பிடத்தகுந்தது. "வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும்" என்பது அது. வேந்தன் அல்லவை செய்யமாட்டானாம். நல்லவை செய்து காப்பானாம். இதனால் பண்டைய அரசியல் நாகரிகத் தையும் அறிய முடிகிறது.

பண்டைய நாளில் நம் சமுதாயம் நாகரிகத்தின் உச்சியில் மின்னிப் பொலிந்ததை "உண்டாலம்ம இவ்வுலகம்' என்று, கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி பாடிய புறநானூற்றுப் பாட லொன்று அழகுற எடுத்துக்காட்டுகிறது. அப் பாடற் கருத்தைக் கொண்டு பண்டைய மன்பதை நாகரிகம் எத்தகையது என்று தெரிந்து கொள்ளலாம்.

"சாவா மருந்தெனப்படும் அமிழ்தமே கிட்டினும் தனித் திருந்து உண்ணார்; யாரோடும் வெறுப்பில்லாதவர், பிறர் அஞ்சு வதற்கு அஞ்சிச் சோம்பியிரார்; புகழுக்காகத் தம்முயிரையும் ஈவர்; பழியெனின் உலகம் முழுவதும் பெறினும் கொள்ளார்; மனக் கவலை யில்லாதவர்; தமக்கென முயலார்; பிறர்க்கென முயலுவர்; இத் தன்மையர் உண்மையால் இவ்வுலகம் இருக்கிறது" என்று கூறுவ தால் அம் மன்பதையின் பேருள்ளம் கண்டு வியக்கின்றோம்.

இனி, பண்டை நாளிற் குடும்ப வாழ்க்கை எவ்வாறிருந்தது என்பதைக் கூறுகிறேன். திருமணமான ஆடவன், தான் உழைத்து அறஞ்செய்து, தானும் உண்பானே அன்றிச் சோம்பி இரான். ஏதேனும் ஒரு தொழில் செய்து இல்லறம் செவ்வனே நடைபெற முயலுவன். தொழிலை உயிராகக் கருதி ஓம்புவன். மனைவி, கணவனே உயிரெனக் கொண்டு, மனைத்தக்க மாண்புடையளாகி, இல்வாழ்க்கை நடத்துவள், இக் கருத்தைக் குறுந்தொகையில் பாலை பாடிய பெருங்கடுங்கோ,

*"வினையே ஆடவர்க் குயிரே, வாணுதல்*
*மனையுறை மகளிர்க்கு ஆடவர்உயிர்"* *(குறுந். 135)*

என்ற பாடலால் விளக்கிக் காட்டுகிறார்.

கூடலூர்கிழார் என்ற புலவர் மற்றொரு குடும்பத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறார். செல்வ மகளொருத்திக்குத் திருமணம் ஆயிற்று. அவள் கணவனுடைய இல்லம் சென்றாள். அவ்வூர்க்குச் செவிலித்தாய் சென்று, அத் தலைவி குடும்பம் நடத்தும் பாங்கை நேரிற் கண்டு வந்து, அதனை நற்றாய்க்குக் கூறுவதாகப் புலவர் பாடுகிறார். முற்றிய தயிரைப் பிசைந்து கொண்டிருக்கிறாள் அச் செல்வமகள். அப்பொழுது அவள் உடுத்திருந்த தூய ஆடை நழுவுகிறது. தயிர் படிந்த விரல்களைக் கழுவாது, அவ்வாடையைச் சரி செய்துகொண்டு, தன் கண்களில் தாளிதப் புகை பொருந்தத் தானே செய்த இனிய புளிப்பாகரைக் கணவனுக்குப் பரிமாறு கிறாள். கணவன் அதனை இனிது, இனிது என்று கூறிக்கொண்டு உண்ணு கிறான். தலைவி தன் முகத்தில் நுண்ணிய மகிழ்ச்சியைக் காட்டு கிறாள். இப் பாடலால் தலைவி தானே சமைப்பதையும் அவள் உழைப்பைக் கணவன் பாராட்டுவதையும், அதனால் அவள் புன்முரல் செய்வதையும் அக் குடும்பம் அன்பு மயமானது என்பதை யும் அறிந்து கொள்கிறோம்.

முதுமையிலும் தாம் இளமையோடிருப்பதற்குக் காரண மாகப் பிசிராந்தையார், நல்ல சமுதாயச் சூழல் என்றார். அதுமட்டு மின்றி நற்குண நற்செய்கைகளால் மேம்பட்ட என் மனைவியும் என் மக்களும் அறிவுநிரம்பப் பெற்றவர்கள் என்று குடும்ப அமைப்பும் காரணம் என்று கூறுகின்றார்.

நல்ல அரசன், நல்ல குடும்பம், நல்ல சமுதாயம், அதனால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். அம் மகிழ்ச்சிப் பெருக் கால் இளமையோடிருக்கிறேன் எனக் கூறுகிறார்.

இவ்வாறு பண்டை நாளிற் பெருகிக் கிடந்த அரசியல் நாகரிகத்தையும் மன்பதை நாகரிகத்தையும் குடும்ப நாகரிகத் தையும் நம் பண்டைய இலக்கியங்கள் எடுத்துக்காட்டுவதால் வரலாற்றாசிரியர்கள் தமிழ் நாகரிகம் உலக நாகரிகத்தின் தொட்டில் என்று கூறுகின்றனர்.

✪✪✪

**13**

# புலவர் உள்ளம்

முற்போக்காளர் என்று தம்மை விளம்பரப்படுத்திக் கொள் வோர் சிலர், பண்டைப் புலவரை எள்ளி நகையாடு தலுண்டு. அப்புலவர்கள் இரந்து வாழ்ந்தோர், அதற்காக மன்னரைப் புகழ்ந்து திரிந்தோர் என்றெல்லாம் இகழ்ந்து பேசியும் எழுதியும் வருதலைக் காணுங்கால் நெஞ்சம் வெதும்பும். அதனால், அப்புலவர் பெருமக்கள் எள்ளலுக்கும் இகழ்ச்சிக்கும் உரியவர்தாமா? அவர்தம் உள்ளம் எத்தகு சிறப்பு வாய்ந்தது, பெருமிதம் வாய்ந்தது, அகன்று விரிந்து பரந்தது, இரங்கியருளுந்தன்மையது என்பதற்குப் பல சான்றுகள் உள.

பண்டைப் புலவர்கள் இரந்து வாழ்ந்தோர்தாம், எனினும் அவ் வாழ்க்கைக் காகத் தகுதியிலாரைப் புகழ்ந்து பாடாதவர்கள். தம் நிலையினின்றும் தாழ்ந்துவிடாத பெருந்தன்மையுடையவர்கள்; அடிமை மனப்பான்மையற்றவர்கள், உரிமைப் போக்கும் தன்மான உணர்வும் கொண்டவர்கள்; தவறு காணின் மன்னனா யினும் இடித்துரைக்கும் இயல்பினர். முற்போக்காளர் கூறுவது போல இகழ்ச்சிக்குரிய ரல்லர். புகழ்ச்சிக்கும் பராவுதற்கும் உரியர். புலவர் பெருமக்கள் நாட்டின் சொத்தாக அக்காலத்தே கருதப்பட்டனர். அதனால் மன்னர்கள் அவர்களைக் காப்பது தம் கடமையெனக் கருதினர். புலவர் உள்ளமும் பொருள் தேடும் முயற்சியில் ஈடுபடாது தமிழாய் வதிலும் பாடல் புனைவதிலும் ஈடுபட்டிருந்தது. தம்மை நினைந்தவர் தமிழை மறப்பர்; தமிழை நினைந்தவர் தம்மை மறப்பர். அதனால் வேண்டும்பொழுது மன்னரிடம் சென்று உரிமையுடன் பரிசில் வேண்டுவர். மன்னரும் மனமுவந்து வேண்டுவன ஈவர். அஃதன்றி இகழ்வுக்குரிய இரவலராகப் புலவர் வாழ்ந்தாரல்லர்.

வன்பரணர் என்னும் புலவர் பெருமான் கண்டீரக் கோப் பெருநள்ளியை நோக்கிப் பாடுகிறார். "நள்ளி! நீ எம்மனோர்க்கு வேண்டுவன தந்து காத்தலால், தகுதியில்லா மன்னரைப் புகழ்ந்து பாட விரும்பி, அவர் செய்யாதனவற்றைச் செய்ததாகச் சொல்லா எம்முடைய நா" என்று கூறுகிறார்.

*"பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்*
*செய்யா கூறிக் கிளத்தல்*
*எய்யா தாகின்று எம்சிறு செந்நாவே"* (புறம். 148)

இதுதான் அவர் கூறிய பாடல். இப் பாடலில் 'எம் சிறு செந்நா' என்ற பகுதிதான் பாராட்டுக்குரியது. எம் நா, பொய் கூறாது என்பதைச் 'செந்நா' எனப் பெருமையாகக் குறிப்பிடுகிறார். இவ்வாறு கூறுவதால் தற்புகழ்ச்சியாகி விடுமோ என்பதால் 'சிறு நா' என அடக்கமாகக் குறிப்பிடுகிறார். இத்தகு புலவர் இகழ்ச்சிக் குரியவரா?

பரிசில் கடாநிலை என்பது புறத்துறையுள் ஒன்று. அஃதாவது தனக்கு இன்ன பரிசில் வேண்டும் என ஒருவனிடம் வேண்டுவது. அத் துறையமைப்பில் பெருஞ்சித்திரனார் என்ற புலவர், குமணன் என்ற வள்ளலிடம் பரிசில் வேண்டுவதாகப் பாடுகிறார். "குமண, என் குடும்பமே வறுமையில் வாடுகிறது; அக் குடும்பமும், வறுமை யில் வாடும் என் சுற்றமும் மகிழும்படி பெரும் பரிசிலைத் தரினும் முகம் மாறித் தருவதாயின் அப் பரிசிலைக் கொள்ளேன்; யான் இன்புற நீ மகிழ்ந்து விரைந்து தந்தால், அது குன்றிமணி யளவின தாயினும் மகிழ்ந்து. ஏற்றுக் கொள்வேன்" எனப் புறநானூற்றில் 159ஆம் பாடலில் கூறுகிறார். மகிழ்ந்து தந்தால் தினைத்துணை யாகினும் கொள்வேன். விருப்பமின்றித் தரின் பனைத்துணை யாகினும் கொள்ளேன் என்று கூறும் புலவர் எள்ளலுக்குரியவரா? பரிசிலுக்கு ஏங்கித் திரியும் இயல்பினரா?

மேலும் பெருஞ்சித்திரனார், குமணனிடம் எத்தகு பரிசில் வேண்டுகிறார்? வறுமையில் வாடும் அவர், வறுமை நீங்கப் பொருள்தானே வேண்டுதல் வேண்டும். அதனை விடுத்து, மற்றொன்று வேண்டுகிறார். "குமண, வேந்தர் நாணும்படியாக யான் களிற்றின் மீது ஊர்ந்து செல்லும் விருப்புடன் உன்னை நாடி வந்துள்ளேன்" என்று கூறுகிறார்.

*"உயர்மருப் பேந்திய வரைமருள் நோன்பகடு*
*ஒளிதிகழ் ஓடை பொலிய, மருங்கில்*
*படுமணி இரட்ட ஏறிச் செம்மாந்து*
*செலல்நசைஇ உற்றனன் ............*

*..................................................*
*வேந்தர் நாணப் பெயர்வேன்"* (புறம் - 161)

களிற்றின் மேற் செம்மாந்து செல்ல வேண்டுமாம்; வேந்தர் நாணச் செல்ல வேண்டுமாம். வேந்தர் நாணும்படி, செம்மாந்து செல்ல விரும்பும் புலவர், எவ்வாறு இகழ்ச்சிக்கு உரியராவர்? சற்றேனும் எண்ணிப் பார்த்தல் வேண்டாவா?

பானையிற் சோறின்றி வறுமையில் வாடிய புலவர், பரிசிலாக யானை வேண்டியது ஏன்? பெருஞ்சித்திரனார் குமணனிடம் வரும் முன்னர், வெளிமான் என்பானிடம் பரிசில் பெறச் சென்றார். அவன் துயின்று கொண்டிருந்தமையால், 'பரிசில் கொடு' எனத் தன் இளவலிடங் கூறினான். அவன் சிறிது கொடுக்கிறான். புலவர் அதனைக் கொள்ளாது சென்றுவிடுகின்றார். சிறிது கொடுப்பின் கொள்ளாப் பெருந்தன்மையையும், தன் பெருமிதத் தையும், பெரிது கொடுப்போர் உலகத்தில் உண்மையையும் வெளிமானுக்கு உணர்த்த வேண்டுமென்னும் நோக்குடன் யானைப் பரிசில் வேண்டுகிறார் புலவர். குமணனும் தந்துவிடுகிறான். அதனைப் பெற்று வந்து, வெளிமானுடைய காவல் மரத்திலே கட்டிவிட்டுக்

*"கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த*
*நெடுநல் யானை எம்பரிசில்"* (புறம்-162)

எனக் கூறிச் சென்றுவிடுகிறார். காவல் மரம் என்பது பகையரசர் அணுகாதவண்ணம் காக்கப்படும் மரம். அக் காவல் மரத்தில் 'எமது பரிசிலாக இவ் யானையை வைத்துக் கொள்' என்று கட்டிவிட்டுச் சென்ற புலவரா இகழ்ச்சிக்குரியவர்?

குமணன், யானையொடு வேறு பரிசிலும் தந்து விடுத்தான். அப்பரிசிற் பொருளைப் பெற்று வந்த பெருஞ்சித்திரனார் யாது செய்தனர்? தம் வறுமை நீங்கிற்று; இனி மகிழ்ந்திருப்போம் என்றா எண்ணினார்? அன்று, அன்று. தம் மனைவியை அழைத் தார். "மனைகிழவோயே! குமணன் தந்த இச் செல்வத்தை, உன்னை விரும்பும் மகளிர்க்கும், உன்னால் விரும்பப்பட்ட மகளிர்க்கும், உன் சுற்றத்து மூத்த மகளிர்க்கும், நமது பசி நீங்க நெடுநாள் நமக்கு உதவியோர்க்கும் கொடு; இன்ன தன்மையர் என்று கருதாது கொடு; என்னொடும் சூழாது கொடு; நாம் நன்கு வாழ்வோம் என்று காத்து வையாது கொடு; நீயும் கொடு; நானும் கொடுப்பேன்" என்று வள்ளலாகிவிடுகிறார் புலவர். இத்தகு பேருளங் கொண்டோரை இகழ்ந்து பேச எவ்வாறு துணிகின்றதோ அந்த முற்போக்காளர் நெஞ்சம்!

பெருஞ்சித்திரனார் ஒருமுறை அதியமான் நெடுமான் அஞ்சி யிடம் பரிசில் கருதிச் சென்றார். அவன் அவரையழைத்து உரையாடி அவர்தம் கல்விப் பெருமையறிந்து பரிசில் நல்காது, பரிசில் மட்டும் மற்றவர் வாயிலாகத் தந்துவிடுத்தனன். புலவர் அதனை ஏற்றுக் கொள்ளாது,

*"காணாது ஈத்த இப்பொருட்கு யானோர்*
*வாணிகப் பரிசிலன் அல்லேன்"* (புறம் 208)

எனத் துணிந்து மறுத்து விடுகிறார். இப் புலவர் பெருந்தகைக்குப் பரிசில் முதன்மையன்று; தன்மதிப்பே முதன்மையாகும்.

கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் என்ற புலவர், குராப் பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனிடம் பரிசில் வேண்டிச் செல்கிறார். வளவன் விரைந்து பரிசில் தாராது காலம் நீட்டித்தான். அப்பொழுது சினந்து அவனிடம் அவர் கூறுகிறார், "மன்னா, நாற்படையுடைய வேந்தராயினும் அவர் எம்மை மதியாவிடின், அவரை மதித்து வியந்து யாமும் பாடமாட்டோம். சிறிய ஊரையுடைய மன்னராயினும் எம் பெருமையறிந்தொழுகும் பண்புடையோரை யாம் வியந்து பாராட்டுவோம். யாம் எத்துணைத் துன்பம் உறினும் சிறிதும் அறிவில்லாருடைய செல்வத்தை நினை யோம். அறிவுடை யோரது வறுமையை யாம் உவந்து மதிப்போம்" எனத் துணிந்து கூறுகிறார்.

*"மிகப்பேர் எவ்வம் உறினும், எனைத்தும்*
*உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்;*
*நல்லறி வுடையோர் நல்குரவு*
*உள்ளுதும் பெருமயாம் உவந்து நனி பெரிதே"* (புறம்-197)

இத்தகு துணிவாளர்களா பரிசிலுக்காகப் பல் காட்டுவார்கள்? தன்மான மிக்க இப்புலவர் பெருமக்களையா இகழ்ந்து பேசுவது?

புலவர் பெருமக்கள் இரந்து வாழும் இயல்பினராகினும் தம் உரிமையையோ தன்மானத்தையோ விட்டுக் கொடுக்காத இயல்பினர். மன்னவன் உயர்ந்தவன்; நாம் தாழ்ந்தவர் என எண்ணாதவர். மன்னரை யொத்த பெருமிதம் உடையவர். அரசர்க்கு அறிவுரை கூறும் அஞ்சா நெஞ்சினர். இப் பண்பு வாய்ந்தோர் பண்டைப் புலவர் என்பதற்குச் சில எடுத்துக் காட்டும் கூறுவேன்.

பிசிராந்தையார் என்ற புலவர் பெருந்தகை பாண்டியன் அறிவுடை நம்பியிடம் செல்கின்றார். சென்றவர் அவனைப் புகழ்ந்து பாடினார் அல்லர். வரி எவ்வாறு தண்டுதல் வேண்டும் என்று அறிவுரை பகர்கின்றார், செவியறிவுறூஉ என்னும் துறைய மையப் பாடுகின்றார்.

"மன்னவனே, ஒருமாவுக்குக் குறைந்த நிலத்தில் விளைந்த பயிராயினும் கவளம் கவளமாகக் கொள்ளின் யானைக்குப் பல நாளைக்கு உணவாகும். நூறு செய்யாக இருப்பினும் யானை தனித்துப் புக்கு உண்ணுமாயின், அதன் வாயுட் புகும் உணவை விட அதன் கால்கள் கெடுக்கும் உணவு மிகுதியாகும். அவ்வண்ணமே அறிவுடைய அரசனும் வரி கொள்ளும் நெறியறிந்து கொள்ளின் அவனும் நாடும் தழைக்கும். அவ்வாறின்றித் தானும் சுற்றமும் விரும்பியபடி மக்கள் உளம் வருந்த வரி கொள்ளின் யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான்; நாடுங் கெடும்" என்ற பேருண் மையை அவனுக்கு அறிவுறுத்துகிறார். அரசன் அருளை நாடி, அவனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெறும் நோக்கம் மட்டும் அவர் கொண்டிருந்தால் அறிவுரையா கூறியிருப்பார்?

குடபுலவியனார் என்ற புலவர் பாண்டியன் நெடுஞ்செழியனை நோக்கி, "நீ இவ்வுலகிற் சிறந்த அரசனாக விளங்க விரும்பினும், நல்ல புகழை இவ்வுலகில் நிலைநாட்ட விரும்பினும் ஒன்று கூறுவேன் கேள். மக்கள் உயிர்வாழ உணவு வேண்டும்; அவ்வுணவுப் பயிருக்கு நீர் வேண்டும். ஆதலின், அந் நீரை நிலங் குழிந்த விடத்தே தேக்கி வைக்க அணைகளைக் கட்டு. அவ்வாறு செய்யின் நின் புகழ் நிலைக்கும். செய்யாவிடின் புகழ் நிலைக்காது" என அறிவுறுத்துகிறார். இதனால், மன்னர்க்கு நல்லன கூறி அறிவுறுத்தும் இயல்பினர் அக் காலப் புலவர் என்பது புலனாகிறது. மன்னர் தவறு செய்துழி, ஆண்டுத் தோன்றித் தவறு செய்யாது தடுத்துத் திருத்தியுள்ளனர் புலவர் என்பதற்கும் பல சான்றுகள் உள்ளன.

அக்கால மன்னர்கள் புலவர்களை மதித்தனர். அதனால், அவர்கள் மொழியும் அறிவுரைகளைத் தலைமேற் கொண்டு போற்றி நடந்தனர். புலவர்களை மதித்து நடந்தனர் பண்டைய மன்னர்கள் என்பதை ஒரு மன்னன் கூற்றிலிருந்தே குறிப்பிடுகின் றேன். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மேற் பகைவர் படையெடுத்தனர். இதனை அறிந்த நெடுஞ் செழியன்

வஞ்சினங் கூறுகிறான். எப்படி? "நான் பகைவரை வென்று வாகை சூடேனாகின், மாங்குடி மருதன் முதல்வனாகப் புலவர் பலரும் என் நிலத்தைப் பாடா தொழிக" எனக் கூறுகிறான் என்றால் அக்கால மன்னர், புலவர் மாட்டு எத்தகைய மதிப்பும் அன்பும் வைத்திருந் தனர் என்பது புலனாகின்றதல்லவா?

மோசிகீரனார் என்ற புலவர் பரிசில் பெறுதல் வேண்டிக் காடும் மலையுங் கடந்து, தகடூர் எறிந்த பெருஞ் சேரலிரும் பொறையைக் காண வருகிறார். அரண்மனைக்குள் களைப்புடன் நுழைகிறார். உள்ளே முரசுகட்டில் முரசமின்றிக் காணப்பட்டது. களைப்பின் மிகுதியால் அதன்மீது அமர்கிறார். கண்ணயர்ந்து விடுகிறார். முரசு கட்டில் வழிபடற்குரியது: எவரும் அதில் அமர்தல் கூடாது. எனினும் புலவர் அயர்ந்துவிடுகிறார். ஆங்கு வந்த அரசன் அதனைக் காணுகிறான். புலவர் எனத் தெரிந்ததும் மன்னன் சினவாது, அவர் துயில் எழும்வரை கவரிகொண்டு வீசி நிற்கிறான். விழித்தெழுந்த புலவர், வியந்து மன்னனை நோக்கி, "மன்னவா, முரசு கட்டிலில் அறியாது ஏறிய என்னை வாளால் வெட்டாது விடுத்த ஒரு செயலே, நீ தமிழ் முழுதறிந்தமைக்குப் போதுமானது"

*"அதனொடும் அமையாது, அணுக வந்து நின்*
*மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தண்ணென*
*வீசியோயே"* *(புறம். 50)*

என்று பாடுகிறார். இதனால் புலவர் மாட்டு மன்னர் வைத்திருந்த மதிப்பை நன்குணரலாம்.

அக்காலப் புலவர் உள்ளம் எத்தகு பெருமிதம் வாய்ந்தது என்பதையும் எவ்வளவு இரங்கியருளும் தன்மையது என்பதையும் மற்றப் புலவரை மதிப்பது என்பதையும் காண்போம். இளந் தத்தன் என்ற புலவன் நலங்கிள்ளியிடமிருந்து உறையூர்க்கு வருகின்றான். ஆண்டிருந்த காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி, அப் புலவன் ஒற்று வந்தானென்று கருதிக் கொலைத் தண்டனை விதிக்கிறான். இதனையறிந்த கோவூர் கிழார் என்பார் புலவர்தம் இயல்பினைக் கூறி, இளந்தத்தனைக் காப்பாற்றிவிடுகிறார். "வேந்தே, புலவர்கள், பெற்றது கொண்டு மகிழ்பவர்; சுற்றத் தார்க்கும் உதவுபவர்; ஓம்பாது உண்டு மகிழ்பவர்; மனங் கூம்பாது வழங்குபவர்; இத்தகையோரது பரிசில் வாழ்க்கை, நும்மோரன்ன செம்மலும்

உடைத்து நண்ணார் நாண அண்ணாந் தேகி இனிது ஒழுகினல்லது பிறர்க்குத் தீங்கு செய்யாதது" என்று கூறுகிறார்.

"வள்ளியோர்ப் படர்ந்து" (புறம். 47) என்று தொடங்கும் கோவூர் கிழார் பாடலால் பண்டைப் புலவர்தம் உள்ளம், பெற்றது கொண்டு மகிழ்வது, பிறர்க்கு உதவுவது, செம்மல் உடையது, அண்ணாந்து ஏகுவது, இனிது ஒழுகுவது, பிறர்க்குத் தீங்கு செய்யாதது என்னும் உண்மைகளை உணர்ந்து கொள்ளலாம். இத்தகுதி வாய்ந்த புலவர் வணக்கத்திற்குரியரே அன்றி, இகழ்வுக்குரியரல்லர் என்பதையும் தெரிந்துகொள்ளலாம். தம்மை நினைந்து தமிழை மறந்தவர் தாம் இகழ்வுக்குரியரா கலாம். அவரைப் புலவர் எனப் புகல்வதும் பொருந்தாது.

✪✪✪

**14**

# மங்கல வாழ்த்து

புகாரில் கோவலன் கண்ணகிக்கு நிகழ்ந்த நிகழ்ச்சியைப் புகார்க் காண்டம் எனவும், மதுரையில் நிகழ்ந்த நிகழ்ச்சியை மதுரைக் காண்டம் எனவும், வஞ்சியில் நிகழ்ந்த நிகழ்ச்சியை வஞ்சிக் காண்டம் எனவும், சிலப்பதிகாரம் மூன்று காண்டங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளதை யாவரும் அறிவர்.

புகார்க் காண்டத்தில் முதற் பிரிவு மங்கல வாழ்த்துப் பாடல் என்பதாகும். அதன் தொடக்கத்தில் வாழ்த்தும் வணக்கமும் என்ற பகுதியில் சோழன் வெண்கொற்றக் குடைபோல் உலகளித் தலால் திங்களையும், அவன் திகிரி* போல் மேருமலையை வலம் வருவதால் ஞாயிற்றையும், அவன் அளிபோற் சுரத்தலால் மாமழையையும், அவன் குலத்தோடு உயர்ந்து விளங்கலால் புகாரையும் போற்று கிறார் ஆசிரியர்.

திங்கள், ஞாயிறு, மழை, புகார் இவற்றைப் போற்றுவ தோடு, சோழன் ஆட்சிச் சிறப்பையும் புகழ்ந்து கூறுகிறார்.

வானத்துச் சுடர் இரண்டையும் கூறுங்கால் ஞாயிற்றை முதலிலும், திங்களை இரண்டாவதும் கூறுவது மரபு. ஆனால் இளங்கோவடிகள் திங்களை முதற்கண் வைத்தும் ஞாயிற்றை இரண்டாமிடத்தில் வைத்தும் முறைமாற்றிக் கூறுகிறார். அவ்வாறு கூறக் காரணம் யாது? என நோக்குதல் வேண்டும்.

காப்பியந் தொடங்கும்பொழுது முதலில் மங்கலச் சொல் வருதல் வேண்டும் என்பது காப்பிய மரபு. ஆதலின் ‘இத்தொடர் நிலைச் செய்யுட்குச் சிறந்த மங்கல மொழியாகலின் திங்களை முதற் கூறினார்’ என அடியார்க்கு நல்லார் உரைப்பர். இஃது ஒருபுற மிருக்க நாம் வேறுவகையாற் பார்ப்போம்.

பொதுவாகத் தன்னேரில்லாத் தலைவன்தான் காப்பியத்துள் முதன்மை பெறுவது வழக்கம். அவ் வழக்கத்துக் கேற்பச் சிலப்பதி

---

* திகிரி - ஆணை

காரத்தில் கோவலன் முதன்மை பெறுதல் வேண்டும். ஆனால், அவனுக்கு முதன்மை தரப்படவில்லை. ஏன்? அவன் தன்னேரில்லாத் தலைவனாகப் படைக்கப்படவில்லை. ஈகையாலும், அழகாலும், தோற்றத்தாலும் மேற்பட்டவனாக அவன் காட்சியளிப்பினும் ஒழுக்கக் கேடனாகப் படைக்கப்பட்டுள்ளான். ஆகவே, அவனுக்கு முதன்மை தாராது தன்னேரில்லாத் தலைவியாகிய கண்ணகிக்கே சிலம்பில் முதன்மை தரப்பட்டுள்ளது.

கண்ணகிக்குத்தான் முதன்மை தரப்பட்டுள்ளது, என்பது எவ்வாறு தெரிகிறது? கண்ணகியின் பெற்றோரும் கோவலன் பெற்றோரும் கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் செய்து வைக்க விரும்புகிறார்கள் என்றவிடத்து,

*"மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்*
*ஈகைவான் கொடியன்னாள் ஈராறாண் டகவையாள் - வரி 23*

*மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்*
*காதலாள் பெயர்மன்னும் கண்ணகியென் பாள்மன்னோ" - வரி 28*

என மங்கல வாழ்த்துப் பாடலில் கண்ணகியை முதலிற் கூறுகிறார் ஆசிரியர்.

*"வருநிதி பிறர்க்கார்த்தும் மாசாத்து வானென்பான்*
*இருநிதிக் கிழவன்மகன் ஈரெட்டாண் டகவையான்" - வரி 33*

*கண்டேத்தும் செவ்வேள்என் றிசைபோக்கிக் காதலாற்*
*கொண்டேத்துங் கிழமையான் கோவலன் என்பான்" - வரி 38*

எனக் கோவலனை அதே மங்கல வாழ்த்துப் பாடலில் இரண்டாவதாகக் கூறுகிறார். மேலும் மனையறம்படுத்த காதையில், கண்ணகியும் கோவலனும் கட்டிலின் மீதமர்ந்தனர் என்பதைக்

*"கயமலர்க் கண்ணகியும் காதற் கொழுநனும்*
*மயன்விதித் தன்ன மணிக்கால் அமளிமிசை*
*நெடுநிலை மாடத் திடைநிலைத் திருந்துழி" - வரி 11*

என்று கண்ணகியைத்தான் முதலிற் கூறிக் கோவலனை இரண்டாவதாகக் கூறுகிறார். இவ்வாறு தொடக்கத்திலேயே மங்கல வாழ்த்துப் பாடலிலும் அடுத்த மனையறம்படுத்த காதையிலும் கண்ணகிக்கே முதன்மை தரப்பட்டுள்ளது.

மேலும், இந் நூல் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றுள்ளது. பெண்கள் காலில் அணியும் அணிக்குச் சிலம்பு என்று பெயர். ஆண்கள் காலில் அணியும் அணிக்குக் கழல் என்று பெயர். நூலின் பெயர்க் காரணத்தை நோக்கும் பொழுதும் பெண்மைக்கே முதன்மை தரப்பட்டுள்ளது என்பது பெறப்படுகிறது.

ஞாயிறு ஆண்பாலாகவும் திங்கள் பெண்பாலாகவும் கூறப் படுவது கவி மரபு. ஆகவே, பெண்மைக்கு முதலிடம் தரும் காப்பியத் தில் மங்கல வாழ்த்துப் பாடலில் பெண்பாலுக்குரிய திங்களை முதலிற் கூறுகிறார். கோவலன் இரண்டாம் நிலையில் வருவது போல ஞாயிறும் இரண்டாம் இடம் பெறுகிறது.

மனையறம் படுத்த காதையில் இளங்கோவடிகள்,

*"முதிர் கடல் ஞாலம் முழுவதும் விளக்கும்*
*கதிரொருங் கிருந்த காட்சி போல"*

கண்ணகியும் கோவலனும் கட்டிலில் இருந்தனர் எனக் குறிப்பிடுகின்றார். இரு கதிரும் ஒரு சேர இருந்தாற் போல இவ் விருவரும் இருந்தனர் என்பது கருத்து. இங்கே அவ்விருவரும் இரு கதிர் எனக் கூறப்படுதலால் கண்ணகியைத் திங்களாகவும் கோவலனை ஞாயிறாகவும் நாம் கொள்ளலாம். ஆகவே, பெண்மை தலைமை பெறுங்காப்பியத்தின் தொடக்கத்தில், ஞாயிறு, திங்கள் என்ற முறை வைப்பை மாற்றித் திங்களை முதற்கண் கூறுகிறார்.

இக் காப்பியம் பெண்மைக்குத்தான் முதலிடம் தருகிறது என்பதற்கு மற்றொரு சான்றும் உளது.

செங்குட்டுவனும் அவன் மாபெருந் தேவியாகிய இளங்கோ வேண்மாளும் அரியணையில் ஒருங்கிருக்குங்கால் சாத்தனார், கோவலன் கொலையுண்டதும் கண்ணகி பாண்டியனிடம் வழக்காடி வென்றதும் உண்மையறிந்த பாண்டியன் உயிர்துறந்ததும் உடனே பாண்டியன் மனைவி பெருங் கோப்பெண்டு கண்ணகியின் துயர் பொறாது உடனுயிர் நீத்ததும் கண்ணகி வஞ்சி நோக்கி வந்ததும் கூறுகிறார். இதனைக் கேட்ட செங்குட்டுவன் கண்ணகி, பெருங் கோப்பெண்டு இவ்விருவருள் வியந்து பாராட்டற் குரியவர் யார் என அறிய விழைகின்றான். அருகில் இருந்த அமைச்சரிடம், எவர் சிறந்தோர் என வினவியிருக்கலாம். அன்றிப் பிறரிடம் வினவியிருக் கலாம். ஆனால், செங்குட்டுவன் அவர்களிடம் வினவினான் அல்லன். தன் மனைவி இளங்கோ வேண்மாளை நோக்கி,

> *"உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினும்*
> *செயிருடன் வந்தஇச் சேயிழை தன்னினும்*
> *நன்னுதல் வியக்கும் நலத்தோர் யார்"*

என்று வினவுகிறான். அவளும் கூர்த்த மதியினள் ஆதலின் அம் மகளிரில் ஏற்ற இறக்கங் கூறாது, திறமையாக விடை பகர்கின்றாள்.

"பாண்டியன் மனைவி தன் கணவன் துன்பம் காணாது கழிந்தனள். அக்கற்புக்கரசி துறக்கத்தில் பெருநிலை பெறுக. நம்நாட்டை நோக்கி வந்த இப்பத்தினிக் கடவுளைப் பரசுவோம்" என்று விடை தருகிறாள். தன் மனைவியின் மனக்குறிப்புணர்ந்த செங்குட்டுவன், கண்ணகிக்குச் சிலையெடுத்துக் கோவிலமைக்க முடிவு செய்தனன்.

செங்குட்டுவன் தன் மனைவியிடம் பெருங்கோப்பெண்டு, கண்ணகி இவ்விருவருள் எவர் சிறந்தவர் என வினவியதாலும், அவள் தந்த மறு மொழியின் குறிப்பையுணர்ந்து அக் குறிப்பை நிறைவேற்றக் கோவிலெடுக்க முயன்றமையாலும் பெண்மைக்குத் தரப்பட்ட முதன்மையை நாம் உணர்கிறோம்.

இம்மங்கல வாழ்த்துப் பாடலில் மற்றொரு செய்தியும் அறிய முடிகிறது. இப்பாடலில் புகாரும், சோழன் வெண்கொற்றக் குடையும், அவன் திகிரியும் அவன் கருணையும் போற்றப்படு கின்றன. இளங்கோவடிகள் நடுவு நிலைமை பிறழாத துறவியாதலின் சோழனைப் போற்றியது போல மதுரைக் காண்டத் தொடக்கத்திற் பாண்டி யனையும், வஞ்சிக் காண்டத் தொடக்கத்திற் சேரனையும் போற்றிப் புகழ்ந்திருத்தல் வேண்டும். இக் காப்பியத்துள் மூவேந்தரும் இடம் பெறுகின்றனர். அதனாற்றான் சாத்தனார், இளங்கோவடிகளை நோக்கி, இக் கதை

> *"முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது*
> *அடிகள் நீரே அருளுக"*

எனக் கூறுகிறார். இளங்கோவடிகள் துறவியாதலின் நடுவுநிலைமை பிறழாது மூவேந்தரையும் ஏற்றத் தாழ்வின்றிக் கூறுவார் எனக் கருதுகின்றார் சாத்தனார். எனினும் பாண்டியனையும் சேரனையும் சோழனைப் போற்றியது போலப் போற்றவில்லை. ஏன்?

காப்பியத்துள் சோழன் எப்பழிக்கும் ஆளாகவில்லை. ஆதலின், அவனைப் போற்றுகிறார். பாண்டியனோ குற்றமற்ற கோவலனைக் கள்வனெனக் கொலை செய்து பழிக்கு ஆளாகி விடுகிறான். ஆதலின்,

பழியுடையானைப் போற்ற விரும்பவில்லை. சேரனோ அடிகளுக்கு உடன் பிறந்தவன். தன் உடன் பிறந்தானை - தன்னாட்டானைப் போற்ற அடிகள் மனம் இடந்தரவில்லை. போற்றினால் தற்புகழ்ச்சி யாகக் கருதப்படும். ஆதலின், அவனையும் விட்டுவிட்டார் எனக் கருதலாம் எனத் தோன்றுகிறது.

இதே மங்கல வாழ்த்துப் பாடலின் மற்றொரு செய்தியையும் எண்ணிப் பார்ப்பது நல்லது.

*"வானூர் மதியம் சகடணைய வானத்துச்*
*சாலி யொருமீன் தகையாளைக் கோவலன்*
*மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்*
*தீவலஞ் செய்வது காண்பார்கண் நோன்பென்னை"*

என்னும் வரிகள் வருகின்றன. கோவலனுக்கும் கண்ணகிக்கும் மதியமானது, சகடென்னும் உரோகிணியைக் கூடும் நல்ல நாளிலே திருமணம் நடந்தது. மாமுது பார்ப்பான் திருமணத்தை நடத்தி வைக்கின்றான்; மறைவழி காட்டுகிறான்; தீவலம் செய்கின்றனர். இவ்வளவு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றும் அம் மணமக்கள் வாழ்க்கை எவ்வாறிருந்தது? மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையாக அமைந்ததா? வாழ்க்கை முழுதும் கண்ணீர் தானே சிந்தினாள் கண்ணகி! பொருள் முட்டுப்பாடும் ஏற்பட்டுச் சிலம்பை விற்கும் நிலை ஏற்பட்டதே! கோவலன் கள்வனென்ற பழிக்கு ஆளாகிக் கொலைத் தண்டனை பெற்றானே! கண்ணகி ஆதரவற்றவளாகி, வேற்று நாடடைந்து மாள்கிறாளே! அவர் களுக்கு ஒரு குழந்தை யாவது பிறந்ததா? ஏன் பிறக்கவில்லை? நல்ல நாள், மாமுது பார்ப்பான், மறைவழி, தீவலம் இவை யெல்லாம் என்னவாயின? அவற்றால் அவர்கள் வாழ்க்கையில் வளமும் மகிழ்வும் மலர்ந் திருக்கக் கூடாதா? என்று சற்றே எண்ணிப் பார்க்க வேண்டும்.

மங்கல வாழ்த்துப் பாடல் மட்டுமன்று; சிலம்பு முழுதும் ஊன்றிப் பயில்வார்க்கு அதன் அருமை பெருமைகளும் இளங்கோ வடிகளின் காப்பியத் திறனும் நன்கு புலனாகும். இதனாலன்றோ கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள்,

*"தேனிலே ஊறிய செந்தமிழின்சுவை*
*தேரும் சிலப்பதிகாரம்"*

என்று பாடினார்.

✪✪✪

# எக்கோவின் காதல்

# முன்னுரை

"தொடக்கத்திலிருந்தே கவிதை எழுதிக் கொண்டிருந்த என்னைக் கதை எழுதுமாறு நண்பர் அறிவழகன் திசை திருப்பி விட்டார். இது 1947ஆம் ஆண்டு நடந்தது; இரண்டாண்டுகள் எழுதினேன். சீர்திருத்தக் கருத்துகளுக்கு வலுவூட்ட வேண்டு மென்று கருதிக் கண்ணெதிரில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையே அடிப்படை யாகக் கொண்டு இக்கதை களைப் புனைந்தேன். பின்னர் இயல் பாகவே என்மனம் விரும்பிக் கொண்டிருந்த கவிதையுலகிற்குத் திரும்பிவிட்டேன். அக்கனவுலகம் ஒரு தனிஇன்பம் தருவதால், அதனை நோக்கியே பயணம் செய்து கொண்டிருக்கிறேன். அன்றிருந்த என்மொழி நடைக்கும், இன்றுள்ள நடைக்கும் உள்ள வேறு பாட்டை நன்குணரலாம்."

மார்ச் 1958 அன்பன்,

முடியரசன்

---

'எக்கோவின் காதல்' என்ற இந்த நூல், 1947-48 ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்ட சிறுகதைகளின் தொகுப்பு ஆகும். வெறுங்கதைகளாக இல்லாமல் சமுதாயச் சீர்திருத்த நோக்கில் புனையப்பட்டவை இவை. இச்சீர்திருத்தச் சிறுகதைகள், அக்காலத்திய இதழ்கள் பலவற்றில் வெளிவந்தவை ஆகும்.

# 1
# எக்கோவின் காதல்

*'ஐயா தபால்!'*

*விரைந்து வந்து வாங்கினான்* **எக்கோ.** *எல்லாக் கடிதங் களையும் படித்துக்கொண்டே வந்தான். ஒரு கடிதத்தை மட்டும் பிரிக்கும் பொழுதே அவன் கண்கள் பளபளவென்று மின்னின. உதடுகள், உள்ளத்திற் பொங்கியெழும் மகிழ்ச்சியைக் காட்டிக் கொண்டிருந்தன. புருவங்களை நெற்றிமேல் ஏற்றிக் கொண்டு, இமைகளைச் சிமிட்டாமல் படித்தான்.*

*அன்புடையீர்! வணக்கம். உங்கள் பேனாவிலிருந்து வரும் ஒவ்வொரு மைத்துளியும் உண்டாக்கும் எழுத்து ஒவ்வொன்றும் முதலாளித்துவத்தைச் சிதறடிக்கும் அணுக்குண்டு! உங்கள் பேனா முனை வைதீகத்தின் மார்பைப் பிளந்தெறியும் கூரிய ஈட்டிமுனை! இத்தனை நாள்களாக உங்கள் கட்டுரைகள் தாம் விறுவிறுப்பு வாய்ந்தன என்று எண்ணியிருந்தேன். ஆனால் உங்கள் கதைகளும் அப்படியே இருக்கின்றன. சமுதாயத்தில் நெளிந்து கொண்டிருக்கும் ஊழல்களை அப்படி அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றனவே உங்கள் எழுத்தோவியங்கள். உங்கள் எழுத்துகள் என் உள்ளத்தை ஈர்த்து விடுகின்றன. இந்தத் தடவை வெளிவந்த 'உடைந்த ஓடு' உங்கள் அறிவின் பரப்பையும் அதன் கூர்மையையும் நன்கு புலப் படுத்துகின்றது.*

*இங்ஙனம்,*<br>
*உங்களிடம் அன்புள்ள,*<br>
*மல்லிகா.*

*இதைப் படித்து முடித்துவிட்டுக் கைகளைத் தலைப் பக்கம் அணையாக வைத்துக் கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து விட்டான்.*

*எக்கோ 'புரட்சி' என்ற இதழில் அடிக்கடி எழுதி வரும் ஓர் எழுத்தாளன். அவனுடைய கட்டுரைகளும், கதைகளும் உயிரோட்ட*

முள்ளவை. அரசியல் பொருளியல் முதலிய துறைகளில் மனிதன் அடிமைப்படுத்தப்பட்டுக் கிடப்பதை எடுத்துக் காட்டி, எதிர் காலத்தில் நாட்டின் நிலை எவ்வாறிருக்க வேண்டும் - அரசியல் எவ்வாறு வகுக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றிக் காரசாரமாக எழுதப்படும் கட்டுரைகளை, அரசியலில் மாறுபட்ட கருத்தினரும் பாராட்டுவர். சமுதாய அடிப்படையில் எழுப்பிய அவன் கதைகள் வைதீக மனப்பாங்கினரையும் இளகச் செய்து விடும். அவன் நடையில் தமிழ் கொஞ்சி விளையாடும். இவன் எழுத்து வன்மை யைப் பாராட்டிப் பாராட்டிக் கடிதங்கள் வந்து குவியும். அப்படிப் பாராட்டி எழுதுபவர்களிலே மல்லிகாவும் ஒருத்தி. அவள் திருச்சிக் கல்லூரியிலே பயின்று கொண்டிருப்பவள். நல்ல அழகும் பண்பும் உடையவள். அவளுடைய பாராட்டுக் கடிதம் தவறாமல் வாரந் தோறும் வந்துவிடும்.

ஒரு முறை அக்கல்லூரிக்கு எக்கோ அழைக்கப் பட்டிருந் தான். அவன் அங்கே சென்று சொற்பொழி வாற்றியதைக் கேட்ட மல்லிகா அவன் தோற்றத்திலும் ஆணித்தரமான பேச்சிலும் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டாள். அதிலிருந்து எக்கோவுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதத் தவறுவதில்லை.

சில நாள்களுக்குப் பிறகு அவளிடமிருந்து வழக்கம் போல் ஒரு கடிதம் அவனுக்கு வந்தது. அதையும் படித்தான்.

அன்புடையீர்! வணக்கம். நான் இத்தனை கடிதங்கள் எழுதியும் ஒரு விடை கூட உங்களிடமிருந்து வரவில்லையே! ஏன்? எழுத நேரமில்லையா? அல்லது என்னைப் புறக்கணிக்கிறீர்களா? புறக் கணித்தாலும் நான் அதைப் பொருட்படுத்தப் போவதில்லை. என்னுடைய குறிக்கோளில் - இலட்சியத்தில் நீங்கள் முக்கிய இடம் பெற்று விட்டீர்கள். உங்களுடைய கொள்கைகளில் எனக்கு மிகவும் நம்பிக்கை இருக்கிறது.

எங்கள் கல்லூரிக்கு ஐந்து நாள்கள் தொடர்ந்து விடுமுறை வருகிறது. அவ்விடுமுறையில் சென்னைக்கு வருகிறேன்.

உங்கள்
மல்லிகா

படித்து முடித்துவிட்டு 'இவள் ஏன் நம்மிடம் வர வேண்டும்! ஒருவேளை நம்மிடம் காதல் கொண்டி ருப்பாளோ!' என்று

எண்ணமிட்டுக் கொண்டே அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந் தான். யாரோ மாடிப்படியில் ஏறிவரும் காலடிச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். அழகிய இளம் பெண்ணொருத்தி சிரித்த முகத்துடன் வந்து கொண்டிருந்தாள்.

வணக்கம் - என்றாள் வந்தவள்.

பதிலுக்கு வணக்கம் செய்துவிட்டு 'அமருங்கள்' என்று சொல்லி இவனும் அமர்ந்தான்.

அவள் நாற்காலியை இழுத்துக் கொண்டே 'என்னை யாரென்று தெரிகிறதோ' என்றாள்.

'எங்கோ பார்த்த நினைவிருக்கிறது'- என்றான் எக்கோ.

'நான்தான் மல்லிகா' - என்று தானே தன்னை அறிமுகஞ் செய்து கொண்டாள் வந்தவள்.

'ஓ, அப்படியா! ஆம்; இப்பொழுதுதான் நினைவுக்கு வருகிறது. நான் உங்கள் கல்லூரியில் பேச வந்த பொழுது முதல் வரிசையில் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்ததை நான் கவனித்திருக்கிறேன்' - என்று பழைய நிகழ்ச்சியை நினைவு படுத்திச் சொன்னான் அவன்.

'நீங்கள் தாய்மொழிப் பற்று வேண்டுமென்று அடிக்கடி எழுதி வருகிறீர்களே, 'எக்கோ' என்று ஏன் பெயர் வைத்துக் கொண்டிருக் கிறீர்கள்?' என்று ஒரு கேள்வியை எழுப்பினாள்.

'நான் தாய் மொழிப்பற்றில் இளைத்தவனல்லன். என் உண்மைப் பெயர் **'எழிற்கோ'** இந்தப் பெயரோடு நான் எழுதி வந்தபொழுது என் எழுத்துகளை மக்கள் வரவேற்கவில்லை; புறக்கணித்தனர்; ஊக்குவிப்பாரும் இல்லை; ஒதுக்கினர். ஒதுங்கியிருக்க என்னால் முடியவில்லை. ஆகவே என் பெயரில் முதல் எழுத்தையும் கடைசி எழுத்தையும் சேர்த்து 'எக்கோ' எனப்பெயர் வைத்துக் கொண்டு எழுதத் தொடங்கினேன். அதன் பிறகுதான் என் எழுத்துக்கு மதிப்பும் புகழும் கிடைத்தன. மக்கள் மனம் இன்னும் 'அடிமையில் மோகம்' கொண்டுதான் இருக்கிறது என்பதைத்தானே காட்டுகிறது இது. இதை யுணர்ந்துதான் 'என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்' என்று கதறியிருக்கிறார் பாரதி '- என்று உணர்ச்சி பொங்க விடையளித்தான் எக்கோ.

அவன் பேச்சிலே சொக்கிப் போயிருந்த மல்லிகா, திடீரென்று எக்கோ பேச்சை நிறுத்தியவுடன் ஒன்றும் பேச முடியாமல் திகைத்து,

ஏதாவது பேசியாக வேண்டுமே என்பதற்காக 'என்னுடைய கடிதங்கள் தங்கட்குக் கிடைத்தி ருக்குமே' - என்று மீண்டும் பேச்சைத் துவக்கினாள்.

'ஆம், கிடைத்தன; இப்பொழுதுகூட உங்கள் கடிதத்தைத் தான் படித்துக் கொண்டிருந்தேன்' - என விடையிறுத்தான்.

'ஏன் என் கடிதங்கட்கு விடை எழுதுவதில்லை?' என்று அவள் கேட்கும்பொழுது உரிமையும் அன்பும் கலந்திருந்தது அந்தக் குரலில். அவள் பார்வையில் சிறிது கூட அச்சமோ நாணமோ தென்படவில்லை. நெடுநாள் பழகியவள்போற் பேசினாள்.

'ம்ம்.......ஒன்றுமில்லை..... எழுத நேரம் இல்லை' - என்று பேச்சை விழுங்கினான்.

இதுதான் சமயம் என்று கருதி 'நேரம் இல்லையா? மனம் இல்லையா? '- என்று குறுக்குக் கேள்வி கேட்டாள்.

'மனம் இருக்கிறது; மனம் என்ற ஒன்று இருப்பதாற்றானே மக்கள் நிலையைக் கண்டு வருந்துகிறது - கொதிக்கிறது என் உள்ளம்.'

'உண்மையில் உங்கள் மனம் மக்கள் நிலையைக்கண்டு கொதிக்கிறதா? அப்படியானால் நானும் மக்களுக்குள் ஒருத்தி தானே! ஏன் என் நிலைக்கு உங்கள் மனம் சிறிதாவது ...' என்று அவள் சொல்லும்போது அவள் முகம் பெரிதும் கலவரம் அடைந்தது போல் காணப்பட்டது.

'என்ன உங்கள் நிலை? யாராயிருந்தால் எனக்கென்ன? நான் மக்களுக்காக - அவர்களுடைய நல்வாழ்வுக்காக என் உயிரையுங் கொடுக்க ஆயத்தமாக இருக்கிறேன். நான் திட்டங் களை மட்டும் தீட்டிக் கொண்டிருக்கும் வெறும் எழுத்தாளன் மட்டுமல்லன்; செயலில் இறங்க வேண்டும் என்று விரும்பு கிறவன். நான் உண்மை யில் **மாக்ஸிம் கார்க்கி**யைப் போன்றவன். இதைத் தற்பெருமை என்று எண்ணிவிட வேண்டாம். அவன் ஒரு சிறந்த எழுத்தாளனாக இருந்த தோடல்லாமல், புரட்சி இயக்கத்தில் பெரிதும் பங்கு கொண்டு பணியாற்றியவன். அவனைப் போலவே நம் நாட்டு எழுத்தாளர் களும் திகழவேண்டும் என்று கனவு காண்பவன் நான். அதனால் உங்கள் நிலையைச் சொல்லுங்கள். உங்கள் பொருட்டு என்னால் இயன்றதை, என் மனமார ...' என்று அவன் முடிக்கு முன்பு இவள் பேசினாள்.

'மனமார - வாயார என்று வெறும் பேச்சாகத் தானே இருக்கிறது. செயலில் ஒன்றும் இல்லையே' என்றாள்.

'என்ன சொல்லுகிறீர்கள்? நீங்கள் பேசுவது ஒன்றும் புரிய வில்லையே! நான் தங்கட்கு விடை எழுதாமல் இருந்ததைக் குறிப்பிடுகிறீர்களா?'

'இதற்குமேல் ஒரு பெண் எவ்வளவுதான் சொல்ல முடியும்? உங்கள் கற்பனையெல்லாம் எழுத்தளவிற்றானா?' என்று சிரித்தாள்.

'உங்கள் எண்ணத்தை - நிலையை இப்பொழுது புரிந்து கொண்டேன். ஆனால், உங்கள் விருப்பம் நிறைவேறுவதென்பது இயலாத ஒன்றுதான்'.

'ஏன் நிறைவேறாது? நான் உங்களுக்கு ஏற்றவளாகத் தோன்ற வில்லையா? அப்படியானால் எங்கள் கல்லூரிக்குப் பேச வந்திருந்த பொழுது என்னையே பார்த்துக் கொண்டி ருந்தீர்களே! அது ஏன்? அந்தப் பார்வையில் எவ்வளவு பொருள்களைப் பொதிய வைத் திருந்தீர்கள்! அதை உண்மை என்று நம்பியல்லவா என் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டேன்' என்று சொல்லும் பொழுது கண்கலங்கி விட்டாள்.

'மல்லிகா! ஆம், அது உண்மைதான்; நான் அன்று உன்னைப் பார்க்கும் பொழுது உன் விழிகளும் என் கருத்தைச் சிதறடித்து விட்டன. அதன் பிறகுதான் என் கதைகளிற்கூட அதிக உயிர்ப்பைக் கண்டேன். என் கற்பனையைக் கிளறி விட்டன உன் கருவிழிகள். ஆனால் என் நிலைக்கு - என் வாழ்வுக்குக் காதல், பொருத்தமாகத் தோன்றவில்லையே! அதனாற்றான் அந்த எண்ணத்தையே விட்டு விட்டேன். நான் திடீரென்று செயலில் - புரட்சியில் குதித்து விடுவேன். அதனால் எனக்குத் தூக்குத் தண்டனை கிடைக்கலாம்; அல்லது என் எழுத்துகள் அரசாங்கத்தின் கண்களுக்கு முட்களாகத் தோன்றுவதால் நான் சிறை செய்யவும் படலாம். இந்நிலையில் உள்ள நான், காதல் நாடகத்தில் பங்கு கொள்ள எப்படி முடியும்?' என்று பரிவுடன் கூறினான்.

'அன்பரே! உங்கள் கருத்தில் - கொள்கையில் எந்த விதத்திலும் சளைத்தவள் அல்லள் நானும். அதனாற்றான் என் கருத்துக்கேற்ற ஒரு வீரனை - செயலாற்றும் தீரனை நான் தேர்ந்தெடுத்தேன். புரட்சியில் ஆடவர்தாம் மிஞ்சுவர். பெண்கள் அஞ்சுவர் என்பது உங்கள் முடிவா? நாடு பிறனுக்கு அடிமையாகக் கூடாது என்ற எண்ணத்தால் தம் கணவன் மாரைப் போர்க்களம் அனுப்பிய

பெண்கள் பிறந்த பொன்னாட்டி லேதான் நானும் பிறந்திருக் கிறேன். அந்தப் பண்பு என்னிடமும் இருக்கத்தான் செய்கிறது; புரட்சி இயக்கத்தில் நானும் உங்களோடு பணியாற்றுவேன். உங்களுக்குக் கொலைத் தண்டனை என்று கேள்விப்பட்டால் நாட்டிற்காக உயிர்கொடுத்த உத்தமன் மனைவி நான் என்று பெருமிதம் அடைவேன். ஆதலால் என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்; என்னால் உங்களுக்கு உங்கள் கொள்கைக்கு ஓர் இடையூறும் வராது' என்று வீரமும் ஏக்கமும் கலந்த குரலில் பேசினாள்.

எக்கோவின் மனம் இளகி விட்டது. தலையைச் சிறிது அசைத்தான். 'ம்ம், சரி' என்று பெருமூச்சு விட்டான்.

அந்த மூச்சு அவளை ஏற்றுக் கொண்டது. அருகில் சென்றாள். கொடி, கொழுகொம்பில் தாவிப் படர்ந்தது. கற்பனைக் குளத்திலே - காதற்கொடியிலே பூத்து மலர்ந்த இரண்டு பூக்கள் ஆனார்கள்.

'மல்லிகா' என்று மெல்லிய குரலில் சொன்னான்.

'எக்கோ' - என்ற சொல் அவள் ஆர்வத்தின் அடித்தளத்தி லிருந்து வந்தது. ' நான் இப்பொழுதுதான் அந்தப் பெயருக்கு பொருத்தமுள்ளவளாக ஆனேன். மல்லிகை மணக்கத் தொடங்கி விட்டாள்' - என்ற சொற்கள் அவள் இதயத்திலிருந்து உருண்டோடி வந்தன.

நான்கு நாள் வெகுவிரைவில் ஓடி மறைந்தன. விடை பெற்றுக் கொண்டு சென்றுவிட்டாள் மல்லிகா.

அவள் சென்ற சில நாளில் அவளிடமிருந்து கடிதம் வந்தது.

புரட்சித் துணைவரே! வணக்கம். நான் வந்ததும் என் அன்னை யிடம் நமது பதிவுத் திருமணத்தைப் பற்றிச் சொல்லி விட்டேன். அவளும் தந்தையிடம் சொன்னாள். இருவரும் முதலில் சிறிது வருத்தப்பட்டாலும் எக்கோ எங்கள் மாப்பிள்ளையா என்று மகிழ்ந்து வியந்தனர்.

நீங்கள், வரப்போகும் பொங்கலுக்கு இங்குக் கட்டாயம் வரவேண்டும். என் பெற்றோரும் விரும்புகின்றனர். ஆதலின் உங்கள் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறோம்.

உங்கள் துணைவி

மல்லிகா

அக் கடிதத்தில் கண்டபடி எக்கோ பொங்கலுக்கு முதல் நாள் சென்னையிலிருந்து திருச்சி வந்து சேர்ந்தான். அவனை எல்லோரும் உள்ளன்புடன் வரவேற்றனர். மல்லிகாவின் தோழிகள் பலபேர் வந்திருந்தனர். எக்கோவைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையால். வந்தவர்களுக்குள் ஒருத்தி, 'மல்லிகா எழுத்தாளர் எக்கோவின் காதலி; இனிமேல் அவளுக்கென்னடி குறைச்சல்! அவள் பேனா முனையில் நடனமாடும் மயில்' என்று கேலி செய்தாள்.

மற்றொருத்தி 'நடனம் ஆடும் மயில் அல்லடி அவள், போராடும் புலி!' என்றாள்.

இவ்வாறு அன்றிரவு வேடிக்கையும் கேளிக்கையுமாகக் கழிந்தது.

காலைக் கதிரவன் செவ்வொளி வீசிக்கொண்டு தோன்றினான். அந்தத் தோற்றம், மக்கள் உரிமைக்குப் போரிட்டு இரத்தந் தோய்ந்த உடலுடன் தோன்றும் வீரனைப் போலக் காட்சியளித்தது. எக்கோவிற்கு அவன் உள்ளத்தில் ஏதேதோ எண்ணங்கள் மோதி மோதிப் புரண்டு கொண்டிருந்தன.

'எழுந்து வாருங்கள் குளிப்பதற்கு; விரைவில் குளித்து விட்டுப் புத்தாடையை உடுத்திக் கொள்ளுங்கள்; பொங்கலும் அதுவுமாக இன்னும் படுக்கையில்....' என்று அழைத்தாள் மல்லிகா.

'பொங்கல்! எனக்கா பொங்கல்! மக்களுடைய சமுதாயத்திலே நல்வாழ்வு - புதுவாழ்வு மலரவேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருக்கும் நானா பொங்கல் விழாக் கொண்டாட வேண்டும்? என் மன அடுப்பிலே மூட்டி விடப் பட்ட புரட்சித் தீயால் என் இரத்தம் பொங்கிக் கொண்டிருக் கிறது. அதுவே போதும். எங்கு நோக்கினும் வறுமை, பொருளியல் அடிமை, சாதிமத அடிமை இவை குடி கொண்டிருக்கின்றன. மனிதன் வாழ்வதற்கு வீடின்றி, விலங் கொடு விலங்காய் வாழ்கிறான் - மடிகிறான். அறியாமை இருள் மூடிக் கவிந்து கொண்டிருக்கிறது. இக்கோரமான காட்சி யைக் கண்டு கொண்டு துடிக்கின்ற உள்ளத்திலே பொங்கலுக்கேது இடம்? 'புரட்சி' இதழில் என்னுடைய கட்டுரையைப் பார்க்க வில்லையா நீ? அவ்வாறு எழுதிய நான் விழாக் கொண்டாடு வதா? மனிதன் எப்பொழுது எல்லா உரிமையும் பெற்று மனித வாழ்வு வாழ்கிறானோ அன்றுதான் என் போன்றவனுக்கு விழா! அதற்காகக் பாடுபடுவதே என் முயற்சியாக இருக்கும். நீ வேண்டுமானால்

விழாக் கொண்டாடு', என்று தன் உள்ள வேதனையை அப்படியே கொட்டிவிட்டான்.

'இதற்காகவா இவ்வளவு பேச வேண்டும்? வேண்டா மென்றால் வேண்டாம். நீங்கள் விரும்பாததை நான் மட்டுங் கொண்டாடவா? இந்தச் சிறு செயலிலே நான் வேறுபட்டால் நான் எப்படித் தமிழ்ப் பெண்களின் புகழை நிலைநாட்ட முடியும்? நானும் போர்க்கோலத் திற்றான் இருக்கிறேன்'- என்று சொல்லிச் சென்றுவிட்டாள்.

அன்று ஒருவருமே பொங்கல் கொண்டாடவில்லை. எப் பொழுதும் போலவே உணவு முறைகள் நடைபெற்றன.

எதையோ எண்ணிக் கொண்டவன் போல விரைவாக மாடியிலிருந்து இறங்கி வந்தான். வந்தவன் ஒரு அறையில் விம்மல் சத்தங்கேட்டு நின்றுவிட்டான்.

'விழாக் கொண்டாடவில்லை யென்று ஒருவேளை மல்லிகா தான் அழுது கொண்டிருக்கிறாளோ' என்று ஐயப்பட்டு மெதுவாகச் சன்னல் வழி உள்ளே கூர்ந்து பார்த்தான். ஓர் இளம் பெண் படுக்கையிற் கிடந்தாள். தலை அவிழ்ந்து கிடந்தது. எளிமையான தோற்றத்தைக் காட்டும் புடவை. நகைகள் இன்றிக் காணப்பட்ட உறுப்புகள்; படுத்த வண்ணமாக விம்மி விம்மி அழுது கொண் டிருந்தாள் அந்தப் பெண். அக்காட்சி அவன் மனத்தை இளக்கி விட்டது. கதவைத் திறந்துகொண்டு தடதடவென்று உள்ளே நுழைந்தான்.

காலடிச் சத்தங்கேட்டுத் திடுக்கிட்டுத் தலையை மட்டும் நிமிர்த்தினாள். செக்கச் சிவந்திருந்த கண்களிலிருந்து சிதறி ஓடின கண்ணீர்த் துளிகள். உதடுகள் படபடத்தன. இதைக் கண்ட எக்கோ, 'நீ யாரம்மா? ஏன் இப்படித் தனித்து அழுது கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டான்.

'அது என் தலைவிதி' - என்று சொல்லிக் கொண்டே விர்ரென்று வெளியே சென்றுவிட்டாள்.

'விதி! மண்ணாங்கட்டி விதி! விதி, விதி என்று சொல்லித் தானே மக்கள் பாதாளத்தில் அழுத்தப்பட்டுக் கிடக்கிறார்கள். இந்த அறியாமை தொலையும் வரை சேற்றில் நெளிந்து திரியும் புழுவாகத் தான் மக்கள் இருக்க முடியும். எப்பொழுது இவர்கள் விடுதலைப் பறவைகளாகப் பறந்து திரியப் போகிறார்களோ!' என்று தனக்கு தானே நொந்து கொண்டு மறுபடியும் மாடிக்குச் சென்றுவிட்டான்.

மல்லிகா, ஏதோ சில தின்பண்டங்களைக் கொண்டு வந்தாள். 'நல்ல சமயத்தில் வந்தாய் மல்லிகா, அந்த அறையில் அழுது கொண்டிருந்த பெண் யார்?'

'அவள் என் தங்கை'

'அவள் ஏன் அழுதாள்?'

'அவள் வாழ்க்கை, பனிப்படலங்களால் சூழப்பட்ட நடுக்க மயமான துன்ப வாழ்க்கை. அதனால் அவள் அடிக்கடி அப்படி அழுதுகொண்டிருப்பாள்'

'எனக்கொன்றும் விளங்கவில்லையே! உன் தங்கை என்கிறாய்! துன்ப வாழ்க்கை என்கிறாய்! குழப்பமாக இருக்கிறது; சற்று விளங்கச் சொல்'

'அவள் விதவை'

'விதவையா?!' வியப்போடு வெளிவந்தது இந்தச் சொல்.

'ஆம், விதவைதான். எனக்குத் திருமணம் வேண்டாம். படிக்க வேண்டும் என்று நான் சொல்லிவிட்டதால் என் தங்கைக்குத் திருமணம் செய்தார்கள். ஆனால் அவள் கொஞ்ச நாளில் தாலியை இழந்தாள். அதிலிருந்து இப்படித்தான்!'

'தாலி! நல்ல தாலி! அந்த அடிமைக் கயிறு கட்டுவ தாற்றானே எத்துணையோ பெண்கள் விதவை என்ற இழிந்த பெயரைப் பெறுகிறார்கள். மக்கள் புரிந்தோ புரியாமலோ மீண்டும் படுகுழியில் விழுந்துகொண்டும், விழச் செய்து கொண்டும் இருக்கிறார்களே! இவர்கள் கண்கள் என்றுதான் திறக்குமோ!' என்று தனக்குத்தானே சொல்லிவிட்டு அவளை நோக்கி 'ஏன் அவளுக்கு மறுமணம் செய்யக் கூடாது' என்றான்.

'செய்ய வேண்டும் என்றுதான் நான் விரும்பினேன். பெற்றோர் விரும்பவில்லை. மேலும் அவளும் சரியாக ஒப்புக்கொள்ள வில்லை!'

'பார்த்தாயா, மனித சமுதாயம் எப்படியிருக்கிறதென்று! உன் வீட்டிலேயே ஒருபுறம் துன்பத்தைத் தேக்கி வைத்துக் கொண்டு மறுபுறம் விழாக் கொண்டாட நினைக்கிறாய்' என்று வருந்திக் கூறினான்.

'என் பெற்றோர்கூட நான் சொன்னவுடன் ஒப்புக் கொண்டார்கள்; இவள் சரியான உடன்பாடு தெரிவிக்க வில்லையே; அதற்கு நாமென்ன செய்வது?' என்றாள்.

'நாமென்ன செய்வதா? நன்றாக இருக்கிறது உன் கேள்வி! வீட்டிலே புரட்சி செய்ய முடியாவிட்டால் நாட்டிலே எப்படிப் புரட்சி செய்ய முடியும்? அவள் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையில் நீ எடுத்துச் சொல்ல வேண்டும்'.

'நீங்கள் தான் இனிச் சொல்ல வேண்டும்'.

'சரி நானே அதற்கு ஏற்பாடு செய்கிறேன்'

அன்று மாலை எக்கோ, மாடியில் கைகளைப் பின்புறமாகக் கட்டிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான். மல்லிகா வெளியிற் சென்றிருந்தாள். அவள் தங்கை மாடிக்கு வந்தாள். வருவதைப் பார்த்ததும், 'வாம்மா! உன்னிடம் சில செய்திகள் சொல்ல வேண்டுமென்று எண்ணி யிருந்தேன். நீயே வந்து விட்டாய்! உன் மறுமணம் பற்றி நான் ...' என்று சொல்லி முடிக்குமுன் குறுக்கிட்டுப் பேசினாள்.

'என் திருமணத்தில் உங்களுக்கு இவ்வளவு அக்கறை இருக் கிறதா?' என்றாள்.

'என்ன அப்படிக் கேட்கிறாய்!' நான் எவரையும் அன்போடு நேசிக்கிறேன். இந்த நாட்டு மக்கள் மட்டுமல்லாமல் - எல்லா நாட்டு மக்களும் தோழர்களாக இருக்க வேண்டு மென்ற கொள்கை யுடையவன். அந்த எண்ணம் எங்கும் பரவி ஒளிவிடவேண்டும் என்று எண்ணி உருகுபவர்களிலே நானும் ஒருவன். அப்படிப் பட்டவன் உன்னிடத்தில் மட்டும் அக்கறை கொள்ளாமல் இருப் பானா?' என்று முடித்தான். அவன் பேச்சில் அன்பு குழைந்திருந்தது.

'அப்படியானால் இதோ இதைப் பாருங்கள்' என்று ஒரு கடிதத்தை அவனிடம் கொடுத்துவிட்டு விரைந்து சென்று விட்டாள். அவன் வியப்புடன் பிரித்துப் பார்த்தான்.

'அன்புடையீர்! முதலில் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். ஒரே கொடியில் இரண்டு அரும்புகள் தோன்றின. ஆனால் ஓரரும்பு மலருமுன் கீழே விழுந்து விட்டது. மற்றொன்று மொட்டாகி - போதாகி - மலராகி - தேன் நிறைந்து மணம் வீசிக் கொடியில் சிரித்துக் கொண்டிருக்கிறது. உதிர்ந்த அரும்பு வாடிக் கொண் டிருக்கும் நிலையில், சிரிக்கும் மலரைக் கண்டு நாமும் ஏன் அப்படியிருக்கக் கூடாது என்று பேராசைப் படுகிறது. பக்கத்தி லிருந்த முல்லை சொல்கிறது. போடி பைத்தியக்காரி உதிர்ந்த பிறகு

நீ எப்படி மலர முடியும்? மனக் கோட்டை கட்டுகிறாயா என்ன? வேண்டுமானால் அதோ இருக்கும் விஞ்ஞானியைக் கேள்! அவர் உதவியிருந்தால் ஒருவேளை மலரலாம்' என்று.

அதன் அறிவுரைப்படி விஞ்ஞானியை அரும்பு மன்றாடி வேண்டுகிறது. விஞ்ஞானியே! உதவும் உள்ளம் உண்டா உம்மிடம்? ஏன்! வெளிப்படையாகச் சொல்லிவிடுகிறேனே.

அக்கா அடிக்கடி உங்களைப் பற்றியே புகழ்ந்து கொண்டிருப் பாள். **'புரட்சி'** எந்நேரமும் அவள் கையில் இருக்கும். நான் உங்கள் எழுத்தோவியங்களை ஆர்வத்துடன் படித்து வருவேன். அப்பொழு தெல்லாம் நீங்கள் என் கண்முன் நின்று கொண்டிருப்பீர்கள். கடைசியில் நீங்கள் எழுதிய **'உடைந்த ஓடு'** என் வாழ்வை அப்படியே படம் பிடித்துக் காட்டியது போல் இருந்தது. உடைந்த ஓடாகிய என்னை ஒன்று சேர்த்து உருப்படுத்த உங்களையே அன்று முடிவு செய்து கொண்டேன். ஆனால் நீங்களோ உடைந்த ஓட்டைக் கவனியாமல் பொற்பாண்டத்திற்கு மெருகு கொடுத்துக் கொண்டிருக் கிறீர்கள். உடைந்து ஓடாகியது என் குற்றமா? அந்த ஓட்டினை ஒன்றுபடுத்த முடியாவிட்டால் இன்னும் இரண்டு நாட்களில் அந்த ஓடு தெருவில் வண்டியின் சக்கரம் ஏறி நூறு சுக்கலாகக் கிடக்கும். இந்த ஓடு இருந்துதான் என்ன பலன்? இது உண்மை.

இங்ஙனம்
உடைந்த ஓடு

எக்கோ படித்து முடித்தான். ஏதோ சொல்ல முயன்றான். அவன் வாயிலிருந்து எந்தச் சொல்லும் வர மறுத்துவிட்டது. தொண்டை கரகரத்தன. ஆனால் அவன் உள்ளம் மட்டும் ஏதோ சொல்லிக்கொண்டுதான் இருந்தது.

'நான் இதற்குத்தானா இங்கு வந்தேன்? இதுதான் பொங்கல் விழாவா? நான் காதல் அளவிலேதானா ஒவ்வொருவர் குறையை யும் நிறை செய்யமுடியும்? என் முக்கிய குறிக்கோள் அதுவன்றே. ஏழ்மையை - அதன் பகைமையாகிய சுரண்டல் தன்மையை ஒழித்துக் கட்டுவது தான் என் குறிக்கோள். காதலே குறிக்கோளாக இருந்தாலும் இருவருக்கும் எப்படிக் காதலைப் பகிர்ந்து கொடுக்க முடியும்? ஐயா! என் உள்ளத்தில் வேதனைப் புயலை எழுப்பிவிட்டுச் சென்று விட்டாளே!' இவ்வாறு உழன்று கொண்டிருந்தது அவன் மனம்.

இரவு, படுக்கையில் இருந்தான் எக்கோ.

'ஏன் இரவு சாப்பிடவில்லை! இந்தப் பாலையாவது அருந்துங்கள்' என்று பாலைக் கொடுத்தாள் மல்லிகா.

படுக்கையிற் சாய்ந்து கொண்டிருந்த எக்கோ அதை வாங்கிக் குடித்தான்.

'ஏன் ஒருமாதிரியாக இருக்கிறீர்கள்?'

'ஒன்றுமில்லை'

மணி பத்தடித்தது. பதினொன்றும் அடித்தது. அவன் அப்படியே சாய்ந்த வண்ணம் என்னென்னவோ எண்ணிக் கொண்டிருந்தான். கடிகாரத்தின் 'டக் டக்' ஒலியைத் தவிர வேறு ஒலியே இல்லை அங்கு. அந்த ஒலி ஒவ்வொன்றும் அவன் சிந்தனையைத் தட்டிக்கொடுப்பது போல் இருந்தது. மல்லிகாவும் அருகில் படுத்திருந்தாள்.

'என்ன! நான் பேசுவதற்கெல்லாம் சரியான பதிலையே காணோமே! உங்கள் மனம் காதல் நீரற்ற பாலைவனமா என்ன?' என்றாள்.

'ஆம், என் உள்ளம் பாலைவனந்தான். மக்கள் வாழ்வு பாலைவனமாய் இருக்கும்வரை என்மனம் வறண்ட நிலந்தான். அங்குக் காதல் நீரேது? இன்பப் பூக்கள்தாம் எப்படி மலர முடியும்? அந்த நிலத்தில் மலரைப்பெற விரும்புகிறாய் நீ!'

'இல்லையில்லை; நீர்வளமிக்க சோலையிலேதான் நான் மலரைத் தேடுகிறேன்'

'நீ நினைப்பது தவறு'

'தவறா? அப்படியானால் என்னை மணந்து கொண்டிருக்க வேண்டாமே' என்று ஊடல் கொண்டவள் போல் விளை யாட்டாகக் கேட்டாள்.

'நானா மணந்தேன்? நீயல்லவா என்னை மணந்து கொண்டாய்! நானே மணந்திருந்தாலும் காதலின்பம் ஒன்றுக்காக மட்டும் மணந்து கொள்ளவில்லையே! புரட்சி இயக்கத்தில் நானும் உங்களோடு பணியாற்றுவேன் என்று நீ சொல்லியதை உண்மை என்று நம்பினேன் அதனால் உனக்குத் துணைவனாகச் சம்மதித்தேன். என் மனத்தில் காதலுக்குத் தலைமையிடங் கொடுத்தால் தியாகத் தீயில்

குதிக்கும் பொழுது என் இதயம் பலமாகத் தடுக்கும். அப்பொழுது என் நெஞ்சைப் பிளந்து இதயத்தை எடுத்து நசுக்கிவிடும் ஆற்றல் என்னிடம் இல்லாமற் போய்விடும். போகவே துரோகி - கருங்காலி யாகி விடுவேன்' என்று அவன் உதட்டிலிருந்து சிதறி வந்தன இந்தப் பொறிகள். அப்பொழுது அவன் முகம் கருத்துக் காணப் பட்டது. கண்கள் சிவந்திருந்தன. கண்ணில் ததும்பிக் கொண்டிருந்த நீர், துளியாக அவள் மேல் விழுந்தது. துளி, நெருப்பெனச் சுட்டது. நிமிர்ந்து பார்த்தாள்.

'என்ன! இதற்காகவா இப்படிப் பேசுகிறீர்கள்! நான் இளம் பெண்தானே. இயற்கை உணர்ச்சியின் வயமாகிவிட்டேன். இதனால் புரட்சி மனப்பான்மை குன்றியா போய்விடும். ஒரு நாளும் என்னை அப்படி எண்ணாதீர்கள், என்னையும் ஒரு 'கொரில்லாப் பெண்' என்று எண்ணிக்கொள்ளுங்கள்.'

பேசிக் கொண்டிருக்கும் பொழுது கீழே கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. யாரோ கதவைத் திறந்தார்கள்.

'எக்கோ இங்குதானே இருக்கிறார்?' என்று வந்தவர் கேட்டார். இது எக்கோவின் காதிலும் விழுந்தது.

'யார் இங்கே வந்து, இந்நேரத்தில் என் பெயரைச் சொல்வது!' என்று சொல்லிக் கொண்டே விரைவாகக் கீழே இறங்கி வந்தான். வந்து பார்த்ததும் திடுக்கிட்டான். அவர்கள் போலீசு உடையில் வந்திருந்தார்கள். எக்கோவைத் தொடர்ந்து வந்த மல்லிகாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவளுடைய பெற்றோர் என்ன நடக்குமோ என்று மலைத்து நின்று விட்டனர்.

'ஏன் என்னைத் தேடுகிறீர்கள்?' என்றான் எக்கோ.

'உங்களைக் கைது செய்ய உத்தரவு வந்திருக்கிறது' என்று கூறினார் போலீசுத் தலைமை அதிகாரி.

'காரணம்?'

'நீங்கள் *'புரட்சி'* என்ற பத்திரிகையில் எழுதிய *'சுடுகாட்டிலே'* என்ற கட்டுரை அரசாங்கத்திற்கு முரணானது. அதனால் உடனே கைது செய்யும்படி உத்தரவு வந்துள்ளது' என்று அரசாங்க ஆணை யை நீட்டினார்.

அதைப் பார்த்துவிட்டு, 'ஓ, அப்படியா! தயார், புறப் படுங்கள், வருகிறேன்' என்று புறப்பட்டான்.

மல்லிகா ஓவென்று அலறி விட்டாள். 'ஐயோ! இப்பொழுது தானே என்னென்னவோ சொல்லிக் கொண்டிருந்தீர்கள்; அதன்படி ஆகிவிட்டதே!' என்று ஓடிவந்து அவன் மார்பிற் சாய்ந்து கொண்டு அலறினாள். அவன் அன்போடு அவளை அணைத்துக் கொண்டான். அவன் தலைமயிர் நெற்றியில் விழுந்து கிடந்தது. அவன் கண்கள் ஒளி மங்கியிருந்தன. 'பாவம், சிறு பெண்! என் காதல் இன்பத்தைப் பெற நினைத்தாள்; அதை இழந்தாள், அதனோடு என்னையும் இழக்கிறாள். அவள் உள்ளம் புண்ணாகத்தானே செய்யும்' என்று எண்ணிக் கொண்டவன் போல் 'மல்லிகா' என்று அவள் முகவாய்க் கட்டையைப் பிடித்து உயர்த்தினான்.

அந்த நிலையைக் கண்ட அதிகாரியே மனந்தாளாமல் வருத்தத்துடன் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு நின்றார்.

எக்கோ போலீசுச் சேவகனைப் பார்த்தான். சிவப்புத் தொப்பி அவன் கண்களில் பட்டது. சிவப்பு வர வரப் பெரிதாகத் தோன்றியது. அதைப் பார்க்கப் பார்க்க அவன் கண்கள் விரிந்தன. தலையை நிமிர்த்தான். அங்கிருந்து ஏதோ ஓர் ஒளி வந்து தாக்கியது. அவன் மார்பில் சம்மட்டியால் ஓங்கி அடிப்பது போல் இருந்தது. உடனே மல்லிகாவைத் தள்ளி நிறுத்தினான்.

'மல்லிகா! நான் யார், நீ யார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். வெறுங்காதலராக மட்டுமிருந்தால் நாம் விளையாட்டுப் பொம்மைகளாகக் காலத்தைக் கடத்திவிடலாம். ஆனால் கொள்கைக் காக - இலட்சியத்திற்காக ஒன்று சேர்ந்திருக் கிறோம். இதை நினைவில் வைத்துக் கொள்! இனிமேற்றான் நமக்குப் பொங்கல் விழா வரப் போகிறது என்பதை அறிவிக்கும் அறிகுறி இது' என்று உணர்ச்சியுடன் சொன்னான்.

'நான் இப்படியாகுமென்று கனவிலும் நினைக்கவில்லை. நீங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வந்து விடக்கூடாதா' என்று கெஞ்சினாள்.

'மன்னிப்பு! நான் யாரிடம் மன்னிப்புக் கோருவது? என்ன குற்றத்திற்காக மன்னிப்புக் கேட்பது? எழுத்துரிமை - பேச்சுரிமை இவற்றைப் பறிக்கும் எதேச்சாதிகாரிகளிடமா மன்னிப்புக் கேட்பது? நான் மன்னிப்புக் கேட்டால், 'எழுத்தில் வீரத்தைக் காட்டிச் செயலில் பின்வாங்கும் துரோகி, மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் எத்தன்' என்று என்னைத் தூற்றுவார்கள்; மல்லிகாவும் கோழையின் மனைவி

என்று இகழப்படுவாள். இச்சிறு தண்டனைக்கே கலங்கும் நீ நாளை எனக்குத் தூக்குத் தண்டனை தந்தால் மகிழ்ச்சியடையும் தமிழ்ப் பெண்ணாகவா உன்னைப் பார்க்க முடியும்? இப்படிப்பட்ட உன்னை, 'கொரில்லாப் பெண்' என்று எண்ணிக் கொண்டிருக் கிறாயே! இது, உனக்கு மட்டுமின்றி - உன் இனத்திற்கே - பெண்கள் கூட்டத்திற்கே இழிவைத் தரும்' என்று கண்டிப்பான குரலில் பேசினான்.

'கொரில்லாப் பெண்! கொரில்லாப் பெண்!' இந்தச் சொற்கள் சுழன்று சுழன்று வந்து அவள் செவியில் மோதின. நிமிர்ந்து நின்றாள். கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

'ஆம், மறந்து விட்டேன்; மன்னிக்கவும். நள்ளிரவு என்றும் பாராமல் கைது செய்ய வருகின்ற அரசாங்கம் நல்ல அரசாங் கந்தான். அதுவும் என்ன குற்றத்தைக் கண்டுபிடித்து விட்டது? மக்கள்நிலை உயரவேண்டும் என்று கூறியது ஒரு குற்றமா? அதைப் பற்றித் தன் கருத்தை எழுதியது ஒரு குற்றமா? இல்லை மக்கள் நிலை உயரக் கூடாது என்று அரசாங்கம் கருதுகிறதா? அப்படிப்பட்ட அரசாங்கந்தான் எதற்கிருக்கிறது? ம்ம், அதை ஏன் நாம் குறைகூற வேண்டும்? மக்கள் உணர்ந்தால் - அறிவுபெற்றால் தானாகவே எல்லாம் மாறுகிறது. சரி, நீங்கள் போகலாம்; மகிழ்ச்சியோடு விடை தருகிறேன். உங்கள் பணியை நான் மேற்கொள்கிறேன். விரைவில் நானும் உங்களைச் சந்திப்பேன். தன் கணவன் குற்ற மற்றவன் என்று, முடியுடை வேந்தன் எனவும் பாராது வீரத்தோடு வாதாடிய கண்ணகி என் குலத்தில் பிறந்தவள் தான். மக்கள் மன்றம் இருக்கவே இருக்கிறது. அரசாங்கத்தை அந்த மன்றத்தின் கூண்டிலே நிறுத்துகிறேன். நீதிதேவன் தீர்ப்பளிக்கட்டும்' - என்று சொல்லி முடித்தாள். முகம் சிவந்திருந்தது. உதடுகள் துடித்தன.

'மல்லிகா! உன் நெஞ்சமும் இரும்பாகட்டும், உங்களுக்குக் காதல் இல்லையா என்று கேட்டாயே! இதோ என் காதல் பலித்து விட்டது. என் காதல் எல்லாம் நாட்டின் விடுதலை மீதுதான். நாட்டுக்காக உழைக்க வேண்டும் - உழைத்து உழைத்து உருமாற வேண்டும். அதற்காக நான் இரத்தம் சிந்த வேண்டும் - அந்த இரத்தம் மக்கள் வாழ்வு மலர்வதற்கு நீராக வேண்டும். நான் எதிரியால் தாக்கப்பட்டோ, அரசாங்கத்தின் தண்டனை பெற்றோ சாகவேண்டும். அந்தச் சாதல்தான் என்காதல். அந்தக் காதல்

பலித்துவிட்டது. அந்தக் காதலிதான் இந்தத் தூதர்களை அனுப்பி யிருக்கிறாள். நான் அவளைக் கண்டு பேசி மகிழப் போகிறேன். நீயும் விரும்பினால் அவளை ஒருநாள் வந்து பார்! நான் போகிறேன்' என்று சொல்லிவிட்டு, அச்சம் ஒரு சிறிதுமின்றி வீரனைப் போலச் செம்மாந்து சென்றான்.

போலீசாரும் அவனுடன் புறப்பட்டுச் சென்றனர்.

மறுநாள் காலை செய்தித்தாளுடன் ஓடிவந்தாள் மல்லிகாவின் தங்கை மஞ்சுளா.

'அக்கா! அக்கா! இதைப் படித்துப் பார்' என்று பதற்றத் துடன் அவள் கையிற் கொடுத்தாள். வாங்கிப் பார்த்தாள் மல்லிகா.

'எக்கோ, அரசாங்கத்திற்கு முரணாக, 'சுடுகாட்டிலே' என்ற கட்டுரையை எழுதியதற்காக ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு, வேலூர்ச் சிறைக்குக் கொண்டு போகப்பட்டார்!

இதைப் படித்ததும் தலை கிறுகிறுத்தது! கடுங்காவல்! எள்ளளவும் கள்ளமில்லாத என் எக்கோவிற்கா கடுங்காவல்! இத்தகைய கொடுங்கோன்மை சுடுகாட்டிலே புதைக்கப்பட வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டுதான் இருக்கிறது. அந்த நாள் வந்தே தீரும்! என்று சொல்லிவிட்டுக் கையைக் கட்டிய வண்ணம் அங்குமிங்கும் உலவினாள். ஏதோ முடிவிற்கு வந்தவள் போல் வெளியே சென்றாள்.

மறுநாள் மாலை ஒரே கூட்டம். போலீசு அங்குமிங்கும் கைத்தடிகளுடன் உலவிக்கொண்டிருந்தது. துப்பாக்கி தாங்கிய படையும் அணிவகுத்து நின்றது. குறித்த நேரத்தில் கூட்டம் தொடங்கப்பட்டது. மல்லிகா எழுந்து நின்றாள். அவள், கூட்டத் தைச் சுற்றிப் பெருமிதமாக ஒரு பார்வை பார்த்தாள். அவள் அப்பொழுது ஒரு படைத்தலைவி போலக் காணப் பட்டாள்.

'தோழர்களே! தோழியர்களே! நாம் எழுத்துரிமையற்ற பேச்சுரிமையற்ற நாட்டிலே வாழ்கிறோம். ஏன் எக்கோ கைது செய்யப்பட்டார்? திருடினாரா? கொலை செய்தாரா? அல்லது கொலை கொள்ளை நடத்தும்படி மக்களைத் தூண்டி விட்டாரா? மனித சமுதாயம் உரிமைபெற்று விளங்கவேண்டும் என்று தானே எழுதினார். அவர் என் கணவர் என்பதற்காக நான் கூறவில்லை. அவர் எனக்காக மட்டும் எழுதவில்லை. உங்களுக்காக - உங்கள் சந்ததிக்காகத்தான் இன்று சிறையில் இருக்கிறார். இதுமட்டுமன்று,

இன்னும் கொலைத் தண்டனை பெறுவதற்குங்கூட ஆயத்தமாக இருக்கிறார். அதை நீங்கள் உணரவேண்டும். உணராவிட்டால் அவர் செய்த தியாகம் விழலுக்கிறைத்த நீராகும். நீங்கள் என்றுமே அடிமையாக வாழப்போகிறீர்களா? நீங்கள் அவ்வாறு வாழ்ந்தது மன்றி உங்கள் பரம்பரையையும் அடிமையாக்கவே எண்ணிவீட்டீர் களா? என்ன சொல்லுகிறீர்கள்? ஒவ்வொரு நாட்டையும் பாருங்கள்! அதைப் பார்த்த பிறகும் நாம் உணர்வற்றவர்களாக இருப்பது அழகா? நீங்கள் நினைத்தால் - ஒன்றுபட்டால் எக்கோவை வெளிக் கொணரலாம். ஏன்? நாட்டையே எதேச்சாதிகாரத்தின் பிடியி லிருந்து விடுவிக்க முடியும். நீங்கள் ஒவ்வொருவரும் மற்றவரைத் தோழர் என்று எண்ண வேண்டும். அந்த உணர்ச்சி குருதியோடு கலந்து விட்டால் மக்கள் துன்பம் உங்கள் துன்பமாகத் தோன்றும். சிதைந்து கிடக்கும் நீங்கள் சீறி எழுவீர்கள். அந்தச் சீற்றத்திற்கு முன் துப்பாக்கிகள் என்ன செய்ய முடியும்?

'நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும். அவர்கள் விடுதலைப் பறவைகளாகப் பறந்து திரிய வேண்டும். அதற்காக நான் பலியாக வேண்டும்' - இதுதான் எக்கோவின் காதல். அவர் காதலை நீங்கள் தான் ... என்று பேசிக் கொண்டிருக்கும் போது இடையில் அதிகாரி ஒருவர் வந்து மல்லிகாவின் கையில் ஒரு கடிதத்தை நீட்டினார். மல்லிகா அதைப் படித்து விட்டுக் 'கூட்டத் தைக் கலைக்க முடியாது; மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று மீண்டும் பேசத் தொடங்கினாள்.

சிறிது நேரத்தில் 'டுமீல்!டுமீல்!' என்று சத்தங்கள் கேட்டன.

கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. சிதறிச் சென்றனர் மக்கள். ஆனால் ஒரு சிலர் கலைய மறுத்தனர். கண்ணீர்ப் புகை பயன் படுத்தப்பட்டது. மக்கள் திக்குமுக்காடினர். போலீசாரின் கைத் தடிகள் சுழலத் தொடங்கின. குதிரை வீரர்கள் உள்ளே நுழைந்தனர். அடி பொறுக்க முடியாமல் மக்கள் சிதறுண்டு ஓடினர். சிலர் அடிபட்டு விழுந்தனர். சிலர் மேடையில் ஏறினர். அங்கும் தடியடி. பலருக்குப் பலத்த காயம். மேடையில் ஏற்பட்ட நெருக்கத்தால் மல்லிகாவின் அருகிலிருந்த மஞ்சுளா கீழே விழுந்து விட்டாள். தடுமாறிக் கொண்டு எழுந்து நின்றாள். தலையில் பலத்த அடி விழுந்தது. கீழே சாய்ந்து விட்டாள்.

மல்லிகா கைது செய்யப்பட்டாள். மஞ்சுளா மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டாள். காயமடைந்த மக்களும் எடுத்துச் செல்லப்பட்டனர்.

கூட்டம் நடந்த இடம் இப்பொழுது ஒரே அமைதி! பார்க்க முடியாதபடி சோகம் நிறைந்திருந்தது. இரத்தம் அங்கங்கே சிந்திக் கிடந்தது. ஆனால் அந்த இரத்தத்தின் ஒவ்வொரு துளியும் நாளைக்கு எத்தனை வீரர்களை - தியாகி களை - எத்தனை எக்கோக்களை - மல்லிகா - மஞ்சுளாக்களை உண்டாக்கப் போகிறது என்று யார் உணரமுடியும்? அந்த இடம் வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய இடம் ஆயிற்று என்பது மட்டுமல்லாமல் மக்கள் நெஞ்ச ஏடுகளிலே இரத்தத்தால் எழுதப்பட்ட எக்கோ நகர் ஆயிற்று.

✪✪✪

# 2

# அத்தை வீட்டில் பேய்!

'போங்களத்தான்! எப்பொழுது பார்த்தாலும் உங்களுக்குக் கேலிதான். இனிமேல் என்ன கேட்டாலும் நான் கொண்டு வந்து தரமாட்டேன் போங்கள்!' என்று அன்பும் நாணமும் கலந்த - கொஞ்சுங் குரலில் கூறிவிட்டு ஓடிவிட்டாள் ஊர்மிளா.

ஊர்மிளா என் அத்தை மகள். படித்துக் கொண்டிருக் கிறாள். 'பச்சைக்கிளி என்றால் பச்சைக்கிளியேதான்' மங்கைப் பருவம் தன் வருகையை எப்படி எப்படித் தெரிவிக்க வேண்டுமோ அப்படி யெல்லாம் தெரிவித்துக் கொண்டிருந்த மையால் அழகு பூரித்து வளர்ந்து கொண்டிருந்தது. அவ்வளவு அழகுள்ள அவளுக்குக் கூந்தல் மட்டும் கொஞ்சம் நீளத்தில் குறைவாகவே இருந்தது. அந்த ஒரு குறையைத் தவிர அழகிலும் குணத்திலும் வேறு குறை காண முடியாது. அந்தக் குறைகூட இந்தக் காலத்தில் 'பாஷன்' என்றாலும், தமிழ் இலக்கியங்களில் படித்தபடி பெண்களுக்குக் கூந்தல் அடர்ந்து நீண்டு இருக்க வேண்டுமென்பது என் ஆசை. தாழ்குழல் - தோகை போன்ற குழல் என்றெல்லாம் வருணிக்கப்பட்டிருப்பதைப் படித்த எனக்கு அது குறையாகத் தோன்றியதில் வியப்பில்லை. இருந்தாலும் ஏனைய நிறைவுகள் அந்தக் குறையை மறைத்து விட்டன.

ஊர்மிளாவின் தாய் என் தகப்பனாருடன் பிறந்த அத்தை. வாழ்க்கைப்பட்ட இடம் பெரிய இடம். பல வேலி நிலங்கள் உண்டு. வீடு வாசல், சொத்து சுகம் எல்லாம் நிறைந்த இடம். அவ்வளவு பெரிய இடத்தில் வாழ்க்கைப் பட்டிருந்தாலும் தன் மகளை எனக்கே கொடுக்க வேண்டும் என்பது என் அத்தையின் ஆசை.

எனக்கும் அங்கேயே மணஞ் செய்து கொள்ள வேண்டு மென்றுதான் விருப்பம்; பணத்துக்கு ஆசைப்பட்டன்று; ஊர் மிளாவின் உள்ளமும் உடலும் என்னை அந்த உறுதிக்குக் கொண்டு வந்தன.

வழக்கம் போல இந்தத் தடவையும் முதற்பருவ விடு முறைக்கு அத்தை வீட்டிற்கு வந்திருந்தேன்.

‘ஊர்மிளா! கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கொண்டு வா!’ என்றேன்.

‘நான்தான் இனிமேல் கொண்டுவர முடியாது என்று சொல்லி விட்டேனே; நான் கொண்டு வரவே மாட்டேன்’ என்றாள் அவள்.

‘சீ! கழுதை! கேட்டால் கொடுத்தால் என்னவாம் மாட்டேன் என்றா சொல்வது? இதுவா மரியாதை?’ என்று எனக்காகப் பரிந்து பேசினாள் என் அத்தை.

‘இல்லம்மா! அத்தான் சும்மா சும்மா கேலி பண்ணுதம்மா’

‘கேலி செய்தால் என்ன! அத்தான் தானே, போம்மா போ! தண்ணீர் கொண்டு போய்க் கொடு’

தண்ணீர் எடுத்துக் கொண்டுவந்து தந்தாள்.

வாங்கிக் கொண்டே ‘திருமணம் செய்து கொண்ட பிறகு இப்படியெல்லாம் மாட்டேன் என்று சொல்ல முடியுமோ?’ என்றேன்.

‘பாரும்மா’ என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டாள்.

‘அத்தை! உன் பெண் என் வீட்டிற்கு வந்த பிறகு ஊர்மிளா என்ற பெயரை மாற்றி நல்ல தமிழ்ப் பெயராக வைத்துக் கொள்ளப் போகிறேன்’

‘அத்தான்! தமிழ்ப் பண்டிதர் குணத்தைக் காட்டி விட்டீர் களே’ என்று குறும்பாகச் சிரித்துக் கொண்டே உள் நுழைந்தான் முருகன் - ஊர்மிளாவின் உடன் பிறந்தான்.

‘ஆம் அப்பா! உங்கள் சொந்த மொழியில் பெயர் வைக்க வேண்டுமென்று சொன்னால் அது இழிவாகத்தான் தோன்றும்’

‘விளையாட்டுக்குச் சொன்னேன் அத்தான். கோபித்துக் கொள்ளாதீர்கள். எழுந்திருங்கள், சாப்பிடலாம்’

உணவை முடித்துக் கொண்டு பலவாறு பேசிக் கொண் டிருந்து விட்டு உறங்கச் சென்றேன்.

இரவு மாடியில் படுத்திருந்தேன். மணி பன்னிரண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. எனக்கு உறக்கமே வரவில்லை. பல வகையான எண்ணங்கள் சுழன்று கொண்டிருந்தன.

மாடிப்படியில் யாரோ ஏறிவரும் சத்தம் கேட்டது. உற்றுக் கேட்டேன். ஏறி வருஞ் சத்தம் நின்றது. ஆனால் ஒருவரையுமே காணவில்லை. சிறிது நேரத்தில் எனக்குப் பக்கத்தில் ஒருவித சத்தம் கேட்டது. மிகமிகக் கூர்ந்து கேட்டேன். 'உஸ்ஸ்..... உஸ்ஸ்' என்ற சத்தம்.

மனம் படபட என்று அடித்துக் கொண்டது. மூச்சு வெகு வேகமாயிற்று. சத்தம் வந்த பக்கம் மெதுவாகத் தலையைத் திருப்பினேன். ஏதோ வெள்ளையாக ஓர் உருவம் தெரிந்தது. படபடப்பு இன்னும் அதிகமாயிற்று. 'பேயோ' என்று எண்ணி னேன். 'குப்' என்று வியர்த்து விட்டது. வெள்ளை உருவம் வரவரப் பெரிதாகத் தெரிந்தது. அது என்னை நெருங்கி வந்து கொண் டிருந்தது; நெஞ்சம் வெடித்து விடும்போல் இருந்தது. கூச்சல் போட எண்ணினேன். ஆனால் கேலி செய்வார் களே என்று எண்ணிக் கொண்டே எழுந்தேன். தலையணை தொப்பென்று கீழே விழுந்தது. விழுந்தவுடன் 'குடுகுடு' என்று ஓடும் சத்தம் கேட்டது. மறுபடியும் மாடிப் படியில் சத்தம். சே! இனிமேல் இங்கிருப்பது தவறு என்றெண்ணிக் கீழே இறங்கிவந்து திண்ணையில் படுத்துக் கொண்டேன்.

மறுநாட் காலை, 'மாடியில் பேய் நடமாட்டம் இருக்கும் போலிருக்கிறது' என்று அத்தையிடம் சொன்னேன்.

'அத்தான்! அதுதான் பயந்து போய்த் திண்ணையில் படுத்து விட்டீரோ?' என்றான் முருகன்.

'எல்லாம் உனக்கு விளையாட்டுத் தானப்பா, நேரில் பார்த்தேன் - அப்புறமென்ன?'

'எதைப் பார்த்தீர்கள்? பேயையா!'

'ஆமாம்; பேயைத்தான். பன்னிரண்டு மணி இருக்கும். படியில் யாரோ ஏறிவருஞ் சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் பக்கத்தில் 'உஸ்ஸ்.. உஸ்ஸ்' என்று சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். வெள்ளையாக ஓர் உருவம் தெரிந்தது. வரவரப் பெரிதாயிற்று. அதை என் கண்ணாரப் பார்த்தேன். அதன் பிறகு தான் இங்கு வந்து படுத்தேன்!

'அத்தான்! பேயுமில்லை பிசாசுமில்லை; வேறு எதையோ பார்த்து இருட்டிலே பயந்து விட்டீர்கள்!'

'முருகா! உனக்கு எப்போதும் விளையாட்டுத்தான். நான் நன்றாகப் பார்த்துவிட்டுச் சொல்லுகிறேன். நீ - என்னவோ - சொல்லுகிறாயே!'

'சரி அத்தான், உடனே விளக்கைப் போட்டுப் பார்த்தீர்களா?'

'விளக்கைப் ..... போடவில்லை ... அதை எதற்கு நாம் அவ்வளவு கவனிக்க வேண்டும் என்று பேசாமல் வந்து விட்டேன்'

'அத்தான்! அப்படியானால் அது உறுதியாகப் பேயில்லை. எதையோ பார்த்திருக்கிறீர்கள். இருட்டானதால் அது உங்கள் கண்ணுக்குப் பேய் போலத் தோன்றியிருக்கிறது. இதோ இதைப் படித்துப் பாருங்கள்'

'அது என்ன?' - என்று வாங்கிப் படித்தேன்.

"திருஷ்டாந்தரமாக, பேய் பிடித்த வீட்டின் சம்பவ மொன்றை எடுத்துக் கொள்வோம். பாதி இரவில் ஒரு சப்தம் கேட்டதாக இருக்கட்டும். இந்தச் சப்தம் யாரால் வந்தது? சாதாரணமாகக் காற்றால் சப்தம் உண்டாகியிருக்கலாம். அல்லது ஏதாவது சாமான் விழுந்ததால் உண்டாகியிருக்கலாம். அல்லது சப்தம் கேட்பது போல் எண்ணியுமிருக்கலாம். அல்லது காதின் பலவீனத்தால் சப்தத்தைக் கேட்ட மாதிரியிருக்கலாம். இத்யாதி காரணங்களால் சப்தம் என்ற சம்பவம் உண்டாவது சகஜம்... சப்தம் உண்டான காரணம் தெரியாதபடியால் பழக்க வாசனையால் அந்தச் சப்தம் தெய்வத்தாலோ, பேயாலோ, பிசாசாலோ உண்டாயிற்றென்று தீர்மானிக்கிறோம்...."

'இது என்ன பத்திரிகை? .... சரிசரி! 'திராவிட நாடா' நீ எப்போ இதிலே சேர்ந்தாய்? இந்தக் கூட்டத்திலே சேர்ந்த நீ எங்கே பேய் பிசாசை நம்பப் போகிறாய்?'

'அத்தான்! சூரியனையும் சந்திரனையும் பாம்பு விழுங்குகிறது என்று பூரணமாக நம்பும் பண்டிதர் கூட்டத்தைச் சேர்ந்த நீங்கள் எங்கே நான் சொல்வதை நம்பப் போகிறீர்கள்!'

'சரி தம்பி! நேரமாகிறது, காப்பி சாப்பிட எழுந்திரு! அவன் அப்படித்தான் குறும்பாகப் பேசுவான். சாமியே இல்லை என்று சொல்கிறவர்களோடு கொஞ்ச நாளாய்ச் சேர்ந்திருக்கிறான்' என்று சொல்லி, என் அத்தை எங்கள் வாதத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தாள்.

அன்று, இரவு வண்டிக்குப் புறப்பட்டு ஊர் வந்து சேர்ந்தேன்.

மூன்று மாதங்களை எண்ணிக்கொண்டேயிருந்தேன். இரண்டாம் பருவ விடுமுறையும் வந்தது. அத்தையின் வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். ஊர்மிளாவைக் காண ஆவலோடு வந்தேன். அவளைக் காண முடியவில்லை. பாவாடை, தாவணியைத் தாங்கியிருந்தாலல்லவா அவளைப் பார்க்க முடியும். அவள் பருவநிலை, சேலைக்கு உறைவிடமாயிருந்தது. சமயற் கட்டில் அவள் அங்குமிங்கும் செல்லும் பொழுது அரைகுறையாகப் பார்த்துக் கொண்டேன். அவ்வளவுதான். அவளும் சில வேளை, சாளரத்தின் வழியே சந்திரனைக் காட்டுவாள். நான் பார்த்து விட்டால் சட்டென்று சந்திரன் மறைந்துவிடும்.

அன்று மாலை அத்தை, கோவிலுக்குச் சென்று விட்டார்கள். மாமாவும் முருகனுங் கூட இல்லை. நல்ல வாய்ப்புக் கிடைத்தது என்று சமையற்கட்டுள் நுழைந்தேன்.

'ஐயையோ' - என்று சொல்லிக் கொண்டே ஓடி மறைந்தாள் கதவின் பின்புறம்.

கதவை இழுத்தேன்.

கைத்தாமரையால் முகத்தாமரையை மூடிக் கொண்டாள். தாமரையை வலியமலரச் செய்தன என் கைகள்.

'அம்மா வந்து விடுவார்கள், போங்கள்' என்று அவள் கூறும்போது அந்தக் குரலில் கோபம், நாணம், அச்சம், அன்பு எல்லாங் குழைந்திருந்தன.

'ஊர்மிளா' என்று தளர்ந்த குரலில் அழைத்தேன். என் குரலில் கரகரப்பும் கலந்திருந்தது.

'அத்தான்! - என்றாள். பாதாளத்திலிருந்து பெரு மூச்சுடன் வெளிவந்தது அந்த ஒலி. அவள் நிமிர்ந்து என்னைப் பார்க்கும் பொழுது அந்தக் கண்கள் என்ன என்னவோ பேசின. நீர்நிறைந்த பார்வை.

இருவரிடையேயும் அமைதி.

'என்னை மணப்பதில் தடையில்லையே? விருப்பந் தானே?' என்றேன்.

'இல்லை என்று ஒருவரிடமும் சொல்லவில்லையே'

'தடை இல்லை என்றா?'

'இல்லை இல்லை; விருப்பம் இல்லை என்று சொல்ல வில்லையே என்றேன்.... சரி.... போங்கள் ... அம்மா....'

'போகிறேன். இரவு மாடிக்கு வருகிறாயா? சில செய்திகள் தனிமையில் உன்னிடம் சொல்ல வேண்டும்' என்றேன். அவளுடைய முறுவல் பூத்தமுகத்தை நாணம் வந்து கவ்விக் கொண்டது.

'ஊர்மிளா!' என்று அவள் முகத்தை நிமிர்த்தினேன்.

'வருகிறாயா?'

உடன்பாட்டைத் தலையசைப்பின் மூலம் தெரிவித்தாள்.

அளவு கடந்த மகிழ்ச்சி எனக்கு. அத்தையும் வந்து விட்டார்கள். ஆனால் பாழும் அந்த இரவுதான் விரைந்து வரக் காணோம். அப்பொழுதுதான் இலக்கியத்திற் கண்ட 'விரகதாபம்' இன்ன தென்று உணர்ந்தேன்.

எப்படியோ இரவும் வந்துவிட்டது. நள்ளிரவும் வந்து கொண் டிருந்தது. ஆனால் அவள்தான் வரவில்லை. வந்துவிடு வாள் வந்துவிடுவாள் என்று என் இதயத் துடிப்பு ஒவ்வொன்றும் சொல்லிக் கொண்டேயிருந்தன. அவள் வந்தால் எப்படிப் பேச வேண்டும், அகநானூறு முதலியவற்றிற் கண்ட இலக்கிய இன்பம் எவ்வாறுளது என்று காணவேண்டும் - என்றெல்லாம் கோட்டை கட்டிக் கொண்டிருந்தேன்.

மாடிப்படியில் சத்தம் கேட்டது. ஆம் அவள்தான் வருகிறாள் - மெதுவாகக் காலடியை எடுத்து வைத்து வருகிறாள் - சத்தம் மேல் படிக்கு வந்துவிட்டது. படிச்சத்தமும் நின்றுவிட்டது. சரி, வந்து விட்டாள், நாம் உறங்குவது போல் பாசாங்கு செய்யலாம். நம்மை எப்படி எழுப்புகிறாள் பார்ப்போம் என்று எண்ணிக் கண்களை மூடிக் கொண்டேன். சத்தம் அருகில் கேட்டது. என் துடிப்பு மிக வேகமாயிருந்தது. ஆனால் அவள் என்னை எழுப்பவில்லை. என்னால் அதற்கு மேல் பொறுத்திருக்க முடியவில்லை. நாமே ... என்று கண்விழித்தேன்.

'உஸ்ஸ் ... உஸ்ஸ் ' சத்தங் கேட்டது. அன்புக்காகத் துடித்த துடிப்பு. அச்சத் துடிப்பாக மாறியது. திரும்பினேன். அந்தப் பழைய வெள்ளை உருவம் தெரிந்தது. அசைந்து அசைந்து ஆடியது. இடையிடையே 'உஸ்ஸ்' சத்தம். திடீரென்று வெள்ளை உருவம்

கீழே உட்கார்ந்தது. மனம் பதறியது. உடல் நடுங்கியது. எழுந்து 'லைட்' போட நடந்தேன். மூன்றே மூன்று அடிதான் கால் வைத்திருப் பேன். என்மேல் ஓர் உடம்பு மோதியது. ஐயோ என்றலறிக் கீழே சாய்ந்து விட்டேன். உடனே பட்டப்பகல் போல வெளிச்சம் தெரிந்தது. 'எலக்ட்ரிக் ஸ்விட்ச்' சிலிருந்து கையை எடுத்துக் கொண்டிருந்தாள் ஊர்மிளா.

'ஏன் இப்படிச் சத்தம் போட்டீர்கள்?' என்று மெதுவான குரலிற் கேட்டாள்.

'ஒன்றுமில்லை' என்று சொல்லிவிட்டு வெள்ளை உருவம் உட்கார்ந்த பக்கம் பார்த்தேன். ஒன்றையுங் காணவில்லை. ஆனால் அந்த இடத்தில் ஒரு வேட்டி கிடந்தது. அப்பொழுது தான் உண்மைப் 'பேயை'க் கண்டுபிடித்தேன். அந்த மூலையில் கொடியிற் காய்ந்து கொண்டிருந்த வேட்டி காற்றில் அசைந்தது. அஞ்சிய என் கண்ணுக்கு ஓர் உருவமாகப் புலப்பட்டிருக்கிறது. அது கீழே விழுந்தது. உட்கார்ந்தது போலத் தெரிந்திருக்கிறது. ஆனாலும் அந்த 'உஸ்ஸ்' எப்படி வந்தது? மாடிப்படியில் சத்தங் கேட்டதே அது எப்படி வந்தது?

'ஏன் இப்படி ஒரு மாதிரி மிரள மிரள விழிக்கிறீர்கள்? என்னைக் கண்டு பயந்து விட்டீர்களா?'

'சேச்சே! பயமாவது ஒண்ணாவது' - என்று சொல்லிக் கொண்டே போய் அந்த வேட்டியை எடுத்து உதறினேன்.

உதறினேனோ இல்லையோ மூலையிலிருந்த உளுந்து மூட்டை க்குப் பின்னாலிருந்து இரண்டு பெருச்சாளிகள் 'உஸ்ஸ்' என்று சத்தமிட்டுக் கொண்டே 'குடுகுடு' வென்று வெளியே ஓடின. உடனே படிகளிற் சத்தங்கேட்டது. அப்பொழுதுதான் என் 'பயம்' விட்டது.

மாடிப்படிகள் மரப்படியானதால் பெருச்சாளிகள் ஏறும் பொழுதும் இறங்கும்பொழுதும் அந்தச் சத்தம் கேட்டிருக் கிறது. ஊர்மிளா வந்து 'லைட்' போடாமல் இருந்தால் பெருச்சாளி, பேயாகி என்னைக் கொன்றிருக்கும். *அறிவு வெளிச்சம் ஏற்பட்டால் அல்லவா அறியாமை இருள் நீங்கி உண்மை வெளிப்படும்.* அதை விடுத்து இருளில் அகப்பட்டுக் கொண்டு ஒன்றை மற்றொன்றாக எண்ணிக் கொண்டிருந்தால் மடியவேண்டியதுதான் என்ற 'சித்தாந்தம்' அந்த வெளிச்சத் திற்றான் எனக்கு ஏற்பட்டது.

வேட்டியைக் கொடியில் போட்டுவிட்டு வியர்வையையும் துடைத்துக் கொண்டு, 'ஊர்மிளா! வா! உட்கார்!' - என்று கையைப் பிடித்தேன்.

'ம்ம், தொடாதீர்கள் அத்தான்!' என்றாள்.

'பின் ஏன் இங்கு வந்தாய்?' என்றேன்.

'நான் வருவேன் என்று விழித்துக் கொண்டிருப்பீர்களே சொல்லிவிட்டுப் போகலாமென்று வந்தேன்'.

'இதற்கு வந்திருக்க வேண்டாமே' என்று கொஞ்சங் கோப மாகப் பதில் சொன்னேன்.

'சரி நான் வருகிறேன். அம்மா விழித்துக் கொள்வார்கள்' என்றாள்.

'போவதாயிருந்தால் போகலாம்' என்று சற்றுக் கடுமை யாகவே சொன்னேன். அவள் கண்களிலிருந்து இரண்டு முத்துகள் உதிர்ந்தன.

'ஊர்மிளா' என்று அணைத்தேன்.

'அத்தான்' என்று மார்பிற் சாய்ந்து கொண்டாள்.

அடடா! இன்பம்! இன்பம்! இலக்கிய இன்பம்!

* * * * *

**வெ**ளியிற் சென்று உலவிவிட்டு வந்து, வீட்டிற்குள் நுழையும் போது அத்தையும் மாமாவும் ஏதோ உரத்துப் பேசிக் கொண் டிருந்தது என் காதில் விழுந்தது. என்னைப் பற்றிப் பேசுவதாகத் தெரிந்தது. சட்டென்று நின்று கேட்டேன்.

'முடியவே முடியாது, நீ எவ்வளவு சொன்னாலும் நான் சம்மதிக்க மாட்டேன். என் சொத்தென்ன - கௌரவமென்ன - என் பெண்ணை, போயும் போயும் ஒரு தமிழ் வாத்தியாருக்கா கொடுப்பது? ஒருக்காலும் முடியாது. இன்னொருமுறை இந்தப் பேச்சை என்னிடம் பேசாதே!'

தலை சுழன்றது. எவ்வளவுதான் சம்பளத்திலும் மற்ற வகை யிலும் தமிழ் ஆசிரியன் தாழ்த்தப்பட்டிருந்தாலும் அவனுக்கும் மானம் மரியாதை உண்டல்லவா? அவனும் மனிதன்தானே! பணம் இல்லை - அழகில்லை - இப்படி ஏதாவது சொல்லியிருந்தால் பரவாயில்லை. 'தமிழ் வாத்தியார்' அட ! அஃது என்ன அப்படிக்

கேவலமான தொழிலா? கள்ள மார்க்கெட்டு - இலஞ்சம் - குடிகெடுத்துக் குபேரனாவது - இவற்றையெல்லாம் உயர்வாகக் கருதுகிறார்களோ? ஆம், பணந்தானே உயர்வு தாழ்வைப் படைக் கிறது. அஃது எந்த வழியால் வந்தாலென்ன! பணம் இல்லாத காரணத்தால் பாவம் ‘தமிழ் வாத்தியார்’ இவ்வளவு இழிவாகக் கருதப்படுகிறான். போகட்டும்.

இவ்வளவு தாழ்வாக என்னைக் கருதும்போது எனக்கு இங்கென்ன வேலை? என்று ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஊருக்குப் புறப்பட்டு விட்டேன். ‘ரயிலி’ல் வரும்பொழுதுதான் ஊர்மிளாவின் நினைவே வந்தது. அடடா! அவளிடங்கூடச் சொல்லிக் கொள்ளாமல் வந்து விட்டோமே என்று வருத்தப் பட்டேன்.

*****

**ஆ**று ஏழு மாதங்களாக நான் அங்கே போவதில்லை. ஒருநாள் திருமண அழைப்பு வந்தது. திருமண அழைப்பைப் பிரித்துப் பார்த்தேன். ஊர்மிளாவிற்கும் உலகநாதனுக்கும் திருமணம் என்றிருந்தது. என் சீற்றத்தைக் கையிலிருந்த அழைப்பிதழில் காட்டினேன்.

“ஊர்மிளா! என்னை ஏமாற்றி விட்டாய்! அன்று இரவில் கூறியதெல்லாம் பொய்தானா? அவ்வளவும் உண்மை என்று நம்பி விட்டேன். ‘உங்களுக்குத்தான் என் உயிர் உடல் அனைத்தும் சொந்தம்’ என்று கூறினாயே! இன்று உலகநாதனுக்கு உல்லாசப் பொருளாகப் போகிறாய்! அன்று பெருச்சாளியைப் பேய் என்று எண்ணினேன். ஆனால் அது தவறு. பெண்ணுருக்கொண்ட பேய் நீதான். என் வாழ்வு முழுதும் ஆட்டி வைக்கும் பேயாகிவிட்டாய்” என்றெல்லாம் திட்டினேன். திட்டி என்ன செய்வது; அவள் தகப்பன் பணஆசை பிடித்தவன். அதனால் அப்படிச் செய்து விட்டான். அதற்கு அவள் என்ன செய்வாள். அவன் அப்படியிருந்தாலும் அவள் ஏன் உடன்பட வேண்டும்? இப்படியெல்லாம் உழன்றது என் மனம்.

*****

**தி**ருமண நாள் நெருங்கிவிட்டது. நாளை எண்ணிப் பார்த்தேன். நாளைக் காலைதான் திருமணம். அவள் மணக்கோலம் என்

கண்முன் தெரிந்தது. நானும் அவள் அருகில் இருந்தேன். மறுபடி அவளருகில் உலகநாதன், மேள ஒலி வீட்டையே அதிரச் செய்தது. அவள் அவனைக் கடைக்கண்ணால் பார்க்கிறாள். அவன் முறுவல் பூத்த முகத்தை அவள் பக்கமாகத் திருப்புகிறான்.

'அய்யா! தபால்'

திடுக்கிட்டு எழுந்தேன். கற்பனை கலைந்தது. தபாலை வாங்கிப் பார்த்தேன்.

'ஊர்மிளா நேற்று இரவு சிவலோகப் பிராப்தி அடைந்து விட்டாள்'.

எனக்குப் பதற்றமோ பரிதாபமோ ஏற்படவில்லை. ஆனால் என் உள்ளம் மட்டும் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தது.

'என் அத்தை வீட்டில் பேய் இருக்கிறதென்று எண்ணினேன். ஆனால் அது பெருச்சாளியாயிற்று. பெருச்சாளிப் பேய் என்னைக் கொல்ல இருந்தது. ஆனால் ஊர்மிளா என்னைக் காப்பாற்றினாள். இப்பொழுது உண்மையிலேயே என் அத்தை வீட்டில் பேய் இருக்கிறது. அது பணப்பேய் - இல்லை - பணப் பெருச்சாளி. அந்தப் பெருச்சாளி பேயாக மாறி அவளைக் கொன்று விட்டது. அவளை அந்தப் பேயிலிருந்து காப்பாற்றத் தவறிவிட்டேன். அவள் சந்தித்ததுபோல, நான் வரும்பொழுது அவளைச் சந்தித்திருந்தால் அவளைக் காப்பாற்றி இருப்பேன்....

அவள் விருப்பப்படி அவளுடைய காதலனை அடைய விடாமல் தடுத்ததால் தற்கொலை செய்து கொண்டிருக்கிறாள். அந்தக் கொலைக் குற்றத்துக்கு உடந்தையாயிருந்து விட்டுச் சிவலோகமாம் - பிராப்தியாம் சொல்கிறார்கள் வெட்கமின்றி, அந்தச் சொற்களைப் பார்க்கப் பொறாத என் கண்கள் நீரைச் சிந்தி அந்த எழுத்துகளை அழித்துவிட்டன.

✪✪✪

# 3

# கண்மூடி வழக்கம்

"என்ன வேலா! எங்கே புறப்படப் போகிறாய்? தடப்புடலாக அலங்காரஞ் செய்து கொள்கிறாயே, எங்காவது விருந்தா?" என்று கேட்டுக் கொண்டே என் நண்பன் வேலனுடைய வீட்டிற்குள் நுழைந்தேன்.

"வாப்பா துரை! நல்லவேளை நீயே வந்து விட்டாய்! ம்...ம்... தலையை வாரிக்கொள்; பவுடர் போட்டுக் கொள் கிறாயா?" என்றான்.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாமப்பா! எங்கே என்று கேட்டால் என்னென்னவோ சொல்கிறாயே!" என்றேன்.

"வா திருவொற்றியூருக்குப் போகலாம். இன்றைக்குத் தைப் பூசம் அல்லவா! இராமலிங்க வள்ளலார்க்குத் திருவிழா நடை பெறும். அதைப்பார்த்து விட்டு வருவோம். வா!" என்று இழுத்துக் கொண்டு சென்றான்.

நண்பன் சொல்லைத் தட்டமுடியாமல் நானும் சென்றேன். இரயில் புறப்படும் சமயம் ஓடி ஏறிவிட்டோம்.

"வேலா! இன்னும் உனக்கு இந்தப் பைத்தியம் விட வில்லையா?" என்றேன்.

"துரை! பக்கத்து வீட்டுப் பெண்களோடு என் மனைவியும் அங்குச் சென்றிருக்கிறாள். அதனாலேதான் நானும் போகிறேன்" என்றான் வேலன்.

'உன் மனைவியைத்தான் ஏன் அனுப்புகிறாய்? உன் வீட்டைக் கூட இந்தச் சிறுவிடயத்தில் திருத்தமுடியவில்லை என்றால் நாட்டை எப்படி நீ திருத்தப்போகிறாய்?" என்று தாக்கிப் பேசினேன்.

"நண்பா! நீ மற்ற திருவிழாக்களைப் போல இதையும் எண்ணிவிட்டாயா? வள்ளலார் மற்ற நாயனார் ஆழ்வார்களைப் போல அல்லர். சிறந்த சீர்திருத்தக்காரர். சமூக ஊழல்களை

ஒழித்துக்கட்ட வேண்டுமென்று ஓயாது உழைத்தவர். இதோ ஒன்று உதாரணத்துக்குப் பாரேன்.

“கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போகவேண்டும்” என்று எந்த அடியாராவது சொல்லியிருக்கிறாரா? இவர் உறுதியுடன் இத்தகைய உயர்ந்த கருத்துகளைச் சொன்ன காரணத்தாலேதான், சுயநலக் கூட்டம் இவரை எப்படியோ சரிக்கட்டி விட்டுச் ‘சோதி’யில் கலந்து விட்டார் என்று விளம்பரம் செய்து விட்டது. இத்தகைய பெரியாரின் விழாவிற்குச் செல்வதைக் கூடவா நீ வெறுக்கிறாய்?” என்று என்னை மடக்கினான்.

“அது சீர்திருத்தக்காரர் விழாவானாலும் சரி - சீனிவாசப் பெருமாள் விழாவானாலும் சரி காலம், பொருள் வீணாகிறதே என்றுதான் சொல்லுகிறேன். மேலும் அங்கு என்ன நடக்கிறது பார்த்தாயா? சீர்திருத்த உபதேசமா நடக்கிறது. அடிகள் கூறிய அறிவுரை அங்கு வந்துள்ள பக்தர்களுக்குப் பரிகாசமாக - அலட்சிய மாகப்படுகிறது. அங்குள்ள படத்திற்கு மற்ற கோவில்களில் செய்யும் மரியாதைகளைத் தானே செய்கிறார்கள். நீயும் அப்படியேதான் நடந்து கொள்வாய். அதை விடுத்து ஏதேனும் உபதேசம் செய்யப் போகிறாயோ? இந்தக் ‘கண்மூடி வழக்க’ மெல்லாம் உன்னளவில் ‘மண்மூடிப் போகவில்லையே’ என்று கொஞ்சம் ஆவேசமாகவே நான் பேசினேன்.

‘சரி சரி வந்தது வந்து விட்டோம். இனி என்ன அதைப்பற்றிப் பேசுவது’ என்று வேலன் சொல்வதற்குள் திருவொற்றியூரை அடைந்தோம்.

வண்டியிலிருந்து இறங்கி வேலன் மனைவியும் பக்கத்து வீட்டாரும் தங்கியிருக்குமிடத்தைக் கண்டுபிடிக்கப் பெரும் பாடுபட்டுக் கடைசியில் கண்டுபிடித்துவிட்டோம்.

நாங்கள் உரையாடிக் கொண்டிருக்கையில் அந்தப் பெண்கள் கூட்டத்தில் ஒரு பாவை மீது என்பார்வை விழுந்தது. அவள் தோற்றம் என் எண்ணத்தைக் கிளறிவிட்டது.

“வேலா அந்தப் பெண் யார்?” என்றேன்.

‘விதவை’ என்றான் வேலன்.

‘அட! அந்தக் கிழவியைக் கேட்கவில்லை. கிழவிக்குப் பக்கத்தில் இருக்கும் கிளியைப் பற்றிக் கேட்கிறேன்.’

'அவளைத் தானப்பா நானும் சொல்கிறேன். அவள் ஒரு விதவை. அவளுக்கு வயது பதினான்கு. கணவன் இறந்து ஆறுமாதங்கள் தான் ஆகின்றன. எங்கள் சொந்தக்காரப் பெண். போதுமா அவளைப் பற்றிய விளக்கம்'.

"என்ன! அவள் விதவையா?" மின்சாரத்தால் தாக்குண்டமைப் போல் என் இதயத்திலிருந்து வெளிவந்தது இந்த வினா!

'ஆம்', ஆழ்ந்த வருத்தத்திலிருந்து மேலெழும்பிய விடை இது.

அவள் மீது எனக்கு, நீங்கா அன்பு - காதல் அன்று - ஓர் இரக்க உணர்ச்சி - சகோதர வாஞ்சை என்னையறியாமல் தோன்றியது. எதிரிலிருந்த ஆலயத்தைப் பார்த்தேன். முணுமுணுத்தேன்.

அந்தோ! என் நாட்டை எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் அங்கு நான் சோகக் காட்சியைத் தானே பார்க்கிறேன். மலர்ந்த தமிழகத்தைக் காணும் நாள் எந்நாளோ? அவள் அன்றலர்ந்த - நுகரப்படாத மலர் எனத் திகழ்கின்றாள். கசங்கிய மலரெனக் கருதி, ஒதுக்கி வைத்து விட்டது. இந்தச் சமுதாயம் என்ற எண்ணத்தோடு வந்த பெருமூச்சு வேலனை என் பக்கம் திருப்பியது.

'வேலா! அவளுக்குப் பெற்றோர்கள் இல்லையா? இச்சிறுவயதில் இந்நிலைக்கு ஏன் ஆளானாள்?' என்று பரிவுடன் கேட்டேன்.

'பெற்றோர்கள் உள்ளனர். காதலின் சுவையை நுகர்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். அந்த நுகர்ச்சியில் இவளைப் பற்றிய நினைவு உண்டாகிறதோ இல்லையோ? உண்டானாலும் 'விதி' அவர்கள் கண்முன் காட்சியளிக்கிறது. அதைப் புறக்கணித்து விட்டு ஏதாவது எண்ணினாலோ சமூகம் தனது கோரப்பல்லைக் காட்டி அச்சுறுத்துகிறது.

அவள் சென்ற ஆண்டில் அழகுமிக்க ஓர் இளைஞனுக்கு மனைவியானாள். பொருத்தங்களும் நன்றாக இருக்கின்றன என்று பூசுரரும் கூறினர். இன்பமான வழியிலேயே சென்று கொண் டிருந்தது அவர்கள் வாழ்க்கைச் சகடம். மூன்று மாதத்தில் காய்ச்சலுக்கு ஆளானான் கணவன். சில நாள்களில் மலைக் காய்ச்சலாக மாறியது. அந்த மாற்றம் இவளது மங்கலநாணை - கழுத்திடு கயிற்றை அறுக்கும் வாளாயிற்று. சகடத்தின் ஒரு சக்கரம் நொறுங்கவே அந்தச் சகடம் பயனற்றுப் போயிற்று' என்று கூறி முடித்தான்.

'அவள் பெயர் என்ன?'

'புனிதம்' என்று அவளை அழைப்பார்கள் எனச் சிறிது வருத்தம் கலந்த குரலில் சொன்னான்.

'பெயர் புனிதம்' ஆனால், வாழ்வில் அஃது இல்லை என்று சொல்லிவிட்டு அங்கிருக்க மனமின்றி வேலனிடம் விடைபெற்றுக் கொண்டு, நான் திரும்பிவிட்டேன்.

வண்டியில் வரும்போதெல்லாம் அவளது நினைவுதான். நம்நாட்டுச் சகோதரிகளின் நிலையை நடுநிலையோடு ஒருவன் சிந்தித்துப் பார்த்தால் அவன் கட்டாயம் பைத்தியக்காரன் ஆகிவிடுவான் என்பதை என்னளவில் அன்று தெரிந்துகொண்டேன்.

**ஒ**ருநாள் வேலன் என்னைச் சந்தித்தான். 'துரை! புனிதம் அன்று உன்னைக் கண்டதிலிருந்து உன்மீது அன்பு கொண்டிருக்கிறாள். என் மனைவியிடம் உன்னை மணந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறாள் என்பது அவள் பேச்சிலிருந்து நன்றாய்த் தெரிகிறது. நீ விதவை மணம் செய்து கொள்ள விரும்புகிறாயா? விரும்பினால் சொல். நான் அதற்கு முயற்சி செய்கிறேன்' என்றான்.

'வேலா! என் குணங்களை நன்கு தெரிந்து கொண்ட நீயா இப்படிக் கேட்கிறாய்? பெண்ணுரிமை வழங்குவதென்றால் முதலில் மறுமணம் தான் கவனிக்கப்பட வேண்டும் என்று நான் பலமுறை கூறி வந்திருக்கிறேன். அவ்வாறிருந்தும் விரும்புவாயா?' என்று கேட்கிறாய். புனிதம் உடன்பட்டால் புகலிடம் தர நான் சம்மதிக்கிறேன். செயலில் இறங்கச் சித்தனாயிருக்கிறேன்' என்றேன்.

'அப்படியானால் இதற்கு வேண்டிய ஏற்பாட்டை விரைந்து செய்கிறேன்' என்று சொல்லிவிட்டு வேலன் போய்விட்டான்.

புனிதம் என் சொத்தாகப் போகிறாள் என்று எண்ணியதும் பூரிப்படைந்தேன். மேலும் மறுமணம் என்றதும் மனம் துள்ளி விளையாடியது. திடீரென்று மகிழ்வு தடைப்பட்டது. யாரோ இருவர் என்முன் நின்றனர். அவர்கள் பேசவும் செய்தனர்.

"துரை! என்ன செயல் செய்யத் துணிந்து விட்டாய்! நீ நினைப்பது பெருந்தவறு - என்பதை உணராமல் உடன்பட்டு விட்டாய்! அவள் உன் சகோதரி என்று எண்ணியதை மறந்து விட்டாயா?" என்றார் ஒருவர்.

மற்றவர்; "அதனாலென்ன? அவள் நிலைக்கிரங்கியதால் அந்த எண்ணந் தோன்றியது. அதனால் 'சகோதரி' ஆய் விடுவாளா?

மேலும் மணந்து கொள்ளு முன்பு யாரும் எந்தப் பெண்ணையும் அப்படித்தான் எண்ணுவார்கள். அது தான் இயல்பு. அவருக்குள் அன்பு தோன்றிக் காதல் பெருகிய பின்பு முதலில் சகோதரர் எண்ணந் தோன்றியதே! அவள் உன்னைக் காதலனாகக் கருதுகிறாள். நீயோ விதவை என்ற சொல்லே இந்த நாட்டில் இல்லாமல் செய்ய வேண்டும் என்று மனமார விழைகிறாய். அதனால் தயங்காதே! தலை நிமிர்ந்து நில்! கூசாமல் குதித்துவிடு!" என்றார்.

"அப்படியானால் நீ உறுதியற்றவனாகிறாய்! மனக் கட்டுப் பாட்டை மதியாதவனாகிறாய்! முதலில் உடன்பிறப்பு என்று எண்ணிவிட்டு, அடுத்து அதை உரிமைப் பொருளாக்க எண்ணுவது, நீ உன் உள்ளத்தையே நம்பவில்லை என்று தான் பொருள்படும். மனம்போன போக்கெல்லாம் போய்க்கொண் டிருந்தால் உலக ஊழியனாக முடியுமா? சீர்திருத்தத் தொண்டு செய்ய முடியுமா? எண்ணிப்பார்! காதலின் ஏவலுக்கு ஆளாகாமல் எண்ணிப்பார்?" என்று முதல்வர் கூறினார்.

இரண்டாமவர் "அவள் காதலை நீ புறக்கணித்து விட்டதால் மட்டும் உன்னை உறுதியுடையவன் என்று கருது கிறாயா? அது தவறு. அப்படியானால் நீ பெருங் கோழை யாகிறாய். சமூகத்தை எதிர்த்து நிற்க அஞ்சுகிறாய்! விதவை பிழிந்தெடுக்கப்பட்ட சக்கைதானே என்று எண்ணு கிறாய். இந்தக் கோழைமனம் இருக்கும் வரை நீ எங்கே தியாகம் செய்யப் போகிறாய்! அது கிடக்கட்டும். உன் நண்பன் வேலனிடம் அன்று உறுதிமொழி கொடுத்தாயே அஃது என்னாவது? அவன்தான் என்ன நினைப்பான்! வாய்ச் சொல்லில் வீரம் பேசும் வஞ்சகன் என்றுதானே உன்னைக் கருதுவான். இதுதான் உன் உறுதியா? மனக்கட்டுப்பாடா? சொல்லி யதைச் செயலிற் காட்ட முனைவதை மனம்போன போக்கு என்பது குறைமதியினர் கூற்றல்லவா? அஞ்சுகிறாயா? அச்சத்தை விடு! எதிர்ப்பைத் துச்சமென எண்ணு! வா! வளங்காண வா! வாகை சூட வா!" என்றார்.

நான் நிமிர்ந்தேன். இருவரும் மறைந்தனர்.

'கண்மூடி வழக்கமெல்லாம் மண் மூடிப் போகட்டும்' யாரோ நெடுந்தொலைவில் பாடுவது போல் மெலிந்த ஓசை என் காதில் மோதியது. சரி. நான் கோழையல்லன். உறுதிமொழியைப் புறக் கணிக்கும் உள்ளமுடையவனுமல்லன். எதிர்த்துச் செல்லும் சுறா நான். பற்றுக்கோடின்றிப் பரிதவிக்கும் அவள் சாய்வது சரியன்று.

இனிமேல் நான் நீர். அவள் மீன். நான் தென்றல்; அதில் ஒன்றிவரும் மன்றல் அவள் என்ற முடிவுக்கு வந்தேன்.

'வேலா! வேலா!' என்று அழைத்துக் கொண்டே அவனுடைய வீட்டிற்குள் நுழைந்தேன். ஒருவரையும் காணவில்லை.

'வேலா!' என்று மீண்டும் சிறிது உரத்துக் கூவினேன்.

உள் அறையிலிருந்து இல்லை, என்று பதில் வந்தது. அதைத் தொடர்ந்து 'எங்கோ அவசர வேலையாகப் போயிருக் கிறார்' என்ற குரலும் வந்தது. நிமிர்ந்து பார்த்தேன். நிலையைப் பிடித்துக் கொண்டு நீலநிறப் பட்டுடுத்தி நின்றிருந்தாள் புனிதம்.

புனிதம்! இது வியப்பில் வெளிவந்த மூச்சு; பேச்சில்லை!

நிலைத்து நின்ற நான் சமாளித்துக் கொண்டு 'சரி வருகிறேன்' என்று அடி எடுத்து வைத்தேன்.

'இல்லை.... உங்களை.... வந்தால் இருக்கச் சொன்னார்' என்று புனிதம் இழுத்துச் சொன்னாள்.

'மரகதம் எங்கே?' என்றேன். மரகதம் வேலன் மனைவி.

'எதிர்வீட்டிற்குப் போயிருக்கிறாள்' என்று நாணிக்கொண்டு விடையளித்தாள் புனிதம்.

ஒரு வகையாக அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண் டேன்.

உள்ளம் வேகமாக ஓடும் தையல் இயந்திரத்தின் ஊசி போல வேலை செய்தது. வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டேன்.

"இந்தாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே விசிறியும் காப்பியும் மேசை மீது வைத்தாள். எனக்குக் குழப்பம் அதிகமா யிற்று... இவள் காப்பிதரக் காரணம் என்ன? வேலனும் மரகதமும் எங்கேதான் போயிருப்பார்கள்? என்று என்னென்ன வோ எண்ணி னேன்.

அவள் கதவோரத்தில் கதவைப் பிடித்துக் கொண்டு ஒதுங்கி நின்றாள்.

பார்த்தேன்.. பார்த்தாள். சில வினாடிகள் மவுனம்.

'புனிதம்' என்று என் இதயம் பேசியது. என் உதடுகள் என் உள்ளத்தை அவளுக்குத் திறந்து காட்டின.

அவள் முகத்தாமரை மலர்ந்தது. இதழ்கள் அசைந்தன. என் கண் வண்டு பறந்தோடிப் பாய்ந்தது. வண்டைத் தொடர்ந்து

சென்றேன். நான்கு கண்களும் எவ்வளவு பேச்சுகள் பேசின. அப்பப்பா! நெடுநேரம் கழிந்தது. பின்னர் வாய்கள் பேசத் தொடங்கின. பேச்சின் முடிவிலேதான் இது, தோழன் வேலனுடைய வேலை என்று தெரிந்து கொண்டேன். எங்களைச் சந்திக்கச் செய்ய வேண்டு மென்றே அவன் இந்தச் சூழ்ச்சி செய்துள்ளான்.

அங்கே இருவரும் காதல் தெய்வத்தின் மீது ஆணையிட்டு உறுதி செய்து கொண்டோம். அதன் பின் எங்கள் நெஞ்சங்கள் சந்தித்தன. அந்தச் சந்திப்பில் வேலனும் மரகதமும் எங்கள் தெய்வங் களாகக் காட்சியளித்தனர். சுருங்கச் சொன்னால் கண்மூடி வழக்கத் திற்குக் குழி தோண்டிவிட்டோம். மண்கொட்டி மூடிவிட வேண்டியது தான் பாக்கி.

கண்மூடி வழக்கத்திற்கு நாங்கள் இருவரும் குழி தோண்டி னோம். மண் போட்டு மூட வேண்டுமே. அதற்கு அவளுடைய பெற்றோரின் உதவியை நாடினோம். உதவி செய்ய மறுத்து விட்டனர். உள்ளம் இடங்கொடுத்தாலும் சமூகம் அவர்களைச் 'சரி' என்று சொல்லவிடாமல் தடை செய்கிறது. கடைசியாக எப்படியோ அவர்களை உடன்படச் செய்துவிட்டான் வேலன்.

புனிதத்தின் பெற்றோர்கள் புலன்விசாரணை நடத்தினார்கள். விசாரணைக்குப் பின் எனக்குத் தண்டனை தரப்பட்டது. "புனிதம் உன் சொத்தில்லை" என்று. ஏன்? என்று எதிர் வழக்காடினேன்.

நீ 'ஏழையாகப் பிறந்தது ஒரு குற்றம். அதை மன்னித்து விட்டாலும் வேறு சாதியில் பிறந்த இரண்டாவது குற்றத்திற்கு மன்னிப்பே கிடையாது' என்றனர்.

குற்றவாளியானேன்.

'வேலா! இனி என்ன செய்வேன்? 'ஏழை', 'வேறு சாதி' இந்தக் குற்றங்களுக்காக என் சொத்துப் பறிமுதல் செய்யப் பட்டது!

'துரை! நீயா இப்படிக் கலங்குவது. அவை உன் குற்றமல்ல. இன்றுள்ள சட்டப்படி அவை குற்றமாகின்றன. அந்தச் சுயநலக் கும்பல் வகுத்த சட்டம். மனிதனை நசுக்குவதற்காக மனிதனாலேயே செய்யப்பட்ட சட்டம். சட்டம் என்றைக்கும் ஒரே மாதிரியான நிலையில் இருக்காது. சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் அல்லது கொளுத்த வேண்டும். அதன் பின்புதான் நீ குற்றவாளி இல்லை என்பதை மெய்ப்பிக்க முடியும்' என்று பரிந்து பேசினான்.

'நண்பா! அஃதிருக்கட்டும். நாங்கள் தோண்டிய 'குழிக்கு' அவர்களிடம் 'மண்' கேட்டதால் அல்லவா அவர்கள் மறுத்தனர். நாங்களே முயன்று மண்ணை எடுத்துப் போட்டுக் குழியை மூடி விட்டால் என்ன?

'அதுவும் நல்ல முடிவுதான். அதாவது நீங்கள் இருவரும் யாரும் அறியாமல் சென்றுவிடுவது என்றுதானே கூறுகிறாய்? ஆம்; அப்படிச் செய்வது தான் நல்லது. இல்லாவிட்டால் புனிதம் இறந்தாலும் இறந்துவிடுவாள்' என்று கூறி என் எண்ணத்தை உறுதியாக்கினான்.

வேலன் மரகதம் இருவரின் உதவியாலும் இன்பபுரிக்கு பயணம் ஆகிவிட்டோம்.

சில மாதங்கள் கழித்து வேலனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதைப் படித்தேன். உடனே விடை எழுதினேன்.

என் வாழ்வைப் புனிதமாக்கிய தோழா நாங்கள் நலம். உன் கடிதம் கிடைத்தது. புனிதம் ஓடிவிட்டாள் என்று தூற்றுகிறார்களா? தூற்றட்டுமே! கண் மூடிக் கூட்டங்களுக்கு அதைத் தவிர வே றென்ன தெரியும். ஒரு நாள் தூற்றும். மறுநாள் போற்றும். அந்த நாற்ற வாய்கள். அதைப் பொருட்படுத்தக் கூடாது.

'நண்பா! கண் மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக வேண்டும்' என்ற உயிர் ஒலியை அன்று சொன்னாய். அந்த ஒலியே என் வாழ்வின் மூச்சாகவும் செய்தாய். அதற்கு எங்கள் நன்றி. நாங்கள் அந்த வழக்கத்தை மூடிய இடத்திலிருந்து மலர்ச்செடி முளைத்துள்ளது. அதாவது புனிதம் இன்னும் எட்டு மாதத்தில் தாயாகப் போகிறாள்!

அதற்கு நான் சொன்னேன். 'ஆண் குழந்தைதான் பிறக்கும்- அதற்கு வேலன் என்று பெயர் வைப்பேன்' என்று.

அவள், 'இல்லையில்லை; பெண்தான் பிறக்கும்; நான் அதற்கு மரகதம் என்று பெயர் சூட்டுவேன்' என்று சொல்லு கிறாள்.

எப்படியோ இன்னும் எட்டு மாதத்தில் என் குடும்பத்தில் உங்களில் ஒருவர் தோன்றப் போகிறீர்கள்! என்று எழுதி அஞ்சல் பெட்டியில் போடும் போது 'கண்மூடி வழக்கமெல்லாம் மண் மூடிப் போக' என்ற இராமலிங்க வள்ளலார் மறைமொழி என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

✪✪✪

## 4

# சந்தேக முடிவு

மெருகு குலையாத மோட்டாரில் வந்திறங்கினார் கோடீசு வரர் கோபாலன்.

"வாங்கோ! வாங்கோ! உங்களுக்காகத்தான் வந்து காத்திண் டிருக்கேன். வரச் சொன்னேளாமே!" என்று குழைந்து எழுந்து நின்றார் பஞ்சாங்கம் பரமேசுவர ஐயர்.

"ஆமாங்க சாமி! உங்ளே வாங்க!" என்று சிரித்துக் கொண்டே உள்ளே சென்றார் முதலியார்.

பின் தொடர்ந்தார் ஐயர். ஒரு கட்டு நோட்டுப் புத்தகத்தை ஐயருக்கு முன் தூக்கிப் போட்டு விட்டு முதலியாரும் உட்கார்ந்தார்.

"சாமி! இந்தச் சாதகங்களை எல்லாம் கொஞ்சம் கவனமாகப் பார்க்க வேண்டும்."

"அடடா! என்ன அப்படிச் சொல்றேள்! உங்க விஷயத்திலே அசிரத்தையா? என் சொந்த விஷயம் போலேன்னோ கவனிச் சிண்டிருக்கேன்."

"ஆமா! முன்னே கூட அப்படித்தான் சொன்னீர்கள்! எல்லாப் பொருத்தமும் நன்றாயிருக்கிறது என்றீர்! ஒன்றுக்கு மூன்று போச்சு. அதனாலே கொஞ்சம் கவனமாக இதைப் பாருங்கோ!"

"அஃது அவா தலைவிதி! அதுக்கு நாமென்ன பண்றது!"

"அந்தத் தலைவிதி சாதகத்திலே முன்னாடியே தெரியாதோ?" சரி சரி, சாதகத்தைப் பாருமையா!

"இது பேஷான சாதகமாச்சே"

"எதைச் சொல்கிறீர்! சீனிவாச முதலியார் வீட்டுச் சாதகத்தை யா? சாதகம் நல்லாத்தான் இருக்கிறது. நல்ல அழகான நோட்டிலே அச்சுப் போல எழுதி இருக்கிறது. அந்தப் பெண்ணுக்கு வயது பதினாறு ஆகிறதையா. கொஞ்சம் நிறமும் கூட மட்டம். அந்த ரத்தின முதலியார் வீட்டுச் சாதகத்தைப் பாரும். வயது பதின்

மூன்றுதான்; பருவமாகி ஆறுமாதங்கள் ஆகின்றன; நல்ல சிவப்பு, அழகு; பணந்தான்... அதைப் பற்றிப் பரவாயில்லை. அந்தச் சாதகத்தைப் பாரும் எப்படி என்று!"

"ஆஹாஹா! ஜாதகம்னா இதுன்னா ஜாதகம்! பேஷ் பேஷ்! என்ன பொருத்தம் போங்கோ! முதலியார்வாள்! கட்டாயம் இதையே முடித்துக் கொள்ளுங்கள்."

"சரி, நல்ல முகூர்த்த நாளொன்று பார்த்துச் சொல்லும் மையா!"

*****

**கோ**டீசுவரர் என்றாலே குந்தளபுரம் எங்கும் தெரியும். உண்மையிலேயே கோடிக் கணக்கில் பணம் உண்டு அவருக்கும். நல்ல ஐயர்களைக் கொண்டு சாதகங்கள் பார்க்கப்பட்டுச் சிறப்பான முறையில்தான் திருமணம் நடந்தது. நோயினாலும் பிள்ளைப் பேற்றாலும் இருமனைவியர் இறந்தனர். மூன்றாம் மனைவி, பெற்றோர்கள் கட்டாயப் படுத்தியதால் அவரை மணந்து கொண் டாள். மணந்தும் சரியான முறையில் அன்போடு அவருடன் பழகவில்லை. இதனால் குடும்பத்தில் அடிக்கடி குழப்பம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. கடைசியில் ஒருநாள் தற்கொலை செய்து கொண்டாள்.

மூன்றாம் மனைவி இறந்து மூன்று மாதங்கள் கூட நிரம்ப வில்லை. நான்காம் திருமணத்திற்கு ஏற்பாடுகள் தொடங்கப் பட்டன. அவர் சும்மாயிருந்தாலும் பெண்வீட்டார் சும்மாயிருக்க விடவில்லை. சிபாரிசுக்கு மேல் சிபாரிசு! பணக்காரர் அல்லவா! எப்படியாவது பெரிய இடத்துச் சம்பந்தம் கிடைத்தால் போதும் என்று சாதகங்கள் வந்து குவிந்தன. இந்த நான்காவது மணத்திற்குத் தான் மேலே பஞ்சாங்க ஆராய்ச்சி நடந்தது. மணமும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கோடீசுவரர் வீட்டுக் கலியாணமென்றால் கூட்டத்திற்கும் குதூகலத்திற்கும் கேட்கவா வேண்டும்!

கூட்டத்திலிருந்தோர் மணத்திற்குச் செலவழிந்த தொகை யைப் பற்றியும் பண்டபாத்திரங்களைப் பற்றியும் இசை மன்னர் களின் இசையரங்குகளைப் பற்றியும், அதைக் காண வந்த மக்கள் திரளையும், நகைகளையும் இன்னும் இவை போன்றவைகளையும் பற்றித்தான் பேசிக் கொண்டார்களே ஒழிய, அந்தப் பெண்

செலவழித்த கண்ணீரையும் அவள் உள்ளக் குமுறலிலிருந்து எழும்பிய சோகக் குரலையும் பற்றி யாரும் பேசவும் இல்லை. ஏன்? எண்ணவும் இல்லை. அந்த மக்கள் கூட்டம் இதைத்தானா புதிதாகப் பார்க்கிறது. பார்த்துப் பார்த்துப் பூத்துப் போன கண்களல்லவா அந்தக் கண்கள்! ஆனாலும் அவ்வளவு பெரிய கூட்டத்தில் இரண்டு இளைஞர்களின் உள்ளங்கள் மட்டும், உள்ளக் கருத்து களைச் சொல்லாமற் சொல்லிக் கொண்டிருந்த அவள் கண்களைப் பார்த்துப் பரிவு கொண்டு துடித்துக் கொண்டுதான் இருந்தன.

ஓர் உள்ளம் சொல்லிற்று: - "இதென்ன அநியாயம்! பெண்ணுக்கு வயது பதின்மூன்று. அவனுக்கு வயது அய்ம்பத்து மூன்று. எவ்வளவு வேற்றுமை! பணத்திமிர்தானே இப்படியெல்லாம் செய்யச் சொல்லு கிறது?" என்று.

அதற்கு மற்றோருள்ளம், "இல்லை இல்லை; பெண்ணின் அப்பனது பணஆசை தான் அப்படிச் செய்யச் சொல்லிற்று. இன்னும் பார்க்கப் போனால் சமுதாயத்தில் நிறைந்துள்ள முட்டாள் தனந்தான் அடிப்படைக் காரணம் என்று நான் சொல்வேன். இத்தகைய அறியாமையின் ஆணிவேர் களையப் படும் வரை, பெண்களின் வாழ்வு சிதைந்த வாழ்வுதான்; செல்லரித்து உளுத்துப் போன வாழ்வுதான்" என்று கூறிற்று.

ஆனால் அவ்வளவு பெரிய கூட்டத்தின் இரைச்சலிலே, இந்த இளம் உள்ளங்களின் துடிப்பு - அந்தத் துடிப்பிலிருந்து மேலெழும்பும் பெருமூச்சு யார் செவியில் விழப்போகிறது? விழுந்தாலும் அந்த மூச்சிலே தோய்ந்துள்ள வெப்பத்தை அறிந்துகொள்ளும் உணர்ச்சி ஏது அக் கூட்டத்திற்கு?

*****

"**ம**ங்களம்! ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்? அந்த அலமாரியில் குங்குமப்பூ இருக்கிறது அதை எடுத்துப் பாலில் கொஞ்சம் போட்டு எடுத்துக் கொண்டு வா!"

மங்களம் என்பது முதலியார் மனைவியின் பெயர். அந்தப் பெண்ணும் அப்படியே எடுத்து வந்தாள்.

"இதோபார்! வைரச் சங்கிலி, இதைக் கழுத்தில் போட்டுக் கொள்! இந்தா சாவிக்கொத்து; இது நகைப் பெட்டகத்தின் சாவி. எந்த நகை வேண்டுமோ எவ்வளவு பணம் வேண்டுமோ உன் விருப்பப்படி எடுத்துக் கொள்! நீதான் இங்கு அரசி!"

“சாவியை என்னிடம் நம்பிக் கொடுக்கிறீர்களே! நான் யாருக்காவது எதையாவது எடுத்துக் கொடுத்துவிட்டால்...!”

அட, பைத்தியமே! இதெல்லாம் உன் சொத்து; இதைக் காப்பதும் காப்பாற்றாததும் உன் பொறுப்புத் தானே” என்று கொஞ்சுதலாகக் கூறினார்.

“இங்கே வா! மங்களம்; இந்த “ரேடியோ”வைத் திருப்பப் பழகிக் கொள்! நானில்லாதபோது நீ திருப்பலாமல்லவா? இதை இப்படித் திருப்பிவிட்டால் போதும் உடனே பாடும்” என்று திருப்பினார்.

வானொலி பாடத் தொடங்கியது.

“மன்மதன் லீலையை வென்றாருண்டோ” என்ற இசைத் தட்டின் பாட்டுக் கேட்டது. முதலியார் வயதையும் மறந்தார். இளமையைப் பெற்றார். அந்தப் பருவம் விளையாடத் தொடங்கியது.

முதலியாருக்குத் தனக்குத்தானே ஒரு சந்தேகம்; நமக்கு வயது அய்ம்பத்து மூன்று ஆகிவிட்டதே. அவள் பதின்மூன்று வயதுப் பெண். நம்மிடம் அன்பாக இருப்பாளா? நாம்தான் அவள் அன்பிற் கேற்ப நடந்து கொள்ள முடியுமா? என்று. இதற்காகத்தான் குங்குமப்பூ முதலியவற்றின் உதவியை நாடினார். தன்னால் இன்பந்தர இயலாவிட்டாலும், வைரநகை - பணம் - வானொலி இவை களாவது இன்பந் தரட்டும் என்று எண்ணித்தான் அவ்வளவு தாராளமாகவும் அன்பாகவும் நடந்து கொண்டார். நாள் தோறும் முகவழிப்பு, வாசனைப் பூச்சுகள் தவறுவதில்லை. தன் முகத்திலுள்ள இரண்டொரு நரையும், சுருங்கலும் அவளுக்கு அருவருப்பைத் தந்துவிடக் கூடாது என்று அந்த முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

அந்தப் பெண்ணும் அன்பாக - ஒழுங்காக நடந்து வந்தாள். அவள் வீட்டார் செய்த ‘உபதேசத்’தாலும் நடந்தது நடந்துவிட்டது. இனிமேல் என்ன செய்வது என்ற எண்ணத் தாலும் அப்படி நடந்து வந்தாள். இடையில் மனம், பருவத்தின் இயற்கையால் மாறுபட்டு வருந்தினால் சமாதானத்திற்குத்தான் “விதி” என்ற மந்திரம் இருக் கிறதே. அதை ‘உச்சரித்து’க் கொள்வாள்.

ஒருநாள் மாடியில் நிலைக் கண்ணாடியில் இருவரும் நின்று தங்கள் அழகைப் பார்த்தார்கள். முதலியார் உள்ளம் குபீர் என்றது. இதற்கு முன்பு தன் முகத்தை மட்டும் கண்ணாடியில் பார்த்திருக்

கிறார், அலங்காரம் செய்து கொள்ளும் பொழுது. இப்பொழுது பக்கத்தில் நிற்கும் பதுமை போன்ற அவள் முகம் அவரது முகத்தி லுள்ள முதுமையை அதிகப்படுத்திக் காட்டியது. வழுவழுப்பான - கண்ணாடிக் கன்னங்கள் - கருங்கல் அரும்பி நிற்கும் தம் கன்னங்கள்- பளிங்கு போன்ற அவள் கண்கள் - ஒளி குறைந்த தம் கண்கள். பருவத்தின் பூரிப்பைச் சுட்டிக் காட்டும் அவளுடைய உறுப்புகள் - பணப்பெருக்கத்தால் தளர்வை மறைத்துக் கொண்டிருக்கின்ற தம் உடற்கூறுகள். இவைகள் மாறிமாறிக் காட்சியளித்தன முதலி யாருக்கு. சட்டென இறங்கிவிட்டார். அதிலிருந்து முதலி யாருடைய உள்ளத்தே ஏதோ ஓர் எண்ணம் கவ்விக் கொண்டது.

*****

மங்களம் வானொலியைத் திருப்பிவிட்டாள். அன்று நல்ல நாடகம். அதை அந்த வீட்டின் ஒரு புறத்தில் குடியிருந்த இளைஞன் வானொலி அறையின் வெளியில் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந் தான். நாடகத்தின் பெயர் “காதல் பலி” என்பது. அந் நாடகம் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுவது போலவும், உருக்க மாகவும் இருந்ததால் மங்களம் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தாள். வெளியில் இருந்த இளைஞன் நாடகத்தின் வாயிலாக நாட்டைப் பார்த்து வருந்திக் கொண்டிருந்தான். நாடகம் முடிந்தது. இளைஞன் எழுந்தான்; முதலியாரும் வெளியில் சென்றிருந்தவர் வந்து விட்டார். இளைஞன் செல்வதைப் பார்த்து விட்டு உள் நுழைந்தார். அவள் கண்ணீரை விரைந்து துடைத்துக் கொண்டிருந்தாள். முதலியாரின் மனக்கண்முன் மாடியில் பார்த்த கண்ணாடி தோன்றியது. உள்ளத் தைக் கவ்விக் கொண்டிருந்த எண்ணம் வேர் ஊன்றத் தொடங்கி விட்டது.

வேரூன்றி விட்டால் கேட்கவா வேண்டும். “நான் வயது ஆனவன். இவள் இளமையின் எடுத்துக் காட்டாக இருக்கிறாள். அவனோ காளைப் பருவத்தான். பஞ்சு இருக்குமிடத்தில் நெருப்பை வைத்திருப்பது சரியில்லை” என்று எண்ணினார். எண்ணத்தின் முடிவில் வீட்டை விட்டுக் காலி செய்யப்பட்டனர் அவ்விளைஞனும் அவனைச் சேர்ந்தவர்களும்.

*****

**போ**ருக்கு முன்பு சிங்கப்பூர் சென்றிருந்த முதலியாரின் மகன் - மூத்த மனைவியின் மகன் அன்று வந்து சேர்ந்தான்.

அவனுக்கு மங்களம் அறிமுகப்படுத்தப்பட்டாள். தந்தை செயல் கொஞ்சம் வருத்தத்தைக் கொடுத்த போதிலும் அவள் நடந்துகொள்ளும் முறையைக் கண்டு தன் தாயில்லாக் குறையை அவள் நிறைவேற்றுவாள் என்று மகிழ்ச்சியடைந் தான்.

அவள் அவனிடம் மிக அன்பாகப் பழகினாள். அவனுக்கு வேண்டியவற்றை ஒரு குறையும் இல்லாமல் செய்து வந்தாள். இருவரும் எவ்விதக் களங்கமுமின்றிப் பழகிவந்தனர்.

ஆனால் முதலியாருக்கு அஃது ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. அவனோடு அவள் சிரிப்பதும் பேசுவதும் அவருடைய உள்ளத்தில் வேரூன்றியிருந்த எண்ணத்திற்குத் தண்ணீர் வார்த்தது போன்றிருந்தது. என்ன செய்வது! ஒன்றும் சொல்லவும் முடிய வில்லை. அவர்களை அப்படிப் பழக விடவும் மனமில்லை. உழன்று கொண்டிருந்தார்.

*****

"**ம**ங்களம்! அந்தச் சாவிக் கொத்தைக் கொடு! வைர நகைகளை எப்பொழுதும் போட்டிருக்காதே. 'கெட்டு விடுமல்லவா! பெட்டியில் கழற்றி வைத்துக் கொள். பட்டுப் புடவைகளை நாள்தோறும் கட்டினால் எதற்காகும்? சாதாரணச் சேலைகளைக் கட்டிக் கொண்டாலென்ன? ஏதாவது "விசேடம்" வந்தால் அப்பொழுது கட்டிக் கொள்வது சரி" என்று முதலியார் கொஞ்சம் கண்டிப்பில் இறங்கிவிட்டார்.

ஒருநாள் பக்கத்தூருக்குச் சென்றிருந்தவர் மறுநாள் தான் வந்தார். வந்தவர் தன் மகன் அறையில் ஏதோ வேலையாக நுழைந்தார். படுக்கை விரிக்கப்பட்டிருந்தது. அதில் மலர்கள் சிதறிக் கிடந்தன. கச்சு ஒன்றும் கிடந்தது. முதலியாருக்கு வேல் கொண்டு குத்துவது போன்றிருந்தது. "கண்ணாடிமுகம்" தோன்றியது. வேரூன்றிய செடி பூத்துக் காய்க்கத் தொடங்கி விட்டது.

"அடப்பாவி! இந்தக் காரியம் செய்யலாமா? உன் அப்பனுக்கும் மனைவி, உனக்கும் மனைவியா? ஓர் இரவு நானில்லை. இப்படி நடந்து விட்டதே! அடி சண்டாளி! உனக்குத்தான் இஃது அடுக்குமா? பாவ புண்ணியத்திற்குக் கொஞ்சமாவது அஞ்சினாயா? என்று துடிதுடித்தது அவருள்ளம்.

*நேரே மாடிக்குச் சென்றார். நாற்காலியில் சாய்ந்தார். சிந்தனையில் ஆழ்ந்தார்.*

*****

*"**உ**னக்கு அடுக்குமா என்றா கேட்கிறீர்? சற்றுச் சிந்தனை செய்து பாருங்கள்! என் வயதென்ன! உங்கள் வயதென்ன! என்னை மணந்து கொண்டது உமக்கு அடுக்குமா? சரி; பாவம் புண்ணியம் என்றெல்லாம் பேசுகிறீரே! அவற்றை நம்பியிருந்தால் என்னை மணப்பது பாவம் என்று உங்களுக்கு ஏன் தெரிய வில்லை?"*

*"அடி பாதகி! அதற்காக மகன் என்று கூடவா பார்க்கக் கூடாது? இப்படி நடந்து விட்டாயே! நான் ஒருவன் மரம் போல இருக்கிறேன் என்பதையும் மறந்துவிட்டாயா?"*

*"இல்லை! மறந்துவிடவில்லை! உண்மையில் நீங்கள் என் வாழ்வில் மரம் என்பதை நினைத்துத்தான் இப்படிச் செய்தேன். மகன் என்கிறீர்! யாருக்கு மகன்? அவர் வயதென்ன? யாராவது ஒப்புக் கொள்வார்களா?இல்லை - உங்களையும் என்னையும் தான் கணவன் மனைவி என்றால் நம்புவார்களா? பேத்தி என்றால் ஒரு வேளை நம்பலாம். மகன் என்று நீர் சொல்லும் அவர் எனக் கேற்றவர். வறண்டு கிடந்த பாலை நிலத்தில் பாலை ஊற்றினார். பூச்செடியும் வளர்கிறது. செடியை வளர்க்க நான் வெளியில் செல்ல விரும்பவில்லை. - உலகம் தூற்றும் , உண்மையை உணராது. ஆதலால் நான் வீட்டிலேயே ..."*

*"ஐயோ தெய்வமே! எனக்கா இந்தக் கதி வரவேண்டும்! சொல்லப்போனால் காளி போலப் பேசுகிறாளே! எனக்கே.. என் மானத்திற்கே குழி தோண்டுகிறாளே! பாம்பையல்லவா வீட்டில் வளர்க்கிறேன்."*

*இவை சிந்தனையில் ஆழ்ந்திருந்த முதலியாரின் மனப் போராட்டம்.*

*போராட்டத்தின் முடிவில் "ஆம்; அவள் நிலைக்கும் என் நிலைக்கும் பொருத்தம் இல்லைதான். சாதகத்தில் ஏதோ பொருத்தம் சொன்னான். ஆனால் உள்ளப் பொருத்தமில்லை. எந்தப் பொருத் தமுமே இல்லை. அவள் ஓர் இளங்கொடி, பக்கத்திலே இருக்கும் கொம்பிலே தாவிப் படராதிருக்குமா? அவள் பூத்துக் குலுங்கும் செடி. வண்டு மொய்க்காதிருக்குமா? அவள் காண வேண்டிய பருவ*

இன்பத்தை - மனித இன்பத்தை என்னிடம் காண முடியவில்லை. அதனால் அஃது இருக்கும் இடத்தை நாடினாள். அவனும் இளைஞன், மணம் ஆகாதவன். இஃது அவர்கள் குற்றமன்று. என் குற்றந்தான். இது சரியான தண்டனைதான்" என்ற நிலைக்கு வந்தார்.

"இருந்தாலும் இப்படிச் செய்யலாமா? தாய் - மகன் என்ற முறையாவது கருத வேண்டாமா?"

"முறை! என்ன முறை! அவன் எனக்குத்தானே மகன். அவளுக்கும் அவனுக்கும் என்ன உறவு வந்தது? ஒரு கயிற்றை நான் கழுத்தில் கட்டியதற்காக அவள் தாயாக முடியுமா?"

"இல்லையில்லை! இதுசரி என்று ஒப்புக் கொள்ளவே மாட்டேன். அவள் குற்றவாளிதான் அவளை இப்பொழுதே..."

"வேண்டாம்! உன்னைத்தான் தூற்றும் உலகம். அவளைத் தூற்றாது. இயற்கை எண்ணம் - உணர்ச்சி இவற்றைக் கட்டுப் படுத்த முடியுமா? அதை அடக்க உன்னிடம் தான் ஆற்றல் இருக் கிறதா? வயதான உன்னிடமே இல்லாதபோது வாலிப உள்ளத்திலே எப்படி அதை எதிர்ப்பார்க்க முடியும்? ஆகவே நீ எண்ணுவது போல் செய்துவிடாதே! அவளை மணந்து கொண்டதே பெருங் குற்றம். மேலும் கொலைக்குற்றத்திற்கு ஆளாகாதே!"

இப்படியாக நொந்து நொந்து அல்லற்பட்டுக் கொண் டிருந்தது அவருள்ளம்.

"வெந்நீர் காய்ந்து கொதிக்கிறதே; என்ன செய்கிறீர்கள்; குளிக்க எழுந்து வாருங்கள்" என்று சொல்லிக் கொண்டே மாடியில் ஏறி வந்து கொண்டிருந்தாள் மங்களம்.

ஒரு வகையில் மனத்தை - முகத்தைச் சரிப்படுத்திக் கொண்டு எழுந்தார்.

அன்று முதல் அவர் பைத்தியம் பிடித்தவர் போலவே காணப்பட்டார். அவருக்கு முகத்தில் தாடி வளர்ந்து கொண்டு வந்தது போலவே வேரூன்றி முளைத்தெழுந்த அந்த எண்ணமும் வளர்ந்து கொண்டே வந்தது. மாடிப்பக்கம் செல்வதே கிடையாது. ஒரு தனி அறையில் படுத்துக் கொள்வார். முதலியாரின் மாற்றம் மங்களத்திற்கு மனத்தடுமாற்றத்தைத் தந்தது.

மற்றொரு நாள் இரவு மணி ஒன்று அல்லது இரண்டு இருக்கும். சிரிப்பொலி கேட்டது. அப்படியொன்றும் வெடித்த சிரிப்பன்று.

சிறிய ஒலிதான். இருந்தாலும் உறங்காமலே இருந்த முதலியார் செவியில் அவ்வொலி விழுந்தது. ஒலி வந்த திசை நோக்கி நடந்தார். தன் மகன் அறையிலிருந்து தான் அந்த ஒலி வந்தது என்பதை மெய்ப்பித்து விட்டது. அங்கிருந்து வரும் பேச்சொலி பூத்துக் காய்த்திருந்த அந்த எண்ணம் பழுக்கத் தொடங்கிவிட்டது.

கதவின் துவாரத்தின் வழியாகப் பார்த்தார். இருவுருவங்கள் தெரிந்தன. படுக்கையறை வெளிச்சத்தால் சரியாகத் தெரிய வில்லை.

பேச்சை உற்றுக் கேட்டார்.

"எனக்குப் பயமாகவே இருக்கிறது. அவர் பார்த்து விட்டால் என்ன ஆகும்" இது பெண் குரல்.

"நானிருக்கும் பொழுது உனக்கென்ன பயம்?" அவர் பார்த் தால் தான் என்ன? இனி மேல் நீ என் மனைவி. ஏதாவது தடை ஏற்பட்டால் நாம் சிங்கப்பூருக்குச் சென்று விடலாம்" இஃது ஆண் குரல்.

இதற்கு மேல் அவர் கேட்டுக் கொண்டிருக்க முடிய வில்லை. பழம் பயன் தரத் தொடங்கிவிட்டது.

"என்ன துணிச்சல்! இனி அவள் உன் மனைவியா?... சிங்கப் பூருக்கா செல்கிறாய். வேண்டாம். நானே உங்களைச் சொர்க்கத் திற்கு அனுப்புகிறேன்" என்று துடிதுடித்துக் கொண்டு சந்தடி செய்யாமல் அறைக்குச் சென்று கைத்துப்பாக்கியை எடுத்து வந்தார்.

மகன் அறையில் ஒரு சன்னல் கதவு சிறிது திறந்திருப்பதைப் பார்த்தார். அதன் வழியாக உள்ளே பார்த்தார். அவர் கண்கள் கூசின. நெஞ்சு வெடித்து விடும்போல இருந்தது.

துப்பாக்கியை நீட்டினார். கண்களை மூடிக் கொண்டார். விசையைத் தட்டினார். "படார் படார்" என்ற சத்தம், குறி தவறி அங்கிருந்த நிலைக் கண்ணாடியில் பட்டது.

எங்கும் ஒரே வெளிச்சம். மாடியிலிருந்து ஓடி வந்தாள் மங்களம்.

துப்பாக்கியை மறைத்துக்கொண்டு பித்தன் போல் நின்று கொண்டிருந்த கணவனைப் பார்த்தாள். "என்ன இது? ஏன் இப்படி நிற்கிறீர்கள்? என்ன சத்தம்?" என்று பதற்றடத்துடன் கேட்டாள்.

அவளைப் பார்த்ததும் அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"அப்படியானால் உள்ளே நம்மால் சுடப்பட்டது யார்?" இது முதலியார் பெருமூச்சோடு கலந்து வந்த ஐயம்.

மகனும் கதவைத் திறந்து கொண்டு வந்து இதென்ன அப்பா? என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

ஒன்றும் பேசவில்லை.

மங்களம் அவர் கையைப் பிடித்துக் கொண்டு மாடிக்குச் சென்று விட்டாள்.

மணி நான்கு அடித்து விட்டது.

முதலியார் மகன், கட்டிலின் கீழ் மறைந்து நடுங்கிக் கொண்டிருந்த தன் காதலியை மெதுவாக அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வெளியே வந்தான். வெளிக் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டு முதலியார் மாடிச் சன்னல் வழியாக வெளியில் எட்டிப் பார்த்தார்.

தன் மகன் எதிர்த்த வீட்டுப் பெண் வசந்த கோகிலத்தை அங்கே கொண்டு போய் விட்டுத் திரும்புவதை வீதி வெளிச்சத்தால் பார்த்தார்.

'அப்பாடா' என்று திரும்பினார்.

அந்த மரம் - சந்தேக மரம் அடியோடு சாய்ந்தது. மனப்பாரம் குறைந்தது. பித்தமும் தெளிந்தது.

"மங்களம்! மங்களம்" என்றார். அப்பொழுது அவர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிறைந்திருந்தது.

✪✪✪

**5**

# கடைமுழுக்கு

“**அ**டடா? என்ன தெய்வகளை! அந்த முகத்திலே எவ்வளவு சாந்தம்! வைரங்கள் ‘பளிச், பளிச்’சென்று ‘டால்’ அடிப்பதைப் பாருங்கள்! அந்த உடம்பைப் பாருங்களேன்! என்ன தேஜசு! கண்கள் அப்படியே கருணையைப் பொழிகின்றனவே! எல்லாம் ஈசுவரானுக் கிரகம், அவர் தெய்வாம்சம். அரகரமகாதேவ!”

“டே, கண்ணா! இந்தப் பைத்தியத்தைப் பாருடா! தெய்வாம் சமாம்! ஈசுவரானுக்கிரகமாம்! அந்த ஆசாட பூதியின் கண்ணிலே கருணையா பொழிகிறது! காதலை அல்லவா கக்குகின்றன அந்தக் கண்கள். அதோ அவள் அழகிலே ஈடுபட்டு அப்படியே சொக்கிப் பிள்ளையார் போல் உட்கார்ந்திருக்கும் இவரைப் பார்த்து இப்படி யெல்லாம் உளறுகிறானே!”

அன்று ஐப்பசி மாதக் ‘கடைமுழுக்கு’, காவிரியிலே பாவத்தைக் கழுவிப் புண்ணிய உருவங்களாகத் திகழ வேண்டும் நாள் அது. அன்று நானும் என் நண்பன் மாறனும் மழையில் அகப்பட்டு ஒதுங்கி நின்றபோது பண்டார சந்நதிகள் அழகிலே ஈடுபட்ட பக்தர் பகர்ந்ததையும், அதைக் கேட்ட மாணவர்கள் பேச்சையுந்தான் மேலே தந்துள்ளேன்.

நாங்கள் அங்குச் சென்றது முழுக்குக்கு அன்று; அங்கு நடந்த ஆண்டு விழாவில் பங்குபெறச் சென்றிருந்தோம். நான் தேசியவாதி, மாறன் பெரிய சீர்திருத்தவாதி! கொள்கையில் கருத்து வேறுபாடு கொண்டவர்கள். இருப்பினும் நட்பில் எதுவும் குறுக்கிடாது. “நாமிருவ”ராகவே இருந்து வந்தோம். ‘காந்தி - ஜின்னா சந்திப்பை ’ விட எங்கள் சந்திப்பை - நட்பை வெகுவாகப் பேசுவார்கள். பள்ளித் தோழமை அவ்வாறு வளர்ந்திருந்தது.

மாறா! பேச்சைக் கேட்டாயா! எல்லாம் இந்தச் “சூனா மானா”க்களால் வந்த வினையப்பா. கடவுட் கொள்கையைப் பற்றிக் கண்டபடியெல்லாம் “பிரச்சாரம்” செய்து வந்ததால் நேர்ந்த விளைவு இது” என்றேன்.

“சுந்தரம்! வீணாகப் பழிசுமத்தாதே! மக்களிடையே அறிவு வளர வளர மடமை மறைகிறது. இதற்கும் யாரும் பொறுப்பாளி யல்லர். காலச் சூழலில் சிக்குண்ட கண்மூடிக் கொள்கை சிதறுண்டு போவதற்கு யார்தான் என்ன செய்ய முடியும்?” என்று சொற் பொழிவு செய்யத் தொடங்கிவிட்டான் மாறன்.

ஆனால் நான் அவன் பேச்சைக் கவனிக்கவேயில்லை. என் மனத்தையும் கண்ணையும் எதிரில் மழைக்கு ஒதுங்கியிருந்த மங்கையிடம் செலுத்திக் கொண்டிருந்தேன். அவளுடைய அழகின் வயப்பட்ட மனத்தை மாற்ற முடியவில்லை. மழையில் நனைந்த வெண்மையான ஆடை அவள் உடலின் சிவப்பை எடுத்துக் காட்டி என் உள்ளத்தை இழுத்துக் கொண்டிருந்தது. நகைகள் போட்டிருந் தால் அந்த நங்கையின் அழகு கொஞ்சம் குறைவாகத்தான் தோன்றும். அதை அறிந்து தானோ என்னவோ அவள் நகை அணியவில்லை. அழகான அந்த முகத்தில் ஏதோ ஒரு வாட்டம் - கவலைக் குறி ஊடாடியது. நீராடியதால் நனைந்து தொங்கிக் கொண்டிருக்கும் அந்தக் கூந்தலிலிருந்து மழைநீரைத் தட்டிக் கொண்டிருக்கும் பொழுது ஒவ்வொரு அசைவிலும் என்மனம் ... அதிகம் ஏன் சொல்ல வேண்டும் - என்னையே மறந்தேன்.

“சுந்தரம்” என்று தோளில் தட்டினான் என் நண்பன்.

தூக்கிவாரிப் போட்டது. சுய உணர்வு பெற்றேன்.

“சுந்தரம்! நான் சொல்லிக் கொண்டேயிருக்கிறேன். நீ வேறு கவனமாக இருக்கிறாயே!” என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

“அதோ பார் அந்தப் பாவையை. பொற்சிலை போன்ற அவள் அழகைப்பார். தெய்வலோகப் பெண்போல்....!”

“சேச்சே எங்கே போனாலும் இந்த வேலைதானா! வழியில் போகிறவர்களைப் பற்றி நமக்கென்ன? அது சரி தெய்வலோகத்தில் எத்தனை நாளப்பா இருந்தாய்?” என்று கிண்டல் செய்தான்.

“மாறா! நீயே பார்! உன் மனமுங்கூடக் கெட்டுவிடும் அவளைப் பார்த்தால்! என்று சொல்லிக்கொண்டு அவனுடைய முகத்தை அவள் பக்கம் திருப்பினேன். அவளைப் பார்த்ததுதான் தாமதம் மாறன் முகம் மாறிவிட்டது. என் கையைப் பிடித்துப் பரபர என்று இழுத்துக் கொண்டே சென்று விட்டான். மழையைக் கூடப் பொருட்படுத்தவில்லை. நான் அந்த இடத்தை விட்டு நீங்கினேனே ஒழிய அவள் என் மனத்தை விட்டு நீங்கவில்லை.

எங்கள் ஊருக்குச் சென்று விட்டோம்.

**சி**ல மாதங்களுக்குப் பின் சென்னை சென்று திரும்பி வந்தேன். நண்பன் மாறனைப் பார்க்கச் சென்றேன்.

என் முகத்தில் வெற்றிக்குறி விளையாடுவதைக் கண்டு "என்ன சுந்தரம்! எதிர்பார்த்தபடியே கிடைத்துவிட்டதோ" என்றான்.

"ஆம் எதிர்பார்த்ததுதான். ஆனால் நான் சென்னை செல்லும் பொழுது எதிர்பார்க்கவே இல்லை. இருந்தாலும் என் எண்ணம் நிறைவேறிவிட்டது" என்றேன்.

"என்ன...ஒரு.. நாலாயிரமாவது கிடைத்திருக்குமா? இருந்தாலும் சுந்தரம்! நீ ஒரு தேசியவாதியாயிருந்து கொண்டு "இந்தக் கள்ள மார்க்கெட் வியாபாரம் செய்யக்கூடாதப்பா!"

"மாறா! அதை நான் சொல்லவில்லை. வியாபாரத்திற்கும் தேசியத்திற்கும் என்ன சம்பந்தம்? அது கிடக்கட்டும். நான் சொல்வது வேறு. கடைமுழுக்கன்று பார்த்தோமே ஒரு பெண்ணை. அது முதல் பரிதவித்துக் கொண்டிருந்தது என் மனம். அவளை அடையமுடியுமா? அவள் எங்கிருக்கிறாளோ? யாரோ? எந்த ஊரோ? என்று ஏங்கிக் கொண்டிருந்த உள்ளத் திற்குச் சாந்தி கிடைத்தது" என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது குறுக் கிட்டுப் பேசத் தொடங்கினான், மாறன்.

"என்ன என்ன! மழைபெய்யும்போது பார்த்த பெண்ணா? சாந்தி கிடைத்ததா! அந்தப் பெண்ணை மறுபடியும் பார்த்தாயா என்ன நடந்தது? விளக்கமாகச் சொல் சுந்தரம்" என்று சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"கேள்! உற்சாகமாகக் கேள்! நான் சென்னையில் பைத்தியக் காரனைப் பார்க்கச் சென்றேன்..."

"என்ன சுந்தரம்! நான் கேட்பதைவிட்டுப் பைத்தியக் காரனையும் அவனையும் இவனையும் பற்றிச் சொல்லுகிறாயே" என்று கொஞ்சம் பதற்றத்துடன் கேட்டான்.

"அட, என்னப்பா! சொல்வதற்குள் துடிக்கிறாயே! விவர மாகச் சொல்ல வேண்டாமா?"

"விவரமாகச் சொல்லுவதற்குப் பைத்தியக்காரனைப் பார்க்கப் போனேன் என்று தான் சொல்ல வேண்டுமா?"

"கேளப்பா! "பைத்தியக்காரன்" சினிமாவைப் பார்க்கச் சென்றிருந்தேன்."

"திரைப்படத்தைப் பற்றியா சொல்லுகிறாய்?"

"ஆமாமா! கொட்டகை வாசலில் ஒரே கூட்டம்! விதவித மான "தோகை மயில்கள்" உள்ளே சென்று கொண்டிருந்தன. அந்த மயில் கூட்டத்தில் என் கோகிலத்தையும் கண்டேன். ஆம் கோகிலந் தான்! அவள் சிவப்பிற்கும் அந்தக் கருப்பு ஆடைக்கும் என்ன அழகு தெரியுமா? அரைகுறையாகப் பின்னித் தொங்க விடப்பட்டிருந்த அந்தச் சடை - அலட்சியப் பார்வை - எவரையும் கிறுகிறுக்க வைக்கும் புன்சிரிப்பு இவை என்னை அப்படியே சிலைபோல் நிற்கச் செய்துவிட்டன. அங்கிருந்த மயில்களின் பார்வை எல்லாம் இந்தக் குயிலின் பக்கந்தான். வேடர்களின் கண்களைப் பற்றிக் கூறவா வேண்டும்!

'டிக்கெட்' கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள். அவள் எந்த வகுப்பு 'டிக்கெட்' வாங்குகிறாள் என்பதை அவள் கை நீட்டிய அறையின் மேற்புறத்தில் எழுதியிருந்ததைப் பார்த்து அறிந்து கொண்டேன்.

நானும் அதே 'டிக்கெட்'டை வாங்கிக் கொண்டு மகிழ்ச்சி யோடு உள் நுழைந்தேன். அவள் இருக்கைக்குப் பக்கத்திலேயே இடமும் கிடைத்தது. ஆண்டவனுக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு அமர்ந்தேன். கடைமுழுக்கன்று கண்ட வருத்தக் குறியைக் காண வில்லை. மலர்ச்சிதான் இருந்தது. உதட்டின் சிவப்பும், கண் மையின் கருப்பும் இயற்கை அழகை அதிகப் படுத்திக் காட்டின. அவை நாகரிக நாரீமணிகள் அணியும் வண்ணப்பூச்சுகளின் ஒத்துழைப்பு.

அவளைப் பார்ப்பேன். அவள் பார்த்தால் திரையைப் பார்ப்பேன். இப்படியாக இருந்ததே ஒழிய, பேச வாய்ப்புக் கிடைக்கவில்லை. இருந்தாலும் கண்கள் பேசிக் கொண்டு தான் இருந்தன. அவளோடு எப்படிப் பேசுவது - பேசினால் விடை தருவாளோ என்னவோ என்ற ஐயம் ஊசலாடிக் கொண்டிருந்தது. பிறகு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு "மணி என்ன ஆகிறது" என்று தயவாகக் கேட்டேன்.

"9.25 ஆகிறது" என்று சிறு சிரிப்போடு கலந்து விடை தந்தாள்.

எனக்கு ஒரே மகிழ்ச்சி.

படம் ஆரம்பம் ஆயிற்று. படத்தையும் பாவையையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே வந்தேன். இடையே அவள் பேசத் தொடங்கினாள்.

"பாருங்கோ சார்! இளம் பெண்களைக் கிழவனுக்குப் பிடித்துக் கட்டிவைத்துவிட்டு, அவள் எப்படியோ தவறு செய்து விட்டால் அவளைக் கெட்டுவிட்டாள் - சமூகத் துரோகி என்றெல் லாம் தூற்றுகிறது இந்தச் சமூகம். இது பெரிய அநியாயம். குற்றம் எங்கிருக்கிறது என்று அறிந்து குற்றத்தை நீக்க ஒருவரையும் காணவில்லை - அதைவிட்டுப் பாவம் பெண்களைக் குறை கூறுகிறார்கள்" என்று உணர்ச்சியாகப் பேசினாள்.

"ஆம்! ஆம்!" என்றேன் நான். அவ்வளவு தான் என்னால் பேச முடிந்தது. படமும் அவள் சொன்னதைத் தான் விளக்கிக் கூறியது.

படம் முடியும் சமயம் மழை வந்துவிட்டது. "அடடா! மழை வந்துவிட்டதே! எப்படி வீட்டிற்குப் போவது" என்றேன்.

"ஏன்! உங்கள் வீடு எங்கிருக்கிறது?" என்றாள்.

"நான் இந்த ஊரிலில்லை. என் நண்பன் வீட்டில் தங்கி யுள்ளேன். "மௌண்ட்ரோடு"க்குப் பக்கத்தில் இருக்கிறது" என்றேன்.

"அப்படியானால் என்வீடு பக்கத்தில்தான் இருக்கிறது. அங்கு வந்து இருந்து விட்டுக் காலையில் போகலாம். இனிமேல் 'ட்ராமும்' இல்லை" என்றாள்.

"ம்ம், அதற்கென்ன," என்று அசடு வழியப் பதில் கூறினேன். உள்ளுக்குள்ளே ஆனந்தக்கூத்து. அச்சமும் ஒரு பக்கம் இருந்தது. எல்லாம் அவன் செயல் என்று நானே சொல்லிக்கொண்டேன்.

படமும் முடிந்தது. அவள் அழைப்பிற்கிணங்க அருகிலிருந்த அவள் வீட்டிற்குச் சென்றேன்.

"காப்பி போடலாம் என்றால் இந்த நேரத்தில் பால் எங்கே கிடைக்கப் போகிறது. இதோ 'கலர்' சாப்பிடுங்கள்" என்று தந்தாள்.

மறுக்க மனமில்லை.

"இந்த அறையில் படுத்துக் கொள்ளுங்கள்" என்று பரிவுடன் ஓர் அறையைக் காட்டினாள்.

படுத்துக் கொண்டேன். உறக்கமா வரும்! உள்ளத் துடிப்பு அதிகமாயிற்று. 'என்ன இவ்வளவு அன்பாக இருக்கிறாளே. வேறு ஆடவரையும் காணவில்லை' என்று எண்ணிக் கொண்டிருந்த நான் காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பினேன்.

"வெற்றிலை போடுங்களேன்" என்று சிரித்துக் கொண்டே மெத்தையில் உட்கார்ந்தாள். பாக்குப் பொட்டலம் அவள் கையா லேயே உடைக்கப்பட்டது. சுண்ணாம்பும் அவள் தான் தடவினாள். அப்புறம் எனக்குச் சொல்லிக் கொடுக்கவா வேண்டும்!

சிரித்தாள்; நானும் சிரித்தேன்,

காற்றின் தாக்குதலோ - அலையின் மோதுதலோ இன்றிப் படகு அமைதியாகச் சென்று கொண்டிருந்தது.

"சுந்தரம்! அவளை யாரென்று விசாரித்தாயா?" என்று குறுக்கிட்டுக் கேட்டான் நண்பன் மாறன்.

"ஓ, யாரென்றும் அறிந்துகொண்டேன். இனிமேல் அவள் என் மனைவி என்பதையும் உறுதி செய்துவிட்டேன்; எனது வாழ்க்கைப் பாதையை வேறுவழியில் திருப்பி விட்டேன். ஒரு வரம்பும் செய்து கொண்டேன்".

மாறா! அவள் ஒரு தாசி. பிறப்பிலேயே தாசியல்லள். சமூகம் அவளைத் தாசியாக்கிற்று. அவள் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். பருவம் வந்ததும் பெற்றோர், அவளுடைய மணத்திற்கு முயற்சி செய்தனர். இடையில் அவளுக்கும் அவளுடைய மாமன் மகனுக்கும் காதல் வளர்ந்து வந்தது. அவன் தன் தாயிடம் அவளையே மணக்க வேண்டும் என்று கூறினான். ஆனால் தாய் உடன்படவில்லை. தாய் சொல்லைத் தட்டி நடக்க முடியாத நிலைமையில் அவன் இருந்தான். அவளும் தன் தாயிடம் கூறினாள், அத்தானைத் தான் மணப்பேன் என்று. அவள் உடன்பட்டாலும் 'மாப்பிள்ளை வீட்டார் ஒத்துக் கொள்ளாததால் நாமே வலியப் போவது அழகில்லை' என்று சொல்லிவிட்டாள்.

ஒருநாள் அவளும் அவனும் சந்தித்தனர். "அம்மா சொல் வதை மீறி எப்படிச் செய்வது? உன் விருப்பப்படி உன் வீட்டார் விருப்பப்படி நடந்துகொள். என்மேல் வருத்தப் படாதே." என்று சொல்லிவிட்டான்.

வேறு வழியின்றிக் கிழவன் ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டாள். ஏழ்மையில் பிறந்த இளம் பெண்கள் இப்படிப் பலியாவதைத்தானே இந்தப் புண்ணிய பூமியிலே காண்கிறோம். அவள் மட்டுமென்ன அதற்கு விலக்கா? அவளும் வெகு விரைவில் "விதவைப்" பட்டியலில் சேர்க்கப்பட்டாள். அந்த நிலையில்தான் தாயோடு கடை முழுக்குக்கு "தீர்த்தம்" ஆட வந்திருந்தாள்; பாபத்தைப் போக்கிப் பரமன் அருளைப் பெற வந்திருந்தாள். பாபம் போனாலும் போகா விட்டாலும் 'பரமன் அருள்' கிடைத்தே விட்டது. தங்கி யிருந்த வீட்டில் நள்ளிரவில் பரமன் என்ற இளைஞன் அருளுக்குப் பாத்திர மானாள். பலவகைச் சோதனைகளுக்குப் பிறகு பரமனோடு ஐக்கியமாய் விட்டாள். சில நாளில் பரமன் கங்கையைத் தேடிச் சென்று விட்டான். அவள் சில நாள் அங்கேயே இருந்தாள்.

பாவை, பணமும் கையுமாய் நிற்கையில், பத்திரிகை ஆசிரியர் ஒருவர் அபயமளித்தார். அவர் உதவியால் தான் சென்னைக்கு வந்திருந்தாள். சினிமாவில்கூட ஏதோ "சான்சு"க்கு முயற்சி நடப்ப தாகவும் கூறினாராம்.

இவ்வளவையும் அவள் வாயால் கேட்டால் கல்லும் உருகி விடும். கேட்டுக் கொண்டிருந்த நான், "ஏன் இப்படி யெல்லாம் கெட்டுப் போக வேண்டும்? நல்ல அழகு, இளமை, அறிவு இருக்கிறதே யாரையாவது மணந்துகொண்டால் என்ன?" என்று கேட்டேன்.

"மணமா! நான் விதவை! தாசி! என்னை யார் மணப்பார்கள்? அப்படியே சரி என்று யாரேனும் வந்தாலும், விரும்புவதைப் பெற்றுக் கொண்டு, உதறித் தள்ளிவிட்டு, ஓடிவிடுகிறார்கள். சீர்திருத்தம் பேசி விட்டுச் செயலுக்கு வரும்போது ஓடி ஒளியும் வீரர்களைத்தானே காண்கிறேன். ஒருவரிடம் வாழத்தான் எண்ணி னேன். ஆனால் அதற்கு அற்பாயுள்தான். கழுத்தில் ஒரு கயிறு மட்டுமிருந்தால்... " முடிப்பதற்குள் நான் குறுக்கிட்டு,

"இதோ பார்! நானே உன்னை மணந்து கொள்கிறேன். இணைபிரியாது வாழ்வோம். ஆண்டவன் மீது ஆணை. உன்னைப் பிரியவே மாட்டேன். கடைமுழுக்கன்று கண்டது முதல் உன் வயமாகி விட்டேன். நீ என்ன சொல்லுகிறாய்?" என்றேன்.

"ஆண்டவனை நீங்கள் நம்புகிறீர்களா? ஆண்களே இப்படித் தான். தங்கள் காரியம் ஆகும் வரை அந்த ஆணை இந்த ஆணை என்று பெண்களை ஏமாற்றுவார்கள். பெண்களும் "சாமி" என்றவுடன்

உண்மை என்று நம்பிவிடுகிறார்கள். கடைசியில் ஆடவர்கள், ஆண்டவன் உண்மையில் "கல்" என்பதை மெய்ப்பித்து விடு கிறார்கள். நீங்கள் மட்டுமென்ன கடவுளை...!"

"கண்ணே! என்னையும் அப்படி எண்ணிவிடாதே உண்மையில் நான் கூறுகிறேன். பகிரங்கமாகப் பதிவுத் திருமணம் செய்து கொள்கிறேன். என் வாழ்க்கைப் பயிருக்கு நீதான் மழை! மன மிரங்கிக் கெஞ்சிக் கேட்கிறேன். இனி நீ இங்கிருக்க வேண்டாம். இந்தத் தொழிலும் வேண்டாம். "சினிமா" என்ற முதலை வாயிலும் சிக்க வேண்டாம். நீ அதில் சேர்ந்தால் "சக்கை" ஆக்கப்படுவாய்!

"அந்தோ! எத்தனை பெண்கள் சித்திரவதை செய்யப்படு கிறார்கள் நமது நாட்டில். மூடத்தனத்தால், பெண்ணினத்தை - தாய்வர்க்கத்தை - படுகுழியில் தள்ளிப் பாழ்படுத்துகிறார் களே! இனி அந்தக் கொடுமையை ஒழிப்பதே என் குறிக்கோள். அரசியல் அப்புறம். முதலில் சமூகம் விடுதலை பெற வேண்டும். அந்தப் பணியில் நாம் இருவரும் நின்று தொண்டு செய்வோம்" என்று கூறினேன். அவளும் உடன்பட்டாள்.

"மாறா! பொங்கலன்று எங்கள் இருவர்க்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற ஏற்பாடு செய்துவிட்டேன். நான் பொங் கலன்று உன் கட்சியில் சேர்ந்து விடுவது என்றும் தீர்மானித்து விட்டேன். இனிமேல் நான் ஒரு புது மனிதன். எல்லா வகை யிலும்தான். நீ என்னிடம் அருவருக்கும் சில குறைகளையும் களைந்து விட்டேன்.

"மாறா! என்ன நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீ பேயறைந்தாற் போலப் பேசாமல் சாய்ந்து கொண்டிருக்கிறாயே" என்று தட்டினேன். அப்பொழுதுதான் சுயஉணர்வு வந்தவன் போல எழுந்தான்.

"ம்ம்! சுந்தரம்! உன் மாற்றத்திற்கும் நீ செல்லப்போகும் புதிய மார்க்கத்திற்கும் என் ஆசி" என்றான்.

"அப்பா! மாறா! ஆசியோடு மட்டும் நின்று விடாதே! உன்னுடைய முழு ஒத்துழைப்பும் இருந்தால்தான் அன்று திருமணம் சிறப்பாக நடைபெறும். நீதான் எல்லாம் கவனித்துக் கொள்ள வேண்டும்." என்று சொல்லிவிட்டுப் பிரிந்து விட்டேன்.

இரண்டொரு நாளில் என் நண்பன் மாறனைக் காணவே யில்லை. இருக்கும் இடமும் தெரியவில்லை.

பொங்கலும் வந்து சேர்ந்தது. திருமணம் விமரிசையாக நடந்தது. கடை முழுக்கன்று அவளை விதவையாகக் கண்டேன். இன்று அவள் விதவை என்ற சொல்லுக்குக் கடைமுழுக்குப் போட்டுவிட்டாள். வாழ்த்துகள் - பரிசுகள் - அடேயப்பா! சொல்லிமுடியாது. சீர்திருத்தத் திருமணம் அல்லவா! வெளியூரி லிருந்து ஏராளமான கடிதங்கள் வந்திருந்தன. அவற்றை எடுத்துக் கொண்டுபோய் மாடியில் அவளும் நானும் ஒவ்வொன்றாகப் படித்துக் கொண்டிருந்தோம். ஒரு கடிதம் மட்டும் என் கவனத்தை அதிகமாகக் கவர்ந்தது. அது என் நண்பன் மாறன் கடிதம். ஆவலோடு பிரித்தேன். படித்தேன்.

ஆருயிர் நண்பா! உன் மணத்தில் பங்கெடுத்துக் கொள்ளா மைக்கு என்னை மன்னிப்பாயா? கட்டாயம் மன்னிப்பாய். நான் சீர்திருத்தம் பேசினேன். செயலில் காட்டவில்லை. அவளை - இல்லை மன்னிக்கவும் - உன் மனைவியைத் தாசியாக்கியது சமூகம் மட்டுமன்று. நான்தான் முதற்காரணம். அவள் என் அத்தைமகள். என் தாய் சொல்லுக்காக அவளை மணக்க மறுத்தேன். அவள் அந்நிலைக்கு ஆளானாள். அந்நிலைக்கு ஆளாக்கிய நான் அவள் முகத்தில் எப்படி விழிப்பேன். எப்படி உன் திருமணத்தில் தொண் டாற்ற முடியும்? இப்பொழுது என்னை மன்னிப்பாயா? உங்கள் இருவரையுமே வேண்டுகிறேன் மன்னியுங்கள் என்று. இயன்றால் உங்கள் பிள்ளைகளின் திருமணத்திற்குச் சிங்கப்பூரிலிருந்து வருகிறேன். இன்று கப்பலில் புறப்படுகிறேன். வணக்கம். மன்னிப்பை வேண்டும்.

மாறன்.

*****

கண்ணீரைத் துடைத்துக்கொண்டே கடிதத்தை முடித்தேன். அவளும் விம்மி விம்மி அழுதாள். அந்த விம்மலை மாற்ற வானொலி யைத் திருப்பி விட்டேன். மாறன் கடை முழுக்கன்று அவளைப் பார்த்தவுடன் மழையையும் பாராமல் என்னை இழுத்துக் கொண்டு சென்றதன் காரணம் இப்பொழுது தான் தெரிந்தது. அவன் மணக்க வேண்டிய பெண் இப்பொழுது என் மனைவி.

ம்ம்! நமது மூடத்தனங்களுக்கு என்று "கடை முழுக்கு" வருகிறதோ என்று உள்ளுக்குள்ளே சொல்லிக்கொண்டேன்.

✪✪✪

**6**

# காக்கையின் கடிதங்கள்

*பா*ரதிதாசன் பிறந்தநாள் கொண்டாட்டம் அன்று. பெருங் கூட்டம். கடல்கடந்த தமிழர்கள் தமது தாய்நாட்டில் தோன்றிய - ஒப்பற்ற புரட்சிக் கவிஞர் பிறந்தநாள் விழாவைத் தமிழகத்தை விட உயர்வாகக் கொண்டாட வேண்டும் என்ற எண்ணத்தோடு சிங்கப் பூர்த்தெருக்களையெல்லாம் தோரணங்களாலும் காகிதப்பூக் களாலும் ஒரே அழகாக அலங்கரித் திருந்தார்கள். அன்று சிங்கப்பூர் புதுமாதிரியான அழகுடன் விளங்கியது. பலபேர் கவிஞரைப் பாராட்டினர்.

அவருடைய கவிதை நயங்களை - உவமைத் திறங்களை யெல்லாம் சுவைபடப் பேசினார்கள். பேசும்பொழுது ஒருவர் "சுயமரியாதை கொள் தோழா!" என்ற பாட்டைப் பாடினார். அவ்வளவுதான் எனக்கு ஒரே குழப்பம். தலை சுழன்றது. முகம் கருத்தது. எனது மாற்றத்தைக் கண்ட என் மனைவி - இல்லை - என் காதலி "ஏன் இப்படிப் பித்து பிடித்தது போல் இருக்கிறீர்கள்?" என்றாள். 'ஒன்றுமில்லை' என்று சொல்லி வியர்வையைத் துடைத்துக் கொண்டு 'வா போகலாம்' என்று புறப்பட்டு விட்டேன்.

அவளும் என்னுடன் வந்தாள். "ஏன் இப்படிப் பாதியிலேயே வந்து விட்டீர்கள்?" என்றாள்.

"ஒன்றுமில்லை"

"ஒன்றுமில்லையா? என்னிடங் கூட மறைத்துப் பேசுகின் றீர்களே" என்று கெஞ்சிக் கேட்டாள் கமலம்.

"அஃது.. என் .... சொந்த...ஊரில்...ஒன்றுமில்லை. கமலா! அங்குப் பாடிய பாட்டு - சுயமரியாதைப் பாட்டு இருக்கிறதே. அஃது என் வாழ்நாளில் முக்கிய பகுதியைப் பற்றிக் கொண்டுள்ள பாட்டு. எனது இறந்த கால எண்ணங்களைத் தூண்டிவிட்டது. அதைப் பற்றி ஒன்றுங் கேட்காதே கமலா! பைத்தியம் பிடித்து விடும்போல் இருக்கிறது. சமயம் நேரும்போது சொல்லுகிறேன்."

**நா**ன் எனது தமிழகத்தை - சென்னையை விட்டுச் சிங்கப்பூருக்கு வந்து இரண்டு ஆண்டுகளாகின்றன. கடைகளில் கணக்கெழுதி அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தேன். அங்கு நான் இருந்த வீட்டின் எதிர்வீட்டுப் பெண் தான் கமலம். அவளுக்கும் எனக்கும் காதல் எப்படியோ தோன்றி - வளர்ந்து - முற்றிப் பலனளிக்கத் தொடங்கிவிட்டது. இப்பொழுது அவள் என் காதலியில்லை; மனைவி.

அவள் பல முறை ‘சுயமரியாதை’ப் பாட்டு சம்பந்தமாக நிகழ்ந்ததைக் கேட்பாள். கேட்கும் பொழுதெல்லாம் நான் மழுப்பி விடுவேன். அந்தப் பாட்டுத்தான் என்னைக் கொலைக் காரன் ஆக்கியது. நான் கொலைக்காரன் என்று தெரிந்தால் அவள் என்ன நினைப்பாளோ என்ற அச்சத்தால் அதைப் பற்றிக் கூறவேயில்லை.

ஒருநாள் என் கடிகாரத்தைக் காணவில்லை.

“கமலம்! கடிகாரத்தைப் பார்த்தாயா?” என்றேன்.

“இல்லையே! நான் பார்க்கவில்லையே!” என்று சிரித்தாள்.

அந்தச் சிரிப்பு அவள் திருட்டுத் தனத்தை வெளிப் படுத்தியது.

அட அசடே! உள்ளதைச் சொல்லு! இதிலென்ன விளை யாட்டு, தங்கச் சங்கிலியல்லவா அது! என்றேன்.

“ஆம், நீங்கள் மட்டும் தங்கச் சங்கிலி போட்டுக் கொள்ள வேண்டும்; நான் போட்டுக் கொள்ளக் கூடாது. எத்தனை முறை உங்களைக் கேட்டேன். தங்கவளையல் வேண்டும் வேண்டுமென்று. அதைப் பற்றிய கவலை கொஞ்சங் கூட உங்களுக்கு இல்லையே. அதனால்தான் நான் அதை எடுத்து ஒளித்து வைத்திருக்கிறேன். என்றைக்கு வளையல் வருகிறதோ அன்றுதான் உங்கள் கடிகாரமும் வரும்” என்று சொல்லிவிட்டுச் சமையல் அறைக்கு ஓடிவிட்டாள்.

“ம் ம் இருக்கட்டும். பெட்டியில் தானே வைத்திருப்பாள்” என்று எண்ணி அவளுக்குத் தெரியாமல் சாவியை எடுத்து அவளுடைய பெட்டியைத் திறந்தேன். சில சீலைகளை எடுத்தேன். அடியில் கடிகாரம் இருந்தது. அதனடியில் சில கடிதங்களும் இருந்தன. எனக்குப் பல அய்யங்களை எழுப்பின அந்தக் கடிதங்கள். “இவளுக்குக் கடிதங்கள் வரக் காரணம் என்ன? யார் எழுதியது? அதை ஏன் இவ்வளவு மறைவாகப் பத்திரப் படுத்தி வைக்கவேண்டும்?” என்று எண்ணினேன்.

கடிதங்களைப் பிரித்தேன். சென்னை என்று எழுதியிருந்தது. உடனே இன்னும் என் கவனத்தைக் கவர்ந்தது. எல்லாவற்றையும் எடுத்தேன். பிரித்தேன்.

அன்புமிக்க அம்மா?

என்னை இப்படி ஒரு தமிழ் ஆசிரியர் காலில் கட்டி விட்டீர் களே! என் வாழ்வெல்லாம் பாழாகத்தானே இப்படிச் செய்தீர்கள்! என்ன சுகத்தைக் கண்டேன் இவரைக் கட்டி? கலியாணமாவதற்கு முன் என்னவெல்லாம் நினைத்தேன். அந்த ஆசையெல்லாம் மண்ணாயிற்று. நல்ல புடவையுண்டா? நகையுண்டா? ஒன்று மில்லை! பக்கத்து வீட்டுப் பெண்கள் தங்கள் கணவருடன் சினிமா விற்குப் போகும்போதெல்லாம் என் மனம் என்ன பாடுபடுந் தெரியுமா? அவர்கள் கூடிச் செல்வதைப் பற்றியோ சினிமாவிற்கு நாமும் போகவில்லையே என்பதைப் பற்றியோ நான் பொறாமை கொள்ளவில்லை. அப்பொழுது அந்தப் பெண்கள் உடுத்துள்ள ஆடையும், நகைகளும் என்னை அப்படியே உருக்கிவிடும்.

பாவம்! அவருந்தான் என்ன செய்வார்? அவர் தமிழ் ஆசிரியர்! சம்பளமோ மிகக்குறைவு. சாப்பாட்டிற்கும் வீட்டு வாடகைக்குமே சரியாகிவிடும். அப்புறம் நகைக்கெங்கே போவது? அஃது என் தலையெழுத்து.

இப்படிக்கு,<br>
வள்ளி<br>
சென்னை.

*****

அம்மா!

உங்கள் கடிதம் கிடைத்தது. வருத்தப்பட வேண்டாம்; என்று எழுதியிருக்கிறீர்கள். அதன்படியே நடந்து கொள்ளுகிறேன். ஆனால் அவரே என் வருத்தத்தைப் போக்கிவிட்டார். நகைகள் செய்தல்ல. அன்பு செய்து என்னை மகிழச் செய்கிறார். என் முகம் சிறிது வாட விடமாட்டார். அவர் செய்யுந் தலையன்பு என்நகைப் பைத்தியத்தை நீக்கிவிட்டது. இதமாகப் பேசிப் பேசிச் சிரிக்க வைத்து விடுகிறார். இருந்தாலும் நானும் பெண்தானே! எப்பொழுதாவது புடவை நினைப்பு வந்து விடும். உடனே அவர் கண்டு கொள்வார். கவலைப் படாதே! இன்னும் ஐந்துநாளில் புதுப்புடவை எடுத்து வருகிறேன்

என்று சொல்லுவார். அதன்படியே புடவையும் வந்துவிடும். பின்னர் என்றைக்காவது சொல்லுவார் பத்திரிகைக்குக் கட்டுரை எழுதிக் கொடுத்து, அந்தப் பணத்தால் வாங்கினேன் என்று.

அவரிடம் ஒரே ஒரு கெட்ட குணம் இருக்கிறதம்மா! சும்மா பேசும்பொழுது நல்ல தமிழில் பேசு! நல்ல தமிழில் பேசு! என்று தொந்தரவு செய்கிறார்; சமஸ்கிருதம் என்று கூடச் சொல்லக் கூடாது. வடமொழி என்று சொல்லு என்றெல்லாம் தொந்தரவு செய்கிறார். எனக்குக் கஷ்டமாக - இல்லையில்லை - துன்பமா யிருக்கிறது. மற்ற வகையில் குறைவில்லாமல் இருக்கிறோம்.

வள்ளி.

*****

அம்மா! நலம்.

இப்பொழுது உன் மகள் தமிழ்ப் புலமை மிக்காள். என் புலமையைக் காட்டி முடங்கல் (கடிதம்) வரைவேன். ஆனால் உனக்கு விளங்காதே என்றுதான் எளிய நடையில் எழுதுகிறேன். முன் கடிதத்தில் அவர் கூறுவதெல்லாம் தொல்லை யாயிருக் கிறது என்றல்லவா எழுதியிருந்தேன். அஃது என் அறியாமை. என்போன்ற பெண்களெல்லாம் நமது தாய் மொழியைப் புறக்கணித்ததால்தான் இந்த இழிநிலை வந்துள்ளது.

இப்பொழுது எனக்கு நல்ல தமிழ் அறிவை ஊட்டி விட்டார். தனித்தமிழில்தான் உரையாடுவோம். இலக்கியங் களை இருவருமே சுவைப்போம். கல்வியழகை உணர்ந்தபிறகே நகையழகை மறந்தேன்.

அவர் பள்ளியிலிருந்து வரும் பொழுது 'காக்கை!' என்று அழைத்துக் கொண்டே வருவார். 'வருக, வருக' என்று என் சிரித்த முகம் வரவேற்கும்.

காக்கை என்றதும் உனக்கு ஒன்றுமே புரியாது; அஃது என் பெயர். அவர் அருமையாக இட்ட பெயர். வள்ளி - ஆறுமுகம் பொருத்தமான பெயராயிருந்தாலும் அவருக்கு அது பிடிக்க வில்லை. அவர் பெயரை *நக்கீரன்* என்று மாற்றிக் கொண்டார். எனக்கும் *காக்கை பாடினியார்* என்ற பெயரைச் சூட்டினார். அதன் சுருக்கமாகத்தான் 'காக்கை!' என்று என்னை அன்போடு அழைக் கிறார்.

லில்லி, ரோசு, ரமணிபாய் என்ற இந்தப் பெயர்களை விட எனக்குக் காக்கை என்ற பெயர் மிகமிகப் பிடித்திருக்கிறது.

இங்ஙனம்
காக்கைபாடினியார்.

*****

இந்தக் கடிதங்கள் படிக்கப் படிக்கச் சுவையாக இருந்தன. மேலும் படித்தேன்.

அம்மா!

இருவரும் நலமே. உங்கள் கடிதத்தில் கடவுள் எனக்கு நன்னிலையைக் கொடுத்தார் என்று எழுதியிருந்தீர்கள். அந்த நிலையைக் கடவுளும் கொடுக்க வில்லை, யாருங் கொடுக்க வில்லை. அவருடைய முயற்சியும் என் அறிவுந்தான் எங்கள் மகிழ்ச்சிக்குக் காரணம். கடவுள் கொடுத்ததாயிருந்தால் பணத்தைக் கொடுத்திருக்கலாமே! இன்னும் அவர் சம்பளம் அப்படியேதான் இருக்கிறது. ஒரு சல்லிகூட உயரவில்லை! ஏதோ அவர் ஊட்டிய அறிவாலும் அன்பாலுந்தான் நாங்கள் கவலையற்று இடுக்கண் களைந்து வாழ்கிறோம்.

கடவுள் கொள்கையைப் பற்றியும் அடிக்கடி நாங்கள் பேசிக் கொள்வோம். தன் முயற்சியில் நம்பிக்கையிழந்தவரும், சுயநலத் தாருந்தான் அந்தச் சொல்லைத் துணைக்கழைப்பார்கள். பாரதியார் கூட "சிவலோகம் வைகுந்தம் என்பதெல்லாம் பித்தர்களின் கூற்று" என்று சொல்லியிருக்கிறார். இப்போது உயிரோடுள்ள - சென்னையி லேயிருக்கின்றன வ.ரா. என்ற அறிஞர் கூட, கடவுள், விதி என்ப தெல்லாம் "சுத்தப்பொய்" என்று கூறுகிறார்.

"கடவுள் நரகம் என்பதெல்லாம் மக்களை ஏய்ப்பதற்காக ஒரு கூட்டத்தால் அமைக்கப்பட்ட எழுத்துக் கூட்டங்கள்" என்று எங்கோ படித்த நினைப்பிருக்கிறது. இப்படியெல்லாம் அறிஞர்கள் தன்னம்பிக்கையில்தான் உறுதி வேண்டும் என்று சொல்லியிருக் கிறார்கள். இதை எல்லாம் எழுதினால் நீ என்னைப் பற்றித் தவறான எண்ணங் கொள்வாய் என்று இந்த அளவுடன் நிறுத்துகிறேன்.

வணக்கம்.
காக்கை.

*****

அம்மா!

இப்பொழுது எழுதும் இந்தக் கடிதம் வீட்டிலிருந்து எழுத வில்லை. சிறைக்குள்ளிருந்து எழுதுகிறேன். அவர் ஒரு பக்கம் சிறையுள் கிடக்கிறார். நான் ஒரு பக்கம் அடைபட்டுக் கிடக்கிறேன். நாங்கள் மட்டுமில்லை. உங்கள் பேரன் - மெய்யழகன் ஆறுமாதம் நிரம்பப் பெறாத கைக்குழந்தையும் சிறைக்குள்ளே என்னுடன் தான் இருக்கிறான்.

குடும்பத்துடன் சிறைப்பட என்ன குற்றம் செய்திருப்பார் கள் என்று எண்ணலாம்; பெருங்குற்றந்தான் செய்தோம். இன்றுள்ள சட்டப்படி அரசாங்கத்தை எதிர்த்தோம் என்று குற்றம் சாட்டப் பட்டோம். ஆம், அரசாங்கம் இந்தியைத் திணித்தது. தமிழர்கள் எதிர்த்தார்கள். தாய்மொழியே தெரியாத மக்கள் வாழும் நாட்டில் மற்றொரு மொழியைப் புகுத்த ஒப்புக்கொள்ள மாட்டோம் என்று. அந்தப் படையில் உங்கள் மருமகனும் சேர்ந்தார். கைது செய்யப் பட்டார். பெண்கள் படையும் திரண்டது. அதில் நானும் பங்கு கொண்டேன். ஆண்மை மிக்க அரசாங்கம் என்னையும் சிறைப் படுத்தியது.

நீ நினைப்பாய் கடவுளைப் பற்றியெல்லாம் என்னென் னவோ எழுதினாள், நாத்திகம் பேசினாள். அதன் விளைவுதான் இது என்று. அது தவறு. ஆணவம் பிடித்த அதிகாரவர்க்கம் திமிர் கொண்டு இதைச் செய்தால் இதை ஏன் கடவுள் மீது ஏற்றவேண்டும்? தாய்மொழி வளர வேண்டுமென்று சொன்னால் அதற்குத் தண்டனை தரும் அரசு இருந்தாலென்ன இறந்தாலென்ன? ஆனால் சிறைப் பட்டதற்கு மகிழத்தான் செய்கிறேன். தமிழுக்குத் தொண்டு செய்தோமே என்று. அதைவிட என் மகனும் இந்தி எதிர்ப்புப் போரிலே சிறை சென்றான் என்று பெரிதும் மகிழ்கின்றேன். இந்தக் கடிதம் உன் கைக்குக் கிடைக்குமோ கிடைக்காதோ, தெரிய வில்லை.

காக்கை

சென்னை

*****

*அம்மா!*

*நலம் என்று எழுத என் கைகள் நடுங்குகின்றன. உன் மகள் இப்பொழுது விதவை. யாரோ ஒரு பாதகன் உன் மருமகனைக் கொன்றுவிட்டான். தமிழாசிரியர்கள் ஒன்று கூடிக் கழகம் ஒன்று நிறுவித் தமிழை முதன் மொழியாக்கவும், சம்பள உயர்வுக்காகவும் பாடுபட்டார்கள். அதில் உன் மருமகன்தான் செயலாளர். அல்லும் பகலும் அரும்பாடுபட்டு வந்தார். சில இரவுகளிலே வீட்டிற்குக் கூட வருவதில்லை. அமைச்சர்கள் வீட்டிலே அவருடைய பெயர் அடிக்கடி சொல்லப்படுகிறது என்று கூடக் கேள்வி. உடன் வேலை செய்யும் கூட்டத்திலே கூடப் பொறாமை கொண்ட விரோதிகள் இருந்ததாகவும் சொல்லுகிறார்கள். எப்படியோ தெரியவில்லை. எவனோ பாவி என் அன்பரைக் குத்திக் கொன்றுவிட்டான். வழக்கு ஒன்றுமில்லாது போயிற்று. ஆம்; ஏழைத் தமிழாசிரியனை அதுவும் - சீர்த்திருத்தக்காரனை யார் கவனிக்கப் போகிறார்கள்?*

*இனிமேல் என்னைக் "காக்கை!" என்று அன்போடு அழைக்க யார் இருக்கிறார்கள்? இங்குள்ள புறநானூறு - கலித்தொகை அந்தப் புத்தகங்களைப் பார்க்கும்போது நெஞ்சம் குபீர் என்று - பற்று கிறதே! பாவி! என் உயிரைப் பிரித்து விட்டானே! அவனைத் திட்டுவதால் பலன் என்ன? நாட்டின் மீது உண்மையாகப் பற்றுக் கொண்டு - எதையும் தியாகம் செய்கின்ற - நேர்மையான தொண்டர் களுக்குக் கிடைக்கும் பரிசில் இது தானே!*

*அம்மா! நான் ஆதரவற்று நிற்கிறேன்.*

*காக்கை.*

*படித்துக் கொண்டிருந்தேன். பூமி சுற்றியது. தடார் என்று பெட்டியின் மீது மயங்கிவிழுந்து விட்டேன். அதன்பின் நடந்த தொன்றும் எனக்குத் தெரியாது. விழித்துப் பார்க்கும் பொழுது என் மனைவி கமலத்தின் மடியில் படுத்திருந்தேன்.*

*"ஏன் இப்படி மயங்கி விழுந்துவிட்டீர்கள்?" என்று கேட்டாள் கமலம்.*

*"ஒன்றுமில்லை, சொல்லுகிறேன்; இந்தக் கடிதத்தையும் படி!" என்றேன்.*

*வாங்கிப் படித்தாள்.*

*அம்மா!*

சென்ற கடிதத்தில் ஆதரவற்று நிற்கிறேன், என்று எழுதி யிருந்தேன். ஒருவகையில் ஆதரவும் ஆறுதலும் கிடைத்தது. அவர் மேற்கொண்ட பொதுநலத் தொண்டில் இறங்கியுள்ளேன். தமிழ்க் கழகத்தார் பெண்பள்ளி ஒன்று நிறுவி அதில் என்னை ஆசிரியை யாக்கியுள்ளார்கள். அதில் பணியாற்றி வருவதால் மன ஆறுதல் அடைந்து வருகிறேன். இலக்கியங்களும் மெய்யழகனும் அவரில் லாக்குறையை நிறைவேற்றுகிறார்கள். என்னை சிங்கப்பூருக்கு வருமாறு எழுதியிருந்தாய். நான் சிங்கப்பூருக்கு வருவதாக இல்லை. இங்கேயே இருந்து இன்னும் பல பொதுப்பணி செய்ய விரும்பி யுள்ளேன். தம்பி தங்கை நலனுக்கு அடிக்கடி எழுதிக் கொண் டிருங்கள்.

வணக்கம்
காக்கை

படித்து முடித்தாள்.

"அவள் யார்?"

அவள் என் அக்காள். நாங்கள் சென்னையிலிருக்கும் பொழுது அவளுக்குக் கலியாணமாகிவிட்டது. கலியாண மானவுடனேயே நாங்கள் சிங்கப்பூருக்கு வந்துவிட்டோம்" என்றாள்.

அப்பொழுது என் மைத்துனன் "சுயமரியாதை கொள்!" என்று பாடிக்கொண்டே வந்தான்.

"வேலா! அந்தப் பாட்டைப் பாடாதே! நிறுத்து!" என்றேன்.

ஏன் இப்படிச் சொல்லுகிறீர்கள்? அந்தப் பாட்டென்றால் ஏன் உங்களுக்குப் பிடிக்கவில்லை? சொல்லுகிறேன், சொல்லு கிறேன் என்று ஏமாற்றிக் கொண்டே வருகிறீர்களே!" என்றாள் கமலம்.

"கமலம்! சொல்லுகிறேன் கேள்! எனது சொந்த ஊர் சென்னை. நானும் தமிழ் ஆசிரியன்தான். ஆனால் என் கொள்கை வேறு. அவன் கொள்கை வேறு. இதனாலே அவனைக் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை. மேலும் தமிழாசிரியர் கழகத்திலே செயலாளர் பதவி எனக்குக் கிடைக்கவேண்டியது. அவனுக்குக் கிடைத்து விட்டது. வெறுப்பும் பொறாமையும் சேர்ந்தன.

"ஒருநாள் அவன் கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்த்தேன். திரும்ப அவன் அதை விளக்கிப் பேசினான். அவனுக்கே வெற்றி கிடைத்தது. தோல்வி, எனக்கு மிகுந்த அவமானத்தை உண்டாக்கியது.

அது கோபதத்தைக் கிளறி விட்டது. வெறுப்பு - பொறாமை இவற்றோடு கோபமும் சேர்ந்தது. என்னைப் போலவே கிருஷ்ண மாச்சாரி என்பவனும் ஒருவன் இருந்தான். இருவரும் மந்திராலோ சனை செய்தோம். அவன் என்னை ஏவினான். நான் எனது கத்தியை ஏவினேன். நக்கீரன் கொலை யுண்டான். நான் கொலைக்காரன் ஆனேன்.

"செய்தி பரவுவதற்கு முன் சென்னையை விட்டுக் கிளம்பி னேன். சிங்கப்பூர் வந்து சேர்ந்தேன். இங்கு, உன்னை - யாருக்குப் பெருங்கேட்டை விளைத்தேனோ அவள் தங்கை யையே மணந் தேன். அவள் கணவனைக் கொன்றுவிட்டு, அவளுடைய தங்கைக்குக் கணவன் ஆனேன்.

"அவன் அடிக்கடி பாடுகின்ற பாட்டுத்தான் சுய மரியாதைப் பாட்டு. எந்த மேடையிலும் பாடுவான். அதைக் கேட்கும்போ தெல்லாம் எனக்கு எரிச்சல் உண்டாகும். இப்பொழுது அந்தப் பாட்டைக் கேட்கும் பொழுது கொலை நினைவு வந்து விடுகிறது. அதனால் தான் அதைப் பாடவேண்டாம் என்கிறேன். அன்று பாரதிதாசன் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் பாதியில் எழுந்துவரக் காரணமும் இதுதான்.

'இப்பொழுதுதான் உணருகிறேன்' கருத்து வேற்றுமைக் காக மனிதத் தன்மையை இழந்தோமே என்று. அதிலும் பிறன் ஏவலால் அறிவையிழந்து இந்தக் கொடுஞ்செயலைச் செய்துவிட்டேனே! இன்னும் என்னைப் போல எத்துணைப் பேர் தமிழகத்தில் இருக் கிறார்களோ? இனப்பற்று என்றுதான் வருமோ?

"கமலம்! உன் குடும்பத்தாருக்கும் உன் அக்காளுக்கும் இத்தகைய பெருந்தீங்கை இழைத்த என்னை மன்னிப்பாயா?" என்று கதறிவிட்டேன்.

அவள் அங்கிருந்தாலல்லவா என்னை மன்னிக்க முடியும்?

✪✪✪

# 7

# கிருஷ்ணார்ச்சுன யுத்தம்

"அவன் இப்பொழுது மட்டுமில்லை என்னோடு போட்டி போடுவது; எப்பொழுது பார்த்தாலும் போட்டிதான். எதை எடுத்தாலும் போட்டிதான்; பழனி! இனிமேல் அவனைச் சும்மா விடப் போவதில்லை. என்றைக்காவது ஒருநாள் என் குணத்தைக் காட்டத்தான் போகிறேன். என்னைவிட அவன் எந்தவகையில் சிறந்தவன். ஏதோ அழகாகப் பேசத் தெரிந்திருக்கிறான். அவ்வளவு தானே! காரியத்திலே ஒன்றையும் காணோமே?" என்று கிருஷ்ணன் தன் நண்பன் பழனியிடம் கூறினான்.

"சேச்சே! அவன் அப்படிப் போட்டி மனப்பான்மை படைத்த வனில்லையே! நிரம்ப நல்ல குணங்கள் படைத்தவன். அதுவும் தொழிலாளர் கழகம் என்றால் அல்லும் பகலும் பாடுபடுகிறான். அவனை இப்படி எல்லாம் சொல்லுகிறாயே!" என்று சமாதானம் கூறினான் பழனி.

"நல்லவனா! போப்பா! உனக்கு அவன் குணம் சரியாகத் தெரியாது; அப்படியானால் நம் கழகச் செயலாளர் தேர்தலுக்கு நான் நிற்கும் போது அவன் ஏன் போட்டியிடுகிறான்?"

"அவன் தேர்தலுக்கு நிற்கவில்லை என்றுதான் சொன்னான். நமது தோழர்கள்தாம் அவனைக் கட்டாயப் படுத்தி நிற்கும்படி சொல்லியிருக்கிறார்கள்".

"நிற்கட்டும் நிற்கட்டும்! அவனைத் தோற்கடிக்கா விட்டால்..."

மனோகரா மில் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் நன்மைக்காக ஒரு கழகம் நிறுவியிருந்தார்கள். அந்த மில் தொழி லாளர்கள்தாம் கிருஷ்ணனும் அவனால் குறை கூறப் பட்ட அர்ச்சுனனும். அர்ச்சுனன் மேடையில் நன்றாகப் பேசுவான். பிழை என்று பட்டதை அஞ்சாது எடுத்துக் கூறுவான். தொழிலாளர் நலனுக்கு எந்தெந்தத் துறைகள் முட்டுக் கட்டையாகத் தோன்றுகின்றனவோ அவற்றை யெல்லாம் வன்மையாகக் கண்டிப்பான்; முற்போக்குக் கொள்கை யுடையவன்.

கிருஷ்ணனும் தொழிலாளர் நலனுக்குப் பாடுபடு பவன்தான். ஆனால் பழமையில் மோகங் கொண்டவன். பதவியில் ஆசை யுண்டு. அந்தப் பதவிப் பித்து இருப்பதால் பொறாமை எண்ணமும் வளர்ந்து வந்தது. முரட்டுத்தனமும் இயற்கையிலேயே உடையவன்.

அவர்களின் கழகத் தேர்தல் வந்தது. தேர்தலுக்குக் கிருஷ்ணன் நின்றான். மற்றவர்கள் வற்புறுத்தலால் அர்ச்சுனனும் நிறுத்தப் பட்டான்.

கிருஷ்ணன் கொள்கை வேறு. அர்ச்சுனன் கொள்கை வேறு. இந்தக் காரணங்களால் ஏற்பட்ட பொறாமையால் தான் கிருஷ்ணன் பழனியிடம் அர்ச்சுனனைப் பற்றிக் குறை கூறிக் கொண்டிருந்தான்.

பழனி விடைபெற்று வீட்டுக்கு வரும் வழியில் அர்ச்சுனனைக் கண்டான்.

"என்ன அர்ச்சுனா! நாளை நடக்கப் போகும் தேர்தலில் வெற்றி உனக்கா அவனுக்கா!"

"நான் மாட்டேன் என்றேன். கேட்கவில்லை. அதுவும் கிருஷ்ணன் நிற்கும் பொழுது நான் நின்றால் அவர் வருத்தப்படு வார் என்று சொன்னேன். ஒருவரும் என் சொல்லைக் கேட்க வில்லை; வெற்றியாருக்குக் கிடைத்தா லென்ன? நமக்கு வேண்டியது தொழிலாளரின் வெற்றி தானே! அந்த வெற்றிக்கு நாம் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும். அதைத் தான் நான் விரும்புகிறேன்."

"வணக்கம். நேரமாகிறது. நான் வருகிறேன்".

*****

ஒருநாள் மாலை, கழகத்தில் கூட்டம் நடைபெற்றது.

"நாம் ஒற்றுமையாக இருந்தால்தான் நமது நலனை. உரிமையைப் போராடிப் பெற முடியும். முதலாளித்துவம் நமக்குப் பல வகையில் தீங்கு செய்து கொண்டு வருகிறது. அத்தீங்குகளிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளவே நமது கழகம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதையறிந்து நாம் வேலை செய்ய வேண்டும். நமது நோக்கத்தை விட்டுக் கழகத்தை வேறு வழிகளில் செலுத்தாமல் இருக்க வேண்டும். அகிம்சை வழியிலே சென்று தொழிலாளர் வெற்றி பெற வேண்டும் என்று ஆண்டவனை வேண்டிக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக் கொள்ளுகிறேன்." என்று பேசிவிட்டு உட்கார்ந்தான் கிருஷ்ணன்.

அடுத்தபடி அர்ச்சுனன் பேசவேண்டுமென்று தலைவர் குறிப்பிட்டார்.

"தோழர்களே! நமது கழகம் தொழிலாளர் நலனை விட்டு வேறு வழியில் செல்வதாகக் கருதுகிறார் தோழர் கிருஷ்ணன். எந்த வழியில் போனாலும் நமது நலனுக்காகத்தான் செல்கிறதே ஒழியத் தீமைக்காகச் செல்லவில்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன் செயலாளன் என்ற முறையில். நாம்வெற்றி பெற வேண்டுமானால் - நமது உரிமையைப் பெற வேண்டுமானால், நாம் மனிதனாக வாழ வேண்டுமானால் நமது முயற்சியில் - ஊக்கத்தில் - உழைப்பில் - ஒற்றுமையில் நம்பிக்கை வைக்க வேண்டும். அந்த நம்பிக்கையை இழந்துவிட்டு ஆண்டவன் உதவியை இந்த விடயத்தில் நாடுவது ஆபத்து மட்டுமன்று, தோல்வியும் துயரமும் அடையச் செய்யும். ஆண்டவன், முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர். வைரமுடி, பீதாம்பரம் இவற்றை இறக்கி வைத்துவிட்டுத் தொழிலாளர் குறையைக் கவனிப்பதற்கு அவருக்கு நேரமில்லை. (சிரிப்பு) முதலாளித்துவம் நமது இரத்தத்தை உறிஞ்சிவிட்டு இரத்தினத்திற்கு விலை கேட்கிறது. இது ஏன்? என்று கேட்டால் உலகம் 'விதி' என்று விடை தருகிறது. இந்த 'விதியைச் சுயநலமிகளின் சதி' என்று முதலில் உணர வேண்டும். அதை முறியடித்தால் தான் நமது முன்னேற்றத் தை நாம் காண முடியும். ஆகவே 'விதி' என்று கூறும் வீணரின் கூற்றை நம்பாதீர்கள். நாம் இருபதாம் நூற்றாண்டில் வாழ்கிறோம். இரஷ்யாவைப் பார்க்கிறோம். இன்று விடுதலை பெற்ற ஒவ்வொரு நாட்டையும் பார்க்கிறோம். எப்படி அவை அந்த நிலையடைந்தன? அந்த முறையில் நாமும் முயல வேண்டும். அதை விடுத்துப் பத்தாம் நூற்றாண்டுக்கு முந்தின பழைய முறையைப் பின்பற்றி நடப்பதில் பயனில்லை. ஆகவே நமது உரிமைகளைப் பெற நாம் புரட்சி முறைகளைப் பின்பற்றி வெற்றி காணுவோமாக என்று கூறி நான் விடைபெற்றுக் கொள்கிறேன்" என்று கூறி முடித்தான் அர்ச்சுனன்.

இந்தப் பேச்சு, கிருஷ்ணன் கோபத்தைக் கிளறிவிட்டது. "பார்த்தாயா பழனி! அவன் பேசுவதை. அவன் நான் சொன்னதை அப்படியே தாக்கிப் பேசுகிறான். இருக்கட்டும். இவன் என்கையில் ஒருநாளைக்காவது அகப்படாமல் போக மாட்டான். பார்த்துக் கொள்கிறேன்" என்று கிருஷ்ணன் கோபமாகக் கூறினான்.

அதே சமயத்தில் மாதர் கழகச் செயலாளர் மதுரமும் அங்கு வந்திருந்தாள். அவள் அர்ச்சுனனைப் பார்த்து 'உங்கள் பேச்சு மிக நன்றாக இருந்தது' என்று பாராட்டியதோடு நில்லாமல் கை குலுக்கியதையும் பார்த்து விட்டான் கிருஷ்ணன்.

அதன் பிறகு கேட்க வேண்டுமா? கிருஷ்ணனுக்கு நெற்றிக் கண் இல்லாத குறைதான். இருந்திருந்தால் அர்ச்சுனனை அங்கேயே சுட்டெரித்திருப்பான். சக்கராயுதங் கூட இல்லாமற் போய் விட்டது. என் செய்வான் சட்டென்று எழுந்து சென்று விட்டான்.

அர்ச்சுனன் பேச்சில் மயங்கி, அவன் கை குலுக்கில், இன்ப மடைந்த மதுரத்தின் அழைப்பு அடிக்கடி அர்ச்சுனனுக்குக் கிடைத்தது - கழகத்தின் சார்பிலும் தனிப்பட்ட முறையிலும் அவனும் தட்டுவ தில்லை.

இச்செயலெல்லாம் கிருஷ்ணனுக்கு ஆத்திரத்தை அதிகப் படுத்தியது. அவள் அவனுடைய அத்தை மகள். கொஞ்சம் பணம் படைத்தவள். படித்தவளுங்கூட. முறைமை யால் மணக்க எண்ணங் கொண்டிருந்தான் கிருஷ்ணன். ஆனால் அவள் விரும்பினால் தானே!

அவள் காதல் முழுதும் அர்ச்சுனனிடந்தான். அர்ச்சுனனை விடக் கிருஷ்ணன் எவ்வளவோ அழகில் சிறந்தவன். என்றாலும் அவள் அவனை விரும்பவில்லை. ஆம்! உண்மைக் காதலுக்குச் சாதி வேற்றுமை - ஏழை பணக்காரன் என்ற தன்மை, இவை யெல்லாம் கிடையாதென்றால் அழகு மட்டும் என்ன தள்ளுபடியா? அழகையும் அந்தப் பட்டியலிலே சேர்த்து விட்டாள் மதுரம்.

'கிருஷ்ணன் - மதுரமாக ' வாழ எண்ணினான் கிருஷ்ணன். ஆனால் அவன் எண்ணத்திற்கு ஓர் அர்ச்சுனன் குறுக்கிட்டான். இந்த எண்ணத்திற்கு மட்டும் யாரேனும் குறுக்கிட்டால் கோழையா யிருந்தாலும் அவனுக்குக் கொஞ்சம் வீரந்தோன்றும். கிருஷ்ணன் இயல்பிலேயே முரடன். பேச்சுத்தான் அகிம்சை. செயல் வேறுதான். அவன் 'சந்தர்ப்பத்தை' எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

*****

"நீங்கள் நாளை நடைபெறப் போகும் பொதுக் கூட்டத்தில் கொடியேற்றி வைக்க வரவேண்டும்" என்று அர்ச்சுனன் மதுரத்திடம் கேட்டான்.

"என்ன பொதுக்கூட்டம்?"

"**திராவிடர் கழகப்** பொதுக் கூட்டம். தலைவர் பட்டுக் கோட்டைப் பக்கிரிசாமி; கிருஷ்ணனும் வருகிறார்".

"கிருஷ்ணனா! அவர் காங்கிரசில் இருப்பவராயிற்றே!" என்று வியப்புடன் கேட்டாள் மதுரம்.

"நீங்கள் நினைக்கும் அந்தக் கிருஷ்ணனில்லை.. நான் சொல்வது நகைச்சுவை மன்னரை".

"ஓ! அவரா! அதுசரி...! நான் வேறு கட்சியில் விருப்பங் கொண்டவளாயிற்றே! என்னைத் திராவிடர் கழகக் கொடியேற்ற அழைக்கின்றீர்களே!"

"அம்மையே இரண்டு கழகத்திற்கும் பெரிதும் வேற்றுமை யேயில்லை. உங்கள் கட்சி பொருளாதாரத்தில் பொதுமை காண விழைகிறது. திராவிடர் கழகம் பணம் -சாதி - மதம் முதலிய எத்துறையிலும் சமதர்மம் காணப்பாடுபடுகிறது. ஆக இரண்டின் நோக்கமும் சமதர்மந்தான்..."

"அது சரி! அது எப்படியிருந்தாலும் நீங்கள் விரும்புவதைத் தான் நான் விரும்புகிறேன். அப்படியே ஆகட்டும் இருங்கள் இதோ வருகிறேன்... இந்தக் காப்பியைச் சாப்பிடுங்கள்!" என்று நீட்டினாள்.

அவன் 'டம்ளரை'ப் பற்றினான். அவள் பிடியை விடாமல் அவனையே பார்த்தாள். அவன் 'என்ன' என்று நிமிர்ந்தான். அவள் பார்வையில் ஒரு விதச் சோகம் கப்பிக் கொண்டிருந்தது.

"சகோதரி! ஏன் இப்படி...?"

"இனிமேல் சகோதரி என்று அழைக்காதீர்கள்! எனக்கென்ன பேரா இல்லை?" என்று அவள் நளினமாகப் பேசியதிலிருந்து அவள் கருத்தை நன்கு புரிந்து கொண்டான்.

"மதுரம்! நீங்கள் தவறான வழியில் செல்கிறீர்கள்"

"இல்லை; இனிமேல் அப்படிச் செல்லவில்லை. இன்று முதல் நான் உங்கள் கழகத்தில் சேர்ந்து விடுகிறேன்."

"அதை நான் சொல்லவில்லை!"

"பின் எதைச் சொல்கிறீர்கள்? நான் இதுவரை தவறிய தில்லையே!"

"இருக்கலாம்! இப்பொழுது என்னளவில் தவறாக.."

"தவறாக நான் ஒன்றும் நினைக்கவில்லை. உங்களுக்கும் திருமணமாகவில்லை எனக்கும்!"

"நீங்கள் மாதர் கழகச் செயலாளர். ஆதலால் நீங்களும் நாட்டிற்காக ஒத்துழைப்பீர்கள் என்றல்லவா நான் இவ்வளவு நெருங்கிப் பழகினேன்!"

"ஆம், அதிலென்ன தவறு. நானும் அதைத்தான் கூறுகிறேன். வெளியிலிருந்து உதவுவதை விட உடனிருந்து உதவலாம் என்று எண்ணுகிறேன். வாழ்க்கைத் துணைவியாயிருந்து துணை செய்ய எண்ணுகிறேன். ஏன் இப்படி நடுங்குகிறீர்கள்?"

மதுரம் அம்மையே? உங்கள் கையிலும் என் கையிலும் பொறுப்பு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது என்பதை மறந்து பேசுகிறீர்கள். பொறுப்புள்ள நாமே தவறிவிட்டால் மற்றவர்கள் என்ன நினைப் பார்கள்!"

"அப்படியானால் பொறுப்பை ஏற்பவர்களுக்குக் காதல் வாழ்வே கிடையாதா?"

"ஆம்; என் வரையில் அப்படித்தான். என் நாட்டு மக்கள். என் இனத்தவர் அடிமைப்பட்டு, மாற்றான் காலடியில் மடிந்து கிடப்பதைக் கண்டு என் நெஞ்சு கொதிக்கிறது. அவர்களின் நலத்தைக் கருதி விடுதலை வேட்கை ஊறிக் கிடக்கும் என் நெஞ்சத்தில் காதலுக்கு இடமில்லை. என் கழுத்து மண மாலையைத் தாங்காது. நாட்டின் விடுதலைக்காகத் தூக்குக் கயிற்றை வேண்டுமானால் மகிழ்வுடன் தாங்கும். உங்கள் எண்ணத்தை விட்டுவிடுவதுதான் நல்லது" என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது அவன் கண்கள் அவள் கன்னத்தைவிட அதிகமாகச் சிவந்திருந்தன.

"சரி! நான் நாளைக் கூட்டத்திற்கு வருகிறேன்; நீங்கள் போய்வரலாம்! என்று விடை தந்தாள். மதுரம் கண்ணீர் சொட்டு வதை அவன் பார்க்கவில்லை. சென்றுவிட்டான்.

"அப்பப்பா பட்டணத்தில் குடியிருக்க இடம் கிடைத்தாலும் இவர் உள்ளத்தில் இடம் கிடைக்காது போல் இருக்கிறதே" என்று எண்ணிக்கொண்டே படுத்து விட்டாள்.

கிருஷ்ணனுக்கு நல்ல 'சந்தர்ப்பம்' கிடைத்தது. 'காந்தி சங்க'த்திற்கு விரைந்து சென்றான். "நாளைக் கருப்புச் சட்டை ஊர்வலம் நடக்கப்போகிறதாம். என்ன அட்டகாசம் செய்கிறார்கள்!

நாளைக்கு இவர்கள் கொட்டத்தை அடக்க வேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்? என்று அங்கு இருந்தவர்களோடு 'மந்திரா லோசனை' செய்தான்.

ஒருவர் "அவர்கள் கூட்டம் நடத்தினால் நமக்கென்ன? நமக்கு அவர்கள் என்ன கெடுதல் செய்கிறார்கள்?" என்றார்.

"இவன் ஆகஸ்டு துரோகியல்லவா! இப்படித்தான் பேசுவான். அந்தப் பயல்களெல்லாம் கூடிக்கொண்டு நம்மையெல்லாம் திட்டுகிறார்கள். இவன் என்னடான்னா 'என்ன கெடுதல் செய் கிறார்கள்' என்று கேட்கிறான். இப்படிப்பட்ட ஆள் இருந்தால் நம்ம கட்சி உருப்பட்ட மாதிரிதான்" என்றான் கிருஷ்ணன்.

"நான் வருகிறேன். நான் வருகிறேன்" என்று அவருள் சிலர் மார்தட்டிக் கிளம்பினர்.

மறுநாள் செய்ய வேண்டிய வேலைத் திட்டங்கள் தீட்டப் பட்டன. அதற்கு வேண்டிய முயற்சிகளும் இரவிலேயே நடந்தன.

மாபெரும் ஊர்வலம். வீதியின் இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடிவரை ஒரே அணிவகுப்பு. கருப்புக்கொடி தாங்கி வரும் வீரர்களின் தோற்றம் பாண்டியனின் மறப்படையை நினைப் பூட்டியது. பார்ப்பவரின் மனத்தில் ஒரு புத்துணர்ச்சியை ஒரு விதக் கிளர்ச்சியை எழுப்பி விட்டது.

குதிரையில் ஏறி இருபுறத்தும் வீரர் பெருமிதத்தோடு வரும் காட்சி. *'திராவிட நாடு திராவிடர்க்கே'* என்ற முழக்கம் - இவை வடநாட்டு வணிகர்க்கும் வைதிகத் தருக்கினர்க்கும் பெருங்கிலி' யை உண்டாக்கியது.

ஊர் முழுதும் வலம் வந்து கடைசியில் கூட்டம் நடைபெறும் இடத்தை நெருங்கிக் கொண்டிருந்தது படை. பெருவீதியில் வந்து கொண்டிருந்தது மிகுந்த உற்சாகத்துடன். சோடா புட்டிகள், வீதியின் இருபுறத்திலுமுள்ள மாடிகளிலிருந்து குண்டுகள் போல் படையை நோக்கிப் பாய்ந்தன. திரண்டு வரும் படை மருண்டது.

"மருள வேண்டாம், அதோ நமது இடத்தை அணுகி விட்டோம். உங்கள் முழக்கத்தை அதிகப்படுத்திக் கொண்டு விரைந்து நடங்கள்" என்ற ஆணை தலைவரிடமிருந்து வந்தது.

"அடைந்தே தீருவோம் திராவிடநாடு" என்ற பேரொலி யோடு படைவிரைந்தது.

*கண்ணாடித்துண்டுகள் நிரம்பிய போத்தல் ஒன்று குறி பார்த்துக் குதிரைவீரன் தலையில் தாக்கியது.*

"*அம்மா!*" என்று தலையில் கை வைத்தான் வீரன். குதிரையிலிருந்து கீழே விழுந்துவிட்டான். விழுந்ததும் பாட்டில் வந்த திசையை நோக்கினான். கிருஷ்ணன் மறைவதைப் பார்த்து விட்டான். தலையிலிருந்து பீறிட்டுக் கொண்டுவரும் இரத்தம் அவன் அணிந்திருந்த கருப்புச் சட்டையைச் சிவப்புச் சட்டையாக மாற்றியது.

சிலர் அவனருகில் ஓடிவந்து "தலைவரே! உடனே விடை தாருங்கள். அந்தக் காலிகளைப் பழிக்குப்பழி வாங்குகிறோம். அவர்கள் எலும்பைச் சூறையாடி விடுகிறோம். விடை தாருங்கள்" என்றனர்.

"தோழர்களே! வேண்டாம்; நமது குறிக்கோள் அதுவன்று. நம்மைத் தாக்கியவர்களும் நமது இனத்தவரே. பதிலுக்காக நாமும் அவர்களைத் தாக்கினால் நட்டம் யாருக்கு? பதறாதீர்கள். புறப்படுங்கள் நாம் அடைய வேண்டிய இடத்திற்கு" - என்று சொல்லிவிட்டு அந்த வீரன் எழுந்து நடந்தான்.

"இந்த அர்ச்சுனன் எப்பொழுதும் இப்படித்தான். நம்மை எதிரி தாக்கும் பொழுதும் நாம் பணிந்து சென்றால் கோழை என்றல்லவா எண்ணுவார்கள்" என்று சில இளைஞர்கள் முணுமுணுத்துக்கொண்டே திருப்பிய கொடியை மீண்டும் உயர்த்திப் பிடித்துக் கொண்டு அணியாகச் சென்றடைந்தனர் கூட்டம் நடக்கும் இடத்தை நோக்கி.

கொடியேற்றி வைக்க வந்திருந்த மதுரம் அடிப்பட்ட அர்ச்சுனனைப் பார்த்தாள்; பதறிவிட்டாள். செய்தியைக் கேட்டு அறிந்து கொண்டாள். முதல் நாள் ஏற்பட்ட தோல்வியால், என்ன பேசுவதென்று தோன்றாமல் வந்திருந்த மதுரத்தின் நெஞ்சம் கொதித்தது; குதித்தெழுந்தாள்.

"தலைவர்களே! தோழர்களே! திராவிடர் கழகக் கொடியை ஏற்றுமுன் அதைப் பற்றி இரண்டொரு சொற்கள் கூற ஆசைப்படுகிறேன். இக்கொடி திராவிடரின் இழிவு நிலையை அறிவுறுத்தவே அமைக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். அந்த இழிவு நிலையை நீக்க வேண்டும் என்பதற் காகத்தான் நடுவில் சிவப்பு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சிவப்பு சாதாரணச் சிவப்பன்று.

இரத்தச் சிவப்பு. தாளமுத்து நடராசன் சிந்திய சிவப்பு அது. இதோ நம் கண்முன் காட்சியளிக்கும் வீர அர்ச்சுனன் சிந்திய இரத்தச் சிவப்பு அது. கருங்காலிகள் வீசிய கல்லெறியால் ஏற்பட்ட காயங் களிலிருந்து பெரியார் சிந்திய இரத்தச் சிவப்பு அது. ( கை தட்டல்) கை தட்ட வேண்டாம். இப்படிப் பல வீரர்கள் சிந்திய இரத்தத்தால் ஏற்பட்ட சிவப்பு அது. இது மட்டும் போதாது நமது இழிவு நிலை நீங்க. இன்னும் சிந்த வேண்டும்; இரத்தம் மட்டுமன்று. உயிரையுங் கூடத்தான். அப்படிச் சிந்தினால்தான் அந்தச் சிவப்பு இன்னும் விரிவடையும். விரிய விரியக் கருப்பு நீங்கிச் சிவப்புக் கொடியாக மாறும். அவ்வாறு மாற்றுவதற்குரிய வீரர்கள் தாம் நமது கழகத் திற்குத் தேவை. விரைவில் நம் கையாலேயே - அதுவும் என்போன்ற பெண்கள் கையாலேயே கொளுத்தப்பட வேண்டும் இந்தக்கொடி (கைதட்டல்) ஆம்; இழிவு நீங்கியபின் இந்தக்கொடி ஏன்? ஆகவே தோழர்களே! திராவிட இனத்தவர் அனைவரும் ஒன்று கூடினால் வெற்றி பெறுவது உறுதி. அந்த வெற்றிக்குப்பின் அமைக்கப் போகும் திராவிட அரசியல் கொடியையும் நானே ஏற்றிவைக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன் என்று பணிவுடன் கூறி இக் கொடியை ஏற்றி வைக்கிறேன்" என்று வீரவுரையாற்றி அமர்ந்தாள் மதுரம்.

தள்ளாடிக்கொண்டே எழுந்தான் அர்ச்சுனன், "தோழர்களே! வீர இளைஞர்களே! மன்னிக்க வேண்டும். உங்கள் வேகத்தைத் தடுத்ததற்காக. பழிக்குப் பழி என்று துடிக்கும் உங்கள் இதயத் துடிப்பை நான் நன்கு அறிவேன். பதிலுக்குத் தாக்கும்படி நான் கூறியிருந்தால் அதனால் நமது உண்மையான எதிரிக்கு ஒரு சிறு அசைவு கூட ஏற்படப் போவதில்லை. இருபாலும் திராவிட இரத்தமே சிந்தும். அறிவியக்கத்தைச் சேர்ந்த நாம் அவ்வாறு நடந்து கொள்வது அழகன்று. மேலும் அவ்வாறு நடந்திருந்தால் இன்றையக் கூட்டம் குழப்பமாயிருக்கும். நமது குறிக்கோள், நோக்கம் எல்லாம் பழிவாங்குவதில்லை. உயிரைப் பலிகொடுத்தேனும் இன்பத்திரா விடம் காண்பது தான் நமது எண்ணம். அதைவிடுத்துச் சிறு சிறு பூசலுக்கு நாம் நமது ஆற்றலை சக்தியை..." என்று சொல்லிக் கொண்டிருந்தவன் மயங்கி விழுந்து விட்டான்.

*****

மயக்கம் சிறிது தெளிந்து மெதுவாகக் கண்ணைத் திறந்தான்.

"நான் எங்கிருக்கிறேன்"

"மருத்துவ விடுதியில்"

"யார்? மதுரமா?"

"ஆம்; உங்கள் எதிரி கிருஷ்ணன் கைது செய்யப்பட்டாராம்"

"கிருஷ்ணன்! ஐயோ! பாவம்! அவனா என் எதிரி? அவனுடைய அறியாமையல்லவா என் எதிரி"!

அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை.

"இரணியன் - பிரகலாதன், இராவணன்-வீடணன், வாலி - சுக்கிரீவன் இவர்கள் இந்த நாட்டிலே உலவும் வரையில் 'கிருஷ்ணார்ச்சுன யுத்தம்' நடந்துதான் தீரும். நான் யார்? அவன் யார்? என்ற எண்ணம் தோன்றித் தெளிவு பிறக்கும்வரை இந்தக் கதிதான்" என்று எண்ணிக் கொண்டே படுத்திருந்த அர்ச்சுனனுக்கு மதுரம் மருந்தை எடுத்துக் கொடுத்தாள்; தன் எண்ணத்திற்கு அவன் மருந்து தருவான் என்ற உறுதியோடு.

✪✪✪

# 8
# அணைந்த விளக்கு

அவள் என் குடும்ப விளக்காக விளங்குவாள் என்று எண்ணினேன். ஆனால், அவள் அணைந்த விளக்கு. இருந்தாலும் பரவாயில்லை, மீண்டும் ஒளி பெறச் செய்யலாம் என்று எண்ணினேன். அந்த ஆசையையும் அணைத்து விட்டாள்.

வழக்கம் போல் திருவல்லிக்கேணிக் கடற்கரைக்குச் சென்றேன். நெடுநேரம் ஆகியும் அவள் வரவில்லை. வேறு இடங்களிலும் உட்காரமாட்டாள். ஒரு மாதமாக இதே இடந்தான். நானும் அதற்கு அருகிலேயே பதிவு செய்து கொண்டேன். ஆனால், இன்று இன்னும் வரவில்லை. அவளைப் பார்க்காவிட்டால் அந்த நாள் என் வாழ்நாளில் பாழ்நாள்! அவ்வளவு துன்பமாக இருந்தது. கதிரவன் மறைந்து கொண்டிருந் தான். மஞ்சட்கதிர்களை மணற்பரப்பில் செலுத்திக் கொண் டிருக்கும் காட்சி மனத்திற்கு அமைதியையும், மகிழ்ச்சியையும் தந்து கொண்டிருந்தது. இருந்தாலும் இருள் கவிந்து விட்டால் அவள் வரமாட்டாளே என்ற கவலை மிகுதி எனக்கு. ஆனால், கவலை ஒரு வழியாக முடிவுக்கு வந்து விட்டது. அவள் வந்து விட்ட காரணத்தால் சிவந்த மேனியில் கருப்பு நிற உடை ஓர் தனி அழகு தந்தது, அவளுக்கு. எனக்கும் அதுதான் மிகப் பிடித்தமாயிருந்தது. ஆனால், சிற்சில சமயங்களில் பூச் சிதறிய ஆடையும் பொலிவு பெறும்; அவள் உடலிற் சேர்ந்து. காது, மூக்கு, கழுத்து எதிலும் ஒரு நகைகூட இல்லை. கையில் ஒன்றோ, இரண்டோ வளையல் மட்டும் ஊசலாடும். அதுவும் கருப்புத் தான்! ஆனால், அவள் உள்ளத்தில் கருப்பில்லை என்பதை அவள் முகப்பொலிவு நன்றாக எனக்குச் சொல்லிற்று. அந்த விழியின் கருப்புத்தான் என்னை மயங்கச் செய்தது. அவள் கசங்காத மலர்! இது, என் எண்ணம். அவளிடத்துக் கொண்ட காதலால்தான் நான் நாள் தவறாது கடற்கரைக்குச் செல்வது. பலரும் அப்படித்தானே! கடலின் அழகிலே ஈடுபட்டு, காற்றின் நலத்திலே ஒன்றுபட்டுச் செல்வோர் எத்துணைப்பேர்? காதலின் விளையாட்டுப் பண்ணை

தானே கடற்கரை! அந்தப் பண்ணையில் நான் மட்டும் இடம் பெறாமலிருக்க முடியுமா என்ன?

நான் தான் அவளிடம் காதல் கொண்டேன். அவள் விரும்பி னாளோ என்னவோ எனக்குத் தெரியாது. நாங்கள் இன்னும் வாய்ப்பேச்சுக் கூடப் பேசியது கிடையாதே! நான் அவளைப் பார்ப்பேன். அவளும் என்னைப் பார்ப்பாள்; என்னைப் போல அல்ல. அவள் பார்வையிலே அமைதி தான் இருக்கும். அதை நானெங்கே பொருட்படுத்தப் போகிறேன். நான் காதல் நோக்குத் தான் நோக்குவேன். எப்படியும் அவளிடம் பேசி விட வேண்டு மென்பது என் எண்ணம். ஆனால், துணிவு வரவில்லை. இன்று அந்த எண்ணம் நிறைவேறியது. காரணம், என் மடிமீதிருந்த அந்தப் புத்தகந்தான்!

அவள் வந்து உட்கார்ந்ததும் கடலைப் பார்த்துவிட்டு என்னை யும் நோக்கினாள். பார்வை, என் மடிமீதிருந்த புத்தகத்தின் மீது விழுந்தது. நான் அவள் அழகைப் பருகிக் கொண்டிருந்தேன். பேசி விட்டாள் அவள்.

‘அது, என்ன புத்தகம்?’

செயலற்றவனாய்க், *‘காதல்நினைவுகள்’* என்று கையிற் கொடுத்தேன்; சற்று அருகில் வந்து புரட்டினாள் அவள். என் உள்ளம் - ஏன் - உலகமே புரண்டது போலத் தோன்றியது எனக்கு. என் காதல் நினைவுகளை என்று நீ அறிவாயோ என்று மனத்திற்கு சொல்லிக் கொண்டேன். அந்த நூலின் ஆசிரியருக்கு என் மனமார வாழ்த்துக் கூறினேன்; அவளோடு பேச வாய்ப்புத் தந்த காரணத்திற் காக.

அவள் புரட்டி விட்டு, ‘இதை நாளைக்குத் தருகிறேனே! ’ என்றாள்.

தலையை ஆட்டினேன்.

இருள் வந்து எங்களைப் பிரித்து விட்டது. அன்று இரவெல்லாம் உறக்கம் ஏது? மறுநாள் அவளுக்குக் கொடுப்பதற்காக ஒரு புத்தகத் தைப் பொறுக்கி எடுத்தேன். மாலை ஐந்து மணிக்கே கடற்கரை சென்றேன். அங்கே எனக்கு முன்பே அவள் காத்துக் கொண்டிருந் தாள். அருகிற் சென்றதும் புத்தகத்தைத் தந்தாள். நன்றியறிதலுடன் நானும் சிரித்துக் கொண்டே வாங்கினேன். குறும்புத் தனமாக

அவள் கையைத் தொட்டு வாங்கினேன். அவள் எண்ணத்தை அறிய வேண்டு மல்லவா? அதற்காகத்தான்! ஆனால், அவள் அதைப் பொருட் படுத்தவேயில்லை. எனக்கென்ன, அதைப்பற்றி! அவள் கையில் என் கைப்பட்டதே எனக்குப் பேரின்பமாயிருந்தது.

இதோ! இதையும் படியுங்கள்! என்றேன்.

'அது என்ன...?'

*'அழகின் சிரிப்பா-?'*

'ஆம்! உன் ஒவ்வொரு அங்கங்களிலும் ஓடி விளையாடும் அழகின் சிரிப்பிலே நான் மயங்கி விட்டேன். அதை நீ உணரவே இதைப் பொறுக்கி எடுத்துத் தந்துள்ளேன்' என்று கூறினேன். அவளிடமன்று; மனத்திற்குள்ளே.

மறுநாள் உன் சிரிப்பிலே மயங்கிய எனக்கு 'முத்தந் தர மாட்டாயா? என்ற கருத்தை உட்கொண்டு *'எதிர்பாராத முத்தம்'* என்ற புத்தகம் தந்தேன்.

அதன்பின்னர், உன் அன்பைப் பெறாது கலக்கமடைந்த எனக்கு அமைதி தரமாட்டாயா? அமைதி பெற நான் உயிர் வாழ ஒரு நல்ல தீர்ப்பைக் கூறமாட்டாயா? என்ற கேள்வி களைக் கேட்கவேண்டும் அவளிடம் என்று துணிந்த பின்பும், மனம் வரவில்லை சரி! நமக்குத்தான் புத்தகம் இருக்கிறதே, அதன் மூலம் கேட்டு விடலாம் என்ற நோக்கந்தான் *'அமைதி', 'நல்ல தீர்ப்பு'* என்ற இரு நூலையும் அவளிடம் கொடுக்கத் தூண்டிற்று.

இப்படி எத்தனையோ புத்தகங்கள் கொடுத்தேன். ஆனாலும் முதல் நாள் பார்த்த பார்வையிலிருந்து கொஞ்சமாவது மாற்றமடைய வில்லை. அதே அமைதிதான் நிறைந்திருந்தது. கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தேன். ஒரே ஒரு புத்தகம். அவள் என் குடும்பத்தில் ஒரு மணி விளக்காக ஒளி வீசவேண்டும். ஆனால் எப்படிச் சொல்வது? பழைய வழக்கப்படியேதான் செய்தேன். இன்று சுறுசுறுப்பாகச் சென்றேன் கடற்கரைக்கு. அவளும் 'ஆஜர்' தான்!

'இதைப் பார்த்தீர்களா?' என்று நான் எடுத்துச் சென்ற புத்தகத்தைக் கொடுத்தேன்.

'எங்கே பார்க்கலாம்! என்ன புத்தகம்?' என்று கையை நீட்டினாள்.

'*குடும்ப விளக்கு*' என்றேன்.

நெருப்பைத் தொட்டதுபோல் வெடுக்கென்று எடுத்துக் கொண்டாள் கையை. முகத்தைப் பார்த்தேன். மலர் முகம் வாடியது. குடும்ப... விளக்கு... என்று முணுமுணுத்தது அவள் வாய். நீர் கண்ணில் தாவிக் குதித்துக் கொண்டிருந்தது. கண்ணீரைக் கண்ட என் மனம் கரைந்துவிட்டது.

'ஏன்? இப்படித் திடீரென்று மாற்றம்-? ஏதாவது... துன்பம்...' என்று பரிவுடன் கேட்டேன். அழுகை மிகுதி யாயிற்று.

'அப்படியொன்றுமில்லை. என் சகோதரர் போன்ற உங்களிடம் எனக்கென்ன வருத்தம். இந்தப் புத்தகம் என்னை இந்நிலைக்காக் கிற்று'.

புத்தகமா? புத்தகத்திற்கும் உங்கள் நிலைக்கும் என்ன சம்பந்தம்?

'ஆம்! புத்தகந்தான்! கேளுங்கள், என் கதையை! வக்கீல் வரதாச்சாரி மகள் நான். கமலம் என் பெயர். பணம் நிறைய இருந்ததால் மணத்தைப் பற்றி எண்ணாமல் படிப்பிலேயே சென்று கொண்டிருந்தது, என் இளமைப்பருவம். பணம் இருந்தால் பெண்ணுக்கு எத்தனை வயதானால் என்ன? மணம் தானாக நடக்கும். அந்த எண்ணத்தில் என் தந்தை இருந்தார். நானும் படித்து வந்தேன். தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் முதலிய பல மொழிகளிலும் பயிற்சி பெற்றேன். எனக்குத் தமிழ் சொல்லிக்கொடுக்க ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்டார். நாளடைவில் ஆசிரியர் என் அன்பிற் குரியவரானார். திருமணம் நடந்தது. மணப்பரிசுகள் வந்து குவிந்தன. அப்பரிசுகளில் ஒன்றுதான் இந்தக் குடும்பவிளக்கு! இது யாரோ அவருடைய நண்பர் சிதம்பரத்திலிருந்து அனுப்பினார். அவர் பெயர்கூட இராஜன் என்று எழுதியிருந்தது. அந்தப் புத்தகந்தான் எந்நேரமும் அவர் கையிலிருக்கும். கமலா! என்பார். 'குடும்ப விளக்கா' என்பேன். 'ஆம்' என்பார். இருவரும் படிப்போம். அவர் படிக்க நான் கேட்பேன். நானும் படிப்பேன். சில சமயங்களில் அவர் கேட்டுக் கேட்டுக் களிப்பெய்துவார். அது, உண்மையில் எங்கள் குடும்ப விளக்காகவே விளங்கியது. ஆனால் நீடிக்கவில்லை; அணைந்து விட்டது. இப்பொழுது வெறும் விளக்கு நான்! எண்ணெய் இல்லை' என்று கூறிமுடிக்க முடியவில்லை அவளால், தொண்டை காய்ந்து விட்டது.

*'கமலா! ஆம்! கமலாதான் அவள் பெயரும். நான் தான் 'குடும்பவிளக்கு' அனுப்பினேன். அவனுக்குப் பரிசாக!' என்றது என் உதட்டின் அசைவு.*

*'கமலா உன் கணவன் பெயர் கோபாலன் தானே!'*

*'ஆம்' என்றாள்.*

*அங்கிருக்க முடியவில்லை என்னால். குமுறியது என் மனம். குழம்பி விட்டது என் மூளை. எழுந்து சென்றுவிட்டேன். கடற்கரையையும் மறந்து விட்டேன். ஆனால் கமலாவை மறக்கவில்லை. 'கமலா, கமலா!' என்று அடிக்கடி சொல்வதைக் கேட்ட என் நண்பர்கள் என்னைப் பைத்தியம் என்பார்கள். அவர்களுக்கென்ன தெரியும்? இன்று அவள் மேற் காதலில்லை. சகோதரி என்ற எண்ணமா? அப்படியுமில்லை. ஏதோ ஒருவித அன்பு! அவ்வளவு தான்!*

*அவள் என் குடும்ப விளக்காக விளங்க வேண்டுமென்று எண்ணினேன். ஆனால், அவள் அணைந்த விளக்கு. ஆனாலும் பரவாயில்லை. மீண்டும் ஒளிபெறச் செய்யலாம் என்று எண்ணினேன். அந்த ஆசையையும் அணைத்துவிட்டாள். அவள் என் நண்பன் மனைவி என்பதைத் தெரிந்து கொண்ட பிறகும் எப்படி விரும்பும் என் மனம்? நல்லவேளை அவளிடம் என் கருத்தைச் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் என்ன வேதனைப்பட்டிருப்பாளோ? என் வாழ்வையும் அணைந்த விளக்காகி விட்டாள்.*

*(ஆசிரியர் முதன் முதல் எழுதிய கதை இது. 'அழகு' என்ற மாத இதழில் வெளிவந்தது.)*

✪✪✪

# 9

# அவமானச் சின்னம்

சட்டக் கல்லூரி மாணவர்கள் ஒன்று கூடி ஏற்படுத்தியது தான் அறிவு வளர்ச்சிக் கழகம்! முக்கியமாக மொழி, நாடு இவற்றின் முன்னேற்றங் கருதியே அது தொடங்கப்பட்டது. சமூகச் சீர்த்திருத்தங் களுக்காகவும் நன்முறையில் பாடுபட்டு வந்தது. மூடக் கொள்கை களை முறியடிக்க வேண்டும் என்ற எண்ணங்கொண்ட இளைஞர் களின் எண்ணிக்கை அதிகம் அக்கழகத்திலே. கண்ணப்பனும் ஓர் உறுப்பினனாகச் சேர்க்கப் பட்டான் அதில். நல்ல குணமுடையவன். அமைதியான தோற்றம், அன்புப்பார்வை, அறிவுத் திறமை - இவைகள் தாண்டவமாடும் அவனிடத்திலே. யாரிடத்திலும் அதிகமாகப் பேசமாட்டான்.

கல்லூரி மாடிப் படிகளில் ஏறிக்கொண்டிருந்தான் கண்ணப்பன். மாடியில்தான் கழகம் இருந்தது. அங்கே எப்பொழுதும் நான்கைந்து பேர் பேசிக் கொண்டிருப்பார்கள். அரசியலைப்பற்றிப் பேச்சு நடக்கும். தலைவர்கள் சிலர் அவர்களுடைய பேச்சிலே, அகப்பட்டுக் கொண்டு திண்டாடு வார்கள். ஒரு தோழர் பாடுவார். ஒரு தோழர் ஆடுவார். சில சமயங்களில் அரட்டைக் கச்சேரியும் நடைபெறும். கண்ணப்பன் மேலே செல்லும் பொழுது நடந்து கொண்டிருந்தது அதே கச்சேரிதான். ‘கண்ணப்பன்’ என்ற சொல் காதில் விழுந்ததும் சட்டென்று நின்றுவிட்டான். உற்றுக்கேட்டான்.

“கண்ணப்பன் நம் கூட்டத்திலே அவமானச் சின்னம்! பெரிய அசடு.”

இச்சொற்கள் அவன் செவியில் விழுந்தன. விழுந்ததும் தலை ‘கிர்’ எனச் சுழல்வதுபோல இருந்தது அவனுக்கு. அவனால் அங்கு நிற்க முடியவில்லை. ‘விர்’ என்று கீழே இறங்கிவிட்டான்.

‘அவமானச் சின்னம்’ ‘அவமானச் சின்னம்’

இச்சொற்கள் அவன் உள்ளத்தை அழுத்திக் கொண்டன. மூளையை இறுகப் பற்றிக் கொண்டன. அடிக்கடி அச்சொற்கள் ஒலித்துக் கொண்டேயிருந்தன.

"அவமானச் சின்னம்! நானா அவமானச் சின்னம்? ஏன்? அவர்களையே போய்க் கேட்டு விடலாமா? சேச்சே! வேண்டாம். அவர்களைக் கேட்கக் கூடாது. அவர்கள் என் உண்மை நண்பர் களாயிற்றே! அப்படியிருந்தும் என்னை அவமானச் சின்னம் என்று ஏன் கூறினார்கள்? வேறு யாரையும் சொல்லி யிருப்பார்களோ? இல்லை என் பெயரைச் சொன்னது நன்றாக என் காதில் விழுந்ததே" என்ற எண்ண அலைகள் அவன் நெஞ்சத்தில் விடாமல் மோதிக் கொண்டிருந்தன. பித்துப் பிடித்தவன் போல் நடந்து கொண் டிருந்தான். எதிரில் வருவார் போவாரையும் கவனியாது வீட்டை யடைந்தான்.

"கண்ணப்பா! கண்ணப்பா!"

பேச்சில்லை.

"தூங்கிவிட்டானோ! கண்ணப்பா! மணி ஒன்பது ஆகிவிட்டது. இன்னும் சாப்பிடாமல் என்ன படிப்பு வேண்டி யிருக்கிறது? சாப்பிட்டு விட்டுப் படிக்க கூடாதோ?" என்று சொல்லிக் கொண்டே கண்ணப்பன் அறையை நோக்கி வந்தாள் அவன் தாய் இலட்சுமி.

நாற்காலியில் சாய்ந்த வண்ணம் சிந்தனையில் மூழ்கியிருந் தான் அவன். முகம் கறுத்திருந்தது. கவலையின் குறிகள் நன்கு புலப்பட்டன மின்சாரவெளிச்சத்தால்.

"கண்ணப்பா!"

"ஏன் அம்மா!" என்று திடுக்கிட்டு எழுந்தான்.

"சாப்பிடாமல் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

"பசியில்லையம்மா; சாப்பாடு வேண்டாம்"

"ஏண்டா தம்பி ஒருமாதிரியிருக்கிறாய்? உனக்கென்ன கவலை? அப்பா ஏதாவது சொன்னாரா? உனக்கு ஏதாவது வேண்டு மென்றால் என்னைக் கேட்கப் படாதோ?"

"இல்லையம்மா, அப்பா ஒன்றும் சொல்லவில்லை. எனக்கு உடம்புக்கு ஒரு மாதிரியாயிருக்கிறது. பசியும் இல்லை"

"இல்லையில்லை. ஏதோ வருத்தமாயிருக்கிறாய், நன்றாகத் தெரிகிறது. நீ சாப்பிடாவிட்டால் எனக்குச் சாப்பிட மனம் வருமா? வாப்பா! கொஞ்சமாவது சாப்பிடு. என்ன கவலை என்று தான் சொல்லேன். என்னிடம் சொல்ல ஏன் மறுக்கிறாய்? எனக்கு நீ ஒரே

பிள்ளை. உன்னைச் செல்வமாக வளர்த்து வருகிறேன். உன் மனம் இப்படிக் கலங்குவதைக் காண என் மனம் சகிக்குமா? உண்மையைச் சொல்லப்பா! என்னிடம் ஒளிக்க லாமா?'' என்று கெஞ்சிக் குழைந்து தாயன்போடு பரிந்து கேட்டாள். அவனால் இனி விடை சொல் லாமல் இருக்க முடியவில்லை.

''வேறொன்றுமில்லையம்மா. கல்லூரியில் எனக்கும் என் நண்பர்களுக்கும் கொஞ்சம் மனத்தாங்கல் அவ்வளவுதான்''.

''மனத்தாங்கலா? ஏன்? நண்பர்களோடு சச்சரவாயிருந்தால் இதற்காக இவ்வளவு கவலைப்படுவதா? பைத்தியக் காரப் பிள்ளை யாயிருக்கிறாயே? வா! எழுந்திரு! சாப்பிடலாம்!''

''இல்லையம்மா, அவர்கள் சொன்ன சொற்கள் என் மனத்தை இவ்வளவு வாட்டுகின்றன. என்னை 'அவமானச் சின்னம்' என்று சொன்னார்கள். ஏன் அப்படிச் சொன்னார்கள் என்பதும் தெரிய வில்லை. அதனால் எனக்குச் சொல்ல முடியாத துயரமாக இருக்கிறது. சொன்னவர்கள் வேறு யாருமில்லை. என்னுடன் உண்மையாக - உள்ளத்தை விட்டுப் பழகும் தோழர்கள்தாம் அவ்வாறு சொன்னது'' என்று சொல்லிக் கொண்டேயிருந்த கண்ணப்பன், தாயின் கண்கள் நீரைச் சிந்திக் கொண்டிருப்பதைக் கண்டு விட்டான்.

அம்மா! என்ன இது! ஏன் அழுகின்றீர்கள்? என்று ஆச்சரியத் துடன் கேட்டான்.

''ஆம். நீ அவமானச் சின்னந்தான். ஒரு விதவையின் பிள்ளை. சாதி கெட்டவள் பிள்ளை. அப்படிப்பட்ட உன்னை அவமானச் சின்னம் என்று தானே சொல்லும் இந்த உலகம். அதற்காக ஏன் கவலைப்படுகிறாய்? கவலைப்பட்டால் அந்தப் பழி மறைந்து விடுமா? எல்லாம் நம் தலைவிதி!''

''தலை விதியாவது மண்ணாங்கட்டியாவது! என்னம்மா! விதவையின் பிள்ளையா நான்? அப்பா மலை போலிருக் கிறாரே? சாதிகெட்டவள் பிள்ளையா நான்? எனக்கு ஒன்றுமே புரிய வில்லையே! என்னம்மா இது? விவரமாகச் சொல்லுங் களேன்''

''பதறாதே கண்ணா! நான் இராகவாச்சாரி மகள். நீ இராமு ஆச்சாரியார் மகன். இதனால்தான் உன்னை அவமானச் சின்னம் என்று சொல்லியிருப்பார்கள். சாதியைச் சதமென எண்ணும் இவ்வுலகம் வேறு எந்தப் பெயரால் உன்னை அழைக்கும்?''

"அம்மா! இதிலென்ன சாதி வேற்றுமையிருக்கிறது? இரண்டும் ஆச்சாரியார் சாதி என்றுதானே சொல்லுகிறீர்கள்?"

"ஆம்; சொல்லளவில் ஒன்று தான். நான் அய்யங்கார் வீட்டுப் பெண். உன் அப்பா பொன் வேலை செய்யும் ஆச்சாரியார்".

"என்னம்மா? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! எல்லாம் புதிராகவே இருக்கிறதே. அய்யங்கார், ஆச்சாரியார், விதவையின் பிள்ளை இவை என் மூளையைச் சிதறடிக்கச் செய்கின்றனவே. எல்லாவற்றையும் தயவுசெய்து தெளிவாகச் சொல்லுங்களேன்!"

"கண்ணா! கேள் என் கதையை. என் வாழ்க்கை ஒரு கதைதான். படிக்கிறோம் சில கதைகளை. என் வாழ்க்கையில் அச்சம்பவங்கள் உண்மையாகவே நிகழ்ந்து விட்டன. என் அப்பா இராகவாச்சாரி பெரிய மிராசுதார். வேதபுரம், பிராமணர்கள் நிறைய வாழும் ஊர். அவர் சொல்லை அந்த ஊரில் யாரும் தட்டி நடக்கமாட்டார்கள். சிறிது முன் கோபக்காரர். என்னை அருமையாக வளர்த்து வந்தார். என் தாயில்லாத காரணத்தால் எனக்குத் தக்க வயது வந்ததும் திருமணப் பேச்சு நடந்தது. பணத்தாசையால் எங்காவது படுகுழியில் தள்ளி விடுவாரோ என்ற பயம் என்னைத் துன்புறுத்தி வந்தது. நல்ல வேளையாக அவராசையும் என் ஆசையும் ஒரு சேர நிறைவேறியது. நான் புகுந்த இடம் பெரும் பணக்கார வீடு. அவரும் என் மனத்திற் கேற்ற அழகும் குணமும் உடையவர். ஆகவே எனக்கும் அப்பா வுக்கும் திருப்தி.

"ஓராண்டு சென்றது. சென்னைக்கு ஒரு வேலையாக வந்தார். உன் அப்பா இல்லை இல்லை - என் கணவர் விழுப்புரத்திற்கு அருகே ஏற்பட்ட 'இரயில்' விபத்தில் இறந்து விட்டார் அவர். என் கழுத்திலிருந்த கயிறு அறுக்கப்பட்டது. ஆயினும் கூந்தல், வண்ணச் சேலை இரவிக்கை, நகைகள் களையப்படவில்லை. அவைகளால் மட்டும் நான் மகிழ முடியுமா? வாழ்க்கைதான் இன்பமாகச் செல்லுமா? வீட்டு மூலை என் இருப்பிடம். நான் வெளியே வர அருகதை அற்றவள்; மற்றவர்கள் முகத்தில் விழிக்க மறுக்கப் பட்டவள் - விதவை என்ற ஒரு காரணத்திற்காக. கழுத்திலிருந்த ஒரு கயிறு நீக்கப்பட்டதால் நான் பெண்கள் இனத்திலிருந்தே - ஏன் - மனித இனத்திலிருந்தே நீக்கப்பட்டவள் ஆனேன். என் உள்ளக் கொதிப்பு சில சமயங்களில் நீரைக் கக்கும் கண்கள் வழியாக.

"என் உள்ளக் கொதிப்பை - அந்தக் கண்ணீரின் மதிப்பை உணருவாரா என் அப்பா. அவர் மட்டுமென்ன இந்த அநியாய உலகந்தான் உணருமா? அவள் பெற்ற உன்னை 'அவமானச் சின்னம்' என்று சொல்ல ஏன் தயங்கப் போகிறது இந்த உலகம்?"

"அம்மா! அது கிடக்கட்டும். முழுதும் சொல்லுங்கள். அழாதீர்கள். அழுது ஆவதென்ன? நடந்தது நடந்து விட்டது. சொல்லுங்கள்! சொல்லுங்களம்மா?"

"இதைப் படித்துப்பார்! பெயர்தான் கொஞ்சம் மாறி இருக்கிறது. மற்றதெல்லாம் என்கதை அப்படியே இருக்கிறது?" என்று புத்தகத் தைக் கொடுத்தாள். படித்துப் பார்த்தான்.

"சில மாதங்களில் என் தங்கைக்குத் திருமண ஏற்பாடுகள் நடந்தன. அவளுக்கு நகைகள் செய்ய ஒருவரிடம் கொடுத்தார்கள். அவர் சிறந்த வேலைக்காரர். நல்ல குணங்களும் உடையவர்; அழகாகவும் இருப்பார்; அவர்தான் இராமு ஆச்சாரியார். அவர் அடிக்கடி நகைகள் சம்பந்தமாக எங்கள் வீட்டிற்கு வந்து போவார். என் அப்பா முன் கோபக்காரர். ஆதலால் எப்படிப் பட்டவரி டத்திலே பேசினாலும் ஒரு தடவையாவது கோபம் வந்து விடும். ஆனால் நகை செய்யும் இவரிடம் ஒரு நாள் கூடக் கோபமாகப் பேசியதே கிடையாது. அப்பாவுக்குக் கோபம் வராதபடி அவர் பேசி மயக்கிவிடுவார். அன்பாகப் பேசுவார். சிரிப்பு எப்பொழுதும் அவர் முகத்தில் திகழ்ந்து கொண்டே யிருக்கும். அதனால் எவரை யும் கவர்ந்து விடுவார் பேச்சிலே. அவர் வந்துவிட்டால் நான் என்ன வேலையாயிருந்தாலும் ஓடிவந்து விடுவேன். நகைகளைப் பார்த்துக் கொண்டிருப் பார்கள் எல்லோரும். நான் அவர் பேச்சிலே சொக்கிப் போயிருப்பேன்."

"ஒருநாள் மாலை, வைரத்தோடு செய்துகொண்டு என் அப்பாவிடம் காட்ட எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். அப்பா வயலுக்குப் போயிருந்தார்."

"நான்தான் அதைப் பார்த்துக் கொண்டே அவரோடு பேசிக்கொண்டிருந்தேன்."

"நேரம் ஆகிவிட்டது. நாளை வருகிறேன்" என்றார்.

"இல்லையில்லை; இருங்கள். இப்பொழுது அப்பா வந்துவிடு வார்; அவரிடம் காட்டிவிட்டு அப்புறம் போகலாம்" என்றேன்.

அவருக்கும் போக மனமில்லை. அப்பாவோ நெடுநேரம் ஆகியும் வரவே இல்லை. இருட்டிவிட்டது. இருள் எங்கள் எண்ணத்திற்கு உதவிசெய்தது. நாங்கள் வீட்டை மறந்து விட்டோம் - ஏன் உலகத்தையே மறந்து விட்டோம். அந்த நிலையில் அப்பா மட்டும் எங்கே நினைவிற்கு வரப்போகிறார்?

"சீதா! சீதா!" என்று அழைத்துக் கொண்டே என் அப்பா வந்துவிட்டார். அப்பொழுதுதான் எங்கள் நிலைமை நினைவிற்கு வந்தது. வெடவெடத்து விட்டது எனக்கும் அவருக்கும். அப்பா கண்டுவிட்டார். அவர்தான் முன் கோபக் காரராயிற்றே. விழி பிதுங்கிவிடும் போல் பார்த்தார். எனக்கு ஒரே பயம். ஆனால் வெளியே தெரிந்தால் கேவல மாகுமே என்று சத்தம் போடாமல் பார்வையளவிலேயே நின்று விட்டார்.

மறுநாள் மாலை கறுப்பண்ணன் என்பவனோடு தனியாகப் பேசிக்கொண்டிருந்தார் என் அப்பா. நான் அதைக் கவனித்து விட்டேன்.

"சும்மா இருங்கசாமி - இன்னும் ஒரு வாரத்திலே அந்த ஆசாரிப் பயலே தொலச்சுடுறேன்" - என்று கறுப்பண்ணன் சொன்னது என் காதில் நன்றாக விழுந்தது. செய்தி இன்னதென்று புரிந்து கொண்டேன். அந்த நிலைக்கு என் மனம் இடந்தர வில்லை. அவருக்குக் கடிதம் மூலம் அறிவித்தேன்.

சில நகைகளோடும் கொஞ்சம் பணத்தோடும் சென்னை வந்து சேர்ந்தோம். இருப்பதை வைத்து ஒரு நகைக்கடை வைத்தோம். செல்வம் சேர்ந்தது. உன்னையும் பெற்றெடுத் தேன். உன்முகத்தைப் பார்த்துப் பார்த்து என் கவலைகளை எல்லாம் மறந்துவிட்டேன்.

நிறுத்த கண்ணா, இதுதான் என் கதை. இதுவரை இந்தச் செய்தி ஒன்றும் உனக்குத் தெரியாது. நானும் சொல்லவில்லை. அந்தப் பழைய சம்பவங்களை எல்லாம் இன்று நீ நினைப்பூட்டி விட்டாய்! இது எப்படியோ அவர்களுக்குத் தெரிந்துவிட்டது போலிருக்கிறது. அதனால் உன்னை 'அவமானச் சின்னம்' என்று சொல்லியிருக்கிறார்கள்".

படித்துக் கொண்டிருந்த கண்ணப்பன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே "அம்மா! சரி. இதற்காகத்தான் சொல்லியிருக்கிறார்கள்.

சென்றதைப் பற்றிக் கவலைப் படுவதில் பலனில்லை. அதோ! அப்பாவும் வந்து விட்டார். சோறு போடுங்கள். சாப்பிடலாம்'' - என்று எழுந்து சென்றான்.

மறுநாள் கண்ணப்பன் தன் உயிர் நண்பன் ஞானம் வீட்டிற்குச் சென்றான். அவனைத் தனியாக அழைத்தான்.

''ஞானம்! நீ சீர்திருத்தவாதிதானே?''

''ஆம், கண்ணப்பா! இதில் என்ன உனக்குத் திடீர் என்று சந்தேகம் வந்தது?''

''சரி; மறுமணத்தை ஆதரிக்கிறாய் அல்லவா?'

''ஆம், மனமார ஆதரிக்கிறேன்.''

''கலப்பு மணம்....?''

கட்டாயம் வேண்டுமெனறு வற்புறுத்திக் கூறுகிறேன். என்னைப் பற்றித் தெரியாத என்ன? ஏன் இப்படி எல்லாம் படபட என்று கேட்கிறாய்.

''ஒன்றுமில்லை ஞானம்! இப்படி எல்லாம் சொல்லி விட்டுச் செயலில் மட்டும் வேறு விதமாக நடந்து கொள்ளு கிறாயே என்றுதான் வருத்தப்படுகிறேன்.''

''என்ன கண்ணப்பா! அப்படி ஒன்றும் நான் மாறி நடந்த தாகத் தெரியவில்லையே. அதற்கேற்ற சந்தர்ப்பமும் என் வாழ்வில் இன்னும் குறுக்கிடவில்லையே?''

''உன் வாழ்க்கையை நான் சொல்லவில்லை. கலப்புமணம், மறுமணம் இவற்றை ஆதரிக்கின்ற நீ என் வாழ்க்கையைக் கேவல மாகப் பேசியிருக்க வேண்டாம்''.

''உன் வாழ்க்கையைக் கேவலமாகப் பேசினேனா? இது என்ன விந்தை! கண்ணப்பா! யாரிடம் இப்படியெல்லாம் பேசுகிறாய்? நானா உன்னைக் கேவலமாகப் பேசுவேன்? அதுவும் உன் வாழ்க் கையையா?

''ஆம்; நேற்றுக் கழகத்தில் என்னை அவமானச் சின்னம் என்று சொன்னது என் வாழ்க்கையையல்லாமல் வேறென்ன?''

''அட பைத்தியமே! அதைச் சொல்லுகிறாயா? அது உன் வாழ்க்கையையோ வரலாற்றையோ குறித்ததன்று. நீ நம் கழகத்தில் சேர்ந்த பிறகும் மதச்சின்னங்களை விடாமல் அணிந்து கொள்ளு

கிறாயே! இது நம் கழகத்திற்கும் நமக்கும் பெரிய அவமான மல்லவா? இந்தச் சின்னங்களை ஒழிக்கும் வரையில் நம்மிடையே நீ ஓர் அவமானச் சின்னந்தான் என்று சொன்னேன். அது, உன் மனத்தை இவ்வளவு வருத்தும் என்று தெரிந்தால் சொல்லியிருக்க மாட்டேன். நானே நேரில் கூடக் கேலியாகப் பேசியிருக்கிறேனே! அது குற்றமானால் என்னை மன்னித்துவிடு. நண்பன் என்ற முறையில் மன்றாடிக் கேட்கிறேன்?" என்றான்.

கண்ணப்பனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "இந்த அவமானச் சின்னங்களையா சொன்னாய்? அப்பாடா! நேற்று முழுதும் என்னைக் கொன்று விட்டதே அந்தச் சொல். ஆம்; நான் இன்னும் அப்படியிருப்பது அவமானந்தான். இதோ அந்தச் சின்னங்களை ஒழித்துவிட்டேன். இனிமேல் நான் விடுதலைச் சின்னம். புரட்சியின் சின்னம்" என்று சொல்லிக் கொண்டே துள்ளிக் குதித்து ஓடினான் கண்ணப்பன்.

✪✪✪

**10**

# அழிந்து விடுமோ?

கவிஞர் மறைந்தார்.

கவிஞர் கண்ணனும், அவர் நண்பரும் கட்டு மரத்தில் ஏறிக் கடலில் சென்று கொண்டிருக்கும் பொழுது, திடீரென்று கட்டுமரம் கவிழ்ந்து விட்டது. கவிஞரைக் காணவில்லை. நண்பர் மட்டும் உயிரோடு கரை சேர்ந்தார்.

விடுதலை உணர்ச்சியைத் தூண்டும் வகையில் வீறுநடை கொண்ட கவிதைகளைத் தமிழகத்திற்குத் தந்த கவிஞர் இவர். கற்பனைச் செறிவும், உவமை நயமும், புதுமைப் பொலிவும் இவர் கவிதைகளிலே மின்னித் தவழ்ந்து விளையாடும். இத்தகைய கவிஞர் மறைவு தமிழ் நாட்டுக்குப் பேரிழப்பாகும்.

- வானவில்.

சாதி சமயங்களை மோதித் தகர்த்தெறிய வேண்டு மென்பது அவன் எண்ணம். ஏழைகளின் துயரத்தை - அவர் களுக்கு அளிக்கப் பட வேண்டிய உரிமைகளை - உடைமை களை அஞ்சாது எடுத்துச் சொல்லுவான். பெண்மையைப் பாழ் படுத்தும் பேதமையை வெறுப்பான். புதியதொரு சமுதாயத்தை அமைக்க - புத்துலகைக் காணத் திட்டம் தருவான். கண் மூடித்தனங்கள் மண்மூடிப் போக வேண்டும் என்பான். சமூகம் - பொருளியல் - அரசியல் மூன்றிலும் புரட்சி வேண்டும் என்று எக்காளமிடுவான். இவ்வளவும் அவன் கூறுவது உரை நடையிலே அன்று, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கவிதையிலே.

முன்னோர் காணாத உவமைகள் தாண்டவமாடும் அக்கவிதை யிலே, உயிர்ப்புள்ளது - உணர்ச்சியுள்ளது - ஒப்பில்லாதது அவன் கவிதை. அவன் கவிஞன். புரட்சிக் கருத்துள்ள புதுமைக் கவிஞன். புறாவை - கடலில் காணும் சுறாவை, உழவனை - உணவின்றி வாடும் கிழவனை, மாலையை - ஆலைத் தொழிலாளியின் வேலை யைப் பாடுவான். வைதீகரின் மமதையைச் சாடுவான். விதவைச்

சகோதரிகளின் அழுகுரல் கேட்கும் அவன் பாட்டில் காலத்துக் கேற்ற கருத்துகள் ஓடி ஓடிச் சிரித்து விளையாடும். ஆனால்.. அவன் கவிதையின் பெருமையை - அறிவின் திறனை யார் அறிகின்றார்? அறிந்தாலும் போற்றுவார் யார்?

வறுமையிலே வாடுகிறது அவன் உள்ளம். அதையும் தாண்டித் தான் தருகிறான் புரட்சிக்கவிதைகளை. உண்மையான கவிஞன் உள்ளம், காசு பணத்தைப் பற்றிக் கவலைப்படாது என்னும் உண்மையை அவன் வாழ்க்கையிலே தான் படித்தறிந் தேன்.

அவன் என் உயிர் நண்பன். அவனைப் பற்றி - அவன் கவிதையைப் பற்றி - வறுமையைப் பற்றி - அடிக்கடி எண்ணுவேன். அவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற உணர்ச்சி என்னைத் தூண்டும். ஆனால் என்னிடமும் பொருள் இல்லை என்பதை, சிந்தனை முடிந்த பின்புதான் உணர்வேன். பணமிருந்தால் அந்த எண்ணம் தோன்றுவது கொஞ்சம் அரிதுதானே! பணம் இல்லா விடினும் எப்படியேனும் அவனை உலகுக்குக் காட்ட வேண்டும் - அவன் கவிதையால் என் நாட்டிலே சமதர்மத்தைக் காட்ட வேண்டும் என்று முடிவு செய்தேன். பல பத்திரிகைகளுக்கு அவன் பாடல்களை அனுப்பினேன். சில நாளில் என்னிடமே திரும்பி வந்துவிட்டன. மக்கள் மன்றத்திலே மலரட்டும் என்று எண்ணி னேன். தோல்வி! ஏன்? தமிழ்நாட்டிலே பிறந்த ஒரே குற்றத்திற்காக அந்தத் தோல்வி. அவன் வேற்று நாட்டிலே பிறந்திருந்தால் ஒவ்வொரு எழுத்தும் பொன்னாற் பொறிக்கப்படும்: இங்குப் பிறந்ததால் அவன் கவிதைகள் போற்றுவாரின்றி அழிந்து விடுமோ? என்று வருந்துவேன்.

*அறிஞர்*களை - அல்லல் எதுவரினும் மக்களுக்கே தொண்டு செய்யும் *பெரியார்*களை அலட்சியப்படுத்துவது - அவமானப் படுத்துவது தானே நம் நாட்டு மக்களின் பெருந் தன்மை! உண்ணும் போது - உறங்கும்போது - உலவும்போது எப்பொழுதும் அவனைப் பற்றிய எண்ணந்தான். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தேன். முடிவின் விளைவுதான் மேலே கண்ட - வானவில் - என்ற பத்திரி கைச் செய்தி.

பத்திரிகைச் செய்தி வந்த சில தினங்களில் கண்ணன் கவிதை வராத பத்திரிகை ஒன்றேனும் இந்நாட்டில் இல்லை! புகழத் தொடங்கிவிட்டன. "புரட்சிக்கவி" "தென்னாட்டுத் தாகூர்"

இப்படி ஏதேதோ பட்டங்கள் வழங்கின. 'வாழ்வுக்கு வழி' 'மங்கையர் மாண்பு' 'விடுதலை வேண்டுமா?' என்ற தலைப்புகளிலே புலவர் பெருமக்களால் மேடைகளிலே பேசப்பட்டன அவன் கவிதைகள்.

இதைக் கண்ட எனக்கு மகிழ்ச்சி ஒரு பக்கம், மக்களின் நிலைமை கண்டு வருத்தம் ஒரு பக்கம், என்ன உலகம் இது! அவன் உயிரோடு இருக்கும்பொழுது உணவின்றிக் கழித்த நாள்கள் எத்தனை! அன்று ஆதரவு தருவாரில்லை. இன்று! ... பேசுவது - எழுதுவது - பாடுவது எல்லாம் அவனைப் பற்றி. சீர்திருத்த வாதியை உயிரோடு வாட்டுவது - இறந்தபின் உருவச்சிலை நாட்டுவது - அவனைப் பலபடப் போற்றுவது! இது மக்களியல்பாகிவிட்டது.

**உ**லகப் பெரும்போர் முடிந்தது. சிங்கப்பூரிலிருந்து தமிழ் நாட்டுக்குக் கப்பல் புறப்பட்டு விட்டது. அதிலே தமிழ்நாட்டு மக்கள் தம் தாயகத்திற்குத் திரும்பினர். அதே கப்பலில் என் நண்பன் கண்ணனும் வந்து சேர்ந்தான்.

"மறைந்த கவிஞர் மாளவில்லை. இழந்த மாணிக்கத்தைப் பெற்றுவிட்டோம். அவருக்குச் சென்னையிலே வரவேற்பும் பாராட்டும் நடைபெறும். கவிஞர் கண்ணன் வாழ்க".

- 'வானவில்'

இதைக் கண்ட என் நண்பனுக்கு மண்ணில் இருக்கிறோமா - விண்ணில் பறக்கிறோமா? என்ற ஐயம் ஏற்பட்டு விட்டது. கொஞ்சம் சமாளித்துக் கொண்டு "நண்பா! இது என்ன வேடிக்கை!" என்றான்.

"கண்ணா! உன்னைச் சிங்கப்பூரிலுள்ள என் நண்பன் கோ பாலனிடம் அனுப்பினேன் அல்லவா. நீ அங்கு போய்ச் சேர்ந்தா யோ இல்லையோ போர்மூண்டு விட்டது; நின்ற பாடில்லை. இதுதான் சமயம் என்று எண்ணி நீ கடலில் மறைந்தாய் என்று விளம்பரம் செய்தேன். அதன் பின்புதான் உன் பாடல்களுக்கு மதிப்புக் கிடைத்தது மக்களிடமிருந்து. என்கனவு நனவாயிற்று. பாராட்டுக் கூட்டத்திலே நான் சொல்கிறபடியே பேசிவிடு. அதுதான் நீ எனக்குச் செய்ய வேண்டிய கைம்மாறு".

கடல்போன்ற கூட்டம். பெருத்த கைத்தட்டலுக்கிடையே எழுந்து நின்றான் கண்ணன் சிங்க ஏறுபோல.

"தோழர்களே! அறிஞர்களே!"

எனக்கு வரவேற்பும் பாராட்டும் அளித்துப் பெருமைப் படுத்திய உங்கள் அனைவருக்கும் வணக்கம் கடலில் கவிழ்ந்ததும் கட்டு மரத்துண்டு ஒன்றைப் பிடித்த வண்ணம் மிதந்து கொண் டிருந்தேன். அப்பொழுது சிங்கப்பூருக்குச் சென்று கொண்டிருந்த கப்பல் ஒன்று என்னைக் காப்பாற்றிச் சிங்கப்பூரில் கொண்டு சேர்த்தது. போர் முடிந்ததும் என் நாட்டையும் என் இனத்தையும் காண்கிறேன். மீண்டும் உங்களுக்குத்தான் எனது மூச்சு வணக்கம்."

கண்ணன் நான் கூறியபடியே பாராட்டுக் கூட்டத்திலே பேசிவிட்டான். அப்பப்பா எவ்வளவு புகழ்மாலைகள்!

பிறகு நாட்டுமக்கள் "நிதியளிப்பு" "படத்திறப்பு" அனைத்தும் செய்யத் தொடங்கினர் என் நண்பன் கண்ணனுக்கு.

கவிஞனுக்குப் புகழ் வளர்ந்து கொண்டிருந்தது. அன்று வறுமையில் வாடிய கண்ணன் இன்று செல்வத்திலே புரள்கிறான். "இளமையை வறுமையிலே நனைத்து நனைத்துக் கெடுத்து விட்டேன். பணம் மக்களின் நன்மைக்குத்தானே. இதையறியாமல் முன்பெல்லாம் பணம் கூடாது என்றிருந்து விட்டேன். இனிமேலாவது நன்றாக அனுபவிக்க வேண்டும்" என்று முடிவு கட்டினான்.

பணம்... பணம்... ஆம் அவன் மனம் பணத்திலே சென்று கொண்டிருந்தது. அந்த ஆசை எழுந்த பின்பு கேட்கவா வேண்டும். சினிமாக்காரர்கள் வீசிய வலையிலே எளிதிலே சிக்கிவிட்டான். அம்மட்டா? அரிவையரின் கடைக்கண் வீச்சிலே சொக்கி விட்டான். என்னை மறந்தான். ஏன்? தன்னையே மறந்தான். இப்பொழுது அவனுக்கு என்னைவிடச் சிறந்த தோழர்கள் கருப்பு - சிவப்பு - வெள்ளைச் சீசாக்கள்தாம். அவன் மாறினான். ஆனாலும் கவிதையின் எழில் மாறவில்லை. உயிர்ப்பும் உணர்ச்சியும் பின்னிக் கிடந்தன.

ஒருநாள் தற்செயலாக அவனைக் கண்டேன்.

"கண்ணா! புராணங்களைப் பொசுக்கச் சொன்ன உன் பேனா முனை இன்று அவைகளுக்கு அரணாவதா? உன் கற்பனை, சினிமா விலா நுழைய வேண்டும்? அது சீர்திருத்த உருவிலே நுழைந் திருந்தாலும் நான் மகிழ்ந்திருப்பேன். மக்களை மறுபடியும் மடமைக்கு இழுத்துச் செல்கிறதே உன் கற்பனை!" என்று வருந்திக் கேட்டேன்.

"நண்பா! என்ன இப்படிப் பேசுகிறாய்! உலகமே உனக்குத் தெரியவில்லையே! பணம் நிறையக் கிடைக்கிறது. அதனால் படத்துறையில் இறங்கினேன். புராணத்தை எழுதினாலும் என்

பெயர் அங்கே பொறிக்கப்பட்டிருக்காது; அப்படியிருக்க நீ ஏதோ குடிமூழ்கிவிட்டது போலப் பேசுகிறாயே! '' என்று மிகவும் சாதாரணமாக விடை தந்தான்.

''கண்ணா! நீயா பேசுகிறாய்! பணத்திற்கு உன் உள்ளம் பணிந்துவிட்டதா? உன் பெயர் பொறிக்கப் பட்டிருக்காது என்றால் மக்களை ஏமாற்றும் எண்ணமா உனக்கு? பணத்தை அன்று வெறுத் தாய். ஆனால் இன்று…? எத்துறையிலும் அடிமை கூடாது என்ற நீ, இன்று பணத்திற்கு அடிமையாக் கினாய் உன் உள்ளத்தை. அவ்வளவில் நின்றாயா? மாதர்கள் மையலிலும் மனத்தை அழுந்த விட்டு விட்டாயாமே? உன் போன்ற கவிஞனுக்கு இது அழகா? என்று மறுபடியும் கேட்டேன்.

''ஆம் நண்பா! நான் கவிஞன். கவி உள்ளம் என்பால் இருக்கிறது என்பதை நீயே ஒப்புக்கொள்கிறாய். அழகு எங்கெங்கு இருக்கிற தோ அங்கெல்லாம் மனத்தைப் பறிகொடுத்து விடுவான் கவிஞன். காக்கைச் சிறகினிலே - காட்டு மயில் தோகையிலே - எந்தப் பொருளிடத்தும் அழகைக் காண்கிறான் கவிஞன். அப்படியிருக்க இயல்பாகவே அமைந்த எவர் - கண்ணுக்கும் புலனாகின்ற மங்கையர் அழகு மட்டும் கவிஞன் கண்ணுக்கு மறைந்தா நிற்கும்? அழகில்லாத பொருளிடத்தும் அதைக்கண்ட நான் அரிவையர்பால் அழகின் வரம்பைக் கண்டேன். அழகை அனுபவிக்கிறேன். இதில் என்ன குற்றம்? அவர்களே வலியவரும் பொழுது …. என் மனம் என்ன கல்லா? அழகு எதற்கு? மனிதன் நுகரத்தானே?''

''கண்ணா! என்ன பித்துப் பிடித்தவன் போலப் பிதற்றுகிறாய்! ஏன் இப்படிக் கெட்டுவிட்டது உன் மனம்? குற்றங்களை உன் புலமையால் மறைக்கப் பார்க்கிறாய். அது பொருந்தாது. இதனுடன் குடிக்கவும் பழகி விட்டாயாமே? அதற்கும் சமாதானம் சொல்வா யோ? வேண்டாம் கண்ணா? மக்கள் உன்னை நம்பியிருக்கிறார்கள்; அவர்கள் வாழ்வுக்கு வழி கோலுவாய் என்று எண்ணினேன். ஆனால், நீ செல்லும் வழி..?''

''நண்பா! குடிப்பது கெடுதல் என்றா எண்ணுகிறாய்! இன்னும் நீ பத்தாம்பசலியாக அல்லவா இருக்கிறாய்! இதைக் கெடுதல் என்றால் காப்பியும் குடிதான். காப்பியிலாவது கெடுதல் உண்டு. நான் பயன்படுத்துவது பழச்சாறு. அவ்வளவும் இரத்தம் - உடலுக்கு உறுதி. பழச்சாறு கெடுதல் என்பது பைத்தியக்காரத்தனம்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அந்தோ! அவன் வறுமையிலேயே இருந்திருந்தால் இன்னும் எவ்வளவோ வளமான பாடல்களைப் பெற்றிருக்குமே தமிழகம்! பணம் அவனைக் கெடுத்துவிட்டது... இல்லை.... நான்தான் அவனைக் கெடுத்துவிட்டேன். பணக்காரனாக்கியது நான்தான். அதனால்தான் அவன் கெட்டுவிட்டான்.

போற்றுவாரின்றி அழிந்து விடுமோ இந்தப் புரட்சிக் கவிதைகள் என்று அன்று வருந்தினேன். இன்று அவன் புகழ் அழிந்து விடுமோ என்று அஞ்சுகிறேன். இவன் மாறியதால் புரட்சி அழிந்துவிடுமோ - மக்கள் விழிப்புணர்ச்சி அழிந்து விடுமோ - என்று துடிக்கிறேன்.

"கண்ணா! எதிரிகள் ஏசுவார்களே! உன் இனத்தை இழிவு படுத்தும் கூட்டம் தூற்றிவிடுமே! உனக்காக நான் கூறவில்லை. உன் நாட்டிற்காக - உன்னை நம்பிப் பின்பற்றும் மக்களுக்காகக் கூறுகிறேன். அதற்காகவாவது இந்தப் பழக்கங்களை விட்டுவிடு. கண்ணா! கண்ணா!"

அத்தான்! அத்தான்! என்று என் மனைவி என்னை எழுப்பி னாள். உறக்கம் கலைந்து எழுந்தேன். "ஏன் இப்படி உளறுகிறீர்கள். ஏதோ கண்ணா, கண்ணா என்று சத்தமிட்டீர்களே. குசேலர் நினைவோ? கோவிலுக்குப் போகாதே என்று எனக்கு அறிவுரை சொல்லிவிட்டு நீங்கள் இரவில் அந்தரங்க பஜனை செய்கிறீர்களோ?" என்று கிண்டல் செய்தாள். கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

"அந்தக் கண்ணனை நான் அழைக்கவில்லை. என் நண்பன் கண்ணனும் நானும் நேற்றுமாலை கடற்கரையில் அவன் கவிதை களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். உணர்ச்சி - உள்ளத் துடிப்பு நிறைந்திருந்தது அக் கவிதைகளிலே. நாட்டு மக்களைத் தட்டி எழுப்பிச் சம தர்மத்தின் வழியிலே அழைத்துச் செல்வது அவன் பாடல். அவற்றை வெளியிட மறுத்தான். நான் எப்படியும் அவற்றை நாட்டிற்கு அளிக்க எண்ணினேன். அதே சிந்தனையில் உறங்கிவிட்டேன். அவனைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருந் தேன். நீ எழுப்பிவிட்டாய்"

"எப்படிக் கனவு கண்டீர்கள்?"

கனவைக் கூறினேன். அவளும் சிரித்தாள். நானும் சிரித்தேன்.

✪✪✪

# 11
# இரண்டு தந்தி

"அப்பப்பா, விடுமுறை வாங்குவதற்குள் பெரும் பாடாய்ப் போய்விட்டதே! பெரிய அதிகாரிகளாக ஆகிவிட்டால் மனிதப் பண்பே மாறிவிடுகிறது; மற்றவர்களுடைய நிலையை உணருந் தன்மை அற்றே போய்விடுகிறது; என்னுடைய அவதி என்ன என்பதை அறியாமலேயே 'ஆபீசு' வேலை 'ஆபீசு' வேலை என்று அழுதுகொண்டேயிருக்கிறார் 'மானேஜர்' என்று முணு முணுத்துக் கொண்டே அவசர அவசரமாகக் 'கார்' நிலையத்திற்கு விரைந்து கொண்டிருந்தான் அரங்கசாமி.

அரங்கசாமி காரைக்குடியில் ஓர் அலுவலகத்தில் வேலை பார்க்கும் வாலிபன். அவன் மனைவி தேவகி முதற் பிள்ளைப் பேற்றுக்காக அவளுடைய தாயகம் சென்றிருந்தாள். முதற் பிள்ளைப் பேறானதால் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருந் தாள். தேவகி பிள்ளைப் பேற்றால் மிகத் தொல்லைப்படுவ தாகவும் அதனால் உடனே புறப்பட வேண்டுமென்றும் அரங்கசாமிக்குத் தந்தி வந்திருந்தது. தேவகி மீது உயிரை வைத்திருந்தான் அவன். அதனால் உடனே புறப்பட 'மானேஜரிடம்' விடுமுறை வாங்குவதற்குப் பட்டபாட்டை நினைத்துக் கொண்டு தான் கார் நிலையத்திற்கு வந்தான். இவன் வந்து சேரும் போது திருச்சிராப்பள்ளி வண்டி புறப்பட்டு விட்டது. அந்த வண்டியில் இடமும் இல்லை. அதனால் அடுத்த வண்டிக்குக் காத்துக் கொண்டிருந்தான்.

உட்கார்ந்திருந்த பொழுது அவன் உள்ளம் ஒரு நிலையில் இல்லை. தேவகியைப் பற்றிய எண்ணமே ஓடிக் கொண்டிருந்தது. நிலையத்தில் வேறு பல ஊர்களுக்குச் செல்லத் தயாராகிக் கொண் டிருக்கும் கரி வண்டி, 'பெட்ரோல்' வண்டி இவற்றின், இரைச் சலைக் காட்டிலும் அதிகமாக இரைந்து கொண்டிருந்தது அவன் இதயம். பல வண்டிகள் உள்ளே நுழைவதையும், பல வண்டிகள் வெளிக் கிளம்புவதையும், மக்கள் ஓடோடி வந்து நெருக்கியடித்துக் கொண்டு வண்டியில் ஏறுவதையும் பார்க்கப் பார்க்க இவனுக்கு

எரிச்சலாக இருந்தது. இவன் எதிர்பார்க்கும் வண்டியைக் காண வில்லையல்லவா; அதனால்தான், 'சனியன், நாம் எதிர்பார்க்கும் போது தான் வராது. நாம் சும்மா இருக்கும் போது திருச்சிராப்பள்ளி வண்டி நிமிடத்திற்கொன்றாக ஓடும்' என்று அங்கலாய்த்துக் கொண்டான். வண்டி மணிப்படிதான் ஓடுகிறது. இவனுடைய அவசரம் அப்படி எண்ணும் படி செய்கிறது. தேவகிக்கு ஏதாவது நேர்ந்து விடுமோ என்று எண்ணுவான். மனம் 'குபீர்' என்னும். 'சேச்சே' அப்படி யெல்லாம் நேராது. ஏன் நாமாக அலட்டிக் கொள்ளவேண்டும்?' என்று தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொள்வான்.

இவ்வாறு எண்ணிக் கொண்டேயிருந்தவன் சலிப்போடு எழுந்து அங்குமிங்குமாக நடந்து பார்த்தான். அப்பொழுதும் 'கார்' வரவில்லை. 'என்னடா இது பெரிய தொந்தரவாய்ப் போச்சு; சனியன் பிடித்த 'மானேஜர்' முன்னாடியே விடுமுறை தந்திருந்தால் இரயிலிலாவது போய்த் தொலையலாம்' என்று எண்ணிக் கொண்டே 'சிகரெட்' ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தான்.

> "மாய வாழ்வு சதமாகுமா - மானிடனே நீ
> மனதை அலைய விடலாகுமா"

என்று ஒரு பிச்சைக்காரி பாடின பாட்டு அவன் செவியில் வந்து மோதியது. அவனுக்கு அந்த ஓசை பெரிய துன்பத்தைக் கொடுத்தது. அவன் அருமை மனைவி தேவகியைப் பற்றி எண்ணிக் கொண் டிருக்கும் போது 'அபசகுனம்' போல இப்படிப் பாடுகிறாளே என்று அவளை வெறுத்தான். ஆனால் அவளுடைய தோற்றம் அவளுக்காக இரக்கம் காட்டச் செய்தது. கிழிந்த கந்தலாடை உடுத்தியிருந்தாள். குலைந்து கிடந்த கூந்தல் அவளுடைய முகத்தில் அசைந்தாடிக் கொண்டிருந்தது. அதை ஒதுக்கிவிட்டுக் கொண்டே பாட்டுப் பாடி ஒவ்வொரு காரிலும் கைகளை நீட்டிப் பிச்சை கேட்டு வந்தாள். இடுப்பில் சுமார் மூன்று வயதுக் குழந்தை ஒன்றும் இருந்தது. அவள் பாடிய பாட்டு, பிச்சை கேட்பதற்காகத்தான் என்றாலும், அந்த ஒலி அவளுடைய இதயத்தைப் பலமாகக் கௌவிக் கொண்டிருந்த சோகத்தின் எதிரொலியாக இருந்தது. அந்தக் காட்சியும் அந்தப் பாட்டும் அரங்கசாமியை, தன் சொந்த வாழ்வைப் பற்றிய நினைவி லிருந்து வேறெங்கோ இழுத்துச் சென்றன.

சிந்தனை வீசிக் கொண்டிருந்தது. 'இந்தப் பிச்சை வாழ்வு நம் நாட்டை விட்டு என்று தொலையுமோ? இதற்கெல்லாம் காரணம் அரசாங்கந்தான்... அரசாங்கம் என்ன செய்யும்? அரசாங்கம் எவ்வளவு பிச்சைக்காரர்களைத்தான் கவனிக்க முடியும்? பெரும் பாலும் இன்றைய உலகில் எல்லோருமே பிச்சைக்காரர்களே? ஆனால் ஒவ்வொருவருக்கும் இடையே கொஞ்சம் கொஞ்சம் வேறுபாடு உண்டு. ஒரு சில கொழுத்த பணக்காரர்களைத் தவிர மற்றைய யாவரும் வெவ்வேறு வகையான பிச்சை வாழ்வுதான் நடத்துகிறார்கள். இவ்வளவு பேரையும் அரசாங்கம் எப்படிக் கவனிக்க முடியும்? நமக்குள்ளே பொருளாதார சமத்துவம் ஏற்பட்டால் ஒழிய இந்தச் சிக்கல் தீராது. அந்தச் சமத்துவத்தைப் படைப்பதற்கும் உரமுள்ள தீவிரக் கருத்துள்ள ஓர் அரசாங்கந்தான் வேண்டி யிருக்கிறது" என்று பெரிய அரசியல் வாதியைப் போல எண்ண மிட்டுக் கொண்டே அவளைப் பார்த்த வண்ணமிருந்தான்.

அவளும் ஒவ்வொரு வண்டியாகப் பிச்சை கேட்டுக் கொண்டே வந்தாள். ஒருசிலர் அவளை அதட்டித் துரத்தினர். மற்றும் சிலர் கிண்டல் செய்தனர். 'எடுப்பது பிச்சை - இடுப்பில் இருப்பது பிள்ளை. திருட்டுக் கழுதைகள், சும்மா ஊரை ஏய்க்கிறதுகள்' என்று சிலர் உண்மைகளைக் கண்டு பிடித்தவர் களைப் போலப் பேசினர். ஆனாலும் இரண்டொருவர் இரக்கங்கொண்டு காசுகள் தராமலும் இல்லை. அப்படிக் கொடுப்பவர்களைப் பார்த்துப் பக்கத்திருக்கும் 'கனவான்கள்' இவர்களுக்கெல்லாம் கொடுக்கக் கூடாது சார்! மேலும் பிச்சை எடுக்கத்தான் உதவி செய்தவர்களாவோம்' என்று உபதேசத்தில் இறங்கினார்கள்.

அப்போது பலமாக 'ஆரன்' அடித்துக் கொண்டே ஒரு பெரிய கார் ஒன்று நிலையத்துக்குள் வேகமாக நுழைந்தது. சத்தத்தைக் கேட்டு அவளும் ஓடிவந்தாள் அந்தக் காரை நோக்கி. அதற்குள் அதைப் பின் தொடர்ந்து மற்றொரு வண்டியும் மிக வேகமாக நுழைந்தது. ஓடிய அந்தப் பிச்சைக்காரி அந்தக் காரில் அடிப்பட்டு விழுந்தாள். கையிலிருந்த குழந்தை கடகடவென உருண்டது. அவளுக்குப் பலமான அடிப்பட்ட தால் இரத்தம் பெருக்கெடுத்தோடியது. அவள் மயங்கிக் கிடந்தாள். காரில் இருந்தவர்கள், நிலையத்தில் நின்று கொண் டிருந்தவர்கள் எல்லோரும் ஓடி அவளைச் சுற்றி வேடிக்கைப் பார்த்தார்கள். உட்கார்ந்து

கொண்டிருந்த அரங்கசாமியும் ஓடினான். அதற்குள் பக்கத்திலிருந்த 'போலீசு' வந்து கூட்டத்தை ஒதுக்கிக் கொண்டிருந்தது. சிலர் அவளைத் திட்டினார்கள். சிலர் காரோட்டியைப் பேசினார்கள். இன்னும் சிலர் 'அவள் விதி அவ்வளவுதான்' என்று வேதாந்தம் பேசினர். 'பிச்சைக்காரி தானே! போகட்டும், என்ன குடிமுழுகிப் போகிறது' என்று பேசிக்கொண்டனர் சிலர்.

அனாதையான - ஏழையின் உயிருக்கு உண்மையில் இரங்கு பவர்கள் எங்கேயிருக்கப் போகிறார்கள்? உயிரில் கூட, பணக்கார உயிர் - ஏழையின் உயிர் என்ற வேறுபாடு உண்டாகிறதே! துன்பம் பணக்காரனுக்கு ஒருமாதிரியும் ஏழைக்கு ஒருமாதிரியுமா வேதனை தருகிறது? எங்குத் துன்பம் தோன்றினாலும் மனிதன் என்ற முறையில் கண்ணோட்டம் செலுத்துவதுதானே மனிதத் தன்மை. ஆனால் அந்தத் தன்மைதான் மறைந்து போய்விட்டதே!

'போலீசு' தான் என்ன செய்யப்போகிறது? அவள் இறந்தாள். 'போலீசு' காரோட்டிக்குத் தண்டனை தரும்; அல்லது விட்டு விடவும் செய்யும்; ஆனால் அவளுக்குப்பின் அந்தக் குழந்தைக்குக் கண்காணிப்பு யார்? அதையல்லவா கவனிக்க வேண்டும்! கடைசியில் அதுவும் பிச்சையெடுத்துத் தான் வாழ வேண்டும்; அந்தக் குழந்தை யும் எதிர்காலப் 'பிரஜை'தான் இந்த நாட்டில்! இதைப்போல எத்தனையோ குழந்தைகள் திரிகின்றன. இங்கே இதையெல்லாம் கவனிப்பவர் யார்? இப்படியே போய்க்கொண்டிருந்தால் இந்த நாடு என்னாவது? பிச்சைக்கார நாடாகத்தானே ஆகும்! தனி மனிதன் வாழ்வுதானே கவனிக்கப்படுகிறது. சமுதாயத்தின் வாழ்வை அதன் போக்கைக் கவனிப்பது யார்? அதைக் கவனிக்காத நாடு என்றும் உருப்பட முடியாது; அந்த நாட்டின் எதிர்காலம் சூனியமாகத்தான் இருக்கும்.

அரங்கசாமி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். 'ஐயோ! பாவம்! சிறுவயதுப் பெண்ணாக இருக்கிறாள். யாரோ அனாதை' என்று எண்ணிக்கொண்டே உருண்டு விழுந்த குழந்தையின் பக்கம் அவன் பார்வையைத் திருப்பினான். குழந்தை அழுது கொண் டிருந்தது. குழந்தை கையில் ஒரு பழைய 'மணிபர்சு' இருந்தது. அதை மீண்டும் நன்றாக உற்றுப் பார்த்தான். மேல்புறத்தில் சிறு புகைப்படம் ஒன்றும் இருப்பதைப் பார்த்தான். அவன் மனம் 'சுரீர்' என்றது.

மறுபடியும் அந்தப் பிச்சைக்காரியைக் கூர்ந்து பார்த்தான். அப்படியே செயலற்றுச் சிலைபோல நின்று விட்டான். மனம் வெடித்து விடும் போலிருந்தது. கண்கள் கலங்கி நீர் ததும்பிக் கொண்டிருந்தன. அதற்கு மேல் அவனால் அங்கு நின்று கொண் டிருக்க முடியவில்லை. திரும்பி வந்து முதலில் உட்கார்ந்த இடத்தி லேயே உட்கார்ந்து விட்டான். எங்கிருக் கிறோம் என்பதே அவனுக்குத் தெரியவில்லை. 'சிகரெட்'டைப் பற்ற வைத்தான். 'சிகரெட்டி'லிருந்து வெளிப்படும் புகை அவன் முகத்தை மறைத்த வண்ணம் சுழன்று சுழன்று போய்க் கொண்டிருந்தது. புகையைப் பார்த்த வண்ணம் இருந்தான். புகைப்படலம் சலனப் படம் போல் அவனுக்குத் தோன்றியது. அதில் பழைய நிகழ்ச்சிகள் ஓடிக் கொண்டிருந்தன.

*****

உத்தமபாளையத்தில் வேலுச்சாமி என்பவர் பல நிலங் களுக்குச் சொந்தக்காரர். அவருடைய மகன் அரங்கசாமி. அரங்க சாமி விடுமுறை நாள்களில் வயலுக்குச் சென்று வருவதுண்டு. நிலங்களைக் கறுப்பணன் என்பவர் மேற்பார்த்து வந்தார். கறுப் பணன் வீடு வயல் பக்கமாக இருந்தது. 'அரங்கசாமி வரும்போ தெல்லாம் கறுப்பணன் அன்பாக வரவேற்று உபசரிப்பது வழக்கம். வாரந் தவறாமல் அரங்க சாமியும் வயலுக்குப் போய் வந்தான். அவன் போவதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. கறுப்பணன் குடிசையில் கட்டிளங் கன்னி ஒருத்தியிருந்தாள். அவள் அவனு டைய தங்கை மகள்; பெயர் பொன்னம்மாள். அவளுடைய உருவ அமைப்பு அரங்கசாமியைக் கவர்ந்தது.

வழக்கம்போல் ஒருநாள் வயலுக்குச் சென்றான் அரங்கசாமி. கறுப்பணன் வீட்டில் இல்லை. பொன்னம்மாள் மட்டும் இருந்தாள். பொன்னம்மாள் அவனை அன்போடு வரவேற்றாள்.

"உன் மாமா எங்கே?" என்றான் அரங்கசாமி.

"தேனிச் சந்தைக்குப் போயிருக்கிறார்" என்று அவள் பதில் சொன்னாள். சொல்லும்போது சிறிது நாணத்தோடு சொன்னாள்.

"தண்ணீர் கொஞ்சம் தருகிறாயா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் அவன்.

"கொஞ்சமென்ன! எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே உள்ளே சென்றாள். தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்தாள். இவன் தண்ணீரைப் பருகிய பின் குவளையைக் கொடுத்தான். அவள் கை நீட்டி வாங்கினாள். ஆனால் இவன் பிடியை விடுவதாயில்லை. அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றான். அவன் பார்வையில் கலவரம் நிறைந்திருந்தது. பொன்னம்மாள் அவனுடைய கருத்தைப் புரிந்து கொண்டாள். அவள் நாணித் தலைகுனிந்து "இதெல்லாம் நல்லா இருக்குங்களா?" என்று கேட்டாள்.

"எனக்கு நல்லாத்தானிருக்கு" என்றான் அரங்கசாமி. இருந் தாலும் குரல் தடுமாறியிருந்தது.

"இதெல்லாம் மாமாவுக்குத் தெரிந்தால் என்னைக் கொன்று போடுவாரே!" என்றாள் பொன்னம்மாள்.

"மாமாவுக்குத் தெரிந்தால் தானே!" என்று இவன் சொன்னான்.

"தெரியாமலா போகும்? என்றைக்காவது தெரிந்தால்?" என்று அவள் சொன்னாள்.

இப்படி அவள் சொன்னதும் அரங்கசாமிக்குத் துணிவு பிறந்து விட்டது. 'என்றைக்காவது தெரிந்தால்' என்று சொல்வதி லிருந்து இவளுக்கும் உடன்பாடு என்பதை அறிந்து கொண்டான்.

"பொன்னம்மா" என்று சொல்லிக் கொண்டே நெருங்கினான். பொன்னம்மாள் பேசாதிருந்தாள். மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி தானே. பிறகு கேட்கவா வேண்டும்! இளம் உள்ளங்கள் இணைந்து விட்டன. ஒருவர்க்கொருவர் உள்ளங்களைப் பரிமாறிக் கொண் டார்கள்.

ஒற்றையடிப் பாதையில் வண்டி வரும் சத்தம் கேட்டது. சத்தத்தைக் கேட்டுப் பிரிந்துவிட்டார்கள். பின்னர், தவறாமல் ஒவ்வொரு ஞாயிறு தோறும் இவர்களுடைய இன்ப விளையாட்டு நடந்து கொண்டேயிருந்தது.

அரங்கசாமி காதலில் வெற்றி பெற்றதைப் போலவே தேர்விலும் வெற்றி பெற்று விட்டான். மதுரைக்கு மேல்படிப்புப் படிக்க அனுப்புவதற்கு அவன் தந்தை ஏற்பாடு செய்தார். விடைபெற்றுக் கொள்ளத் தன் காதலியைத் தேடிச் சென்றான் அரங்கசாமி. பொன்னம்மாள் வழக்கம்போல வரவேற்றாள்.

"மாமா சந்தைக்குத்தானே போயிருக்கிறார்?" என்று அரங்க சாமி கேட்டான்.

"ஆமாம்" என்றாள் அவள்.

"பொன்னம்மா! நான் மேல் படிப்புக்காக மதுரைக்குப் போகிறேன். அதுவும் நாளைக்கே" என்று சொன்னான்.

"நன்றாகப் போய் வாருங்கள்" என்றாள்.

"என்ன! நான் போவதில் உனக்கு மகிழ்ச்சிதானா?" என்று வியப்புடன் கேட்டான்.

"வருத்தம் என்றால் நின்றாவிடுவீர்? உங்கள் அப்பா விட வேண்டுமே? அதுவுமல்லாமல் படிக்கப் போவதை வேண்டா மென்று சொல்லலாமா?" என்று சொன்னாள் பொன்னம்மாள்.

"ஓ! அப்படியா! சரி சரி; நான் அஞ்சிக் கொண்டே வந்தேன். நான் சொன்னவுடன் ஒரே அடியாக அழுவாய்; உன் அழுகையை நிறுத்திச் சமாதானப்படுத்தப் பெரும் பாடாய்ப் போய்விடும்; எப்படியெல்லாம் சமாதானம் சொல்வது என்றெல்லாம் திட்டம் போட்டுக் கொண்டு வந்தேன். நீ ஒரே வரியில் 'போய் வாருங்கள்' என்று சொல்லிவிட்டாய்! சரி அதெல்லாம் கிடக்கட்டும் எங்கே அந்தப் பாட்டை ஒருமுறை பாடு! கடைசியாகக் கேட்டுவிட்டுப் போகிறேன்" என்றான்.

"பாடினால் என்ன தருவீரோ?" என்றாள் அவள்.

"பாடுவதற்கு முன்பு கேட்டால் எப்படித் தருவது? பாடி விட்டுக் கேள்! வழக்கப்படி தருகிறேன். பாடு முன்பே அச்சாரம் வேண்டுமோ?" என்று அவளுடைய கன்னத்தைக் கிள்ளினான்.

"வேண்டாம்; வேண்டாம்! இதோ பாடுகிறேன்" என்று சொல்லிவிட்டு அவளும் பாடினாள். பாட்டு முடிந்ததும் "பொன்னம்மா! சினிமாவில் கேட்ட பாட்டுக்களை அப்படியே பாடுகிறாயே! நீ இந்தக் கிராமத்தில் பிறக்காமல் பட்டணத்தில் பிறந்திருந்தால் சினிமாக்காரர்கள் உன்னை 'ஸ்டார்' ஆக்கியிருப் பார்கள்"

"அதெல்லாம் இருக்கட்டும்? நீங்கள் ஊருக்குப் போகிறீர் களே! எனக்கு என்ன கொடுத்துவிட்டுப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

“உனக்கு என்ன வேண்டும்? இவ்வளவு நேரம் தந்தது போதாதா”

“அப்பப்பா! சும்மா இதே பேச்சுதான்; இந்தப் பேச்சுக்கு ஒரு முடிவே கிடையாதா,” அவனுடைய சட்டைப் பையில் கையை விட்டாள். ‘மணிபர்சு’ ஒன்று இருந்தது. அதை எடுத்துக் கொண்டு ‘இது என்னிடம் இருக்கட்டுமே’ என்றாள்.

‘வைத்துக் கொள்ளேன் உனக்கில்லாமலா” என்றான்.

‘பர்சை’த் திறந்து பார்த்தாள். ஒரு காசுகூட இல்லை. வெறும் ‘பர்சா’க இருந்தது. “பூ! இவ்வளவு தானா! பணம் இருக்குமென்று பார்த்தேன். ஒன்றுமே இல்லையே! உங்கள் காதலும் இந்தப் ‘பர்சு’ மாதிரி தானோ?” என்று கிண்டல் செய்தாள்.

“என் காதல் வெறும் ‘பர்சு’ அன்று. மாணிக்கங்களும், இரத்தினங்களும் நிறைந்த ‘பர்சு’ பழகப் பழகப் பழையதாகிக் கிழிந்து விடும். என் காதல் என்றும் புது மெருகோடிருக்கும்; பழுது படாது” என்று சொன்னான். சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது வண்டி வரும் ஒலிகேட்டது. கடைசியாக அரங்கசாமி விடை பெற்றுக் கொண்டு சென்றான்.

**மூ**ன்று மாதங்களுக்குப் பிறகு விடுமுறையில் தனது ஊருக்கு வந்து சேர்ந்தான் அரங்கசாமி. வந்த அன்றைக்கே துடிதுடித்துக் கொண்டு ஓடினான் பொன்னம்மாளைப் பார்க்க. அங்கே கறுப்பணன் இருந்தமையால் ஒன்றும் பேச முடியவில்லை. அவர்கள் பேசாமலும் இருக்கவில்லை. காதலர்கள் பேசுவதற்குக் கண்ணை விடச் சிறந்த கருவி வேறு ஏது?

ஞாயிற்றுக் கிழமை வந்தது. பொன்னம்மாள் ஆவலோடு அரங்கசாமியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவனும் வந்தான். ஆனால் அவன் முகத்தில் எப்பொழுதும் காணப்பட்ட மகிழ்ச்சிக் களை காணப்படவில்லை. பொன்னம் மாள் முகத்தில் புதுவிதமான ஒரு பொலிவு காணப் பட்டது. அரங்கசாமியின் முகத்தைப் பார்த்ததும் அந்தப் பொலிவு சிறிது மங்குவதுபோல் காணப்பட்டது.

“ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறீர்கள்” என்று பரிவுடன் கேட்டாள்.

“ஒன்றும் இல்லை” என்று தரையைப் பார்த்த வண்ணம் கவலையோடு பதில் சொன்னான்.

"ஒன்றுமில்லை யென்றால் உம்ம் என்று ஏன் இருக்க வேண்டும்?" என்று அவன் முகத்தைத் தன் பக்கமாக நிமிர்த்தினாள்.

"பொன்னம்மா! அப்பா, கலியாணத்திற்கு ஏற்பாடு செய்திருக் கிறராம்" என்று அரங்கசாமி சொன்னான்.

"அப்பாவுக்கு இது தெரியுமா?" என்று பெருமகிழ்ச்சியுடன் கேட்டாள் பொன்னம்மாள்.

"இது தெரிந்திருந்தால் திருச்சிராப்பள்ளியில் பெண் பார்த் திருப்பாரா?" என்று சிறிது கோபமும் வருத்தமும் கலந்த குரலில் பேசினான்.

"திருச்சிராப்பள்ளியில் பெண்ணா" என்று திடுக்கிட்டு நின்று "அப்படியானால் என் கதி" என்றாள்.

"பொன்னம்மா! நான் என் தாயாரிடம் இப்போது திருமணம் வேண்டாமென்று எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். அப்பா கேட்பதாகக் காணோம். ஒரே பிடிவாதமாக இருக்கிறார். அவருடைய கோபத்தை மீறவும் முடியாது போல் தோன்றுகிறது. என்ன செய்வதென்றே எனக்குத் தோன்ற வில்லை" என்று சொன்னான்.

"அப்படியானால் நான் என்னாவது? என் மாமாவும் கோபக் காரர்தானே! நான் இப்போது இரண்டு மாதம் தலை முழுகாமல் இருக்கிறேன். இந்த நிலையில் என் வாழ்வு எப்படியாவது மாமா வுக்குத் தெரிந்தால் வெட்டி ஆற்றில் விட்டு விடுவாரே! அது உங்களுக்குச் சம்மதந்தானா?" என்று அழுது விட்டாள்.

அரங்கசாமி பேசாமலிருந்தான். அவனுக்கும் அவளை அந்த நிலையில் கைவிட மனமில்லை. என்னென்னவோ எண்ணினான். கடைசியாக எங்காவது ஓடி விடலாம் என எண்ணினான். ஓடி என்ன செய்வது? திடீரென்று எங்கே வேலை கிடைக்கும்? வேலை யில்லாமல் இருவரும் திண்டாடுவதா என்ற கேள்விகள் குறுக் கிட்டதால் அந்த எண்ணத்தையும் விட்டு விட்டான். கடைசியில் அவன் தந்தைக்குப் பணிவதைத் தவிர வேறுவழியில்லை என்று கண்டான். அதனால் அவன் ஒன்றும் வாய்திறக்கவில்லை. இருந் தாலும் அவன் கண்கள் ஒவ்வொரு சொட்டாக நீரை உதிர்த்துக் கொண்டிருந்தன.

"என்ன பேசாமல் இருக்கிறீர்கள்; இதற்குத்தானா உங்களை நம்பினேன்? என்னையே கலியாணம் செய்து கொள்கிறேன் என்று

சொன்னீர்களே! இதுதான் உங்கள் காதலா? என் காதல் வெறும் மணிபர்சு அல்ல, என்றும் புதுமெருகோடிருக்கும் - கிழிந்து விடாது, என்றீர்களே! இதோ அதற்குள் கிழிந்து விட்டதே! கிழிந்தது மட்டுமல்ல - மீண்டும் தைக்க முடியாதபடி சுக்கு நூறாகிவிட்டதே! இதுதானா காதல்? உங்களைச் சொல்லிப் பயன் என்ன? என் அறியாமை! பெரியோர்கள் பார்த்துச் செய்திருந்தால் இப்படி யாகுமா? என் இளமைப் பருவத் துடிப்பினால் உங்கள் சொற்களை யெல்லாம் உண்மை என்று நம்பி ஏதோ காதல் என்ற பெயரால் நானும் கட்டுப் பட்டுவிட்டேன். நீங்களும் பருவக்கோளாறு களுக்கு ஆளானீர்கள்! கலியாணத்துக்கு முன்னால் ஏற்படும் காதலுக் கெல்லாம் இந்தக் கதிதான்! இதை எத்தனை சினிமாவில் பார்த்தேன். பார்த்தும் அது படம் என்று உதாசீனம் செய்து விட்டேன். முதலில் கலியாணம், பின் காமம், அதற்குப் பிறகு தான் காதல் என்பதை இப்பொழுது தான் அறிகிறேன். இப்படித் தோன்றும் காதல்தான் நிலைபெற முடியும் என்பதையும் தெரிந்து கொண்டேன். நாம் இருவருமே, இளமைப் பருவத்தில் தவழ்ந்து கொண்டிருக் கிறோம். எதையும் ஆராயாமல் காதல் என்றபெயரை வைத்துக் கொண்டு விளையாடி விட்டோம்'' என்ற சொற்களையும் கண்ணீரை யும் உதிர்த்துக் கொட்டினாள். உணர்ச்சி வசத்தில் அகப்பட்டிருந்த காரணத்தால் அவளை யறியாமல் அவள் உள்ளத்திலிருந்து ஏதே தோ கருத்துகளை அள்ளி வீசினாள்.

அப்பொழுதும் அவன் பேசவில்லை. அவனால் என்ன பேச முடியும்?

''சரி; உங்கள் விருப்பம் போல் நடந்து கொள்ளுங்கள். இனிமேல் நான் என் மாமா முகத்தில் விழிக்க முடியாது. எனக்கு ஆறு, கிணறுதான் சதம்'' என்று சொல்லிக்கொண்டே படுக்கையில் விழுந்து விம்மி விம்மி அழுதாள்.

அரங்கசாமி அப்பொழுதும் அசையாது நின்று கொண் டிருந்தான். வண்டி வரும் சத்தம் கேட்டது. அரங்கசாமி போய் விட்டான். பொன்னம்மாளும் முகத்தைத் துடைத்துக் கொண்டு பின்புறம் சென்று விட்டாள். கறுப்பணன் வந்ததும் ''பொன்னம்மா!'' என்று கூப்பிட்டான். அவளும் பயந்து கொண்டே வந்தாள். ''ஏம்மா, ஒரு மாதிரியாயிருக்கிறே!'' என்று கேட்டான். ''ஒன்று மில்லை மாமா! வாந்தி எடுத்து விட்டேன். அதுதான் ஒரு மாதிரி யாய் இருக்கிறேன். வேறொன்றுமில்லை'' என்றாள்.

அரங்கசாமிக்கு அன்று இரவு முழுதுமே உறக்கம் வரவில்லை. அவனும் உண்மையிலேயே வருத்தப்பட்டான். வேறு வழியோ தோன்றவுமில்லை. கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தான். சரி, விடியட்டும் பார்த்துக் கொள்வோம். திருமணம் அடுத்த ஆண்டில் வைத்துக் கொள்ளும்படி உறுதியாகச் சொல்லி விடுவோம் என்று திட்டமிட்டான். பொழுது புலர்ந்தது. கறுப்பணன் பதறிக் கொண்டே ஓடி வந்தான்.

“என்ன கறுப்பணா! இப்படி ஓடி வருகிறாய்?” என்று அரங்கசாமியின் தந்தை கேட்டார்.

“ராத்திரி சும்மா படுத்திருந்துச்சுங்க; காலையிலே எந்திருச்சுப் பார்த்தேன்; படுக்கையிலே நகை மட்டுங் கெடக்கு; பொன்னம் மாளைக் காணலிங்க! என்ன செய்யட்டுங்க. ஒண்ணுந் தெரியல் லையே!” என்று பதறப் பதறக் கூறினான் கறுப்பணன்.

“ஐயோ! காணவில்லையா” என்று பதைத்து எழுந்தான் அரங்கசாமி.

சுரீர் என்று ‘சிகரெட்’ சுட்டுவிட்டது அரங்கசாமியின் கையில். அப்பொழுதுதான் எங்கிருக்கிறோம் என்ற நினைவு அவனுக்கு வந்தது. அடிப்பட்டுக் கிடக்கும் பொன்னம் மாளையும் சூழ்ந்து நிற்கும் கூட்டத்தையும் பார்த்தான்.

“ஐயோ! பொன்னம்மா உன் கதி இப்படியா ஆக வேண்டும். உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியது நான்தானே! இந்தப் பழியை எப்படித் தொலைப்பேன்; உன் நினைவு என் குடும்பத்தில் என்றும் நின்று நிலைபெற ஒரே ஒரு வழி இருக்கிறது. என் தேவகிக்குப் பிறக்கும் குழந்தைக்கு உன் பெயரை வைப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும் நான்? உன் குழந்தையை இல்லை - இல்லை நம் குழந்தையை நானே வளர்க்கிறேன். நீ என்ன எண்ணிக் கொண்டு இறந்தாயோ” என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டிருந்தான்.

திருச்சிராப்பள்ளி வண்டி வேகமாக உள் நுழைந்தது. அந்த வண்டியை நோக்கி விரைந்தான்.

‘ஆபீசு’ப் பையன் ‘சார், சார் ’ என்று ஓடி வந்தான். அரங்கசாமி திரும்பிப் பார்த்தான். தன் ‘ஆபீசு’ப் பையன்தான் என்பதையறிந்து பதறிப்போய் ‘என்னப்பா?’ என்றான்!

*‘ஒங்களுக்குத் தந்தி வந்திருக்குங்க’ என்று தந்தி ஒன்றைக் கொடுத்தான்.*

“*தந்தியா!*” *என்று அவசர அவசரமாகப் பிரித்துப் படித்தான்.*

“Dhevahi Expired” *என்று எழுதியிருந்த எழுத்துகள் மங்கலாகத் தெரிந்தன கண்ணீர் நிறைந்த அவன் கண்களுக்கு.*

✪✪✪